Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily


மழைக்கான சாத்தியம் உண்டு.

30°C 28°C

பக்கம் 54 | சுடர்: 28 | கதிர்: 265 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆவணி 2, ஞாயிறு 18.08.2013

# ஆயுதக்குழுவின் அராஜகத்தை தீவகத்தில் தடுத்து நிறுத்துக

## தேர்தல்கள் ஆணையாளரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முறையீடு

கொழும்பு.ஓக 18

தீவகத்தில் அரசின் ஆதரவுடன் இயங்கும் ஆயுதக்குழுவின் அராஜகத்தை உடன் தடுத்து நிறுத்துமாறு தேர்தல்கள் ஆணையாளரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நெடுந்தீவில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மீது கடந்த வியாழக்கிழமை கடும் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் மூவர் காயமடைந்தனர். ஒருவர் தொடர்ந்து வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இத்தாக்குதலை வன்மையாகக் கண்டித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இது தொடர்பில் தேர்தல் ஆணையாளரிடமும் முறையிட்டுள்ளது.



"அரசின் ஆதரவுடன் இயங்கும் ஆயுதக்குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களே இந்தக் கேவலமான செயலில் ஈடுபட்டுள்ளனர். தீவகத்தில் குறித்த கட்சியினரின் அடாவடித்தனங்கள் தலைவிரித்தாடுகின்றன" என்று தெரிவித்தார் சுமந்திரன்.

"இந்தப் பகுதியில் சுதந்திரமான - நீதியான தேர்தல்கள் இதுவரை நடைபெறவில்லை. கடந்த காலங்களில் அங்கு தேர்தல் பரப்புரைக்காகச் சென்ற கூட்டமைப்பின் பிரமுகர்கள், வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள், ஈ.பி.டி.பி. கட்சியினரின் தாக்குதல்களுக்கு இலக்காகினர்.

வடமாகாணசபைத் தேர்தலிலும் வன்முறைகளைக் கட்டவிழ்த்து மக்களின் வாக்குகளைக் கொள்ளையடிக்க அரச சார்பு ஆயுதக் குழுக்கட்சியினர் தயாரா கிவிட்டனர் என்பதையே நெடுந்தீவுத் தாக்குதல் எடுத்துக்காட்டுகின்றது என்று குற்றஞ்சாட்டினார் சுமந்திரன்.

"இந்த அராஜகத்தை அனுமதிக்க முடியாது. எமது வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் இந்த அச்சுறுத்தல்களுக்கு அடிபணிய மாட்டார்கள், இதனைத் தேர்தலில் நிரூபித்துக் காட்டுவோம்" - என்று அவர் மேலும் தெரிவித்தார். (த)

## அடுத்த ஞாயிறு பெரும் பரப்புரை

கொழும்பு.ஓக 18

வட மாகாணசபைத் தேர்தலுக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலாவது பிரதான தேர்தல் பரப்புரைக் கூட்டம் அடுத்த வார இறுதியில் பெருமெடுப்பில் யாழ். நகரில் நடை பெறவுள்ளது.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் பரப்புரைக் கூட்டம் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்று நாடாளு மன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் தெரிவித்தார்.

இதில் முதலமைச்சர் வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன், ஏனைய வேட்பாளர்கள், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பங்காளிக் கட்சிகளின் முக்கியஸ்தர்கள், எனப் பலர் கலந்துகொள்வர். இந்தக் கூட்டங்களுக்கு ஆயிரக்கணக்கில் மக்கள் திரள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதையடுத்து கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் இடம் பெறவுள்ளன.

இதேவேளை, வட மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தேர்தல் விஞ்ஞா பனம் எதிர்வரும் 25 ஆம் திகதிக்குள் வெளியாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று தெரிவித்தார். (த)

## காணாமற்போனோரின் உறவுகளை யாழில் சந்திக்கிறார் நவிப்பிள்ளை

கொழும்பு, ஓக. 18

இலங்கை வரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ள்ளை, எதிர்வரும் 27 ஆம் திகதி வடக்கு, கிழக்கில் காணாமற்போனவர்களின் உறவினர்களை யாழ்ப்பாணத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

சந்திப்புக்கான ஏற்பாடுகளை காணாமற்போனோரின் குடும்ப ஒன்றியம் செய்துள்ளது.

இதில் தானும் கலந்து கொண்டு உண்மை நிலைமையை விளக்குவார் என்று மக்கள் கண்காணிப்புக் குழுவின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய நேற்று தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது காணாமற்போனோர்களின் உறவினர்கள் ஐ.நா. ஆணையாரிடம் மகஜரொன்றைக்கையளிக்கவுள்ளனர்.

காணாமற்போனோர் தொடர்பில் ஆராய்வதற்கு சர்வதேச விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்படவேண்டும் என்று அதில் கோரிக்கை விடுக்கப்படும் என்று தெரியவருகிறது.

அதேவேளை, வடக்கு விஜயத்தை முடித்துக்கொண்டு மீண்டும் கொழும்பு திரும்பும் நவிப்பிள்ளை 30 ஆம் திகதி எதிர்க்கட்சிகளையும், சிவில் அமைப்புகளையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

மறுநாள் காலை கொழும்பில் ஊடகவியாளர்களைச் சந்தித்து அவர் கருத்துவெளியிடுவார்.

## தேர்தல்கள் ஆணையாளர் வடக்குக்கு

கொழும்பு.ஓக 18

தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய எதிர்வரும் 21ஆம் திகதி வட பகுதிக்கு பயணம் செய்யவுள்ளார் என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

வட மாகாண அரச ஊழியர்களைச் சந்தித்து மாகாண சபைத் தேர்தல் குறித்து உரை

தொடர்ச்சி: பக்கம் 21

## முஸ்லிம் தீவிரவாதக் குழுக்கள் புலிகளுடன் இணையும் சாத்தியம்

### 'றோ' பிரிவு தகவல்கள் எச்சரிக்கை

புதுடில்லி, ஓக. 18

"லக்ஷர் இ தொய்பா, விடுதலைப் புலிகள் மற்றும் தலிபான் ஆகிய மூன்று இயக்கங்கள் ஒன்றிணையும் சாத்தியம் உள்ளது" என இந்தியப் புலனாய்வு பிரிவான 'றோ'' தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த இயக்கங்களின் இணைவு எதிர்காலத்தில் இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும். இது இந் தியா எதிர்கொள்ளும் மற்றொரு சவாலாக உள்ளது எனவும் 'றோ' தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மைக்காலமாக லக்ஷர் இ தொய்பா போன்ற இயக்கத்தினர் கொழும்பிலும், கிழக்கிலும் பயிற்சி பெறுகின்றனர் என்ற குற்றச்சாட்டுகள் வெளியாகியிருந்தபோது அதனை இலங்கை மறுத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்தியக் கடல் எல்லைக்குள் அந்நியர்கள் நடமாட்டம் தென்பட்டால் உடனடியாகத் தொலை பேசியில்

தொடர்ச்சி: பக்கம் 21

## பீரிஸும் ரணிலும் புதுடில்லி விரைவு

கொழும்பு.ஓக 18

எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டுக்கு, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை அழைப்பதற்காக, இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஒரு நாள்பயணமாக இன்று ஞாயிற்றுக்கிழமை புதுடில்லி செல்கிறார். அவர், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை நேரில் சந்தித்து, அழைப்பிதழைக் கையளிக்கவுள்ளார்.

அத்துடன், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் நாளை திங்கட்கிழமை இந்தியாவுக்குப் பயணம் செய்கிறார்.

புதுடில்லி செல்லும் பீரிஸ் இந்தியாவின் புதிய வெளிவிவகாரச் செயலர் சுஜாதா சிங்கையும், தேசிய பாதுகாப்பு

தொடர்ச்சி: பக்கம் 21

## பொதுநலவாயத்தில் இந்தியா பங்கு கொண்டால் தொடர் போர்

### மத்திய அரசுக்குக் கருணாநிதி எச்சரிக்கை

சென்னை, ஓக. 18

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் இந்தியா பங்கு பற்றினால் தமிழகத்தில் தொடர் போராட்டங்கள் வெடிக்கும் என்று தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி எச்சரித்துள்ளார்.

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் இந்தியா பங்கு கொள்ளவுள்ளமை தொடர்பில் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்குபற்றினால்



அது தமிழர்களை அவமதிப்பதாக அமைந்துவிடும். தற்போது அரசியல் கட்சிகள் மாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்கள் நடத்தி வரும் நிலையில் கட்சிகளின் கோரிக்கையை தமிழக மத்திய அரசு ஏற்றுக்கொண்டு

தொடர்ச்சி: பக்கம் 21

வட மாகாண சபைத் தேர்தல் - 2013
கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர்



X 3
தமிழினத்தின் தன்மானக் குரல்
கிளிநொச்சியின்
உரிமைக் குரல்
உங்கள் தெரிவு இல 3
Dr. கந்தசாமி திருலோகமூர்த்தி
உறுதி செய்யப்பட்ட வெற்றியை நோக்கி
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு




உதயன் இணைய வானொலி
நல்லூர் உற்சவகால சிறப்பு ஒலிபரப்பு
சிறப்புக் கலையகம்: நல்லூர் பாரதியார் சிலை அருகில்
www.UthayanRadio.com

## செல்வச் சந்நிதியில் சிறப்புச் சொற்பொழிவு

வடமராட்சி, ஓக.18
தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயில் பெருந்திருவிழாவை ஒட்டி சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றுவரும் ஆன்மிக நிகழ்வு வரிசையில் 13 ஆம் திருவிழாவான இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு 'ஞானப்பழம்' என்ற தலைப்பில் ஆசிரியர் க.கைலைநாதனும் 14 ஆம் திருவிழாவான நாளை காலை 10 மணிக்கு 'சைவப் பண்பாடு' என்னும் தலைப்பில் காரை.எம் பி.அருளானந்தனும் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள். (ஒ-8)



செஞ்சோலைப் படுகொலை நினைவாக புலம்பெயர் தமிழர்களால் லண்டனில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. ஜேர்மன் இளையோர் அமைப்பினர் இதனை ஏற்பாடு செய்திருந்தனர். (த-14)

## வீதி அபிவிருத்திப் பணிக்கு அரச தரப்பினர் முட்டுக்கட்டை

யாழ்ப்பாணம், ஓக.18
வலி.கிழக்கு பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்டுள்ள வீதித் திருத்தப் பணிகளுக்கு வடக்குத் தேர்தலில் போட்டியிடும் அரச தரப்பு வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் முட்டுக் கட்டை ஏற்படுத்தியுள்ளனர் என்று வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் அ.உதயகுமார் குற்றஞ் சாட்டியுள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வலி.கிழக்கு பிரதேச சபையால் ஏற்கனவே அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்ட சிறுப் பிட்டி கலையொளி வீதியின் திருத்தப் பணிகளை மேற்கொள்வதற்கென சபையால் நியமிக்கப் பட்ட ஒப்பந்தகாரர் நேற்றுக் கற்களைப் பறித்துள்ளார். அதனை அரச தரப்பு வேட்பாளர் களின் ஆதரவாளர்கள் சிலர் தடுத்துள்ளனர்.
திருத்தப் பணிக்காகப் போடப்பட்ட கற்களை அவர்கள் அள்ளிச் சென்றுள்ளனர்.
இதனால் பாதிப்படைந்துள்ள ஒப்பந்தகாரர் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள் ளனர்.
அரசியல் சுய லாபத்துக்காக ஏற்கனவே அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்ட வீதி யைப் புனரமைக்க விடாமல் அரச தரப்பு ஆதரவாளர் கள் தடை போட்டுள்ளனர்.
இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது- என்றார். (த-14-5)

# யாழுக்கு தடையற்ற மின்சாரம் ஜனாதிபதி ஆரம்பித்து வைப்பார்

யாழ்.மாவட்டத்துக்கு தடையற்ற மின்விநியோகம் அடுத்த மாதம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் ஆரம்பித்து வைக்கப்படும் என்று மின் சக்தி, எரிசக்தி அமைச்சர் பவித்திரா வன்னியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
யாழ்.மாவட்டத்துக்குத் தடையற்ற மின்சாரம் வழங்குவதற்காக சுன்னாகம் உபமின் நிலையத்தின் 3 ஆயிரத்து 300 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணப்பணிகள் இடம் பெற்று வருகின்றன.
2014 ஆம் ஆண்டு வடபகுதி முழுவதற்கும் மின்சாரம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் வரை ஒரு லட்சத்து 32 ஆயிரம் வோல்ட் அதியுயர் மின்அழுத்த மின்விநியோகம் இடம்பெறுவதுடன் புதிய மின் மார்க்கத்தின் ஊடாக பரீட்சார்த்தமான மின்விநியோகம் யாழ்.மாவட்டத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.
அடுத்த மாதம் யாழ்ப்பாணத்துக்கு தடையற்ற மின்விநியோகம் சுன்னாகம் உப மின் நிலையத்தில் இருந்து வழங்கப்படவுள்ளது. இதனை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆரம் பித்து வைப்பார் என்றார். (த-14)

## முன்னேஸ்வரம் கோவிலை அண்டி பேரணி நடத்துவதற்குத் தடை

சிலாபம், ஓக.18
சிலாபம் முன்னேஸ்வரம் கோவிலை அண்டிய பகுதிகளில் பேரணி நடத்தச் சிலாபம் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.
இது குறித்து தெரியவருவதாவது:-
முன்னேஸ்வரம் பத்ரகாளி கோவிலின் வருடாந்த மிருக பலி பூஜைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி நடத்தப்படவுள்ளதாக புலனாய்வுத் துறையினருக்குத் தகவல் கிடைத்துள்ளது.
இதனையடுத்துச் சிலாபம் பொலிஸார் குற்றவியல் தண்டனை சட்டக் கோவையின் 106ஆம் சரத்துக்கு அமையப் பிரதேசத்தில் சமாதானத்தைப் பேணுவதற்கான தடையுத் தரவைக் கோரினர்.
இதனையடுத்து சிலாபம் மேலதிக மாவட்ட நீதிவான் கே.கே. லியனகே தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.
புத்தளம் மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் சிலாபம் பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் முன்னேஸ்வரம் கோவில் நிர்வாகிகளைச் சந்தித்து மிருகபலிப் பூசை குறித்துப் பேசியிருந்தனர்.
இந்நிலையில் இந்த வருடம் மிருகபலி பூசைகள் ஆலயத்தில் நடைபெறாது எனக் கோவில் நிர்வாகிகள் தெரிவித்தனர்.
இந்த வருடம் மிருகபலி பூசைகள் 21ஆம் திகதி இடம்பெறவுள்ளதாகக் கிடைத்த தகவலை அடுத்து இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப் பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-10)

## இராமேஸ்வரம் மீனவர்களின் வேலை நிறுத்தம் முடிவுக்கு

இராமேஸ்வரம், ஓக. 18
இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட 8 மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டதையடுத்து இராமேஸ்வரம் மீனவர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர்.
கடந்த வாரம் முதல் இராமேஸ்வரம் மீனவர்களால் மீனவர்களை விடுவிக்குமாறு கோரித் தொடர்ச்சியாக வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தப்பட்டு வந்தது.
இந்த நிலையில் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள 49 மீனவர்களில் 8 பேர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.
இதனையடுத்து இராமேஸ்வரம் மீனவர்கள் தமது வேலை நிறுத்தப் போராட்டத்தைக் கைவிட்டுள்ளதுடன் ஏனைய மீனவர்களை விடுவிக்க இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரியுள்ளனர். (த-14)

## முதியவரின் தங்க மோதிரத்தை தந்திரமாக அபகரிக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஓக.18
கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கடந்த வாரம் இடம்பெற்ற நடமாடும் சேவைக்குச் சென்ற வயோதிபரிடம் இருந்து தங்க மோதிரம் ஒன்றைத் தந்திரமாக அபகரிக்கும் முயற்சி தோல்வியடைந்தது.
நடமாடும் சேவைக்குச் சென்ற முதியவருடன் தந்திரமாகப் பேசிய ஒருவர் குளிர்பானத்துக்குள் மயக்க மருந்தைக் கலந்து அவருக்குக் குடிக்கக் கொடுத்துவிட்டு அவரது கையில் இருந்த பெறுமதியான தங்க மோதிரம் ஒன்றை அபகரித்துக் கொண்டு செல்வதற்கு முயன்றுள்ளார்.
குளிர்பானத்தை அருந்திய வயோதிபர் மயக்கமடைந்து நடமாடும் சேவைக்குச் சென்றிருந்த மக்கள் நடுவே விழுந்துவிட்டார்.
இதனையடுத்து வயோதிபரைச் சுற்றிச் சனக்கூட்டம் கூடியது. தனது முயற்சி தோல்வியில் முடிந்ததை அடுத்து வயோதிபருக்குக் குளிர்பானத்தைக் குடிக்கக் கொடுத்தவர் அங்கிருந்து வேகமாக ஓடித் தலைமறைவானார்.
மயக்கமடைந்தமுதியவர் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவருக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது. நடமாடும் சேவையில் அதிக சனக்கூட்டம் இருந்ததைச் சாதகமாகப் பயன்படுத்தி இந்தத் திருட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. (த-17)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளரான ரவி என்று அழைக்கப்படும் ரணசிங்க ஆரியசேன நேற்றுமுன்தினம் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டவேளை தாக்கப்பட்டு நெடுந்தீவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நேற்று பார்வையிட்டனர். (ஜ-21)

கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரரின்
நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை

புதியவரவு சல்வார் 1200/= தொடக்கம்,
கொட்டன் சாறி 440/= தொடக்கம்
ஆண்களுக்கான சேட் -390/= தொடக்கம்,
இந்தியன் றொப்- 400/= தொடக்கம்.
இன்னும் பல விதமான ஆடைகளையும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள

(31281)
114, நாவலர் றோட், யாழ்ப்பாணம். T.P:- 021 2219393


அசத்தலான
ஆடி சிறப்புத் தள்ளுபடி
சரவணா ரெக்ஸ்
இல. 01, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.
(Dr. கெங்காதரன் மருத்துவமனை முன்பாக)

இம்மாதம் 25ஆம் திகதியுடன் நிறைவுபெறுகிறது.
விடுமுறை நாள்களிலும் வியாபாரம் நடைபெறும்.
(C/11109)(10,6,3)

# சாவகச்சேரியில் மருத்துவ முகாம் 500 பேருக்கு பரிசோதனைகள்



தென்மராட்சி, ஓக.18
சுகாதார அமைச்சினால் இல வச மருத்துவ பரிசோதனை முகாம் நேற்று சனிக்கிழமை சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

கொழும்பு, யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளில் வைத்திய நிபுணர்களுடன் சாவகச்சேரி சுகாதார வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் தலைமையிலான மருத்துவக் குழுவினரும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான உத்தியோகத்தர்க ளும் கலந்து கொண்டு மருத்துவ பரிசோதனையில் ஈடுபட்டனர்.

முகாமில் கண், பல், தொற்றா நோய்கள், நீரிழிவு, இரத்த அமுக்கம், வாய்ப்புற்று, பொது மருத் துவம் போன்ற பரிசோதனைகள் நடத்தப்பட்டு மருந்துகளும் வழங்கப்பட்டன.

முகாமில் 500க்கு மேற்பட்ட மக்கள் பரி சோதனைகளில் கலந்து கொண்டனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அனுசரணையுடன் இந்த மருத்துவ முகாம் நடைபெற்றது. (ஒ-9)

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ்மாவட்ட
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்
இரத்தினலிங்கம் ஜெயசேகரன்
(வர்த்தக சங்கத் தலைவரும்
சமூக சேவையாளரும்)

X 6
பொருளாதாரத்தை மேம்படுத்த
வாழ்வாதாரத்தை வளப்படுத்த
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு


# சந்நிதியை நோக்கி காவடிகள்

வடமராட்சி, ஓக.18
பிரசித்திபெற்ற தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயில் வருடாந்தப் பெருந்திருவிழாவில் தினமும் பெருந்திரளானோர் திரண்டு வந்து வழிபடுவதுடன் தமது நேர்த்திகளையும் நிறைவேற்றி வகின்றார்கள். தினமும் காவடிகள், தூக்குக் காவடிகள் வெளியிடங்களிலிருந்து கோயில் சுற்றாடலில் இருந்தும் சந்நிதி முருகன் ஆலயத்தை வந்தடைவதாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. பக்தர்கள் காவடிகள் எடுத்து நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதோடு மட்டுமல்லாமல் தீச்சட்டி எடுத்தும் அங்கப் பிரதிஷ்டை செய்தும் மொட்டை வழித்தும் நேர்த்திக் கடன்களை நிறைவு செய்கின்றனர்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற 10 ஆம் திருவிழாவான பூங்காவனத் திருவிழாவின் போது வெளியூர்களிலிருந்து 30 க்கும் மேற்பட்டோர் தூக்குக் காவடிகளையும் மற்றும் பெரும் எண்ணிக்கையான பால் காவடி, கரகக் காவடிகளையும் எடுத்து வந்து நேர்த்திக் கடன் நிறைவேற்றினர். (ஒ-8)

வட மாகாண சபைத் தேர்தல் - 2013
இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பில் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் வெற்றி இலக்கம் 5 இனைத் தாங்கிய இம்மானுவல் ஆனல்ட் என்பவரை நீங்கள் தெரிவு செய்து வெற்றியை உறுதிப்படுத்துங்கள்

X
இம்மானுவல் ஆனல்ட்
5
[B.A (Phil) Hons,
பிராந்திய முகாமையாளர் ஜனசக்தி காப்புறுதி நிறுவனம்-யாழ்ப்பாணம், இலங்கை தமிழரசுக் கட்சி யாழ். தொகுதிக் கிளைச் செயலாளர், அகில இலங்கை சமாதான நீதிவான், மொழிப் பற்றாளன்]
இவரை ஏன் நீங்கள் தெரிவு செய்ய வேண்டும்?
1. BA (Phil) Hons
2. MSS Limra international (USA)
3. AMTC Limra international (USA)
4. யாழ் பரியோவான் கல்லூரியின் பழைய மாணவன்
5. யாழ் பரியோவான் கல்லூரியின் சகலதுறை விளையாட்டு வீரர்
6. யாழ் பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றிய தலைவராகவும், மாணவர் விளையாட்டு பேரவைத் தலைவராகவும் 2000, 2001 ஆகிய ஆண்டுகளில் (சமகாலத்தில்) செயற்பட்டவர்
7. யாழ் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தால் வழங்கப்படும் கலைத்துறையில் சகலதுறை விற்பனருக்கான முன்னாள் பேராசிரியர் அ.துரைராஜா ஞாபகார்த்த தங்க விருதை வென்றவர்.
8. இலங்கை பல்கலைக் கழகங்களுக்கிடையிலான "மினி ஒலிம்பிக்" உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 1998-2001ஆம் ஆண்டுக்கான தங்கப்பதக்கம் வென்றவர்.
9. தலைமைத்துவத்தில் இவரது சுவடுகள்
   1. இலங்கை உதைப்பந்தாட்ட தேசிய முதல்தர மத்தியஸ்தர் Grade - I
   2. யாழ் உதைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்க தலைவர் (JFRA)
   3. யாழ் உதைப்பந்தாட்ட லீக்கின் உப தலைவர் (JFL)
   3. ஆசிய உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் "C" தர உதைபந்து பயிற்றுவிப்பாளர்
   4. பாடசாலை மட்டத்தின் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்ட முதன்மை அணித்தலைவராகவும் (Coloursman) செயற்பட்டவர்.
   5. யாழ் உதைப்பந்தாட்ட லீக் அணித்தலைவராகவும், யாழ் மாவட்ட அணித் தலைவராகவும் செயற்பட்டதுடன் பல ஆட்ட நாயகன் விருதுகளையும் வென்றவர்.
   6. யாழ் பல்கலைக்கழகத்தின் உதைபந்தாட்ட அணித்தலைவராகச் செயற்பட்டதுடன், தொடர்ச்சியாக 4 வருடங்கள் (Coloursman) கலர் விருதுகளையும் வென்றவர்.
இலங்கை பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மினி ஒலிம்பிக் போட்டியில் இவரது தலைமையின் கீழ் செயற்பட்ட யாழ் பல்கலைக்கழக அணி சம்பியனாக தெரிவு செய்யப் பட்டது (2001) என்பது குறிப்பிடத்தக்கது.
பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தின் தற்போதைய செயலாளர் ஆவார்.
இவரது அயராத முயற்சியினால் யாழ்ப்பாண வட்ட லயன்ஸ் கழகம் உருவாக்கப்பெற்றதுடன் அக் கழகத்தின் தலைவரும், ஸ்தாபகரும் இவரே.
நீதியின் தேசத்தை ஏந்திய கைகளின் இலட்சிய பயணமிது. இதில் சத்திய சோதனை எத்தனை நேரிடும் தாங்கிடும் இதயமிது. மாறினால் மாறட்டும் இல்லையேல் மாற்றுவோம். தர்மமே கொள்கையாய் வாழ்வெல்லாம் ஏற்றுவோம்.
இவரின் வெற்றியை அனைவரும் உறுதிப்படுத்துவோம். நண்பர்கள், ஆதரவாளர்கள், ஊழியர்கள்
(C/11205)(10.3)

மாகாணசபைத் தேர்தல் - 2013
யாழ் மாவட்டம்

15
தர்மலிங்கம் சித்தார்த்தன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
X

17
பாலச்சந்திரன் கஜதீபன்
(ஆசிரியர், தலைவர் - இளைஞர் அணி)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |

(C/11201)
தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)

# அன்பான வாக்காளப் பெருமக்களே!



தியாகராஜா மகேஸ்வரன்

செல்லுபடியற்ற வாக்கு அளிக்கின்ற மாகாணமாக இலங்கையில் முதலாவதாக வடமாகாணம் திகழ்கின்றது.

வாக்களிக்கின்ற விகிதம், தமது அரசியல் பிரதிநிதிகளைச் சரியான முறையில் தெரிவு செய்கின்ற உரிமையை இழந்த மாகாணம் வடமாகாணம்.



நடராஜா ரவிராஜ்

வாக்களித்தபின்னர் வாக்குப் பெற்ற பிரதிநிதிகள் ஊழல் மோசடி, துஸ்பிரயோகம், பாலியல் வல்லுறவு, ஆள்கடத்தல், கொலை கொள்ளை, கப்பம், கைக்கூலி பிரதிநிதிகளைத் தெரிவு செய்த மாகாணமும் இந்த வடமாகாணமே. மேற்கூறிய காரணங்களுக்கு பதில் தகுந்த ஆதாரத்துடன் ஊடகங்கள் வாயிலாகவோ, முடிந்தால் நேரிலோ எந்த வழியிலும் பதிலளிக்கத் தயார். ஆண்டவனால் கொடுத்த மூன்று சந்தர்ப்பங்களில் எமக்குக் கிடைக்க பெற வேண்டிய நியாயமும், நியாய ஆதிக்கமும் மறுக்கப்பட்டு அநீதியும், அக்கிரமமும் கடந்த ஐம்பது ஆண்டு காலமாக நடந்த போராட்டத்தில் அகிம்சை வழி போராட்டமும் ஆயுதவழிப் போராட்டமும் வழி அதுதான் என்று தேர்ந்தெடுத்தோம்.

அது தோற்று மூன்றாவது வழியாக ஜனநாயக வழி பிறந்திருக்கின்றது. இதை யாராலும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

அதற்கு முன்வருபவர்கள் இந்தத் தேர்தலில் இருந்து விலகிவிட்டு கட்சிக்கு ஆதரவு அளிப்பதில் இருந்து விலகிவிட்டு வாருங்கள் பதில் கூறத் தயார்.





ஆகவே ஆண்டவனால் கொடுத்த இந்த மூன்றாவது வழியான ஜனநாயக வழியை இறுகப்பற்றி ஜனநாயக வழியில் ஜனநாயகத்தை நிலைநாட்டக் கூடிய ஜனநாயகத்தில் துணிந்து கருத்துக்களைக் கூறக்கூடியவர்களை இந்த மண்ணிலே வாழ்கின்ற சான்றோர்கள் அறிஞர்கள் கல்விமான்கள் அரசியல் வழிகாட்டிகள் கௌரவமானவர்கள், கௌரவமான வர்த்தகர்கள், சங்கப்பிரதிநிதிகள், அரச உயர் பதவிகளை வகிக்கின்றவர்கள், கலைஞர்கள், மதகுருமார்கள், கலைபண்பாட்டு விழுமிய செயற்பாட்டாளர்கள் வாழ்கின்ற இந்த மாகாணத்தில் எமக்குக் கிடைக்கப்பெற்ற ஜனநாயக சூழலில் ஜனநாயக வாக்குரிமையை ஜனநாகய முறையில் வாக்களித்து நான் அறிந்த வரையில் வாழ்ந்த அரசியல் தலைவர்களில் மறைந்த தியாகராஜா மகேஸ்வரன், மறைந்த நடராஜா ரவிராஜ் போன்ற சான்றோர்களை மீண்டும் உருவாக்க முப்பத்தாறு(36) பிரதிநிதிகளையும் கட்சி ஏது? சின்னம் ஏது? தனிப்பட்ட விருப்பு வெறுப்பு ஏது? என்பதனை நிராகரித்து தேர்ந்தெடுத்து, புதிய வன்முறை அற்ற அரசியல் கலாசாரத்தை உருவாக்க வெற்றியோடு முன்வாருங்கள்.

இதுவே எமது வெற்றியின் இரகசியம்!








## வடமாகாண முதலமைச்சர் வேட்பாளரும் முதன்மை வேட்பாளரும்

# தியாகராஜா துவாரகேஸ்வரன்

## ஐக்கிய தேசியக் கட்சி

**எமது வெற்றியின் இரகசியம் தியாகராஜா மகேஸ்வரன் நடராஜா ரவிராஜ் போன்றோரை தெரிவுசெய்வது.**

### எழுதுமட்டுவாழ் தெற்கு குளங்களில்

# சட்டவிரோத மணல் அகழ்வை தடுப்பதற்கு உரிய நடவடிக்கை

தென்மராட்சி, ஓக.18
எழுதுமட்டுவாழ் தெற்கில் உள்ள குளங்களில் இருந்து சட்ட விரோதமாக மணல் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுவதாக அந்தப் பகுதி கமக்கார அமைப்பு அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது.
இது குறித்து எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பின் செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில்:
எழுதுமட்டுவாழ் தெற்கில் மீள்குடியமர்வு இடம்பெற்ற பின்னர் மூன்று விவசாயக் குளங்கள் கடந்த வருடம் விவசாயத் திணைக்களத்தினால் 15 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டன.
செட்டுகேணி வயல் பகுதியில் காணப்படும் பெரியகுளம், புல்லாத்திக்குளம், நல்ல தண்ணீர்க்குளம் ஆகிய மூன்று குளங்களே 43 வருடங்களின் பின்னர் புனரமைக்கப்பட்டன. இப்போது கோடை காலம் என்பதால் குளங்களில் நீர் இல்லாது காணப்படுகின்றன. இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி இரவு வேளைகளில் வருபவர்கள் குளத்தை மேலும்



ஆழமாக்கி, மண்ணை வாகனங்களில் ஏற்றிச் செல்வதுடன் குளத்தின் அணைக் கட்டையும் வெட்டி ஏற்றிச் செல்கின்றனர்.
அண்மையில் பெய்த மழையை அடுத்து வயல்களைப் பார்க்கச் சென்ற நெற் செய்கையாளர்கள் குளங்களில் மணல் அகழ்ந்தெடுத்திருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்து எம்மிடம் முறையிட்டனர். இதனை அடுத்து தாம் குளங்களைப் பார்வையிட்டதுடன் கொடிகாமம் பொலிஸ் நிலையம், சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையம், யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் ஆகியவற்றிலும் முறைப்பாடு செய்துள்ளோம் என செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்தார். (ஐ-9)

## யாழ்.மாநகர சபைக்கு கொம்பக்ற் லோடர்கள்

யாழ்ப்பாணம், ஓக. 18
யாழ்.மாநகர சபையின் சுத்திகரிப்பு பணிகளுக்கென ஒரு கோடியே 30 லட்சம்பெறுமதியான இரண்டு 'கொம்பக்ற் லோடர்கள்' கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
இந்த இயந்திரங்கள் இரண்டும் கடந்த 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.மாநகர சபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.
இந்த லோடர்கள் ஊடாக நவீனமயப் படுத்தப்பட்ட துரித சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்ள முடியும் என எதிர் பார்க்கப்படுகிறது. (ஐ-14)

## 'டெங்கு' பரவலை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை

வலி.வடக்கு, ஓக.18
யாழ்ப்பாணத்தில் நிலவிவந்த வறட்சியைத் தொடர்ந்து கடந்த நான்கு நாள்களாக பரவலாக மழை பெய்யத் தொடங்கியுள்ளது. இதனால் மீண்டும் டெங்கு அபாயம் தோன்றலாம் என்ற அச்சத்தில் பிரதேச சபைகளின் சுகாதாரப் பகுதியினரால் முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நல்லூர்ப் பிரதேச சபையின் பொது சுகாதார பரிசோதகர்கள் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளுக்கு கட்டம் கட்டமாகச் சென்று டெங்கு பரவக்கூடிய இடங்கள் சம்பந்தமாக பரிசோதனை களை மேற்கொள்வதுடன் அதனை அழிப்பதற்கான செயற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளனர்.
இதன் தொடர்ச்சியாக எதிர்வரும் புதன், வியாழக்கிழமை மற்றும் கொக்குவில் கிழக்கு, மேற்குப் பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள், பொது இடங்கள், வீடுகள், சனசமூக நிலையங்கள், அரச கட்டடங்கள் என அனைத்து இடங்களுக்கும் சென்று பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளதாக நல்லூர் பொதுசுகாதார பரிசோதகர் தெரிவித்தார். (ஐ-86)



### யாழ்.மாவட்டத்தில் 54 வெற்றிடங்களில்

# 3 வைத்தியர்களை மட்டும் நியமிப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக.18
யாழ்.மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் 54 வைத்திய அதிகாரிகளுக்கு வெற்றிடங்கள் உள்ள போதிலும் மூன்று வைத்திய அதிகாரிகளை மட்டுமே வழங்க அரச மருத்துவர் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தகவல் கசிந்துள்ளது.
போதனா வைத்தியசாலைகளில் உள்ளகப் பயிற்சிகளை முடித்து மருத்துவ மாணவர்களை வைத்தியசாலைகளில் நியமிப்பது தொடர்பாக சுகாதார அமைச்சு கோரியபோது யாழ்.மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் 54 வைத்திய அதிகாரிகள் வெற்றிடம் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
வைத்திய அதிகாரிகள் இல்லாததால் சில வைத்தியசாலைகளில் சுழற்சி முறையிலும், சில வைத்தியசாலைகள் ஓய்வுபெற்ற பதிவுசெய்யப்பட்ட உதவி வைத்தியர்களைக் கொண்டும் இயங்குகின்றன. பிரதேச வைத்தியசாலைகள், மாவட்ட வைத்தியசாலைகள் போன்றவற்றில் வைத்திய அதிகாரிகளுக்கான பற்றாக்குறை காரணமாக அதிகமான நோயாளர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கே மாற்றப்படுகின்றனர். இதனால் அங்கு பெரும் இடநெருக்கடி ஏற்படுகிறது. இவ்வாறானநெருக்கடிகளைத் தவிர்க்கும் முகமாக வெற்றிடமாக உள்ள 54 வைத்திய அதிகாரிகளின் இடத்துக்கு 27 வைத்திய அதிகாரிகளையாவது வழங்குமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.
இந்த நிலையில் வடக்கு மாகாணத்தில் உள்ள வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் தலா 20 வைத்திய அதிகாரிகளை நியமிக்கவும் யாழ். மாவட்டத்துக்கு 3 வைத்திய அதிகாரிகளை மட்டும் நியமிக்கவும் அரச மருத்துவர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரியவருகிறது. (ஐ-9)

# கிராம அலுவலரும் இல்லை பதில் கடமைக்கு இடமும் இல்லை

### அராலி தெற்கு கிராம மக்கள் அவதி

வலி.வடக்கு, ஓக.18
சங்கானைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட அராலி தெற்கு ஜே/162 கிராம அலுவலர் பகுதிக்கு கடந்த ஐந்தாண்டுக்கு மேலாக நிரந்தர கிராம அலுவலர் இல்லை என பொது மக்களும், பொது அமைப்புப் பிரதிநிதிகளும் கவலை தெரிவிக்கின்றனர்.
இதுவரை காலமும் குறிப்பிட்ட கிராமத்துக்கு அயல் பகுதி கிராம அலுவலர் பதில் கடமையாற்றி வந்ததாகவும் தற்போது அவ்வாறு பதில் கடமை செய்வதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.
இதேவேளை, இதுவரை காலமும் கிராம அலுவலர் அலுவலகமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த பொதுக் கட்டடத்தை எந்த முன்னறிவித்தலும் இன்றி உடனடியாக விடவேண்டும் என்று உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஆணையாளர் பிரதேச செயலாளர் மூலம் உத்தரவிட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.
இதனால் கிராம அலுவலர் உடனடியாக மாற்று அலுவலகத்தை தேடமுடியாத நிலையில் உள்ளதாகவும் இதனால் பணிகள் தடைப்பட்டுள்ளதாகவும் பிரதேச சபையின் அராலிப் பகுதி உறுப்பினர் த.நடனேந்திரன் தெரிவித்துள்ளார். (ஐ-86)

> இதுவரை காலமும் குறிப்பிட்ட கிராமத் துக்கு அயல் பகுதி கிராம அலுவலர் பதில் கடமை யாற்றி வந்ததாகவும் தற்போது அவ்வாறு பதில் கடமை செய்வதில் தடங்கள் ஏற்பட்டுள்ளது எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.



நல்லூர்க் கந்தனின் ஆறாம் நாள் வீதியுலாக் காட்சி

### துயர்நீக்கி நல்வாழ்வு தா...

கந்தாவுன் பொற்பாதம் காலமெல்லாம் கைதொழுமெம்
சிந்தா குலம்நீக்கித் தேற்றாயோ? - வந்தித்த
வானோர் துயர்நீக்கி வாழ்வு அளித்தனையே
ஏனோ எமக்கிந்த ஈமை

வட்டு: சி.வெற்றிவேலு

### சாந்தி நிலவிட அருள் தா!

நல்லைப் பதி மீதில் மகிமை மிகு கூட்டி
வந்தொளி தந்தவனே,
மங்காத சுகந்தரும் உள்ளம் மகிழ்ந்திடும்
உமாபதி பாலகனே,
அடியார் கூடி பஜனை பாட
திருவீதிவலம் வந்திடப்பா
தருமம் ஓங்கி தானம் வளர்ந்து
சாந்தி நிலைத்திட அருள் தந்திடப்பா
திருவருள் ஒளி சுரந்து எமதிடர்
வேதனை நீக்கிட வா முருகா

தொல்புரத்தூர்: க.லோகேஸ்வரன்

### நல்லருளை நல்கிடுவாய்

அலங்காரக் கந்தனே எம்மை அரவணைப்பாயே
ஆனந்தமாய் அன்பர் உனை ஆடிப்பாடிட
இருளகற்றி இன்ப ஒளி தந்திடுவாய்
ஈசனின் இளையோனே- அடியார்
உள்ளத் துயர் களைந்து
ஊரெல்லாம் உவகை பொங்கிட
எமக்கருளும் நல்லை நாதா
ஏற்றமிகு வாழ்வு தந்தருள்வாயே
ஐங்கரன் சோதரனே நின்புகழ்பாடி
ஒரு ரூபாய் கொண்டு அர்ச்சிக்க
ஓம் எனும் பிரணவப் பொருள் கூறி
ஔவைக்கு தமிழ் தந்த பெருமானே நல்லைக்கந்தா
நல்லருளை நல்கிடுவாய்

வி.கீர்த்தனா, சுதுமலை மேற்கு

### அருளாட்சி செய்திடுவாய்


நல்லூரில் குடிகொண்ட எங்கள் கந்தா...
நித்தமும் உனைத்தொழ அருள் புரிவாயப்பா
காவடிகள் எடுத்தன்பர் உனைத் தொழுதேத்த
வேல் கொண்டு மயில் மீது வந்து அருளாட்சி செய்திடுவாய்
முக்கண்ணன் சோதரனே கார்த்திகேயனே கந்தா
இருளகற்றி இன்ப ஒளி ஏற்றி அருள் புரிவாய்

வி.கீர்த்தனா




# யாழ். மண்ணில் முதல் முறையாக

## கனரக இயந்திர வாகனங்களான JCB, Exavator, Dozer மற்றும் Fork Lift பயிற்சி வகுப்பு 26.08.2013 இல் ஆரம்பமாகிறது.


* பயிற்சிக்காலம் - 30 Days
* வரையறை அற்ற வேலைக்கள பயிற்சி அளிக்கப்படும்.
* இப்பயிற்சிக்கு சாரதி அனுமதிப்பத்திரம் தேவையில்லை.
* பயிற்சி நிறைவில் எமது சான்றிதழுடன் சிறிலங்கா அரச சான்றிதழும் வழங்கப்படும்.
* 16 வயதுக்கு மேற்பட்ட எவரும் பயிற்சி வகுப்பில் பங்குபற்றலாம்.
* தங்குமிட வசதி, பாதுகாப்பு அங்கி, தலைக்கவசம், மருத்துவ வசதி மற்றும் விளையாட்டு வசதிகள் அளிக்கப்படும்..
* வாகன திருத்தும் அறிவு
* பயிற்சிக்குழுவில் ஆகக்கூடிய பயிலுனர் எண்ணிக்கை 20



(31438)(10.3)

தொடர்புகளுக்கு:

**NORTHERN TECH CENTER**
Heavy and Light Earth Moving Equipment
TRAINING and TESTING Centre
"Leelapathy" Kandy Road, Mirusuvil, Jaffna, Srilanka.

Telephone No: 071 4167878, 072 226 3778, 072 246 2517


## யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஓக.18

நூலக விழிப்புணர்வு நிறுவனத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கான 'உடுக்களின் உலகம்' கல்விக் கண்காட்சி நாளை 19 ஆம் திகதி திங்கட்கிழமையும், நாளை மறுதினம் 20 ஆம் திகதி செவ்வாய்க் கிழமையும் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை மேலும் வளப்படுத்தும் வகையிலான இந்தக் கல்விக் கண்காட்சியில் தரம் 5 மாணவர்கள் பங்குபற்றி பயன் பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-14)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், ஓக.18

கோண்டாவில் ஸ்ரீ வாகீஸ்வரி சனசமூக நிலையம், விளையாட்டுக் கழகம், கல்வி வளர்ச்சிக் கழகம் மற்றும் கோண்டாவில் ப.தெ.வ.அ. கூட்டுறவுச் சங்கம் என்பன இணைந்து நடத்தும் முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஸ்ரீ வாகீஸ்வரி முன்பள்ளி முன்றலில் நடைபெறவுள்ளது. நிலையத் தலைவர் கு.முருகையா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் கலந்து கொள்வார். (ந-14)


### மலேசியா நாட்டில் உடன் வேலைவாய்ப்பு

CARGO நிறுவனத்தில் அதி உயர் சம்பளத்துடன் உடன் வேலைவாய்ப்பு. 10 நாள்களில் பயணம். தங்குமிடம் இலவசம். வீட்டுப் பணிப்பெண் ஒருவரும் Tailaer பெண் ஒருவரும் தேவை.

தொடர்பு: LANKA VOICE 075 065 0084 (35228) (3.11)

### SB TRAVELS & TOURS

SPECIAL AIR FARES

| | | | |
|---|---|---|---|
| MADURAI | 15,800/- | LONDON | 96,000/- |
| TRICHI | 16,500/- | MALDIVES | 21,800/- |
| CHENNAI | 15,800/- | MILAN | 85,000/- |
| BOMBAY | 26,800/- | TORONTO | 158,500/- |
| BENGALURU | 17,800/- | NEW YORK | 118,500/- |
| KOCHI | 17,500/- | MELBOURNE | 105,000/- |
| DELHI | 41,400/- | PERTH | 75,800/- |
| MALAYSIA | 31,600/- | CANTON | 65,500/- |
| SINGAPORE | 26,600/- | NARITA | 68,000/- |
| BANGKOK | 29,500/- | | |

*Condition Apply

VISA MASTER American Express Card Accepted

ONEWAY: SHARJA - 23,800/-, DUBAI -23,800/-, DOHA - 26,500/-

விரும்பும் நாட்டுக்கு விமான டிக்கட் செய்து தரப்படும். டோகா கடார், துபாய்க்கு பியுரோ அரேங்மென்ட் செய்து தரப்படும்.

E-mail: sbtravels99@yahoo.com
Hotline: 077 1083481

(சி/11324)

No: 132 Sri Kathirasan Street, Colomb13.
Tel: 011 2333322, 2540111, 2334470, 2540280 Fax: 011 2334460

### COOL AIR'S AIR CONDITIONERS



சகல விதமான வாகனங்களுக்கும் குளிரூட்டிகள் சிறந்த முறையில் செய்து தரப்படும்.

COOL AIR'S AIR CONDITIONERS
510, கஸ்தூரியார் வீதி (யாழ் இந்துக் கல்லூரி மைதானத்திற்கு முன்னால்) யாழ்ப்பாணம்.
077 773 8888, 071 287 0288
[விடுமுறை நாள்களிலும் திறந்திருக்கும்]

# விசா பெற்றுக்கொள்ள இருப்பவர்கள்

UK, Australia, Canada, USA, New Zealand, Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway Switzerland, Sweden etc... மற்றும் ஏனைய நாடுகளுக்கு எமது பல வருட அனுபவமுள்ள UK, USA, CANADA போன்ற நாடுகளில் பயிற்சி பெற்ற சட்டதரணிகளால் புதிய நிபந்தனைகளும், விதிமுறைக்கமைய விசா பெற்றுக் கொள்வதற்கான உதவிகள் செய்து கொடுக்கப்படும்.

## Student Visa

**மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு சென்று படிப்பதற்கும் பகுதி நேர வேலைவாய்ப்பு மற்றும் அந்த நாட்டில் Settle ஆக விரும்புகின்றவர்களுக்காக:**



- படிப்பதற்கு வயது எல்லை இல்லை. சரியான காரணமே போதுமானது.
- Minimum Qualification O/L மற்றும் ஏதாவது பாடநெறி படித்திருந்தால் நன்று இடைவெளி இருந்தால் கவலைப்பட தேவையில்லை.
- IELTS தகைமை தேவையில்லை, இருந்தால் மிக நன்று
- உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப மிகக் குறைவான செலவில் TOP University, A Grade College செல்வதற்கான வாயப்பு.
- உங்களுடன் உங்கள் உதவிக்கு யாராவது உறவினர்களை அழைத்து செல்ல விரும்புகின்றீர்களாயின் அதற்கான வசதிகள் செய்து தரப்படும்
- உங்கள் கல்வி செலவுக்கு போதுமான பணத்தை அரசவங்கியினூடாக கடனாகப் பெற்றுத்தரப்படும்.
- வங்கியில் பணவைப்பு, Airport Pickup, Accommodation, மற்றும் உங்கள் ஏனைய குறைபாடுகள், தேவைகள் நிவர்த்தி செய்யப்படும்.

## Visit Visa

**சுபகாரியங்களுக்கும், திருமணங்களுக்கும், மங்கள, அவமங்கள காரியங்களுக்கும் மற்றும் அவசரமாக செல்ல இருப்பவர்களுக்கும் விசேடமாக உடனே விசா பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்து தரப்படும்.**

தாமதமாகிய விசாக்கள் - திரும்பிய விசாக்கள் உள்ளதா? விசா பெற்றுக் கொள்வதில் பிரச்சனை உள்ளதா?

*Refused? Rejected?*

- ✔ உங்கள் ஆவணங்களை சரியான முறையில் சமர்பிக்கத் தவறி விட்டீர்களா?
- ✔ உங்கள் வீசா முடிந்ததும் இலங்கைக்கு திரும்பி வருவீர்கள் என்ற சந்தேகமா?
- ✔ உங்கள் வங்கியில் சேமிப்பு பணம் பற்றாக்குறையா?
- ✔ உங்கள் ஆவணங்கள் திருப்தி தரக்கூடியதாக இல்லையா? மற்றும் ஏதாவது காரணங்கள் இருப்பின் இது நிவர்த்தி செய்து சரியான முறையில் VISA பெற்றுக் கொடுக்கப்படும்.



- ✔ விசா சம்பந்தமான சகல ஆலோசனைகள் வழங்கப்படும்.
- ✔ வீசா விண்ணப்பபடிவம் பூர்த்தி செய்து கொடுக்கப்படும்.
- ✔ Embassy கடிதங்கள் மொழி பெயர்த்துத் தரப்படும்.
- ✔ Ticket, Hotel Booking, Travels Insurance செய்து தரப்படும்.
- ✔ வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் Sponsor கடிதங்களுக்கு விசா பெற்றுக் கொள்வதற்கு தேவையான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
- ✔ வெளிநாட்டில் உள்ள உறவினர்களிடம் செல்வதற்கான வசதிகள் செய்து தரப்படும்.



### வங்கியில் பணவைப்பு

Saving book, Fixed Deposit, Statement
3, 6, 12 மாதங்களுக்கான (முன், பின் ) பணவைப்பு

Migration / Skill Migration / Work Permit / Visit Visas / Student Visas / Dependent / Family Visas / Business / Investment / Rejection Appeals / New Applications etc...

எவ்வித முற்பணம் இல்லாமல் எம்மிடம் வந்து கதைத்து உண்மையான, நேர்மையான, நம்பிக்கையான முறையில் ஆலோசனைகளை பெறலாம்.
(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).

(சி/11325)

FLEX Graphic

ஐரோப்பிய 25 நாடுகளில் (SENAGON COUNTRY) 5 வருட அல்லது 2வருடத்திற்கான வதிவிட விசா (RESIDENT VISA) தனியாக அல்லது முழுக்குடும்பத்துடன் குறுகிய காலத்திற்குள் செல்வதற்கு விசா பெற்றுக்கொள்வதற்கான உதவிகள் செய்து தரப்படும்.

SKYWALK Visa Solutions

## ஸ்கைவோர்க் வீசா சொலூஷன் 07777 11905

No.65, 1/1, Galle Road, Dehiwala. (Food City - 1st Floor)

# E-tel

கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் தொலை தொடர்பு சாதனங்களை இறக்குமதி செய்து விற்பனை செய்யும் முன்னணி நிறுவனத்துக்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## விற்பனை மேற்பார்வையாளர் - வடக்கு

தகுதியானவர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிட்ட தகைமைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

- க.பொ.த.(உ/த) பூர்த்தி செய்திருத்தல்/ முழு நேர அல்லது பகுதி நேர விற்பனை தகைமை சான்றிதழ் பெற்றிருத்தல்.
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டப்படிப்பினை மேற்கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.
- குறைந்தது 2 வருட விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அனுபவம் இருத்தல் வேண்டும்.
- வாகன சாரதி அனுமதிப் பத்திரம் முக்கியமானது.

## விற்பனைப் பிரதிநிதி - வடக்கு

தகுதியானவர்கள் க.பொ.த. உயர் தரத்தினைப் பூர்த்தி செய்திருப்பதோடு பகுதி நேர விற்பனை தகைமை சான்றிதழ் பெற்றிருத்தல் விரும்பத்தக்கது. மொழிதேர்ச்சியுடன் சகஜமாகப் பேசும் அனுபவம் விரும்பத்தக்கது.

## திருத்துநர் - வடக்கு

க.பொ.த. உயர் தரத்தினைப் பூர்த்தி செய்திருத்தல். முழு நேர அல்லது பகுதி நேர தொலைபேசிகள் மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்களை திருத்தும் தகைமையைப் பெற்றிருப்பதோடு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

முன் அனுபவம் விரும்பத்தக்கது.

தகுதியானவர்கள் தங்களுடைய விண்ணப்பங்களை 7 நாள்களுக்குள் அனுப்பி வைக்கவும்.

(C/11321)(10,3)

Sole Agent brantel

**BRANTEL LANKA (PVT) LTD**

இல. 06, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 04.

Hotline : 011 5 515 666 / 0777 99 44 99 E-mail : hr@brantel.lk, Web : www.etelmobiles.com

Authorized Distributor : Ram Super city, இல. 306, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


Tel : 021 222 1262



வள்ளிபுனம் ஸ்ரீ பொன்னம்பல ஞானவேலாயுத சுவாமி ஆலய

கல்யாண மண்டபமும் அறநெறிப் பாடசாலையும்

# திறப்பு விழா அழைப்பு



நிகழும் மங்கலகரமான விஜயவருஷம் ஆவணித் திங்கள் மூன்றாம் நாள் நாளை(2013.08.19) திங்கட்கிழமை திரயோதசி திதியும் உத்தாராட நட்சத்திரமும் கூடிய தெய்வீக நன்நாளில் ந.ப.12 மணி 05 நிமிடம் - ஒருமணி 36 நிமிடம் வரையுள்ள சுபவேளையில் எம் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராாதனைகள் நடைபெற்று மேற்குறிப்பிட்ட நேரத்தில் படம் வீதிப் பிரதட்சணமாக மங்கல வாத்திய சகிதம் எடுத்துவரப்பட்டு மண்டபத் திறப்புவிழா நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

அனைத்து முருகப்பெருமான் அடியார்களும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உரிமையாளர்,
ஆலயப் பிரதமகுரு,
பொ.சபாரத்தினம்,
வள்ளிபுனம்,புதுக்குடியிருப்பு.


ஆலய பரிபாலன சபை,
ஸ்ரீ பொன்னம்பல ஞானவேலாயுத
சுவாமி ஆலயம்,
வள்ளிபுனம்,புதுக்குடியிருப்பு.
077 961 3535





# மண்டைதீவு - திருவெண்காடு

## திருவருள்மிகு சித்தி விநாயகர் தேவஸ்தான



# தேர்த்திருவிழா - 2013



நாளை (19.08.2013) திங்கட்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகும்.

விசேட மங்கலவாத்தியக் குழுவினரின் நாதஸ்வர தவில் கச்சேரி

★ பால முருகன் குழுவினர் - நல்லூர்.

★ கோவிந்தசாமி புதல்வர் மார்க்கையா குழுவினர் - இணுவில்.

★ வசந்தன் குழுவினர் - ஆனைக்கோட்டை

★ ஆலய மஹோற்சவ மங்கல வாத்தியக் குழுவினர்.

★ மகேஸ்வர பூசையும் (அன்னதானம்) நடைபெறும்.

மண்டைதீவு,
திருவெண்காடு.

ஆலய தர்மகர்த்தாக்களும்
உபயகாரர்களும்.

(31454)(10,3)

## புத்தம் புதிய வீடு விற்பனைக்குண்டு

கொக்குவில் அச்சுக்கூட வீதியில் (PRESS LANE) அமைதியான சூழலில் நன்னீர், சுற்றுமதிலுடன் கூடிய 2 பரப்பில் அமைந்த புத்தம் புதிய வீடு விற்பனைக்குண்டு. இது K.K.S. வீதிக்கும் ஆடியபாதம் வீதிக்கும் மிக அருகில் உள்ளது.

**தொடர்புகளுக்கு :**

**077 247 0590, 077 111 3142, 077 854 3106**

(31380) (10,6,3)

## சந்தைப்படுத்தல் முகாமையாளர்கள் தேவை

சைக்கிள் டயர், டியூப் மற்றும் ஏனைய றப்பர் பொருள் களை விற்பனை செய்வதற்காக சந்தைப்படுத்தல் முகாமை யாளர்களை மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் மன்னார் மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்ய உள்ளோம்.
கீழ்வரும் தகைமைகளையுடையவர்கள் உடனடியாக எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

- ★ அங்கீகரிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரம்
- ★ சந்தைப்படுத்தல் தொடர்பான அறிவு மற்றும் அனுபவம்
- ★ பிணை ஒன்றை வைப்பதற்கான வசதிகள்

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு கவர்ச்சி கரமான சம்பளக் கொடுப்பனவுகளுடன் கூடிய விற்பனைத் தரகும் வழங்கப் படும்.

**தொடர்புகளுக்கு:**

மனிதவள முகாமையாளர்
அரோமா றப்பர் கம்பனி
கெரமினியவத்த, மாவனெல்லை.

தொ.பே.இல: 0352247942,
தொ.நகல்.இல: 0352247942
மின்னஞ்சல்: aroma_rb@yahoo.com

(31336) (10,6,3)

# SRI LANKA'S NUMBER ONE BRAND IS COUNTING ON YOU

As the country's strongest brand, Singer resonates in the hearts and minds of millions of Sri Lankans. Singer is by far the number one retailer of consumer durables in Sri Lanka with a portfolio of over 30 global brands, including multibillion dollar brands such as Samsung, Hitachi, Philips, Whirlpool and Kenwood. Our tradition of trusted excellence began with the invention of the very first sewing machine in 1851 and continues today at our state-of-the-art manufacturing facilities. Our subsidiaries include Singer Finance, which has revolutionized the consumer landscape by providing innovative financial products to Sri Lankans from all walks of life. Singer is the global market leader, with an unmatched record of over 160 years.

Are you the next generation of Singer?

## Branch Managers - Singer Plus Showroom

Ideal candidates must be aged between 30 and 40 years, possess an outgoing personality, and have experience in handling both the sales and administrative functions of a retail store. Knowledge of hire purchasing, consignment inventory, merchandising, and customer care will be advantageous. Multiple language skills would be beneficial, particularly a proficiency of the language required in the locations of the available vacancies.

Selected candidates will undergo an extensive training period where you will be exposed to all sales and administrative functions of a retail shop.

Successful candidates will be required to provide a security deposit of Rs. 150,000/- upon commencement. You can look forward to a six-figure monthly income, inclusive of incentives and commissions.

## Assistant Branch Managers - Singer Plus Showroom

Applicants for this position must ideally be aged between 23 and 28 years and have achieved very good results in G.C.E. O/L and A/L examinations, including credit passes in English & Mathematics. Fluency in Sinhala, Tamil and English are prerequisites and experience in sales work would be advantageous.

Selected candidates will undergo an extensive training period where you will be exposed to all sales and administrative functions of a retail shop.

Opportunities are available to advanced your career to the position of Branch Manager. A generous allowance will also be paid during the training period.

Vacancies are available in following areas in the Northern and Eastern Provinces

**Jaffna, Trincomalee, Vavuniya, Akkarepattu, Thirukkovil, Samanthurai, Ampara, Manipai, Mankulam and Kokkadichole**

If you feel you have what we need, then forward your CV, together with the contact details of two non-related referees, to the address below or e-mail to **chamindamu@singersl.com** to reach us within 7 days from the date of this advertisement. Please indicate the post applied for on the top left corner of the envelope.

Assistant Manager - Recruitment & Systems
Singer (Sri Lanka) PLC,
80, Nawam Mawatha,
Colombo 2.

SINGER
Trusted Excellence

(சி/11184)(6.3)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0218671111

## வீடு வாடகைக்கு

சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில் பிளெச்சர் வீதியில் சகலவசதிகளும் கொண்ட நிலத்திற்கு மாபிள் பதித்த இரண்டு குளியலறையுடன் 3 அறை வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 997 7308, 075 614 5371

(31464) (48.1)

## அறை வாடகைக்கு உண்டு

வேலை பார்க்கும் பெண்கள், பல்கலைக்கழக மாணவிகள், பாடசாலை மாணவிகளுக்குக் கொடுக்கப்படும் பாதுகாப்பான இடம். யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில். (31414)(7.3)

தொ.பே. 021 222 1781

இல. 831/34 A, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

## வீடு விற்பனைக்கு

பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாக 1½ பரப்புக் காணியுடன் அதி நவீன வசதியுடன் புதிதாகக் கட்டப்பட்ட 6 அறைகள், 2 Hall, Attached bath room, Kitchen உடன் வீடு முழுவதுமாக Tiles பதிக்கப்பட்ட 04 வாகன தரிப்பிட வசதியுடன் அமைந்த மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு. நல்லூர் முருகன் கோயில் அருகில்.

(கச்சேரி, பிரதான வைத்தியசாலை ஆகியன அருகில் அமையப் பெற்ற வசதியான வீடு)

தொடர்பு: 077 0289212 (30006)(3.0.11)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கொழும்புத்துறை, வளன்புரம் பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீட்டுடன் அமைந்த காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 960 3032 (31408)(11.6.3)

## வீடு வாடகைக்கு

கோண்டாவில் டிப்போவிற்கும் பெற்றோல் செற்றுக்கும் இடையில் எட்டு அறைகள் கொண்ட சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு. (நிறுவனங்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு: 077 614 6253 (31415)(7.3)

## கார் விற்பனைக்கு

வைத்தியரின் பாவனையிலுள்ள Maruthi Suzuki ALTO LXI Special Edition விற்பனைக்கு உண்டு. (31425)(7.3)

தொ.பே. 077 443 8663

## EARN AN UNLIMITED INCOME BASED ON YOUR SKILLS..

No gender difference

Both who are employed as well as unemployed could join us..

Free Training (if you would like to be a part of our successful business and reach unlimited goals. Those who join us this day are entitled to a special discount)

If you are living in Jaffna Pls. contact before 22/08/2013 and join us with free workshop.
Jaffna people and others pls.

**Contact: Shanthi**
**Tel.: 0727-277622 / 0777-812322**

## மணமகள் தேவை

மணமகள் தேவையா? ஒரு sms இனூடான உங்களின் பதிவினை மேற்கொண்டு காத்திருங்கள். உங்களின் டயலொக் மொபைலில் (Dialog) REG bride என ரைப் செய்து 77000 இலக்கத்திற்கு sms பண்ணவும். மேலதிக தகவலிற்கு www.realmatrimony.com Call : 011 4380900 0114344230

## மணமகன் தேவை

மணமகன் தேவையா? ஒரு sms இனூடான உங்களின் பதிவினை மேற்கொண்டு காத்திருங்கள். உங்களின் டயலொக் மொபைலில் (Dialog) REG groom என ரைப் செய்து 77000 இலக்கத்திதிற்கு sms பண்ணவும். மேலதிக தகவலிற்கு www.realmatrimony.com Call : 011 4380900 0114344230


## sms ஊடாக வரன் தேடல்

sms இனூடாக Realmatrimony இல் பதிவதாயின், உங்களின் மொபைலில் <உங்களின் பெயர்>, <பிறந்த திகதி>, ரைப் செய்து 0777 111 786 என்ற இலக்கத்திற்கு sms பண்ணுங்கள். அதே நாள் இலவச சேவையினையும் பெறலாம். மேலதிக தகவலுக்கு அழையுங்கள் www.realmatrimony.com Call : 011 4380900 0114344230

# முடிவின்றி தொடர்ந்து வரும் சாவுகளுக்கு யார் பொறுப்பு?



“ எத்தனை இறப்புகளை வைத்தியசாலைகள் கண்டிருக்கும். உயிர் பிரியும் தறுவாயிலும் அதன் பின்னரும் சுற்றி நின்று கதறும் சுற்றத்தினதும் உறவுகளினதும் வேதனையை ஜீரணித்துக் கொள்ள எத்தனை நெஞ்சுரம் வேண்டும். நித்தமும் நடக்கும் இந்த நிகழ்வுகள் எதனைச் சொல்கின்றன? இவற்றிலே தவிர்க்கப்பட்டிருக்கக் கூடிய இறப்புகள் எத்தனை?




சாவுகள் மலிந்து மனங்கள் மரத்துப் போன பூமியிது. ஓர் உயிரின் முடிவிலே எவ்வளவு துயரங்கள்? எத்தனை கனவுகளின் சிதைவுகள்? ஏக்கம், கவலை, கோபம், வெறுப்பு விரக்தி என எத்தனை உணர்வுகளின் கொந்தளிப்புகள். பெருகிச் செல்லும் இந்த இழப்பு களை தடுத்திருக்க முடியாதா? தடுக்க முடியாதா? தவிர்த்திருக்கக் கூடிய இறப்பு களை தாங்கிக் கொள்வது, சகித்துக் கொள்வது மிகவும் துயரமானதும் கஷ்டமானதுமான அனுபவம் என்பது எவருக்கும் புரியும். இந்த இறப்புகளை மறைக்கவோ நியாயப் படுத்தவோ முயல்வது மனிதத்துவத்துக்கும் மனச் சாட்சிக்கும் விரோதமானது.

எத்தனை இறப்புகளை வைத்தியசாலைகள் கண்டிருக்கும். உயிர் பிரியும் தறுவாயிலும் அதன் பின்னரும் சுற்றி நின்று கதறும் சுற்றத்தினதும் உறவுகளினதும் வேதனையை ஜீரணித்துக் கொள்ள எத்தனை நெஞ்சுரம் வேண்டும். நித்தமும் நடக்கும் இந்த நிகழ்வுகள் எதனைச் சொல்கின்றன? இவற்றிலே தவிர்க்கப்பட்டிருக்கக் கூடிய இறப்புகள் எத்தனை?

இளம் மனைவியையும் பிஞ்சுக் குழந்தைகளையும் தவிக்கவிட்டு மாரடைப்பால் மரணித்துக் கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர்? ஈரல் நோய் காரணமாக இரத்த வாந்தியுடன் அனுமதிக்கப்பட்டு இறந்து போனவர்கள் எத்தனை பேர்? திடீரென ஏற்பட்ட பாரிசவாதத்தால் நம்மை விட்டு மறைந்துபோனவர்கள் எத்தனை பேர்?

தொழிலுக்கு போகும் பாதையிலே வாகனத்தால் மோதுண்டு மடிந்துபோனவர்கள் எத்தனை பேர்? நஞ்சுண்ட நிலையிலே அனுமதிக்கப்பட்டு இறந்துபோனவர்கள் எத்தனை பேர்? சமூகவிரோத கும்பல்களினால் சட்டத்துக்குப் புறம்பான விதத்திலே கொல்லப்பட்டவர்கள் எத்தனை பேர்? உடல் பருத்து நீரிழிவு, உயர்குருதி அமுக்கம் ஏற்பட்டு மரணிப்பவர்கள் எத்தனை பேர்? கலாசார சீர்கேடுகள் காரணமாக சிக்கல்களுக்கு ஆட்பட்டு மனவேதனையுடன் மரணிப்பவர்கள் எத்தனை பேர்? சுற்றாடல் மாசடைவ தால் தொற்றுநோய்கள் மற்றும் புற்று நோய் என்பன ஏற்பட்டு இறந்து கொண் டிருப்பவர்கள் எத்தனை பேர்? வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உறவினர்களின் ஆதரவோ அரவணைப்போ இன்றி அன்புக்கு ஏங்கி மரணித்துப் போகும் முதியவர்கள் எத்தனை பேர்? முடிவின்றி தொடர்ந்து கொண்டிருக்கும் இந்த இறப்புக்களுக்கு எல்லாம் யார் பொறுப்பு?

இங்கு சாவுகள் மலிந்து போனமை உண்மையிலே யார் செய்த குற்றத்தினால்? சோறு தீத்துவதை ஒரு சம்பிரதாய சடங்காகவே கொண்டாடி எம்மை சோற்றிற்கும் மாப்பொருளுக்கும் அடிமையாக்கி நோயாளியாக்கிய எமது சம்பிரதாயத்தின் குற்றமா? மக்களுக்கு போதுமான மருத்துவ சுகாதார அறிவை புகட்டத் தவறிய மருத்துவத்துறையினரின் குற்றமா? ஆரோக்கியமற்ற உணவுப் பொருள்களையும் பானங்களையும் அருமருந்து போல போலியாக விளம்பரம் செய்ய இடமளித்த ஊடகத்துறையினரின் குற்றமா? உடற்பயிற்சி ஓர் உயிர்காப்பு பயிற்சி என்பதை சிறுவர்கள் மனதிலே பதிப்பிக்கத் தவறிய பெற்றோர்களின் குற்றமா? நோயுற்று வைத்தியசாலைக்கு வரும் பொழுது அதி உச்சக் கவனிப்பு வசதிகளையும் கவனிப்பையும் உறுதிப்படுத்தாத சுகாதாரத் துறையினரின் குற்றமா? உயிர் கொல்லிகளான சிகரெட், சுருட்டு, பீடி போன்றவற்றை கடைகளிலே விற்பனை செய்வதற்கு அனுமதித்தவர்களின் குற்றமா? போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த முடியாதுபோன காவல்துறையினரின் குற்றமா? தீய பழக்கங்களையும் சமுதாய சீரழிப்பு நடவடிக்கைகளையும் எம்மிடையே பரப்ப அனுமதித்துக் கொண்டிருக்கும் எமது சமுதாயக் கட்டமைப்பின் குற்றமா? ஒருவரை பசியாத பொழுதும் உண்ணுமாறு வற்புறுத்துவதை ஓர் உபசரிப்பு முறையாகக் கருதும் எமது கலாசாரத்தின் குற்றமா? எமது மக்களிடையே அன்பு, அமைதி, ஆதரவு, மன்னிக்கும் மனோபாவம், துயர்துடைப்பு, தியானம் போன்ற நல்ல விடயங்களை வேரூன்ற வைக்கத் தவறிய எமது மதங்களின் குற்றமா? பொன் கொழிக்கும் விளை நிலத்திலே உயிர்கொல்லிகளான புகையிலையை பயிரிட்டும் நஞ்சு தெளிக்கப்பட்ட மரக்கறி, பழ வகைகளை சந்தையிலே விற்பனை செய்தும் வருகின்ற விவசாயிகளின் குற்றமா? சந்து பொந்துகள் எங்கும் சாராயக் கடைகள் திறக்க அனுமதித்தவர்களின் குற்றமா? சுற்றாடல் பாதுகாப்பு சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தத் தவறிய கற்றறிந்தவர்களின் குற்றமா? சமுதாய சீர்கேடுகளுக்கு வழிகோலும் ரி.வி.தொடர் நிகழ்ச்சிகளுக்கு அடிமையாகி இளம் சமுதாயத்தினரையும் அதற்கு பலிகொடுத்துக் கொண்டிருக்கும் குடும்பத்தவர்களின் குற்றமா? தெருவிலே வாகனம் செலுத்துவதற்கு தகுதி அற்றவர்களையும் தகுதி அற்ற வாகனங்களையும் தொடர்ந்து அனுமதித்துக் கொண்டிருக்கும் வீதி ஒழுங்குக்குப் பொறுப்பானவர்களின் குற்றமா?



தவிர்க்கப்படக் கூடிய சாவுகளின் அடிப்படைக் காரணங்களை ஆராய முற்படும் பொழுது குழப்பமே மிஞ்சுகிறது. இவற்றை நிவர்த்தி செய்ய எங்கிருந்து ஆரம்பிப்பது எங்கே முடிப்பது? என்று தடுமாற நேர்கிறது. இவ்வாறான மரணங்கள் தொடரத்தான் போகின்றனவா?

மனிதனது மூளையின் சிந்தனை ஓட்டமும் தொழிற்பாடும் வடிவமைக்கப்பட்டிருக்கும் விதம் உண்மையிலேயே விசித்திரமானது. மனித மனமானது, பிறர் விடும் தவறுகளை துல்லியமாக அடையாளப்படுத்துவதில் நிபுணத்துவம் மிக்கதாகவும், தான் விடும் தவறுகளை புரிந்து கொள்ளும் அல்லது ஏற்றுக் கொள்ளும் வல்லமையில் பின் தங்கியதாகவுமே வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இது இயற்கை பூமியில் தன்னை நிலை நிறுத்துவதற்கும், நல்ல முறையில் தப்பிப் பிழைப்பதற்கும் தான் செய்வது சரி என்று நிறுவ வேண்டிய தேவை இருக்கிறது. இதனை உயிர்களின் கூர்ப்பின் தக்கன பிழைத்தல் என்ற கோட்பாட்டின் மூலம் உறுதி செய்ய முடியும்.

இதனை மனித வாழ்க்கைக்கான போராட்ட யுக்தி என்றும் சொல்லலாம். மனிதனுக்கு இயற்கையாகவே அமைந்துவிட்ட இந்த தான் விடும் தவறுகளை தானே புரிந்து கொள்ளத் தெரியாத தன்மையே சுகாதார மேம்பாட்டுக்கும் மனிதகுல மேம்பாட்டுக்கும் பெரும் தடைக்கல்லாக இருக்கிறது. மதக்கோட்பாடுகளும் மனித நாகரிக வளர்ச்சியும் மனிதனை சரியான நீதியான முறையிலே சிந்திக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றன. நாம் விடும் தவறுகளை நாமே அடையாளப்படுத்தி எம்மை நாமே திருத்திக் கொள்ள முயலும் பயிற்சியானது உண்மையிலேயே மிகவும் கடினமானது. ஆனால் இதுதான் மனிதனை மனிதத்துவம் மிக்கவனாக மாற்றும் ஒரு முக்கியமான இயல்பாக அமையும். இந்த மனிதத்துவ இயல்பு எம்மிலே வளர்ச்சி காணும்பொழுது பல முடிச்சுகள் தாமாகவே அவிழ்ந்துவிடும்.

அந்த வகையிலே நாம் சிந்திக்கும் பொழுது தவிர்க்கப்படக் கூடிய மரணங்களை தவிர்ப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் எம்மை மாற்றிக் கொள்வதற்கு நிறைய இடம் இருக்கிறது என்பது புலப்படுகிறது. நாம் மற்றவர்களை திருத்த முயல்வதுபோலவே எம்மையும் சற்று மாற்றிக் கொள்ள முயல்வோம். அதன் மூலம் பல அநியாய மரணங்களை நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து தவிர்க்கமுடியும்.

120 வருடங்களுக்கு முன் வாழ்ந்த யாரும் இன்று உயிருடன் இல்லை. இன்னும் 120 வருடங்களின் பின் இன்று இருப்பவர்கள் யாரும் உயிருடன் இருக்கப்போவதுமில்லை. இது சர்வ நிச்சயமானது. இருந்தபோதும் மனிதன் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழும் காலத்தை கூட்டுவதற்காகவே நாம் போராட வேண்டி இருக்கிறது. இந்தப் போராட்டத்தின் வெற்றிக்காக நாம் அனைவரும் சிந்திப்பதற்கும் செய்வதற்கும் நிறையவே இருக்கின்றன.

சி.சிவன்சுதன்,
வைத்திய நிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை.

COMMONWEALTH
PEOPLE'S FORUM
Sri Lanka 2013

# பொதுநலவாய மக்கள் மன்ற அமர்வில் கலந்துகொள்வதற்காக சமுதாய அமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள், அரசுசாரா அமைப்புக்கள் மற்றும் தொழில்சார் அமைப்புக்கள் என்பவற்றை அறிவூட்டுவதற்கான செயலமர்வு

ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் ஒருமுறை பொலுநலவாயத்தின் அரச தலைவர்கள், உலக மற்றும் பொதுநலவாயத்தின் பிரச்சினைகள்பற்றிக் கலந்துரையாடுவதற்கும் கூட்டுரீதியில் பின்பற்ற வேண்டிய கொள்கைகள், எடுக்கப்படும் ஆரம்ப நடவடிக்கைகளைப்பற்றி ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்குமாக பொதுநலவாய அரச தலைவர்களின் கூட்டத்தில் சந்திக்கின்றனர். இக்கூட்டத்தை நடாத்தும்பொருட்டு உதவி வழங்கும் ஓம்பல் நாடும் பொதுநலவாயத்தின் செயலகமும் ஒன்றுசேர்ந்து இக்கூட்டத் தை ஏற்பாடு செய்கிறது.

'சமத்துவமும் பூரண அபிவிருத்தியும் கொண்ட வளர்ச்சி" எனும் தொனிப்பொருளின் கீழ் 2013 பொதுநலவாய அரச தலைவர்களின் கூட்டமானது (CHOGM) நவம்பர் 15-17 திகதிகளில் கொழும்பில் நடத்தப்படவுள்ளது.

பொதுநலவாய அரச தலைவர்களின் கூட்டத்தின் ஒட்டுமொத்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஒருங்கிணைவாக (3) மன்றங்கள் நடாத்தப்படுகின்றன.

- பொதுநலவாயுத்தின் மக்கள் மன்றம் (CPF)
- பொதுநலவாயத்தின் இளைஞர் மன்றம் (CYF)
- பொதுநலவாயத்தின் வர்த்தக மன்றம் (CBF)

பொதுநலவாயத்தின் மக்கள் மன்றமானது (CPF) பொதுநலவாய நாடுகளின் மக்கள் எதிர்நோக்கும் உலகில் அபிவிருத்தியுடன் கூடிய முக்கிய பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுவதற்கும் அதுபற்றிய விவாதங்களை நடத்துவதற்குமாக உலகம் முழுவதிலும் இருக்கும் சிவில் சமூகங்களின் பிரதிநிதிகளை ஒன்றுசேர்க்கின்றது.

பொதுநலவாயத்தினது அரச தலைவர்களின் கூட்டத்திற்கு (CHOGM) உடன் முன்னராக நடத்தப்படும் இந்தப் பொதுநலவாயத்தின் மக்கள் மன்றமானது ஓம்பல் நாடு மற்றும் பொதுநலவாய மன்றத்தினால் தீர்மானிக்கப்படும் பொதுத் தொனிப்பொருளொன்றின் கீழ் உலக அபிவிருத்தியுடனான பிரச்சினைகளைக் கலந்துரையாடுவதற்கும் அதற்கும் மேலதிகமாக சிவில் சமூகப் பிரதிநிதிகள் பொதுநலவாய நாட்டுத் தலைவர்களை சந்திப்பதற்கும் கிடைக்கும் அரிய வாய்ப்பாக அமைகிறது. கற்றல், வலையமைப்பு, மற்றும் பரிமாற்றத்திற்காக வாய்ப்பளித்துக் கொண்டு அரசோடும் தனியார் துறைகளோடும் உறவுகளைக் கட்டியெழுப்புவதற்காக இதனால் சிவில் சமூகத்திற்கு சிறப்பான மேடையொன்று உருவாக்கப்படுகிறது.

கூடிய விவரங்களுக்காக : **cpf 2013.org இணையத்தளத்திற்குச் செல்லவும்.**

*பொதுநலவாய மக்கள் மன்றத்தின் முக்கிய நோக்கங்கள்:*

- பங்கேற்புக் கட்டுப்பாட்டை மேம்படுத்தல்
- கற்றுக்கொண்ட பாடங்களையும் மிகச்சிறந்த நடைமுறைகளையும் பகிர்ந்து கொள்ளல்
- பொது நலவாய மற்றும் ஓம்பல் நாட்டுக்காக நன்மையானதொன்றை அளித்தல்.

**இலங்கை சிவில் சமூக பிரதிநிதித்துவத்தின் நோக்கங்கள்:**

- ➢ தெரிவு செய்யப்பட்ட தொனிப்பொருள்பற்றி இலங்கை சிவில் சமூகத்தின் கருத்துரைகளையும் முன்மொழிவுகளையும் சமர்ப்பித்தல்.
- ➢ பொதுநலவாய மக்கள் மன்றக் கலந்துரையாடல்களின்போது உள்ளூர் பிரதிநிதித்துவம் வழங்கும் பொருட்டு இலங்கை சிவில் சமூகத்தின் பங்கேற்பு

மேற்சொன்ன விடயங்கள்பற்றி உள்ளூர் சிவில் சமூகம் ஆக்கமுறையாக பங்களிக்கத்தக்க திறமுறைகளை கலந்துரையாடுவதற்காக நடத்தப்படும் செயலமர்வில் கலந்துகொள்வதற்கான விருப்பத்தைத் தெரிவித்து உங்களது அமைப்புபற்றி சுருக்கமான விவரமொன்றைத் தயவுசெய்து எமக்குச் சமர்ப்பிக்கவும்.

இதுகுறித்து இரண்டு(02) செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளதுடன் அதன்போது விடய எல்லை, நோக்கங்கள் மற்றும் திறமுறைகள்பற்றி நீங்கள் அறிவுறுத்தப்படுவீர்கள்.

**கண்டி**: 2013 ஒகஸ்ட் 24 ஆம் திகதி, சனிக்கிழமை மு.ப.10.00 மணிக்கு - SLAVSC நிறுவனம், 21/1, கெப்பிட்டிபொல மாவத்தை, போகம்பரை, கண்டி.

**யாழ்ப்பாணம்:** 2013 ஒகஸ்ட் 25 ஆம் திகதி, ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு - 24/2 சேவை இல்லம், பலாலி வீதி, கோண்டாவில், யாழ்ப்பாணம்.

மேற்குறிப்பிட்ட செயலமர்வுகள் ஒன்றுக்கு கலந்துகொள்ளல் பற்றிய வெளிப்படுத்தலை பின்வரும் முகவரிகள் ஊடாக 2013 ஒகஸ்ட் மாதம் 21 ஆம் திகதிக்குமுன் அனுப்பிவைக்கவும்.

***மின்னஞ்சல் : cpf2013.secretariat@gmail.com***

**பொதுநலவாய மன்ற துணைக்குழு அலுவலகம்
பொதுநலவாய அரச தலைவர்களின் கூட்டத்திற்கான
செயலணிச் செயலகம்
4ஆம் பிரிவு
பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்
பௌத்தலோக மாவத்தை,கொழும்பு-07**

தொலைபேசி: 0117575226 - மாரி
0112354425 - மீனு

(C/11178)(3.5)


## வீடு விற்பனைக்கு - சுண்டுக்குளி

All Reasonable offers Considered. 67 Crossette Lane (றக்காலேன் முடிவில், கற்பகவிநாயகர் கோயில் அருகில்) 5 அறைகள் கொண்ட இரட்டை மாடிவீடு நவீன வசதிகள், அறைகளுக்கு 3 இணைந்த குளிப்பு /கழிவு அறைகள், மின்சாரம், வாயு (gas), விறகுக்கு ஏற்ற மூன்று சமயல் அறைகள். வீட்டு நிலப்பரப்பு 3115 சதுரஅடி, காணி 3 பரப்பு. வீட்டைப் பார்த்த பின் விலை நியமிக்கலாம்.

தொடர்பு: 077 634 3863
Jaffnahouse1@gmail.com

## கார் விற்பனைக்கு

Chevrolet Aveo U-VA 2008, Brand New Permit க்கு இறக்குமதி செய்யப்பட்டது. Manual, 1.2cc, power steering, A/C, petrol, 9700km, சிவப்பு நிறம், KG xxxx, டாக்டர் பாவித்தது.

தொடர்பு: 077 756 0411

(31389)(7.6.3)

## சிற்பவேலைகளில் புதிய அத்தியாயம்

இலங்கையில் முதன்முதலாக அறிமுகப்படுத்தியுள்ள **ROBO-X5** அதிநவீன டிஜிற்றல் இயந்திரத்தின் மூலம் முதிரை,வேம்பு,தேக்கு போன்ற வைரமான மரங்களில் யாழ் மக்களின் மனங்கவர்ந்த அன்னம், தீபநாயகி,மயில் போன்ற சிற்பங்களை மிகத்துல்லியமான வடிவமைப்புடன் மூன்று நாள்களில் உங்கள் கனவு இல்லங்களின் கதவுகள்,நிலைகள்,இல்லங்களின் பெயர்ப்பலகைகள் போன்றனவற்றை ஆயிரத்திற்க்கும் மேற்பட்ட புத்தம் புதிய டிசைன்களில் பெற்றுக்கொள்ள.

**மூர்த்தி டிஜிற்றல் சிற்பாலயம்**

62 20,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.0212219399




## 1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21ஆம் பிரிவின் (397ஆம் அத்தி) இன் கீழ் அறிவித்தல்

2013.04.04இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கி பணிப்பாளர் சபை விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது.

1. பிரசித்த நொத்தாரிசு S.N.விஷ்வலிங்கம் அத்தாட்சிப்படுத்திய 2011.05.31 திகதியிட்ட ஈட்டு முறி இல.4174 மற்றும் 2011.09.22 திகதியிட்ட மேலதிக ஈட்டுமுறி இல.4283 ஆகியவற்றின் பேரில் A9 றோட், நுணாவில், சாவகச்சேரி என்னும் முகவரியைச் சேர்ந்த சீவரத்னம் கோபிதாசன் மற்றும் திருமதி ரஞ்சிதமலர் கோபிதாசன் ஆகியோரிடமிருந்து கூட்டாகவும் தனித்தனியாகவும் முதலும் 2013.02.13 வரை வட்டியும் முப்பத்திரெண்டு மில்லியன் ஐநூற்று நான்காயிரத்து அறுநூற்றுப் பதினாறு ரூபாய்களும் எண்பத்தெட்டு சதங்களும் (ரூ.32,504,616/88) மற்றும் இருபது மில்லியன் அறுநூற்றுப் பதினான்கு ஆயிரத்து நூற்று எண்பத்தொன்பது ரூபாய்களும் அறுபத்தாறு சதங்களும் (ரூ.20,614,189/66) அத்துடன் முப்பது மில்லியன் ரூபாய்களும் (ரூ.30,000,000/-) மற்றும் பதினெட்டு மில்லியன் எழுநூற்று எட்டு ஆயிரத்து எழுநூற்று எழுபத்து நான்கு ரூபாய்களும் பதினைந்து சதங்களில் (ரூ.18,708,774/15) முறையே ஆண்டுக்கு பதினொரு தசம் மூன்று ஏழு (11.37% மற்றும் பன்னிரெண்டு தசம் மூன்று ஏழு (12.37) வீதத்தில் 2013.02.14 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்.
2. பிரசித்தி நொத்தாரிசு S.N. விஷ்வலிங்கம் அத்தாட்சிப்படுத்திய மேற்குறிப்பிட்ட 2011.05.31 திகதியிட்ட ஈட்டு முறி இல.4174 மற்றும் 2011.09.22 திகதியிட்ட மேலதிக ஈட்டுமுறி இல.4283 ஆகியவற்றின் பேரில் வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட முப்பத்திரெண்டு மில்லியன் ஐநூற்று நான்கு ஆயிரத்து அறுநூற்றுப் பதினாறு ரூபாய்களும் எண்பத் தெட்டு சதங்களும் (ரூ.32,504,616/88) மற்றும் இருபது மில்லியன் அறுநூற்றுப்பதினான்கு ஆயிரத்து நூற்று எண்பத்தொன்பது ரூபாய்களும் அறுபத்தாறு சதங்களும் (20,614,189/66) அத்துடன் 2013.02.14 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல.692, K.K.S. றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் K.P. பாலகிருஷ்ணன் அவர்களுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ஆம் பிரிவும் (397ஆம் அத்தி) அதன் திருத்தங்களுக்கமையவும் மேற்குறிப்பிட்ட இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி மானிப்பாய் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட அட்டவணை

வடமாகாணம் யாழ் மாவட்டம் தென்மராட்சிப் பிரிவில் நாவற்குழிப் பகுதியில் கைதடி நுணாவிலில் அமைந்த **மருதையினார் சாட்டியும் ஏனைய பகுதிகளும்** என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் **A.கமலசேகரம்** தயாரித்த 2010.09.26 திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல.4304இல் துண்டு 1 என விபரித்த 33 லாச்சம் V.C. மற்றும் 06 குளிகள் விஸ்தீரணமுடைய எனினும் தற்சமயம் 32 லாச்சம் V.C. யும் 14.30 குளிகளும் விஸ்தீரணமுடைய காணியின் தற்சமய எல்லைகளாவன: கிழக்கில் தாமோதரம்பிள்ளை பொன்னையாவினதும் சின்னத்தம்பி அருளையாவினதும் பங்குரிமையாளர்களினதும் ஆதனங்களும் வடக்கில் கண்டி றோட்டும் மேற்கில் ஒழுங்கையும் தெற்கில் சுப்ரமணியத்தின் மனைவி பராசக்தியினதும் சின்னத்தம்பி அருளையாவினதும் ஆதனங்களும் ஆகும். இவை யாவும் F 810/227இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

*இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.*

இலங்கை வங்கி
மானிப்பாய் மேற்தரக்கிளை
திகதி: 30.07.2013

**G. சகாதேவன்**
கிளை முகாமையாளர்

(C/11110)
(7.6.3)

# ஆங்கில விழா, நாடகப் போட்டியில் நெல்லியடி 'கேற்வே'க்கு மூன்றாமிடம்



ஆங்கில விழா நாடகப் போட்டியில் பங்குபற்றி மூன்றாம் இடத்தைப் பெற்ற கேற்வே போட்டியாளர்கள், நிறுவனத்தின் பணிப்பாளர் அலஸ், நெல்லியடிக் கிளையின் முகாமையாளர் நிமல்சன் ஆகியோருடன் காணப்படுகின்றனர். (ஒ)

நெல்லியடி, ஓக.18

ஜோன் கீல்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் 'கேற்வே' குழுமத்தினரால் மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட ஆங்கில விழாவின் நாடகப் போட்டியில் பங்குபற்றிய நெல்லியடி கேற்வேக்கு மூன்றாம் இடம் கிடைத்துள்ளது.

இந்தப் போட்டியில் ஏறத்தாழ 30 இடங்களைச் சேர்ந்த பல்வேறு மாவட்டப் போட்டியாளர்கள் கலந்துகொண்டனர். இதில் திருகோணமலை, மட்டக்களப்பு, நெல்லியடி, பண்டாரவளை, இரத்தினபுரி, கொழும்பு, பாணாந்துறை, அம்பாறை, காலி, வவுனியா போன்ற கேற்வே போட்டியாளர்கள் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றனர்.

இறுதிப் போட்டி கடந்த திங்கட்கிழமை கொழும்பு பிசப்ஸ் கல்லூரி அரங்கில் நடைபெற்றது. இதில் முதலாம் இடத்தை திருகோணமலை கேற்வேயும் இரண்டாம் இடத்தை பண்டாரவளை கேற்வேயும், மூன்றாம் இடத்தை நெல்லியடி கேற்வேயும் பெற்றுக்கொண்டன.

இதில் 'The Promise' எனும் நாடகத்தில் நெல்லியடி கேற்வே சார்பில் புலமைப் பரிசில் பெற்ற உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகள் 13 பேர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஜோன் கீல்ஸ் ஏற்பாடு செய்த சுற்றுலா



ஜோன் கீல்ஸ் குழுமம் யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வர்த்தகபீடத்தின் இறுதி யாண்டு பட்டதாரி மாணவர்களை குழுமத்தின் பிரதான வியாபார நிறுவனங்கள் மற்றும் தொழிற்பாடுகளை பார்வையிடுவதற்காக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொழிற்சாலை சுற்றுலா ஒன்றுக்கு அழைத்திருந்தது. வணிக நிர்வாக கலைமாணி கற்கையை மேற்கொண்டுள்ள நான்காவது வருட பட்டதாரி மாணவர்கள் இலங்கையின் மிகப்பெரிய கூட்டு நிறுவனத்தின் முக்கிய தொழிற்துறைகள், தொழிற்பாடுகள் மற்றும் மூலோபாயங்கள் தொடர்பான நடைமுறை விடயங்கள் தொடர்பான அறிவைப் பெற்று இந்தத் தொழிற்துறைகளில் காணப்படுகின்ற தொழில் வாய்ப்புக்கள் தொடர்பில் மகத்தான விழிப்புணர்வை ஏற்படுத்திக்கொள்ளும் நோக்குடனேயே இந்தச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆறு நாள்கள் கொண்ட இந்தத் தொழிற்துறைச் சுற்றுலா 2013 ஜூன் 17 முதல் 22 வரை இடம்பெற்றதுடன், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்டிருந்த இத்தகைய முதலாவது சுற்றுலாவாகவும் அமைந்தது. ஜோன் கீல்ஸ் அறநிதியம் இதனை ஏற்பாடு செய்திருந்தது. சுற்றுலாவில் பங்குபற்றியிருந்த 94 பட்டதாரி மாணவர்களையும், கற்கைபீடத்தின் நான்கு உறுப்பினர்களையும் இந்தச் சுற்றுலாவின் ஆரம்பத்தில் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பணிப்பாளர் சபைத் தலைவரான சுசந்த ரட்ணாயக்க அன்புடன் வரவேற்றிருந்தார்.

வர்த்தக சமூக நலன்புரிப் பிரிவின் தலைமைத் தொழிற்பாட்டு அதிகாரியான கார்மலின் ஜெயசூரிய கூறுகையில் "வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சுற்றுலாவை ஏற்பாடு செய்தமையையிட்டு நாம் மிகவும் பூரிப்படைந்துள்ளோம். நீங்கள் புத்தக ரீதியாகக் கற்ற விடயங்கள் தொடர்பான நடைமுறை சார்ந்த அம்சங்களைக் கற்றுக்கொள்வதற்கு இது பேருதவியாக அமையும் என நான் திடமாக நம்புவதுடன், அதன் மூலமாக உங்களது தொழில் வாழ்க்கை தொடர்பில் உரிய தீர்மானங்களை மேற்கொண்டு, தனியார் துறையிலோ அல்லது அதற்கு வெளியிலோ நீங்கள் விரும்புகின்ற தொழிற்துறையில் கால் பதிப்பதற்கு தகுந்த வழிகாட்டியாக அமையும்" என்று குறிப்பிட்டார்.

ஆறு தினங்கள் இடைவெளியில் கீல்ஸ் சுப்பர்மார்க்கட்டுக்கள், வியாபாரத் தொழிற்பாடுகள் வெளிச்சேவையமர்வு (BPO) தொழிற்பாடுகள் (Info mate), எலிபன்ட் ஹவுஸ் பானங்கள் மற்றும் ஐஸ்கிறீம் தொழிற்சாலைகள், யூனியன் பிளேஸிலுள்ள On three 20 பெரிய அடுக்குமனைக் கட்டுமானத் தளம் (John Keells Land), தேயிலை தரகு மற்றும் சுவைக்கும் நடைமுறைகள் (John Keells PLC) மற்றும் இலங்கையின் முன்னணி ஐந்து நட்சத்திர ஹோட்டல்களான சினமன் கிரான்ட் மற்றும் சினமன் லேக்சைட் ஆகிய இடங்களுக்கு பட்டதாரி மாணவர்கள் தமது சுற்றுலாவை மேற்கொண்டிருந்தனர். அத்துடன் குழுமத்தின் மென்பொருள் அபிவிருத்தித் தொழிற்பாடுகள் (John Keells Computer services), ஹோட்டல் தொழிற்பாடுகள் (Keells Hotel Management Services) மற்றும் சுற்றுலாப்பிரயாண முகாமைத்துவ சேவைகள் (Walkers tours) தொடர்பில் இடைச்செயற்பாடுகள் கொண்ட படைப்பாக்கங்களில் அவர்கள் பங்குபற்றி South Asia Gateway Terminals மற்றும் Lanka Marine Services ஆகிய விசேட தொழிற்பாடுகள் தொடர்பிலும் பரிச்சயத்தைப் பெற்றுக்கொண்டனர்.

இதைவிட வர்த்தகக் கலாசாரம் மற்றும் விழுமியங்கள் தொடர்பான பயனுள்ள அறிவைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை இந்தச் சுற்றுலா அவர்களுக்கு வழங்கியதுடன், தனியார் துறையில் உள்ள வேறுபட்ட தொழில்வாய்ப்புக்கள் தொடர்பான தகவல்களை அறிந்துகொள்ளவும் உதவியிருந்தது. "மிகவும் பயன்மிக்க இந்தச் சுற்றுலாவை ஏற்பாடு செய்தமைக்காக ஜோன் கீல்ஸ் நிறுவனத்துக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்" என்று கூறியுள்ளதுடன், வர்த்தக உலகில் என்னை எவ்வாறு ஈடுபடுத்திக்கொள்வது என்பது தொடர்பான அறிவையும் எனக்குப் புகட்டியது என்று கே.பிரணவன் கூறினார்.



மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற இலங்கை வங்கியின் 74 ஆவது ஆண்டு நிறைவையொட்டிய பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் ரி.எம்.ரி.தென்னக்கோன் மங்கல விளக்கேற்றுகிறார். (எ-100)

# சேர்டிஸ் லங்கா நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளை விரிவுபடுத்தல்

சேர்டிஸ் லங்கா நிறுவனம் தனது செயற்பாட்டை விரிவு படுத்துவதற்காக கடந்த 14ஆம் திகதி முதல் புதியதோர் இடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. அத்தோடு தனது சேவையை மிகவும் புதிய பரிணாமத்துடன் வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்காகக் காத்திருக்கிறது.

இந்தக் கிளையின் புதிய அலுவலகத் திறப்பு விழாவில் யாழ்ப்பாண மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

சேர்டிஸ் லங்கா நிறுவனம் தனது சேவையை 1977இல் ஆரம்பித்து சேர்டிஸ் CLSCO பாதுகாப்பு லிமிடட் முழுமையாக Temasek Holding நிறுவனத்தோடு இணைந்து அதன் செயற்பாடுகளை துரித கதியில் மேம்படுத்தி வருகிறது. அத்துடன் இதற்கான பண உதவியை சிங்கப்பூர் அரசின் சேர்டிஸ் லங்கா குழுமம் வழங்குகிறது. இக்குழுமம் கீழ்வரும் ஐந்து சேவைகளை வழங்குகிறது.

1. சேர்டிஸ் லங்கா செக்கியுரிட்டி சொலூஷன்ஸ் (பிறைவேற்) லிமிடட்

-நம்பத்தகுந்த பாதுகாப்புத் சேவை

2. சேர்டிஸ் லங்கா செகியோ லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேற்) லிமிடட்

-உங்களது பெறுமதிமிக்க சொத்துக்களை நாம் பொறுப்புடன் பாதுகாப்போம்

3.சேர்டிஸ் லங்கா ரெக்னோலொஜி அன் கன்சல்டன்ஸி (பிறைவே ) லிமிடட்

-தொழில்நுட்பம் மற்றும் ஆலோசனைச் சேவை

4. சேர்டிஸ் லங்கா கூரியர் சேவிஸ் (பிறைவேற்) லிமிடட்

-கடுகதி சேவை

5. சேர்டிஸ் லங்கா ஹோம்நேர்சிங் அன் ஸ்விபப்ட்கெயர் (பிறைவேற்) லிமிடட்

-வீட்டுத் தாதிச் சேவை

கடந்த 30 வருட காலமாக சேர்டிஸ் லங்கா நிறுவனம் தனது உற்று நோக்கிய நடவடிக்கையை விரிவுபடுத்தி வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்புக்கான தீர்வைகளையும் பாதுகாப்பு செயற்பாடுகளையும் வழங்கி வருகிறது. இன்று இந்த நிறுவனம் மிகவும் தாராளமான வர்த்தகத்தையும் தொழிற்சாலைப் பாதுகாப்பு சேவைகளையும், நாடு பூராகவும் கிளைகளைப் பரப்பி வலையமைப்பினூடாக அமைத்தும், மிகவும் பிரதான நகரங்களில் எமது கிளைகளை அமைத்தும், அனைத்து சேவைகளையும் சிறப்பாக வழங்குகிறோம். பணம், மற்றும் மிகவும் பெறுமதி வாய்ந்த பொருள்களுக்கான போக்குவரத்து பாதுகாப்பையும், வீட்டுத் தாதிச் சேவையையும் மின்னியல் பாதுகாப்புத் திட்டச் சேவையிலும் கூரியர் சேவையிலும், ஒரே கூரையின் கீழ் தமது வாடிக்கையாளர்களுக்கு மிகத் துரிதமான சேவையை ஒன்றாகச் சேர்ந்து இயங்குகின்ற சக்தியோடு வழங்கி வருகிறது.

**வடமாகாணத்து இருப்பிடத்திலிருந்து அனைவருக்கும்** எமது புதிய இடமான **இல.01, விக்ரோரியா வீதி, யாழ்ப்பாணக் கிளையினூடாக தனது** சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம். (சு)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வருங்காலச் சந்ததியினரின் வழித்தடம் செம்மையுற....

இப்போதெல்லாம் மனித நேயம் எங்கள் பிரதேசங்களில் ஒப்பீட்டளவில் குறைந்து வருகிறது என்ற கவலைக்குரிய நிலை மேலோங்கி வருவதை அவதானிக்க முடிகிறது. அதன் மத்தியிலும் பாடசாலை செல்லும் சிறுவர்கள் பலரிடம் மனித நேயம், மனிதாபிமானம் என்பன பொதிந்திருப்பதை உதயனில் அண்மையில் வெளிவந்த செய்திப்படம் ஒன்று சுட்டிக் காட்டியிருந்தமை வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

வசதி குறைந்த வயதான ஒருவர் மீது பாடசாலை செல்லும் இரண்டு மாணவர்கள் அன்பு கொண்டு அவர் போகவேண்டிய இடத்துக்கு அழைத்துச் சென்றதோடு, பசியாற உணவும் வாங்கிக் கொடுத்தனர் என்பதனை அந்தச் செய்திப் படம் தத்ரூபமாகப் பிரதிபலித்தது.

அந்த மாணவர்களை ஆயிரத்தில் இருவர் என்று கொள்வதோடு நிற்காமல், அவர்களைப் போன்ற ஆயிரக்கணக்கானோரை, எங்கள் எதிர்காலச் சந்ததியினரின் மத்தியில் இருந்து உருவாக்க வேண்டிய பொறுப்பு, மிகக் குறிப்பாகப் பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும் உண்டு.

எமது பிரதேசங்களை வளம் மிக்கவையாக மாற்றுவதற்கு, சிறுவர்களின் மனங்களில் நற்பண்புகளை ஊட்ட வேண் டும், வளர்க்க வேண்டும்.

அவர்களிடம் நல்ல எண்ணங்களை, கருத்துக்களை வளர்ப்பதன் மூலம், அவர்களது வருங்காலம் மட்டுமன்றி சமூகத்தின் எதிர்காலமும் சிறப்படைய வாய்ப்பு உண்டு. நல்ல பண்புகளை வளர்க்காத கல்வியால் பயனில்லை.

சிறுவர்களிடம் நற்பண்புகளை வளர்க்க வேண்டும் என்று வெறுமனே பேசியும் எழுதியும் எதிர்பார்க்கும் பயனை எய்த இயலாது. அதற்கான வழிதுறைகளை வகுத்து கடைப்பிடிக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு பெற்றோரிடமும் ஆசிரியர்களிடமுமே பெரும் பரிமாணத்தில் உண்டு.

எங்கள் பிரதேசங்களில் அந்த நிலைமை மிகவும் குறைவாகவே காணப்படுவது கவலைக்கு உரியதாகும். நகரப் புறங்களில் மட்டுமன்றி கிராமப் புறங்களிலும் இளையோரிடையே மதுபானம் அருந்தும் பழக்கம் மலிந்து வருவது மிகுந்த கவலைக்கு உரியதாகும். எமது எதிர்காலச் சந்ததி எதனை நோக்கிச் செல்கிறது, அவர்களின் வாழ்க்கை எத்தனை வகைகளில், விதங்களில் பாழறப்போகிறது என்பது சமூக நலன் விரும்பிகளை ஏக்கமுற வைக்கிறது.

கோயில் சூழல்களில், வீதிகள் தோறும், குச்சொழுங்கைகளில், பொது இடங்களில் விடியற் காலைகளில் மதுப்புட்டிகள், மிகக் குறிப்பாகக் கூறுவதானால் 'பியர்' வெற்று 'ரின்கள்' குவிந்து கிடப்பதைக் காணமுடிகிறது.

இரவில் குளிர்பானம் அருந்தினால் விடிய விடிய உற்சாகத் தோடு படிக்க முடியும் என்று அம்மாக்களை ஏய்க்காட்டி, நாளாந்தம் "பியர்" அருந்தும் (கதைகளும்) சம்பவங்களும் மலிந்து வருகின்றன.

போருக்குப் பின்னரான சமூகச் சீர்கேடுகள், வேகவேகமாக மலிந்து வருவது, எதிர்காலத் தமிழர் சமுதாயம் எங்கே செல்கிறது என்ற மிகப் பென்னம் பெரிய கவலைக்குரிய வினாவை உயர்த்தி உருவாக்கி உள்ளது.

நீண்ட போர்க் காலத்தின் பின்னர், வாழ்வியலின் சகல பரிமாணங்களிலும் தேய்ந்து, தாழ்ந்து போயுள்ள தமிழர் சமூகம், தனது முந்திய நிலைக்கும் அப்பால் நெடிதுயர வேண்டிய தவிர்க்க முடியாத தேவை உயர்ந்து நிற்கிறது.

இன்னல்களும், இல்லாமைகளும், பேரிழப்புகளும் எங்களை எல்லையின்றிச் சோதித்ததால் சோர்வடையவோ, சோரம் போக வேண்டுமென்றோ நியதி இல்லை.

எமது இளைய சமூகத்துக்கு நல்லதோர் எதிர்காலத்தை உருவாக்கும் பெரும் பொறுப்பு முழுக்க முழுக்க பெற்றோரிடமும், ஆசிரியர்களிடமும், உள்ளார்ந்த சமூக சிந்தனையாளர்களிடமுமே உண்டு. எந்த அதிகாரத்துவங்களும் எமது எதிர்காலச் சந்ததியினரின் வாழ்வை இருளடையச் செய்யவிடாது தடுக்கும் பொறுப்பும் எங்களுக்கே உண்டு.

பிரச்சினைகள் இன்றி, இல்லாமைகள் இன்றி, முரண்பாடுகள் இன்றி, எந்த இனமும் சமூகமும் இல்லை. ஆனால் அவற்றை எதிர்கொண்டு, மாற்றி வெற்றி கொள்வதிலேயே அதன் எதிர்கால மலர்ச்சி தங்கி உள்ளது.

எமது இனத்தின் இருப்பும் எதிர்காலமும் நல்ல வண்ணம் அமைவது, எமது எதிர்காலச் சந்ததியினரை வழிப்படுத்தும், நெறிப்படுத்தும் சீரிலேயே முற்றிலும் தங்கி உள்ளது. இதனை வளர்ந்தோர்கள் மனதில் கொள்வார்களா....?

# வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழர் அரசுக்குப் பாடம் புகட்டுவர்

## சிங்கள புத்திஜீவி மனம் திறக்கிறார்

ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத்துறைப் பேராசிரியர் டெரன்ஸ் புரசிங்க 'ஜனரள' பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணல்

தமிழில் : வீ.எஸ்.ரீ.

கே:வட மாகாண சபைத் தேர்தல் தொடர்பான தங்களது கருத்தென்ன?

ப:அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் தமிழ் மக்களது பிரச்சினைத் தீர்வுக்குப் போதுமானதொன்றல்ல. ஆதலால் 13 ஆவது திருத்தத்துக்கும் மேலான தீர்வொன்று வழங்கப்பட வேண்டும். அதாவது 13 ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலாக பரந்த அதிகாரங்கள் உள்ளடங்கிய தீர்வு வழங்கப்படவேண்டும். தமிழ் மக்களது சுய நிர்வாகம் அங்கு ஏற்படுத்தப்பட வேண்டும். ஆதலால் தற்போது வடமாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படுவது சிறப்பானதொன்றாகும். காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களுடன் கூடிய நிர்வாகம் மாகாண சபைகளால் நடைமுறைப் படுத் தப்பட இடமளிக்கப்பட வேண்டும். இந்தத் தேர்தல் சுதந்திரமானதும் அமைதியானதுமான விதத்தில் நடத்தப்பட்டால் வடமாகாண சபையின் நிர்வாக அதிகாரத்தைக் கைப்பற்ற தமிழ் மக்களது பிரதிநிதிகளுக்கு வாய்ப்புக் கிட்டும். அத்தகைய நிலையில் அவர்களால் தமது சுய நிர்வாகத்தை ஆரம்பிக்க முடியும். அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் தமிழ் மக்களது பிரச்சினைத் தீர்வுக்குப் போதுமானதல்ல. அதற்கு மேலான பரந்த சுயநிர்வாக உரிமை தமிழ் மக்களுக்கு வழங்கப்படவேண்டும் என நான் நம்புகிறேன்.

கே:வட மாகாண சபைத் தேர்தல் நடைமுறை மூலம் தமிழ் மக்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டுமென நீங்கள் கருதுகிறீர்களா?

ப:விடயம் இதுதான்; தற்போது வட பகுதியில் இராணுவ நிர்வாகமல்லவா இடம்பெறுகிறது? எனவே இராணுவ நிர்வாகத்தின் கீழ் நடத்தப்படும் தேர்தல் குறித்து எமக்கு நம்பிக்கையில்லை. அதாவது இந்தத் தேர்தலில் இராணுவத் தரப்பால் பெரும் அழுத்தங்கள் மேற்கொள்ளப்படலாம். தற்போதும் அத்தகைய அழுத்தங்கள் நிலவுகின்றன. எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க சிரமம் ஏற்படும். ஆயுதம் தாங்கிய நிலையில் ராணுவத்தினர் அந்தப் பகுதியின் சிவில் நிர்வாகத்தை இல்லாமல் செய்துள்ளனர். இருந்த போதிலும் வடபகுதித் தமிழ்ச் சமூகம் இந்தத் தேர்தலில் அரசுக்கு சரியான பாடம் புகட்டும்.

கே:வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் குறித்த தங்களது கருத்தென்ன?

ப:தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் இனவாதத் தரப்பே. தமிழ்த் தேசியத்தின் ஒரு அமைப்பே அது. ஆனால் மார்க்ஸிஸவாத அமைப்பல்ல. அது லிபரல் ஜனநாயக வாதத்தின் மீது நம்பிக்கைகொண்ட அமைப்பு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் தமிழ்ச் சமூகத்திலும் சிங்கள சமூகத்திலும் பிரபு வர்க்கத்தவர். சட்டத்துறை வல்லுநர். சர்வதேச கௌரவம் அவருக்குண்டு. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பெரும் வாய்ப்பொன்று உள்ளது. அவர் தீவிரப் போக்கு கொண்டிராத, மிதவாதப் போக்கைக் கொண்டவராய் இருப்பதால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீதான விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான தரப்பொன்று என்ற குற்றச்சாட்டுக்கு இந்த முதலமைச்சர் வேட்பாளர் நியமனம் மூலம் சரியான பதில் கொடுக்கப் பட்டுள்ளது. அவர்கள் சரியானதொரு நிலைப்பாட்டில் நின்றுதான் இந்தத் தெரிவை மேற்கொண்டுள்ளனர் என நினைக்கிறேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே வடமாகாண சபை நிர்வாகத்தைக் கைப்பற்றுகிறதென வைத்துக்கொள்வோமே. அவ்வாறானால் இந்த நாட்டில் உருவாகும் ஒரேயொரு ஜனநாயக ரீதியிலான மாகாண சபையாக அது அமையும். ஏனெனில் ஏனைய அனைத்து மாகாண சபைகளும் அரசின் ஆதிபத்தியத்தின் கீழல்லவா உள்ளன. அரச தரப்பினதல்லாது. சுதந்திரமான அரசியல் கட்சியொன்றின் கைகளில் வடமாகாணசபை நிர்வாகம் செல்லுமானால் அது இந்த நாட்டில் மாற்று அரசியலொன்றின் ஆரம்பமாக இருக்குமென நான் கருதுகிறேன்.

கே:தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கான தீர்வொன்று எனத் தாங்கள் கருதுகிறீர்களா?

ப:மிக முக்கியமான கேள்வி இது. மக்களது பிரச்சினைகளுக்கு இந்த சமூகத்தில் தீர்வு உள்ளதா என்பது ஒரு பிரச்சினை. அதனை வேறொரு கோணத்தில் நாம் நோக்குகிறோம். அதாவது முதலாளித்துவ சமூகத்தால் சாதாரண மக்கள் சமூகத்துக்கு தீர்வு கிட்டுவதில்லையே. இங்கு விசேடமொன்றுண்டு. இந்த நாட்டின் பெரும்பான்மை வர்க்கத்துக்கும் சிறுபான்மை மக்களுக்கும் இடையேயான பிரச்சினையே அது. அரசியல் அதிகாரங்கள் இனங்களுக்கிடையே பகிரப்படாமையே நாட்டின் முக்கிய சிக்கல். எனவே இந்நாட்டின் அரசியல் அதிகாரம் சிங்களப் பெரும்பான்மைத் தரப்பின் கைகளில்தான் அகப்பட்டுக் கொண்டுள்ளது. 30 ஆண்டுகள் காலம் போர் இடம்பெற்றதற்கான காரணம் இதுவே. தமிழ் பேசும் மக்களுக்கு அரசியல் அதிகாரம் கிட்டாமல் போயுள்ளது. மாகாண சபை நடைமுறை மூலம் அது குறைந்த பட்சத்திலாவது அவர்களுக்குக் கிடைக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூட முதலாளித்துவத் தரப்பின் கட்சியே. ஆயினும் அது தமிழ் இனத்தவருக்கான அமைப்பல்லவா? பொதுவாக நோக்கினால் வறிய தரப்பைச் சேர்ந்த சகலருக்கும் பிரச்சினைகள் உள்ளன. விசேடமாக இந்த நாட்டில் சிங்களவராயிருத்தல் அல்லது சிங்கள இனத்தவரல்லாதிருத்தல் தொடர்பான பிரச்சினையே உள்ளது. அதாவது தமிழர் தரப்புக்கு சிங்களவர் தரப்பை விட சில விசேட பிரச்சினைகள் சில உள்ளன. மாகாண சபை மூலம் அத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டும்.

கே: அரசினது வடக்கின் வசந்தம் உட்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள் வடக்கு மாகாண சபைக்கான தேர்தலில் அரசுக்கு ஆதரவான வாக்குகளை, விருப்பு வாக்குகளை அமோகமாகப் பெற்றுத்தரப் போவதில்லை எனத் தாங்கள் கருதுகிறீர்களா?

ப : வடக்கின் வசந்தம் வட பகுதிக்கான வசந்தமாக அமையவில்லை. அரசுக்கான வசந்தமாகத்தான் ஆகியுள்ளது. வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழேயே பாதைகள் புனரமைப்பு, கட்டடங்கள் புனரமைப்பு என்பன போன்ற பொருளாதாரச் செயற்பாடுகள் அடங்குகின்றன. அவை தமிழ் மக்களுக்கான பொருளாதாரத்தை முன்னேற்றும் திட்டங்களென அரசு கூறிக் கொண்டாலும் இன்றுவரை தமிழ் மக்களுக்கு அவற்றால் நன்மையெதுவும் கிட்டவில்லை. முதலீட்டாளர்களுக்கே அவற்றால் இலாபம் கிட்டியுள்ளது. அதாவது தென்பகுதி முதலாளித்துவத் தரப்புக்களுக்கும் ராணுவத் தரப்புக்குமே நன்மை கிட்டியுள்ளது. பெருந்தொகையான தமிழ் மக்கள் இன்றும் இடம் பெயர்ந்த தரப்பினர்களாகவே வாழ நேரிட்டுள்ளது. அதேபோன்று சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த வடபகுதி அரசியல் வாதிகளுக்கும் வடக்கின் வசந்தம் திட்டம் மூலம் பெரும் வாய்ப்பு வசதிகள் கிட்டியுள்ளன. அதைவிடுத்து சாதாரண தமிழ்ப் பொது மக்களுக்கு அதனால் எந்தவித பயனும் கிட்டவில்லை. அரசுக்கு எதிரான அந்த மக்களது மனநிலையில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை.

கே: அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் தொடர்பான நிலைப்பாடு உண்மையானது தானா? அல்லது நடிப்புத்தானா?

ப:ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் தங்களது தேவைக்கேற்ற விதத்தில் அல்லாது அரசின் தேவைக்கேற்ற விதத்திலேயே நாடகமாடி வருகின்றன. ஜனாதிபதியால் 13 ஆவது திருத்தத்தை அரசமைப்பிலிருந்து நீக்குவது தொடர்பாக பகிரங்கமாக கருத்து வெளியிட இயலாது. ஆதலால் அரசின் விருப்பம், அரசுடன் இணைந்து செயற்படும் சிறுசிறு கட்சிகளினூடாக வெளிப்படுத்தப்படுகிறது. ஆனால் அரசு 13 ஆவது திருத்தம் தொடர்பாக நாடகமாடுகிறது என்பது தெளிவான ஒன்றே.

கே:முஸ்லீம் மக்களுக்கு எதிராக இனவாதக் கருத்து வெளியிடப்படுவது தொடர்பாக தங்களது விளக்கம் என்ன?

ப:போரின் பின்னர் இந்த நாட்டின் தமிழ் மக்களது உரிமைப் போராட்டம் முற்றுமுழுதாக முறியடிக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தரப்பால் குறிப்பிடத்தக்க அளவு காலத்துக்குத் தலைதூக்க இயலாது செய்யப்பட்டுள்ளது. அதனையடுத்து அரசின் தற்போதைய தேவை முஸ்லீம் மதவாதத்தை அடக்கி ஒடுக்குவதே. அதுவே தற்போது முன்னெடுக்கப்படுகிறது. சிறுபான்மை இனத்தவர்களது முதுகெலும்பை முறித்து விடும் முயற்சியே தற்போது அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இது சிங்கள ஏகாதிபத்தியவாதம் எனக்கொள்ளத்தக்கது. பொதுபல சேன போன்ற தரப்புக்கள் மூலமாக அரசு இதனை முன்னெடுக்கிறது. ஜாதிக ஹெல உறுமய தரப்பும் ஒரு அளவுக்கு இதில் சம்பந்தப்பட்டுள்ளது. ஹலால் விடயம் ஊடாகவே இது ஆரம்பிக்கப்பட்டது. தமிழ் மக்களது போன்று முஸ்லீம் மக்களதும் சுயாதீனத்துவத்தை அடக்கி ஒடுக்குவதே இன்றைய அரசின் தேவையும் விருப்பமுமாகும். முஸ்லீம் மக்கள் நாட்டின் பல பகுதிகளிலும் பரந்து வாழ்வதால் தமிழ் மக்கள் போன்று தமது உரிமைகளுக்கான போராட்டத்தை பலமான விதத்தில் முன்னெடுக்க அவர்களால் இயலாது.

கே:அடிப்படைவாத கடுங்கோட்பாட்டு அமைப்புக்கள் உருவாகக் காரணமான சமூக பொருளாதார அடிப்படை எவை எனத் தாங்கள் கருதுகிறீர்கள்?

ப:இந்த நாட்டின் இனங்களுக்குரிய பிரச்சினைகள் எவையும் இதுவரை தீர்க்கப்படவில்லை. தமிழர் மற்றும் முஸ்லீம் இனத்தவர்கள் போன்றே சிங்கள இனத்தவர்களது பிரச்சினைகளும் தீர்க்கப்படவில்லை. சிங்கள மக்கள் தற்போது பெரும் சிரம நிலையில் உள்ளனர். இந்த நாட்டின் நிர்வாகத் தரப்புக்கள் யாவும் பேரினவாத முதலாளித்துவத் தரப்புக்களே. ஆதலால் அந்தத் தரப்புக்களது சமூக மட்டப் பிரச்சினைகள் மட்டுமே தீர்க்கப்பட்டுள்ளன. கிராமப்புற சிங்கள தமிழ், முஸ்லீம் மக்களது பிரச்சினைகள் தற்போதும் கூடத் தீர்வுகளின்றியே தொடர்கின்றன. விவசாயத்துறை, கலாசாரத்துறை, ஆங்கிலக் கல்வி, குலபேதங்கள் போன்றவற்றுக்கான பிரச்சினைகளுக்கு இதுவரை தீர்வேதும் காணப்படவில்லை. இதனால் கீழ் மட்ட வறிய சிங்கள மக்களை இனவாத நோக்கில் செயற்பட வைக்க அந்தத் தரப்புகளால் இலேசில் முடிகிறது. கீழ் மட்ட வறிய சிங்கள மக்கள் முதலாளித்துவ அரசுக்கு எதிராகப் பொங்கி எழாது தவிர்க் கும் விதத்தில் அவர்களை இனவாதத்தின் பக்கம் திசை திருப்பி விட பொது பலசேன போன்ற தரப்புக்கள் பயன்படுத்தப்படுகின் றன. அத்தரப்புக்கள் இனவாதத்தை வளர்ப் பதால் முதலாளித்துவத் தரப்புக்களால் தமது முதலாளித்துவ நடவடிக்கைகளைப் பாதுகாத்துக் கொள்ள முடிகிறது. அந்த வகையில் கீழ்மட்ட வறிய சிங்கள மக்களது சிரமங்கள் அரசுக்கு எதிராக அவர்களைத் திசை திருப்பாதிருப்பதற்காக தமது சகோதர சிறுபான்மை இனங்களின் மீது திசை திருப்பி விடப்படுகிறது.

கே:நாட்டின் தேசியப் பிரச்சினைகள் தொடர்பாக இடது சாரித் தரப்புக்கள் தற்போதும் விவாதிக்கின்றனவா?

ப:இல்லை சமசமாஜ, கம்யூனிஸ் கட்சிகள் போன்று அவற்றை நான் இடது சாரி நிலைப்பாடு கொண்ட தரப்புக்களெனக் கூறமாட்டேன். இடது சாரிக்கொள்கைகளை காட்டிக்கொடுத்த துரோகிகளே அவர்கள் தேசியப் பிரச்சினை தொடர்பாக இடது சாரித் தரப்புக்களால் விமர்சிக்க இயலாது. அதற்கு அவர்கள் மத்தியில் உறுதியான நிலைப்பாடொன்று இருந்தாக வேண்டும். அதனை சுயநிர்ணய உரிமை எனக்கொள்ளலாம். அது லெனினது நிலைப்பாடு. அது குறித்து விவாதிக்க எதுவுமில்லை. தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளாத அவர் களை இடதுசாரித் தரப்பினர் எனக் கூற இயலாது. ★

## விற்பனைக்கு

கண்டாவளை மண், பூநகரி மண், கண்ட கல், சல்லி வகைகள், டஸ்ற் விற்பனைக்கு உண்டு. உரிய இடத்திற்கு கொண்டு வந்து விநியோகிக்கப்படும்.

தொடர்பு: 071 289 0494

(31336)(6.3.11)

## மணமகள் தேவை

யாழ். றோமன் கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தில் இருக்கும் 37 வயதுடைய மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை.

தொடர்பு: 077 203 2880 (31431) (7.6.3)

## தேவை

வவுனியா தனியார் வர்த்தக நிறுவனத்தில் கடமையாற்றுவதற்கு A/L வர்த்தகப்பிரிவில் கல்வி கற்ற ஆள்கள் தேவை. எதிர்பார்க்கும் சம்பளம், தொலைபேசி இலக்கம் குறித்து சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். தேவைப்படின் தங்குமிட வசதி செய்து தரப்படும்.

தொடர்பு: 077 735 4470

G.H.A.De Silva & Co

இல.64, பஜார் வீதி, வவுனியா.

(35225) (45.3.)

## விற்பனைக்கு

நல்ல இன சணல் ஆடுகள், புறாக்கள், கம்பிக் கூடுகள், மீன் தொட்டிகள், புறாக் கூட்டின் அறைப் பெட்டிகள் மற்றும் Japan கியர் சைக்கிள், கியர் இல்லாத சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: 28, பாரதி வீதி, நாயன்மார்கட்டு.

தொ.பே. 077 672 1687 (31401) (7.6.3)

## வீடு விற்பனைக்கு

நல்லூர், செட்டித்தெரு, நாவலர் வீதி சந்திக்கு அருகில் இல. 64, மருதடி வீதியில் அமைந்துள்ள மூன்று பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. பிரித்தும் விற்கப்படும். சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் பார்வையிடலாம். (9.00-6.00 வரை) (31405) (7.6.3)

தொடர்பு: 077 602 8888, 021 222 7286

## வீடு வாடகைக்கு

யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு 200m தூரத்தில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. இல. 11. மஞ்சவனப்பதி லேன், கொக்குவில் மேற்கு.

தொடர்பு: 071 631 3357 (31400) (7.6.3)

## பொருள்கள் விற்பனைக்கு

சாப்பாட்டு மேசை (முதிரை), றைஸ் குக்கர்கள், மின் கேத்தில், மின் பழங்கள் அரைத்தல், பாபக்கூ (Baberque) இன்னும் பல பொருள்கள்

தொடர்பு: 075 762 5411 (31297) (11.6.3)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நாச்சிமார் கோயில் பூனாறிமரலேன் கொக்குவில் மேற்கு, கொக்குவிலில் 1½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 641 8596

(31351)(6.3.11)

## காணிகள் விற்பனைக்குண்டு

வியாபாரிமூலை இன்பர்சிட்டி பிள்ளையார் முன் வீதியிலுள்ள 1½ பரப்புத் தோட்டக் காணியும் வியாபாரி மூலை சித்திமணலில் உள்ள 1½ பரப்பு வீட்டுடன் காணியும் விற்பனைக்குண்டு. மந்திகை ஆஸ்பத்திரிக்கு அருகில் 750 பிரதான வீதியிலுள்ள இளங்கோ சனசமூக நிலையத்துக்கு முன்பாக உள்ள 4 பரப்பு வீட்டுடன் கூடிய காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு:

075 573 2822/ 0014 1676 88105

## DAMRO

# SALES ASSISTANTS

(Trainee)

Jaffna

We seek to recruit dynamic & self motivated individuals for the above showroom, who are expected to welcome, treat & fulfill the needs of our customers to their entire satisfaction.

**APPLICANTS SHOULD :**

- be males below 26 years of age.
- be permanent residents within 20km from the above showroom.
- have G.C.E (A/L) qualification.
- have a flair for customer relations.

Total earnings will not be less than Rs. 25,000/- p.m. after the training period.

If the above positions are of interest to you, please forward a detailed resume with your contact number & contact details of two non-related referees to reach us within ten days of this advertisement.

**The Human Resources Manager,**
**DAMRO**
**No: 361, Kandy Road, Nittambuwa.**
**E-mail: hrm@damro.lk**

(31382)(3)

## பதவிவெற்றிடம் - திட்ட இணைப்பாளர்

சாந்திகம்

கடந்த பலவருடங்களாக உளவளத்துணை மற்றும் சமுதாய மட்ட உளமருத்துவ - உளசமூகத் துறையில் சேவைபுரியும் எமது நிறுவனம் மருதங்கேணி, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் உளசமூகமேம்பாடு தொடர்புடைய நடவடிக்கைகளைச் செயற்படுத்த உள்ளது. இவற்றைப் பொறுப்பெடுத்துச் செயற்படுத்தக்கூடிய ஒருபொருத்தமான திட்ட இணைப்பாளரை நாம் உள்ளீர்க்க விரும்புகிறோம். இத்திட்டம் USAIL நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும் ஒரு நிகழ்ச்சித் திட்டமாகும்.

தகுதிகள்

★ அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரியாக இருத்தல்.
★ சமுதாயமட்ட உளசமூகப் பணிகளில் குறைந்தது இரண்டுவருட அனுபவத்தினை உடைய வராக இருத்தல்.
★ சாந்திகம் நிறுவனத்தையும், அதன் விழுமியங்களையும் புரிந்து அவற்றை represent செய்யக்கூடியவராக இருத்தல்.
★ மேற்குறிப்படப்பட்ட இடங்களில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய ஆர்வம் உடைய வராக இருத்தல்.
★ ஒருதிட்டத்தைப் பொறுப்பெடுத்து, முகாமைத்துவம் செய்து, பொருத்தமான அறிக்கைகளைத் தயாரித்து, நிறைவு செய்வதற்குத் தேவைப்படும் திறன்களைக் கொண்டிருத்தல்.
★ கணினியைக் கையாளும் திறனுடன், ஆங்கிலத்தில் சரளமாகப் பேசும் மற்றும் எழுதும் ஆற்றல் உடையவராயிருத்தல்.
★ வாகனஓட்டுநர் அனுமதிப்பத்திரம் மற்றும் சிங்களமொழியில் பேசும் ஆற்றல் என்பனவற்றை மேலதிக தகைமைகளாகக் கொண்டிருத்தல்.

முழுநேர ஒப்பந்த அடிப்படையில் உள்ளீர்க்கப்படும் இந்தப் பணியாளருக்கு மாதாந்தம் ரூபா 35,000/- வழங்கப்படும். அதனுடன் ஊழியர் சேமநிதியும் ஊழியர் நம்பக்கைப் பொறுப்பு நிதியும் மேலதிகமாக வழங்கப்படும்.

**விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி- 23.08.2013**

(குறிப்பு: ஏற்கனவே இப்பதவிக்கு விண்ணப்பத்தவர்கள் இவ் விளம்பரத்தினைக் கருத்திற் கொள்ளத் தேவையில்லை)

பொருத்தமானவர்கள் எனக் கருதப்படும் விண்ணப்பதாரிகள் எழுத்து,செயன்முறை மற்றும் நேர்முகத் தேர்வுகளுக்கு அழைக்கப்படுவார்கள்.

மேலதிக விவரங்களுக்கும், சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களைக் கையளிப்பதற்கும் அல்லது தபால் மூலம் அனுப்புவதற்கும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

எஸ்.வி.சங்கரப்பிள்ளை,
நிறைவேற்றுப் பணிப்பாளர், சாந்திகம்,

இல. 8 8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021 222 9720

மின்னஞ்சல் முகவரி: psych@sltnet.lk

(சி/11190) (45.3)

giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

SRI LANKAN-GERMAN DEVELOPMENT COOPERATION

## Career Guidance Counselor - Vocational Training

The Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) is an international cooperation enterprise for sustainable development with worldwde operations. As a federally owned enterprise, we support the German Government in achieving its objectives in the field of international cooperation for sustainable development GIZ drives projects that support Sri Lanka's development objectives and works with stakeholders from across the spectrum in the government, public and private sectors.

The Vocational Training Institute in the North (VTN) of Sri Lanka is a project jointly implemented by the Ministry of Youth Affairs and Skills Development (MYASD), Sri Lanka, and works in collaboration with the National Apprentice and Industrial Training Authority (NAITA). The Project will set up a new Vocational Training Institute in Killinochchi, which provides vocational education and training to meet the needs of the market. The program will be aligned to the National Vocational Qualification System (NVQ).

GIZ-VTN project invites applications from highly motivated and committed professionals with a background in vocational training, including an in depth knowledge about the Technical Education, Vocational Training and NVQ systems in Sri Lanka. The candidate must be in good physical condition as the position requires a substantial amount of time spent travelling on the career guidance bus that will tour various districts of Sri Lanka.

The **Career Guidance Counselor** will work together with interested youth or young adults to ascertain goals and objectives and identify vocational opportunities and alternatives with special focus on the key areas of:

1. **Vocational guidance**
   - Provide advice and information about the choice of a career, specifics on individual careers and career requirements – comprehensive information on vocational training, the responsibilities, requirements and prospects associated with various professions, ways of funding vocational education and training, important trends in the world of work, information on the situation and development of the labor market, and advice on how to find employment or a training place. Identifying people's individual interests, skills, competencies and talents is central to making a reliable choice of career.
2. **Labor market advice**
   - Provide advice and information particularly with regard to the current situation and trends in professions and the labor market, job structures, working conditions etc.
3. **Career counseling**
   - Systematic counseling to have a positive influence on the choice of career and thus the future personal and professional life of youth and young adults.

**Required qualifications, competences/skills and experience**

- Bachelors degree in Vocational Training;
- Must be a qualified career guidance counselor with at least 3+ years of proven ability and experience in career guidance;
- Possess an in depth knowledge about the Technical Education and Vocational Training system and the NVQ system of Sri Lanka; including in depth knowledge of the different occupations, career advancement opportunities and remuneration structure for wage / self / foreign employment;
- Knowledge of assessment techniques such as computer based Job preference testing;
- Knowledge of available opportunities for training, higher / further education & training and employment at both local and national level through Government, Private and NGO VT providers;
- As a Guidance Counselor, you must enjoy working with people, helping them to make important decisions about their personal, education, training and employment options. Must possess ability to put people at ease and give information clearly is important;
- Publicity skills to provide increased awareness to the local communities of the CG services and activities through organizing events such as competitions, street drama, debates, sports activities and banners / posters etc.
- Excellent command of Sinhala and Tamil with ability to communicate in English;
- Computer related knowledge;
- Willingness to travel to all parts of Sri Lanka.

Qualified applicants must submit an updated CV and cover letter including email & telephone contacts of two professional referees to **giz-hrsrilanka@giz.de** or mail to the Human Resource Unit, GIZ-Colombo, No. 6, Jawatte Avenue, Colombo 5, indicating post applied for **on or before cob 30 August 2013.**

The selected candidate must be prepared to commence work by 16 September 2013.

We thank all applicants but only the short listed candidates will be contacted.

(c/11314)(3)

## விரிவுரையாளர் தேவை

**நெல்லியடியில் ஆரம்பிக்கப்படவுள்ள கல்லூரி ஒன்றிற்கு தொழில்சார் கற்கை நெறிகளை (Chartered Accountancy, Banking, IBST and AAT) ஆங்கிலம் மற்றும் தமிழில் பயிற்றுவிப்பதற்குத் தகுதியான விரிவுரையாளர்கள் தேவைப் படுகின்றனர். தகைமையுடையோர் விண்ணப்பிக்கலாம்.**


| Subjects | Qualification |
|---|---|
| ✱ Financial Accounting<br>✱ Economics<br>✱ Management<br>✱ Financial Service Environment<br>✱ Marketing<br>✱ Business Mathematics and statistics | A Degree and / or a Professional Qualification |

Please send your CV to growingajey@gmail.com or contact 075 433 7186 / 077 644 8858

(C/11160) (7.6.3)

# Machines For Sale





1. பேப்பர் டிசியூ (Cock Tail 9" x 9") செய்யும் இயந்திரம்.
2. பேப்பர் டிசியூ (Paper Serviettes 13"x 13") செய்யும் இயந்திரம்.

**யாழ்ப்பாணத்திற்கும் கொண்டு சென்று உற்பத்தி செய்வதாயின் கூட்டு வியாபாரமாக (Partnership) செயற்பட்டு வியாபாரம் செய்யமுடியும்.**

Ravi-0773112141 Fax-112341926 (சி/11326)

**ஈஸ்வரன் பிரதர்ஸ்** paper@eswaran.com
104/11,Grand Pass Colombo 14


## நல்லூர் ஆலய சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 18
நல்லூர் கந்தன் ஆலய ஏழாம் திருவிழாவான இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் மணி மண்டபத்தில் சமயச் சொற்பொழிவும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் 'முதுகை அன்பு' என்ற பொருளில் உமாசுதனின் சிறப்புச் சொற் பொழிவும், திருநெல்வேலி சைவ வித்தியா அபிவிருத்தி இல்ல அறநெறிப் பாடசாலை, மாதகல் காந்தினி அறநெறிப் பாடசாலை, அரியாலை ஸ்ரீசித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலைகளின் மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம் பெறும்.

★ ★ ★

நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.45 மணிக்கு தெய்வீக இசையரங்கம் நடைபெறவுள்ளது.

இசைக் கச்சேரியில் வயலின் இசையை கே.பத்மநாதன் மற்றும் பி.காயத்திரி வழங்க, அணிசேர் கலைஞர்களாக மிருதங்கம்- பி.சியாம் கிருஷ்ணா, கடம்- அ.செல்வரத்தினம் வழங்குவர்.

இசை அரங்கில் பாடல்களை எஸ். துஷ்யந்தன் வழங்க அணிசேர் கலைஞர்களாக வயலின்- ஏ.ஜெயராமன், மிருதங்கம்- க.பிரணவன், கடம்- க.ரவிசங்கர் ஆகியோர் கலந்து கொள்வர். (ந-86-7)

## சமய சந்நிதிகளில்......

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழாவில் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

★ ★ ★

வெளிக்குளம் வவுனியா ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பெருந்திருவிழாவில் நாளை திங்கட்கிழமை காலை 9.30மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந)


# குழாய்க்கிணறு தோண்டுவதற்கான சகல உபகரணங்களும் விற்பனைக்கு உண்டு

1. மினரல் றில்லிங் ரிக் (P.R.D.) PRD 450 & PRD 500



PRD 450



PRD 500

2. எயார் கொம்பிரஸர்



DENYO 600 CFM



AIRMAN 530 PDSF

3. பிட்ஸ் & ஹமர் (Hammars & Bits)

சகல உபகரணங்களும் நியாயமான விலையில் எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
**AMERASIAN (PVT) LTD,**
61/09, Dhamampala Mawatha,
Colombo-03.
T.P: 071 870 1040 - Arul
011-2336128 - Jaya
E-mail : arul@amerasiancorb.com
(31429) (7-3)

# வேலையாள்கள் தேவை

சுன்னாகத்தில் புதிதாக ஆரம்பிக்கப் படவுள்ள மருந்தகம் ஒன்றுக்கு 21-26 வயதுக்கு உட்பட்ட பெண்பிள்ளைகள் தேவை. கணினி அறிவு விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 824 4334

# கேஷ கல்யாணி மூலிகை எண்ணெய்



பொடுகுத்தொல்லையற்ற, அடர்த்தியான, வலுவான, பொலிவான ஆரோக்கியமான கூந்தலுக்கு எம் முன்னோர்கள் நல்கிய அரும் பொக்கிஷம். முடி உதிர்வு, முதிர்வு, தலைவலி, பீனிஷம் தூக்கமின்மை, வலுவற்ற கூந்தல் முதலான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வளிக்கும் ஓர் அருமருந்து.

இப்பொழுது நாடெங்கிலும் அனைத்துப் பாமசிகளிலும், அழகுப் பொருள் விற்பனை நிலையங்களிலும் மற்றும் குறோசறிகளிலும் பெற்றுக்கொள்ளலாம். எதுவித இரசாயனக் கலப்படமற்ற 100% இயற்கை மூலிகைகளாலான நம்நாட்டுப் பாரம்பரிய உற்பத்தி.

தொர்பு: Selvaraj 077 974 7049, 077 597 0305,
JK - 077 725 8443 (31433)(45.6.3)

# Drive your Vehicle

நாங்கள் தருகிறோம் நீங்களே ஓட்டிச் செல்லுங்கள்

கார்கள்
கப்கள்
வான்கள்
பஸ்
லொறி



(31388)

PEAKING RENT A CAR
அழையுங்கள் 0777484820
No 01, Market lane, Raja veethy , Nallur

# கட்டாரில் உள்ள அல் மீரா ஹைப்பர் சுப்பர் மார்க்கெட்டில் உடனடி வேலைவாய்ப்பு

| Job Category | Qty | Salary QR | Salary RS |
|---|---|---|---|
| சேல்ஸ்மன் | 100 | 800 | 28,800/= |

1 QRS = Rs. 36.00



நிபந்தனைகள் & சலுகைகள் :
- தங்குமிடம்,மருத்துவம் வழங்கப்படும். • உணவுக் கொடுப்பனவு 200 QRS வழங்கப்படும்.
- வயது 20 - 27 • வேலைநேரம் ஒரு நாளைக்கு 8 மணித்தியாலம். • 2 வருட ஒப்பந்தம் கால முடிவின் பின்னர் போக - வர விமான சீட்டு வழங்கப்படும். • ஏனைய நிபந்தனைகளும், விதிமுறைகளும் கட்டார் நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது.

பாஸ்போட் உடன் கீழ்க்காணும் முகவரிக்கு விரைந்து வரவும்

முன் அனுபவம் தேவையில்லை

- அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட கட்டணம் மாத்திரம் அறவிடப்படும். • இவ் அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்

max adz

**RODNEY** FOREIGN EMPLOYMENT AGENCY LL.No. : 2427
றொட்னி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
இல. 287-1/2, ஹவ்லொக் றோட், கொழும்பு - 06.(மயூரா அம்மன் கோயில் எதிராக)
E-mail : rodneyagency@hotmail.com | web : www.rodneyrec.com
Tel : 0112552598 | 0773074744 | 0718126094

AL /2427/Advt/16/2013

# Central Bearings & Machinery (Pvt) Ltd.


CBM House, No. 2 A, Lake Drive, Colombo 8.
Showroom: No. 133, Panchikawatta Road, Colombo 10. Tel: 2454555, Fax: 2438768
Email: sales@centralbearing.com Web: www.centralbearing.com
Tel: 0777 803660, 2690555, Fax: 2690565

Sole Agents for

FAG NACHI FBJ™

எவற்றை உறுதியளிக்கிறமோ அவற்றையே நாம் வழங்குகிறோம்

- எல்லா வகையான சன்னங்கள் (Bearings) (சிறியதிலிருந்து கனரக தொழில்துறைக்கான)
- உலகப் பிரசித்திபெற்ற வர்த்தக நாமங்களுடைய பொருட்கள்
- லீனியர் மோசன் சிஸ்டம் (LM கைட், LM புஸ்சிங், போல் ஸ்குறு ஆகியன)
- இலங்கையில் எங்களிடமே மிகப் பாரிய அளவில் சன்னங்கள இருப்பிலுண்டு
- மிகக் குறைந்த கால இடைவெளியில் பொருட்களை வழங்க முடியும்
- உங்களது பொறிக்கு தொழில்நுட்ப உதவி வழங்கப்படும்
- 23 வருட அனுபவமும் நாடு பரந்த விநியோக வலையமைப்பைக் கொண்டது



இப்போது யாழ்ப்பாணத்திலும் உலகின் முதல்தர சன்னங்கள் (Bearings) சந்தை முன்னோடிகளிடமிருந்து (சி/11308)

# -தபால் மூலம்- ஆறு மாத கால டிப்ளோமா

தமிழ் மொழி மூலம்

24

பாடநெறிகள்:

- காரியாலய நிர்வாக டிப்ளோமா - சிவில் எஞ்சினியரிங் டிப்ளோமா - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா - மொண்டிசூரி டிப்ளோமா
- உளவியல் டிப்ளோமா - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு.டி. - தாதிய நிர்வாக டிப்ளோமா - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
- வங்கி முகாமைத்துவ டிப்ளோமா - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு.டி.

மேலதிக விவரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கை நெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம். Mobile: 0777 140 844, 071 803 48 48

(C/10879)(10,16,14)

**ALL INDIA** Institute of Management Studies
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web : www.aiims.com, www.limet.com, www.alcomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848




யாழ். பாலர் கல்விக் கழக ஞானக்குழந்தைகள் இல்ல வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினர்களான ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி ஆர்.வசந்தசேனன் தம்பதியருடன் கழக உறுப்பினர்களும் காணப்படுகின்றனர். (ஓ)



அளவெட்டி தெற்கு மகாஜன சபை ஈஸ்வரன் முன்பள்ளியின் 30 ஆவது விளையாட்டு விழா நிகழ்வில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் கே.ஏ.செந்தூரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மங்கலவிளக்கேற்ற அருகில் முக்கிய பிரமுகர்கள் காணப்படுகின்றனர். (ஓ-14)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 1988 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புகளில் கற்ற மாணவர்களின் வெள்ளி விழா ஒன்று கூடல் அண்மையில் கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் இடம்பெற்ற போது... (ஓ-9)



வலி.மேற்கு சுழிபுரம் பிரதேச சபையில் பணியாற்றி இளைப்பாறிய சமூகமணி சிதம்பரநாதன் சிறிகாந்தன் பிரியாவிடை நிகழ்வில் ஏற்புரை நிகழ்த்துவதைக் காணலாம். அருகில் நலன்புரி சங்கத் தலைவர் நா.அருணகிரிநாதன். (ஓ-50)



சாவகச்சேரி மிருசுவில் புனித நீக்கிலார் முன்பள்ளி மழலைகளின் கண்காட்சியை நிர்வாகி அருட்பணி ம.பத்திநாதர் அடிகளார், பொறுப்பாசிரியர் திருமதி யே.சகாயராணி உட்பட விருந்தினர்கள், மழலைகள் பார்வையிடுகின்றனர். (எ)



அராலி கிழக்கு மலையாளம் காடு ஐயனார் ஆலயத்தில் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வில் விஸ்வபிரம்ம ஸ்ரீ சின்னத்தம்பி அமரசிங்கம். (ஓ-50)



நீர்வேலி பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் வருடாந்த விளையாட்டு நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர். (எ)



யாழ். பொலிஸ் நிலையத்துக்கென புதிதாக அமைக்கப்பட்டு வரும் கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. (ஓ-135)

## தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** விடாப்பிடியான செயல்களில் வெற்றியுண்டு. கணவன் - மனைவிக்குள் மனம் விட்டுப் பேசுவீர்கள். சகோதர வகையில் நன்மை கிட்டும். பணவரவு திருப்தி தரும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி கிட்டும்.

**இடபம்:** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்ற போராட வேண்டியிருக்கும். அடுத்தவர்களைக் குறை கூறுவதை நிறுத்துங்கள். விமர்சனங்களைக் கண்டு அஞ்ச வேண்டாம். சிறுசிறு அவமானம் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம்.

**மிதுனம்:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகி நிம்மதி கிட்டும். குடும்பத்தில் அமைதி நிலவும். தந்தை வழி உறவினர்களால் ஆதாயம் உண்டு. பிரபலங்களின் சந்திப்பு நிகழும். வாகனச் செலவுகள் விலகும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கடகம்:** காலைப் பொழுதிலிருந்தே மகிழ்ச்சி கிட்டும். குடும்பத்தினரின் எண் ணங்களை பூர்த்தி செய்ய வேண்டும் என்று நினைப்பீர்கள். பிள்ளைகளின் உடல் நிலை சீராகும். பிராத்தனைகள் நிறைவேறும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**சிங்கம்:** நீண்ட நாளாக மனதிலிருந்து வந்த குழப்பங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப் போவீர்கள். விருந்தினர்களின் வருகைஉண்டு. பிள்ளைகளின் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள். சகோதர வகையில் மகிழ்ச்சி கிட்டும்.

**கன்னி:** காரியங்களை முடிப்பதிலிருந்த தடுமாற்ற நிலை மாறும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்துக் கொள்வார்கள். சோம்பல், உடல் அசதி நீங்கும். ஆடம்பரச் செலவுகளை குறைப்பீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**நாளை**

ஆவணி-03 திங்கட்கிழமை 19.08.2013
திதி: திரயோதசி பி.ப.12.36 வரை
நட்சத்திரம்: உத்தராடம் பி.ப.03.57 வரை
சுபநேரம்: 12.05 - 01.35 வரை
இராகுகாலம்: 07.35 - 09.05 வரை

**துலாம்:** ஆடம்பரச் செலவுகளை தவிர்த்து எளிமையாக வாழ விரும்புவீர்கள். கணவன் - மனைவிக்குள் அன்யோயம் பிறக்கும். உடன் பிறந்தவர்களுடன் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். அரசால் அனுகூலம் உண்டு.

**விருச்சிகம்:** பிள்ளைகளால் உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். கையில் காசுபணம் தேவையான அளவு இருக்கும். கடன் பிரச்சனைகள் தீரும். தந்தையாரின் உடல் நலம் சீரா கும். நண்பர்களின் ஒத்துழைப்பால் சில காரியங்களை முடிப்பீர்கள்.

**தனுசு:** குடும்பத்தினரைப் பற்றி யாரிடமும் குறைவாகப் பேச வேண்டாம். மற்றவர்கள் விடயத்தில் அநாவசியமாகத் தலையிட வேண்டாம். சிலரின் நயவஞ்சக செயலை நினைத்து வருந்துவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும்.

**மகரம்:** பிள்ளைகளிடம் பரிவாகப் பேசுங்கள். மற்றவர்களை சார்ந்து இருக்க வேண்டாம். வாகனம் அடிக்கடி தொந்தரவு தரும். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள்.

**கும்பம்:** விரும்பியப் பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து யோசிப்பீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களின் ஆதரவு கிட்டும். அரசால் ஆதாயம் உண்டு.

**மீனம்:** நீண்ட நாளாக தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும். வியாபாரத்தில் மதிக்கப் படுவீர்கள். புதியவர்கள் நண்பர்களா வார்கள். குடும்பத்தினரின் ஆதரவு கிட்டும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். மனக் குழப்பங்கள் விலகும்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | 9 | | | | | | |
| | 7 | | | 9 | 5 | | 8 | |
| 2 | 1 | | 4 | | 7 | | | 6 |
| 3 | | 5 | | | 1 | 6 | 9 | |
| | | | 6 | | 3 | | | |
| | 6 | 4 | 8 | | | 3 | | 2 |
| 1 | | | 5 | | 2 | | 6 | 9 |
| | 3 | | 9 | 6 | | | 7 | |
| | | | | | | 5 | 3 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 6 | 9 | 1 | 5 | 7 | 3 | 4 |
| 3 | 4 | 1 | 7 | 2 | 6 | 5 | 9 | 8 |
| 5 | 9 | 7 | 4 | 3 | 8 | 6 | 1 | 2 |
| 6 | 5 | 4 | 1 | 9 | 3 | 8 | 2 | 7 |
| 9 | 8 | 3 | 2 | 6 | 7 | 1 | 4 | 5 |
| 1 | 7 | 2 | 8 | 5 | 4 | 3 | 6 | 9 |
| 7 | 1 | 9 | 3 | 8 | 2 | 4 | 5 | 6 |
| 4 | 3 | 5 | 6 | 7 | 9 | 2 | 8 | 1 |
| 2 | 6 | 8 | 5 | 4 | 1 | 9 | 7 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

மாமனிதர்
**குமார் பொன்னம்பலம்**
அவர்களது
75ஆவது பிறந்ததின நினைவுப் பேருரை
"தற்கால சர்வதேச சட்ட மற்றும் அரசியல் ஒழுங்கில் போருக்குப் பின்னரான தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம்"



உரையாற்றுபவர்:
**குமாரவடிவேல் குருபரன்,**
சட்டத்துறை விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
காலம் : இன்று (18.08.2013) ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப 3.30 மணி - 6.00 மணி வரை
இடம் : திருமறைக் கலா மன்றம் (கலைத்தூது மண்டபம்), பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி நிகழ்வில் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.
- மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்தக் குழு-
தொடர்புகளுக்கு:- 077 606 8834
(31452)(10.6.3)

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**

மலர்வு 12.01.1940
உதிர்வு 20.07.2013

**கந்தையா பொன்னுத்துரை**
(சங்கத்தார் வயல், இயக்கச்சி)



ஆலமரம் சாய்ந்ததையா - நாம்
அநாதைகளாய் ஆனோமையா
நீயில்லாத வெற்றிடத்தை - யாராலும்
நிரப்பிடவே முடியாதையா.

அன்னாரின் 31ஆம் நாள் நிகழ்வுகள் நாளை (19.08.2013) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சங்கத்தாரி வயல், இயக்கச்சி.
(31451)(3.7)
தகவல்
குடும்பத்தினர்.

**நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்**

தோற்றம்
02.01.1943



மறைவு
17.07.2013

**அமரர் சுப்பிரமணியம் ஆறுமுகம்**

கடந்த 17.07.2013 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்ப விளக்கின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு நேரில் வந்து ஆறுதல் கூறியோர், உதவி ஒத்தாசை புரிந்தோர், வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் இருந்து தொலைபேசி,இணையம் மூலம் ஆறுதல் தெரிவித்தோர், துண்டுப் பிரசுரம் வெளியிட்டு அனுதாபம் தெரிவித்தோர் மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவிகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டி, ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (18.08.2013) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் நடைபெற்று,தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

சோழாவத்தை,
மகாத்மா வீதி, நெல்லியடி,
021 226 4104, 077 455 1007
(37690)(5.3.6)
குடும்பத்தினர்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# கண்ணீர் அஞ்சலி



அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர் ந.விஜயபாலன் அவர்களின் அன்புத் தாயார்

**வேதநாயகி நமசிவாயம்**

அவர்களின் இறப்பால் துயரடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணியாளர்கள்

அள.மல்.ப.நோ.கூ.சங்க ஊழியர் நலன்புரிசங்கம்.

# 6 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
10*01*1972

உதிர்வு
25*08*2007

அமரர் சண்முகநாதன் சசிதரன்

ஆண்டுகள் ஆறு இல்லை
நூறு ஆண்டுகள் ஆனாலும்
உன் நினைவுகள் எங்கள் மனதில்
இருந்து அகலாது இன்றும்
உன்முகம் எங்கள்
விழிகளில் தெரிகின்றது.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

சண்முகநாதன்
குடும்பத்தினர்.

(30335) (7.6.3)

உசனைப் பிறப்பிடமாகவும்.
மீசாலை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# கந்தையா நவரத்தினம்

(Rtd. Senior Assessor, Dept. of Inland Revenue, Tax Consultant)

அவர்களின்

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலிகள்

தோற்றம்
27
06
1940



மறைவு
17
08
2012

அன்னாரின் முதலாமாண்டு திவச கிரியைகள் 05-09-2013, வியாழக்கிழமை மீசாலை இல்லத்தில் நிகழ்த்தவுள்ளதால், உற்றார், உறவினர், அன்பர்களைக் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாசமுடன் எமை வளர்த்து, பெருமையுடன் வாழ வைத்த எமது அப்பாவின் நினைவுகளுடன் வாழும்

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
பங்களா வீதி, மீசாலை.
தொலைபேசி : 021 22 70144

(A/11200)(3.5)

# சந்நிதி உற்சவ இறுதி நாள்களில் தற்காலிக நீதிமன்றம் இயங்கும்

## குற்றச் செயல்களை விசாரிக்க ஆலயம் அருகில்

பிரசித்தி பெற்ற தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயில் பெருந்திருவிழாவின் இறுதித் திருவிழா நாள்களான சப்பரம், தேர், தீர்த்தத் திருவிழாக் காலங்களில் தற்காலிக் நீதிமன்றம் சந்நிதி கோயிலில் இயங்கவுள்ளது.

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தின் தற் காலிக நீதிமன்றம் சந்நிதி கோயிலின் தென் மேற்கு மூலையில் ஆற்றங்கரையோரமாக உள்ள நீர்ப்பாசனத் திணைக்கள அலுவல கத்தில் செயற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பெருந் திருவிழாக் காலத்தில் சிறு சிறு திருட்டுச் சம்ப வங்கள் நடைபெற்று வருவதைத் தொடர்ந்து இறுதி முக்கிய திருவிழாக் காலங்களில் குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் கைது செய்யப்பட்டு தற்காலிக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத் தப்பட்டு அவர்கள் மீது விசாரணை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்காலிக நீதிமன்றம் நாளை திங்கட்கிழமை முதல் 21 ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெறவுள்ளது. (ஓ-8)

## சிறுப்பிட்டி அம்மனின் சப்பரம் இன்று வெள்ளோட்டம்

அச்சுவேலி, ஓக.18

சிறுப்பிட்டி மத்தி ஸ்ரீ மனோன்மணி அம்மனுக்கு புதிய சப்பரம் வெள்ளோட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்றது. மனோன்மணி அம்மன் ஆலய சப்பரத் திரு விழா உபயகாரர்கள் திருமதி தனலக்குமி யம்மா இளையதம்பி குடும்பத்தினர் 25 லட் சம் ரூபா செலவில் புதிய சப்பரத்தை செய்வித்து ஆலயத்துக்கு வழங்கியுள்ளனர்.

சப்பரம் தரித்து நிற்பதற்கான மண்டபமும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

வெள்ளோட்ட விழாவில் சப்பரத்தை உருவாக்குவதற்கு நிதி உதவி வழங்கிய திருமதி தனலக்குமியம்மா இளையதம்பியும் சிற்பாசாரி பத்மநாதன் சுரேந்திரனும் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஓ-11)

## நாவற்குழி பாலத்தில் மோ.சைக்கிள் சறுக்கி இளைஞர் காயம்

தென்மராட்சி, ஓக.18

மழை பெய்து கொண்டிருந்த நிலையில் நாவற்குழிப் பாலத்தில் பயணித்த மோட்டார்சைக்கிளின் சில்லு சறுக்கியதால் பாலத்துக்கு கீழே வீழ்ந்து காயமடைந்தார் மோட்டார் சைக்கிளை செலுத்திய நபர். இந்தச் சம்பவம் நேற்று இடம் பெற்றது. தோள் எலும்பு பாதிப்புக்கு உள்ளான நிலையிலும், தலையில் காயமடைந்த நிலையிலும் அந்த நபரை சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதித்தனர் அந்த வழியே வந்த பொதுமக்கள்.

யாழ்ப்பாணம் குருநகர் இரண்டாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த ஜெயசீலன் ஜெஸ்மின் (வயது -28) என்பவரே இவ்விதம் காயமடைந்தவராவார். (ஓ-9)

# கண்ணீர் அஞ்சலி

எமது தொண்டர் சபையின் மூத்த உறுப்பினர்

திருமதி **வேதநாயகி நமசிவாயம்**

அவர்கள் 16.08.2013 அன்று அமரத்துவம் அடைந்து விட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபை,
துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை.

(A/11196) (45.6.3)

# மரண அறிவித்தல்கள்

## தம்பிமுத்து சுந்தரேஸ்வரன்



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த தம்பிமுத்து சுந்தரேஸ்வரன் நேற்று (17.08.2013) சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

கரந்தன் வீதி,
நீர்வேலி தெற்கு.

(31434) (3.6.11)

தகவல்:
குடும்பத்தினர்.

## குமாரு செல்வராசா



நவாலியைப் பிறப்பிடமாகவும் மாரியம்மன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரு செல்வராசா நேற்றுமுன் தினம் (16.08.2013) வெள்ளிக்கிழமை காலமனார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரப்பா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.08.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 3, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

(31437(45.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## செல்லையா சண்முகநாதன்

(மேசன் தங்கவேல்)



சாவகச்சேரி கல்வயல் வேதவனப் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த செல்லையா சண்முகநாதன் நேற்று முன்தினம் (16.08.2013) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.08.2013) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்வயல்,
சாவகச்சேரி.

(29624) (7.3)

தகவல்
குடும்பத்தினர்.

## ஆரோக்கியநாதர் மரியநாயகி



பலாலி வடக்கைப் பிறப்பிடமாகவும், முதலாம் குறுக்குத் தெரு, பருத்தித்துறையைப் வசிப்பிடமாகவும் கொண்ட ஆரோக்கியநாதர் மரியநாயகி 15.08.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பிரபல சம்மாட்டியாரும், பலாலி ஆரோக்கிய மாதா கோயிலின் உறுப்பினருமாகிய ஆரோக்கியநாதரின் மனைவியும், ஜெனோவா,சூசைநாதன், ஜெனிஸ்ரெலா, அமலதாசன்(லண்டன்),ஜெசிந்தா(அமலா-இத்தாலி), ஜெயசீலியா ஆகியோரின் அன்புத் தாயும்,கிறிஸ்ரின் யோகராணி,சகாயசேவியர் மேரிவாணிஸ்ரா, லூர்த்துராசா, சுரேஸ்குமார் ஆகியோரின் அன்பு மாமியும்,யோபுநாதன், ஜெகன்நாதன், ஜெனிக்நாதன், அனுசியா, ஜென்சியா,சில்வியா,யான்சன்,யானுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை(19.08.2013)திங்கட்கிழமை பி.ப.2 மணியளவில் புனித தோமையார் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டு, பூதவுடல் சென்.தோமஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
முதலாம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.
தொ.பே.: 077 636 5733

(A/11198)(3.5)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரத்தில் இருந்து வீழ்ந்தவர் சிகிச்சை பயனின்றிச் சாவு

யாழ்ப்பாணம், ஓக. 18
அடி காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த தென்பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். கொழும்பைச் சேர்ந்த வசந்த (வயது-42) என்பரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 7 ஆம் திகதி மரத்திலிருந்து விழுந்ததாகத் தெரிவித்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுசிகிச்சைபெற்று வந்தார். இந்த நிலையில் சிகிச்சை பயனின்றி அவர் நேற்று உயிரிழந்துள்ளார்.
பிரேத பரிசோதனையின் போது தலைப் பகுதியில் பலமாகத் தாக்கப்பட்டதாலேயே மரணம் சம்பவித்ததாக தெரியவந்துள்ளது. இது தொடர்பாக் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
(ஐ-5-400)


## அந்தியேட்டி அழைப்பு



தாய்மடியில் 21.09.1933
இறைவன் அடியில் 19.07.2013

அமரர்
**மனோரஞ்சிதம் குணசிங்கராஜா**
(முன்னாள் ஆசிரியர்)

கடந்த 19.07.2013 அன்று இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தாயின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று(18.08.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 4.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படவுள்ளது. தொடர்ந்து அவரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்கு வேண்டும் வண்ணம் உற்றார்.உறவினர். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'கங்காபதி'
பாரத் வீத், கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.
(சி/11405)(5.16)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னம்மா இராசையா



தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் அராலி வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா இராசையா கடந்த (16.08.2013) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேல்- பார்வதி தம்பதியரின் சிரேஸ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- மீனாட்சி தம்பதியரின் மருமகளும் இராசையாவின் அன்பு மனைவியும் இராஜகோபால் (சுவிஸ்), காலஞ்சென்ற இரவிச்சந்திரன் மற்றும் இரவிச்சண் (கனடா), றஜீனா, இராஜ்குமார் (சுவிஸ்), இராம்குமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற நடராஜா, இராசபூபதி (இரத்தினம்), பொன்னம்மா, செல்லம்மா, மங்களம், சிவஞானம், சிவலிங்கம், லீலாவதி மற்றும் காலஞ்சென்ற திலகவதி (கிளி), சிவகுமாரன், இராசாத்தி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சற்குணதேவி (சுவிஸ்), வாளி (ஜேர்மனி), கொன்ஸலீற்றா (கனடா), பிரபாகரன் (ஆசிரியர், வ/கனகராயன் குளம் ம.வி.), ஜெயக்கௌரி (சுவிஸ்), கவிதா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும் ரஜீவன் (சுவிஸ்), பானுஷா (சுவிஸ்), கஜானா (சுவிஸ்), சாறா (ஜேர்மனி), தமறா (ஜேர்மனி), டொமினிக் (ஜேர்மனி), சந்தியா (கனடா), விதுசா (கனடா), ரவிஸ்னா (கனடா), பிரவிந், பிரதீஸ் (மாணவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரி), அஸ்வின் (சுவிஸ்), அகல்யா (சுவிஸ்), ரவிசா (கனடா), லக்சியா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நாளை (19.08.2013) திங்கட்கிழமை நடைபெற்று பூதவுடல் பி.ப. 4 மணிக்கு சங்கானை கராய்ச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்
அராலிவீதி, சங்கானை.
(31471)
தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### ஆசிர்வாதம் ஜோன் பிறிற்டோ (ஆங்கில ஆசிரியர்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், ஆஸ்பத்திரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் ஜோன் பிறிற்டோ நேற்று (17.08.2013) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் மேரிலூசியாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம்-அன்னம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை-லூர்த்தம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், டொன் கிஷியாந்தன் (BOC, Jaffna), தமிழினி, ஜொனி அஜித்(PARCIC, INGO), சுமங்கலி(NSB, Point pedro) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெலிஸ்ரா(Doctor, Jaffna Taeching Hospital), நிஜானந்தராஜா, நொய்லின், சுஜீவன்(Properiter, markers batticalo) ஆகியோரின் மாமனும், மேரி மடோலின், கரிஷ்பெலி ஷியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை(19.08.2013) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு புனித யுவனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
848/2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5763
தகவல்: குடும்பத்தினர்.

பெற்றோர்களே!
உங்கள் பிள்ளைகளை பராமரிக்க
அதிபர்களே!
ஆசிரியர்களே!
உங்கள் மாணவர்களை நெறிப்படுத்த
வெளியீடுகாண்கிறான்
சிவகுமாரன் சிவசன் ஆக்கிய
**Child minder**
20.08.2013 (செவ்வாய்க்கிழமை), மு.ப 10.00 மணி
கலாச்சார மண்டபம், பிரதேசசபை, மானிப்பாயில்
இதனை பயன்படுத்துபவர்களுக்கு பல வெகுமதிகளும் காத்திருக்கின்றன.
உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.....
Smartpc
Ponnalai west, Chulipuram, Jaffna.
T.P: 0779278030, Email: mcsshan@gmail.com

**வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு**
திருநெல்வேலி வளாக வீதியில் ஒரு பரப்புக் காணியில் அமைந்த வீடும் அதனுடன் இணைந்த கடை கட்டடமும் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு
0773126453
0777393046

தற்போது யாழ் நகரில்...



கட்டிட நிர்மாணத் துறையில் மாத வருமானம் ரூபா 150,000/= இனை உறுதி செய்யும் 18 மாத பாட நெறி
BTEC HND in
- Quantity Surveying
- Civil Engineering
Leading to BSc (Hons) From UK
September Intake Now on

**Why** Choose
**BCAS for QS & Civil Engineering ?**

- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தயேக QS, Civil Engineering கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாடநெறி
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க QS, Civil Engineering நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்
- முன்னணி நிறுவனங்களினூடாக வழங்கப்படும் நடைமுறைப்பயிற்சிகள்
- RICS, CIOB, IQSL போன்றவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
- £4500 வரை பிரித்தானிய Top-Up கற்கைநெறிகளிற்கான புலமைப்பரிசில்
- தற்போது இலங்கையிலேயே பட்டப் படிப்பை (Top-Up) பூர்த்தி செய்யும் அரிய வாய்ப்பினை BCAS Campus உங்களுக்கு வழங்குகின்றது
- கட்டாரில் தொழில் புரிந்துகொண்டே BCAS Qatar Centre இல் Top-Up கற்கைநெறியை பூர்த்தி செய்யும் வாய்ப்பு
- 14 வருட நம்பகமும் சிறப்பும் மிக்க உயர் கல்விச்சேவை

Macro Ads

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk
16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131
Colombo : 077 482 9765
Kandy : 081 222 4737
oa : 077 766 6432
Ku negal 7 4747

## பதவி வெற்றிடம்



01. போட்டோ சொப் டிசைனர்
(Photo Shop Disigner)
(அல்பம் வேலை தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
(ஆண் பெண் இருபாலாரும்)
02. வரவேற்பாளர் (Receptionist)
(ஆண் பெண் இருபாலாரும்)

மேற்குறிப்பிட்ட துறைகளில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்



*. தகுதிக்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
*. உரிய ஆவணங்களுடன் 20.08.2013 அன்று 9 AM - 12 PM நேரில் வரவும்
(C/11413)(10.16.14)

**சிறிநதியா டிஜிட்டல் கலர்லாப்**
108 A, லக்லன் பிளாசா கட்டடம்,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 8412

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

துணிக்காய்ப் பகுதி
ப.நோ.கூ.சங்கத்தின்
கௌரவ தலைவரும்,
மு/கொல்ல விளாங்குளம்
அ.த.க. பாடசாலையின்
அதிபரும், சமூக
சேவையாளருமாகிய




**தம்பிப்பிள்ளை பிறேமச்சந்திரன்**

அவர்கள் 14.08.2013 அன்று சமாதான நீதிவானாக,
முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றின் நீதிவான் மா. கணேசராஜா
முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துள்ளார். இவருடைய சேவை
மேன்மேலும் வளர வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:
பொதுமுகாமையாளர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
**துணுக்காய்ப் பகுதி ப.நோ.கூ.ச.**

(37505)(45.3)

## Spoken English -Daniel Urumpirai

வகுப்புகள்-திங்கள், புதன் காலை/ மாலை
தொழில் பார்ப்பவர்களுக்கு சனி 3-5.30
Basic English- 4 Months மாதாந்தம் 600/=
General English- 6 Months மாதாந்தம் 800/=
24.08.2013 மாலை 1.00 -5.30 மணி வரை
New Science Centre (வெலிங்டன் சந்திக்கு அருகில்) இல்
தரப்படுத்துதல் இடம்பெறும்.
**Contact - 077 036 6564**

(31383)(3.6.11)

## மணமகன் தேவை

யாழிந்து, 1986, அச்சுவினி முதலாம் பாதம், ல-சனி, 12இல் கேது, பாவம் 60, உயரம் 5'2", நிறம் வெள்ளை, Bsc (Computer Science) படித்து Infornet Researcher ஆக தொழில் புரியும் மணமகளுக்கு Doctor, Engineer, எக்கவுண்டன் போன்ற தகுதியுடைய மணமகனை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தேடுகின்றனர்.

Saainathan Marriage Service,
வெள்ளவத்தை, கொழும்பு.
TP: 011 236 4146/ Fax: 011 236 3436/
E-Mail: saainathan.lk@gmail.com

(C/11313)(7.3)

## VACANCY

A leading Air condition company is looking for a Senior Sales Executives (Male) with marketing experience to work in the branch in Jaffna.

* The candidate who has experience in similar / Electronic products will be an added qualification but it is not compulsory.
* Training will be given for the selected candidates.
* Attractive salary plus incentive and other benefits will be offered.

Please apply within 7 days to :
adm.gtssl@sltnet.lk or gtsslregional@gmail.com
**Contact No.0772106030**

(C/11310)(3)

## காணி விற்பனைக்கு

தாவடி மானிப்பாய் றோட்டில் சுதுமலை அம்மன் கோயிலுக்கு அருகில் மாப்பியன் வீதியில் நல்ல நிலையில் உள்ள மேட்டு நிலக்காணி சுற்றிவர 8 அடி உயர மதில் உடன் ஒரு கிணற்றுடன் பாதுகாப்பான நிலையில் உள்ள 10 பரப்புக் காணி இரு பக்கமும் கனரக வாகனங்கள் செல்லக் கூடிய பாதையுடன் உள்ளது. முழுவதும் 10 பரப்பும் ஒன்றாகவோ அல்லது 2 பரப்புகள் வீதம் 5 துண்டு களாக அளந்து எல்லைகள் போடப்பட்டு விற்பனைக் குண்டு.

தொடர்பு: 077 685 5568, 077 151 6855

(31345)(7.6.3)

## மோ.சைக்கிளில் வேகமாகச் சென்றவர் மரத்தில் மோதி அவ்விடத்திலேயே சாவு

வடமராட்சி, ஓக.18

மோட்டார் சைக்கிளை வேகமாக ஓட்டிவந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் கட்டுப்பாட்டை இழந்து வேப்ப மரத்துடன் மோதுண்டு அந்த இடத் திலேயே உயிரிழந்தார். இந்தச் சம்பவம் வியாழன் இரவு குடத்தனை அம்பன் வைத்தியசாலைக்கு அருகில் நடைபெற்றுள்ளது.

வல்வெட்டித்துறை ஆதி கோயிலடியைச் சேர்ந்த ஆறுமுகம் மதியழகன் (வயது-33) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவர் ஆவார். வடமராட்சி கிழக்கு செம்பியன் பற்றுப் பகுதிக் கடலில் கணவாய் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த இவர் கடந்த வியாழக்கிழமை மாலை அங்கிருந்து வல்வெட்டித்துறை நோக்கி மோட்டார் சைக்கிளில் கணவாய்ப் பொதியுடன் சென்று கொண்டிருக்கையில் இரவு 7 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தினால் மோட்டார் சைக்கிள் மோதிய வேப்பமரம் சிதைந்து சேதமானது. கொல்லப் பட்டவருக்கு எவ்வித காயங்களும் ஏற்பட்டதாக தெரியவரவில்லை. இறந்தவரின் தலையில் 'ஹெல் மெட்'டும் அப்படியே இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-8)

## வேலையாள் தேவை

யாழ். மாநகர சபை எல்லைக்குள் வைண்டிங், போட்டோக் கொப்பி செய்வதற்கு வேலையாள் தேவை.
தொடர்பு: 077 117 1872

(31439)(7.3)

## விற்பனைக்கு

நல்ல இன பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
முகவரி- 22/4, முத்ததம்பி லேன், மானிப்பாய்.

(31453)(11.6.3)

## U.S.A, U.K Wedding service
## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் அமெரிக்கா (U.S.A) PR, 1984, [illegible], 2ஆம் பாதம், [illegible] 22, இந்தியா, இலங்கை, [illegible] [illegible] தொழில் [illegible] மணமகளுக்கு இலங்கை/வெளிநாடுகளில் உள்ள மணமகன் தேவை. மணமகள் இலங்கை வருகை தரவுள்ளார். 1979 [illegible] PR [illegible], 2ஆம் பாதம், [illegible] 26, [illegible] [illegible] இழந்த மணமகளுக்கு [illegible] படித்த மணமகன் தேவை. மணமகள் இலங்கை வருகை தரவுள்ளார்.

தொடர்பு: 077 147 9416

(35229)(7.3)

லண்டன் / கனடா / அமெரிக்கா / சுவிஸ் / ஜேர்மனி
பிரான்ஸ் / இத்தாலி / டென்மார்க் / அவுஸ்திரேலியா
நியூஸிலாந்து மற்றும் ஏனைய நாடுகளுக்கு செல்ல
இருப்பவர்களுக்கு

## வங்கியில் பணவைப்பு

அரச வங்கியில் 3, 6, 12 மாதங்களுக்கான
முன் பின் வங்கியில் பணவைப்பு

**Saving Book - FD - Statement**

For: Student | Business | Migration | PR | Visit
Family | Dependant | Refused | Visas

**077 4789289**

விசா பெற்றுக்கொள்வதற்கு தேவையான சகல
உதவிகளும் எம்பசி வேலைகளும் செய்து தரப்படும்

**No.52, Davidson Road, Colombo -04.**
நேரத்தை முன்கூட்டியே பதிவுசெய்துவிட்டு வரவும்.

## கணக்காளர் தேவை

த.குமாரசாமி அன் சன்ஸ் ஸ்தாபனத்திற்கு கணக்காளர் தேவை. ஆண், பெண் இருபாலர்களும் விரும்பத்தக்கது.
தொடர்பு: த.குமாரசாமி அன் சன்ஸ்
252, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(31440)(11.6.3)

## கடை வாடகைக்கு

யாழ். கொக்குவில் பிறவுண் வீதியில் (Brown Road) கடை வாடகைக்கு. 300 Sq Feet (சதுர அடி) யாழ். பல்கலைக்கழகம், Technical College, மருத்துவபீடம், கொக்குவில் Railway station அண்மையில்.
தொடர்பு: 075 760 5071

(31430)(7.3)

## காணி விற்பனைக்கு

KKS வீதிக்கு அண்மையில் கொக்குவிலில் 3 பரப்புக் காணி உண்டு.
தொடர்பு : 077 351 5980

(31432)(11.3)

## காணி விற்பனைக்கு

யாழ். பிரதான வீதிக்கு அருகில் 4ஆம் குறுக்குத் தெருவில் 1½ பரப்பு கட்டடக் காணி விற்பனைக்குண்டு, விலை 70 இலட்சம்.

(31420)(7.3)

077 634 0324, 077 623 1563

## Personal Class-கணினி

* 10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
* Ms office, Internet & E-mail, DTP, Web Design Graphic Design, சிறுவர்களிற்கான கற்கைநெறி.
* பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்
* குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எமது Laptop மூலமாக கற்பிக்கப்படும்

TP:0779672038 ஆசிரியர்: KRC

## O/L மாணவர்களே! உங்கள் வெற்றிக்கான கையேடு

இதோ! வெளிவந்துவிட்டது

**STEP 13**




எதிர்பார்க்கை வினாத்தாள்கள் உள்ளடங்கலாக

தமிழ்
ஆங்கிலம்
கணிதம்
விஞ்ஞானம்
வரலாறு
வர்த்தகம்
சிங்களம்
சித்திரம்
மாதிரி
வினாத்தாள்

(C/11315)(3)

உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்

தொடர்புகளுக்கு - 077 2374191, 011 5738855
வடமாகாணத் தொடர்புகளுக்கு - 071 6182182, 021 5677222

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி, கிராம்புவிலில் 2-3 பரப்பு காணித் துண்டுகள் விற்பனைக்குண்டு. தரகர் வேண்டாம்.
072 966 4616,
075 741 7536
(C/11327) (7.3)

**Apartments விற்பனைக்கு**

வெள்ளவத்தையில் இன்னும் 3 மாதங்களில் முடிவுறும் நிலையில் 1600, 2200 Sq.ft 3 Bed room, Pent House Apartments விற்பனைக்குண்டு
மேலதிக விபரங்களுக்கு:077 778 6440 (c/11318) (11.6.3)

**ஆள்கள் தேவை**

யாழ். பலாலி வீதியில் உள்ள i7 Computer கணினி நிறுவனத்திற்கு பெண் கணக்காளர் மற்றும் ஆண் விற்பனையாளர்கள் தேவை. அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
Tel: 021 222 4959/ 077 768 3676
E.Mail: i7c@sltnet.lk
(c/11328) (11.6.3)

**உடன் விற்பனைக்கு**

Japan super cub-50 Coolar model உடன் விற்பனைக்குண்டு. (NPXP xxxx நீல நிறம்)
தொடர்பு: 077 900 0388 (29625) (7.3)

**விற்பனையாளர் தேவை**


K.K.S.வீதி சுன்னாகத்தில் அமைந்துள்ள கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலை யத்திற்கு விற்பனையாளர்கள் (பெண்கள்) தேவை. சுன்னாகத்தை அண்டிய பிரதேசத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
077 769 8158 (31442) (7.3)

**முக்கிய அறிவித்தல்**

எமது நிறுவன ஆங்கில விரிவுரையாளர் பிறிற்றோ அமரத்துவம் அடைந்த காரணத்தினால் இன்று ஞாயிற்றுக் கிழமை (18.08.2013) விரிவுரைகள் நடைபெற மாட்டா.
குறிப்பு:சகல மாணவர்களையும் விரிவுரையாளர்களையும் கல்லூரி வளாகத்தில் காலை 9.00 மணிக்கு ஒன்று கூடும்படி கேட்கப்படுகின்றார்கள்.

நிர்வாகத்தினர்
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(C/11404) (7.3)

**வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**



- வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவையில் 15 வருடங்களை கடந்து
- இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களைக் கொண்டு
- ஆகாய, கடல் மார்க்கமாக
- வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவையை வழங்கிக்கொண்டிருக்கும் முன்னணி நிறுவனம்

மிக குறைந்த கட்டணத்தில் அதி விரைவு சேவை எம்மிடம் மட்டுமே

சகல நாடுகளுக்குமான விமானப்பயணச்சீட்டுக்களையும், இணைந்தசேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி , யாழ்ப்பாணம். Tel : 021 222 6113

ARRUL GLOBAL EXPRESS
International Courier & Cargo Service

# சிறுப்பிட்டி மத்தி வல்லையப்புலம்
# கருணாகடாக்ஷ ஸ்ரீமனோன்மணி அம்பாள் ஆலய
# பெரிய சப்பறம் வெள்ளோட்டம் - 18.08.2013

## சப்பறத்தில் மனோன்மணியை வழிபடுவோம்




கருணாகடாக்ஷியாக விளங்கும் மனோன்மணி அம்பாளுக்கு வருடந்தோறும் ஆவணிப் பௌர்ணமியை தீர்த்த நாளாகக் கொண்டு மஹோற்சவப் பெருவிழா நடைபெற்று வருகின்றது. மகாகும்பாபிஷேகம் நடைபெற்று அம்பிகை மனோன்மணி அருள் வீசும் ஆலயத்தில் இவ்வருடம் பெரிய சப்பறம் புதிதாக அமைக்கப்பட்டு இன்று வெள்ளோட்ட விழா காண்பதும் எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. இதனை உருவாக்குவதற்கு நிதியுதவியைச் செய்த இவ்வூரைச் சேர்ந்தவரும் சப்பறத் திருவிழா உபயகாரரும் தற்போது இலண்டன் மாநகரில் வதிந்து வருபவருமாகிய இளையதம்பி தனலக்குமியம்மா குடும்பத்தினருக்கு என்றென்றும் எனது நன்றிகளையும் ஆசிகளையும் கூறுவதோடு மனோன்மணி அம்பாளின் திருவருளும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

ஆலய பிரதம குரு -
சிவஸ்ரீ.ச. ஜெயந்திநாதக்குருக்கள்

## சப்பறத் திருவிழா மனோன்மணித் தாயின் வான் கருணையின் வடிவம்

சைவ ஆலயங்களில் நடைபெறும் மஹோற்சவம் பெரும் தத்துவங்களைக கொண்டமைந்துள்ளது. மனித வாழ்க்கையின் மேம்பாட்டினைக் காட்டி நிற்கின்றது. இத்தகு சிறப்பினாலே தான், கொடியேற்றத் திருவிழா படைத்தலையும், இரண்டாம் திருவிழா முதல் சப்பறத் திருவிழா வரையான உற்சவங்களாகிய வாகனத் திருவிழா காத்தலையும் தேர்த்திருவிழா அழித்தலையும், சூர்னோற்சவம் மறைத்தலையும், தீர்த்தோற்சவம் மற்றும் கொடியிறக்கம் அருளலையும் குறித்து நிற்கின்றன. அன்னை மனோன்மணி அம்பாள் கருணாகடாக்ஷியாக விளங்குகிறாள். அவளின் காத்தல் என்பது அளவு கடந்தது. தன்னை நாடி வந்து பக்தியோடு வழிபடுபவர்களுக்கு எல்லா வகையான நலன்களையும் நல்கு கின்றாள். அதன் உயர் வடிவமாக நமது கட்புலனுக்கு அகப்படுத்தக்கூடிய வகையில் அமைவு பெற்றதுதான் சப்பறத் திருவிழாவாகும். பல்வேறு வகையான சித்திரங்களோடு மிகச் சிறப்பான வடிவமைக்கப்பட்டுள்ள பெரிய சப்பறம் இன்று வெள்ளோட்டம் கண்டு, இரவு அன்னையைத் தாங்கி திருவூதியுலா வரவிருக்கும் இன்றைய நாள் பொன்னாளாகும். இந்தப் பெரிய சப்பறத்தை உருவாக்க வேண்டும் என்ற சிந்தனை பல நாள்களாக சப்பறத் திருவிழா உபயகாரர்களான இளையதம்பி தனலக்குமியம்மா குடும்பத்தினருக்கு இருந்து வந்துள்ளது. இச்சிந்தனையை நிறைவேற்றிய இவர்களுக்கு என் வாழ்த்துக்களை கூறுகின்றேன். பரம்பரை பரம்பரையாக இவர்களது இப்பணி பன்னெடுங் காலம் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசன் (MA)
சைவச் சொற்பொழிவாளர்



## எம் கடன் பணி செய்து கிடப்பது



எங்கள் ஆலயத்தில் பல வருட காலமாக சப்பறத் திருவிழாவை மேற்கொள்கின்ற பெரும் பாக்கியத்தைப் பெற்றுள்ளேன். அந்த விழாக்களிலே மரத்திலான சகடையிலே தற்காலிகமாக அமைக்கப்பட்ட முத்துச் சப்பறத்தில் அம்பாள் அமர்ந்து வீதியுலா வரும் காட்சி இன்றும் என் மனதில் நிழலாடுகிறது. இவ்வேளையிலே பெரிய சப்பறம் ஒன்றை நிலையாக அமைக்க வேண்டும் என்ற எண்ணம் எம் மனதில் தோன்றி இன்று அச்சிந்தனை கை கூடியுள்ளது என்றால், இது அவளது திருவருளன்றி வேறெதுவுமில்லை. எங்கள் கருணா கடாக்ஷியாம் மனோன்மணி அம்பாள் இன்று இரவு புதிய சப்பறத்தில் பவனி வருகின்றாள் என்பதை எண்ணும் போது பெருமகிழ்ச்சியாக உள்ளது. பிள்ளைகள் எல்லோரும் கடல் கடந்து வாழ்ந்தாலும் எம் மனோன்மணி அம்பாள் எங்களை வாழ வைக்கின்றாள். கடந்த காலத்தில் வசந்த மண்டபத் திருப்பணியை நிறைவேற்றிய பின் தற்போது இந்த பெரிய சப்பறத் திருப்பணியைச் செய்துள்ளோம். இப்பணியை இந்த ஒரு வருட காலத்தில் நிறைவேற்றி முடிக்க, எனது மகனும், அவுஸ்திரேலியாவில் வசித்து வருபவருமான "பிரபாகரன்" அரும்பாடுபட்டுள்ளார். அவரது முயற்சியின் பயனாக, இப்பணியை நிறைவேற்றித் தந்த திருநெல்வேலியூர் பத்மநாதன் சுரேந்திரன் அவர்களுக்கு இப்பணிகளை மேற்பார்வை செய்து வழி நடத்திய பரிபாலன சபையினருக்கும் நன்றிகளை தெரிவிக்கின்றேன்.

திருமதி இளையதம்பி தனலக்குமியம்மா
பெரிய சப்பறத் திருப்பணியாளர்

## எங்கள் அன்னைக்கு பெரிய சப்பறம்

மனோன்மணி அம்பாளுக்குரிய இந்த ஆலயத்தில் பல வருடங்களாக திருப்பணிகள் இடம்பெற்று, 2011ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் நிகழப் பெற்றது. தொடர்ந்தும் குறிப்பாக வெளிநாட்டு அன்பர்களின் தாராள நிதியுதவியினாலும் ஒத்துழைப்பினாலும் திருப்பணி வேலைகள் தற்போதும் நடைபெற்று வருகிறது. இவ்வாறு இருக்கும் காலத்தில் திருமதி இளையதம்பி தனலக்குமியம்மா குடும்பத்தினரால் பெரிய சப்பறத்தை வடிவமைக்கும் பணியையும் கடந்த ஆண்டு ஆரம்பித்து இன்று நிறைவடைந்து வெள்ளோட்ட விழாக் காணுகின்ற பெரும் பாக்கியம் பெற்றுள்ளோம். இத்திருப் பணியை நிறைவேற்றிய இளையதம்பி தனலக்குமியம்மா குடும்பத்தினர்களுக்கு அன்னையின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு, முன்னின்றுழைத்த அவுஸ்திரேலியாவில் வாழும் இளையதம்பி பிரபாகரன் அவர்களுக்கும் நன்றிகூறி, சிற்பாசாரியார் திருநெல்வேலியூர் பத்மநாதன் சுரேந்திரன் (இந்திரன்) அவர்களுக்கும் அவரது குழுவினருக்கும் நன்றி கூறி, எல்லோருக்கும் அம்பாளின் திருவருள் கிடைக்கவும் வேண்டுகின்றேன்.

பரிபாலன சபைத் தலைவர்
க. ஸ்ரீஸ்கந்தராசா

**விளம்பர அனுசரணை:**

| எரிபொருள் நிலையம் | குமரன் அரைக்கும் ஆலை | ஐங்கரன் நெற்கொம் | பாரதி கல்வி நிறுவனம் |
|---|---|---|---|
| சிறுப்பிட்டி. | சிறுப்பிட்டி | சிறுப்பிட்டி வடக்கு, | சிறுப்பிட்டி வடக்கு, |
| (உரிமையாளர் - நா. விஸ்வலிங்கம்) | (உரிமையாளர் - க. ஸ்ரீஸ்காந்தன்) | (உரிமையாளர் - ந. அஞ்சணன்) | (உரிமையாளர் - வை. நிஷாந்தன்) |

(C/11199)(10.16.14)

# செப்.10 இல் ரணில் குழு யாழுக்குப் படையெடுப்பு

## பிரசாரப் போரை ஆரம்பிக்க

கொழும்பு, ஓக. 18

வடமாகாணசபைத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அடுத்த மாதம் 10ஆம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி குழுவினர் யாழுக்குப் படையெடுக்கவுள்ளனர்.

மூன்று நாட்கள் சுற்றுப்பயணமாக வடக்குக்குச் செல்லும் இக் குழுவினர் புதிய பல வியூகங்களை வகுத்துக்கொண்டு பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர் என ஐ.தே.க வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்குழுவினர் 10ஆம் திகதி யாழிலும், 11ஆம் திகதி கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியாவிலும், 12ஆம் திகதி மன்னாரிலும் முகாமிட்டு பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன், செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, வடமாகாணத் தேர்தல் குழுவின் முக்கிய பிரமுகர்களான ரவி கருணாநாயக்க, டி.எம். சுவாமிநாதன் மற்றும் விஜயகலா மகேஸ்வரன் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் செல்லவுள்ளனர்.

> "மூன்று நாள்கள் சுற்றுப் பயண மாக வடக்குக்குச் செல்லும் இக் குழுவினர் புதிய பல வியூகங் களை வகுத்துக்கொண்டு பிர சார நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்

ஐ.தே.கவின் வடமாகாண சபை வேட்பாளர்கள், இளைஞர் அமைப்புகள் ஆகியவற்றைச் சந்தித்து தேர்தல் குறித்து முக்கிய பேச்சுகளில் ஈடுபடவுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, வடமாகாணத்தின் 5 மாவட்டங்களிலுமுள்ள பிரதான நகரங்களில் மக்கள் சந்திப்புகளையும் நடத்தவுள்ளார்.

வடக்கிலுள்ள சமயத் தலைவர்களுடனும் ரணில் முக்கிய பேச்சுகளை நடத்தவுள்ளார் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, இன்று டில்லி செல்லவுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களைச் சந்தித்து, 13ஆவது திருத்தச் சட்டம், வடக்குத் தேர்தல் ஆகியவை குறித்து முக்கிய பேச்சுகளை நடத்தவுள்ளார். டில்லி பயணத்தையடுத்தே வடக்குப் பிரசார நடவடிக்கைகளில் ரணில் இறங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காணாமற்போனோர் தொடர்பில் அரசுக்கு அழுத்தம் கொடுப்போம்

## ஆதரவு வழங்கவேண்டும் என்கிறார் ஆனந்தி

வலி.வடக்கு, ஓக.18

அரசை நம்பியே நாம் கணவன்மார்களையும் பிள்ளைகளையும் ஒப்படைத்தோம். இன்று அவர்களின் நிலை என்ன என்பதனை அறிய முடியாது துன்பப்படுகின்றோம். இந்தத் துன்பத்துக்கு நியாயம் கேட்கவே வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்றேன்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளர் திருமதி ஆனந்தி சசிதரன்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்கள் முன்னாள் போராளிகளையோ, அவர்களின் குடும்பங்களையோ மறந்தவர்கள் அல்லர். பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களை என்றும் நினைப்பவர்கள், மதிப்பவர்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

கடந்த காலங்களில் மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்களைக் கண்டு அனுபவித்தவள் என்ற வகையில் பெண்களின் இன்றைய உண்மையான நிலையை நன்கு உணர்ந் துள்ளேன்.

சரணடையும் போராளிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படும் என்ற அரசின் வார்த்தைகளை நம்பி எமது கணவன்மார்களையும் பிள்ளைகளையும் படையினரிடம் ஒப்படைத்தோம். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பாக இன்றுவரை எதுவும் தெரியாது. எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாத நிலையில் சங்கம் அமைத்து அரசிடம் நீதிகேட்டோம். அதனால் எமக்கு பல தடவைகள் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

> "தமிழ் மக்கள் முன்னாள் போராளிகளையோ, அவர்களின் குடும்பங்களையோ மறந்தவர்கள் அல்லர். பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களை என்றும் நினைப்பவர்கள், மதிப்பவர்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

கணவன்மார்களையும், பிள்ளைகளையும் பறிகொடுத்தவர்கள் சார்பாக அரசுடன் பேச வேண்டுமானால் நாம் பலமிக்கவர்களாக இருக்க வேண்டும். இதற்காகத் தான் வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிட முன்வந்தேன்.

இலங்கைக்கு வரும் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையுடன் பேசக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்குமானால் காணாமல் போனவர்கள், கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பாக இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கவுள்ளேன் என்றார். (ஐ-400-86)

# கோத்தா பின்னணியா? பொதுபலசேனா மறுப்பு

கொழும்பு, ஓக. 18

முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை தொடர்ச்சியாகக் கட்ட விழ்த்துவிட்டு வரும் பொதுபலசேனாவின் பின்னணியில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவே செயற்படுகிறார் என கூறப்படும் குற்றச்சாட்டுகளை அவ்வமைப்பு நிராகரித்துள்ளது.

பாதுகாப்புச் செயலருக்கும் தமது அமைப்புக்கும் தொடர்பில்லை என்று பொதுபலசேனா அமைப்பில் தலைவர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

தமது அமைப்புக்கு முஸ்லிம் சகோதரர்களும் தகவல்கள் வழங்குகின்றனர் என்றும் சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில் அவர் கூறியுள்ளார்.

"எங்களுக்கு அரச அனுசரணையோ அல்லது அரசியல் பின்னணியோ இல்லை. அவ்வாறு இருக்குமானால் அரசை பகிரங்கமாக விமர்சிக்க முடியுமா?

நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்ததால் கோத்தபாய ராஜபக்ஷவை சந்தித்தோம். எனினும், பொதுபலசேனாவின் பின்னணியில் அவர் இல்லை" என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# ஷிராணியுடனும் நவிப்பிள்ளை பேச்சு

இலங்கைக்கு 25 ஆம் திகதி பயணம் மேற்கொள்ளும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை முன்னாள் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டார நாயக்கவுடனும் பேச்சு நடத்த வுள்ளார்.

குற்றப் பிரேரணை மூலம் கடந்த மார்ச் மாதம் ஷிராணி பண்டார நாயக்க பிரதம நீதியரசர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

இதன் பின்னர் அவர் கலந்து கொள்ளும் உத்தியோகபூர்வ பேச்சு இதுவாகும். அத்துடன், ஷிராணி பண்டாரநாயக்க பதவியில் இருந்து நீக்கப்பட்ட பின்னர், சந்திக்கும் முதல் சர்வதேச இராஜதந்திரி நவநீதம்பிள்ளை என்பதும் குறிப்பிடத்தக்கது.

குறித்த சந்திப்பின்போது, குற்றப் பிரேரணை தொடர்பான விடயங்கள், அடுத்தகட்டச்செயற்பாடுகள் மற்றும் நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை குறித்தும் பேசப்படும் எனத் தெரியவருகிறது.

# பொதுபலசேனாவும் தீர்வுத் திட்டம்முன்வைப்பு

கொழும்பு, ஓக. 18

"இனப்பிரச்சினை தொடர்பில் தீர்வுத்திட்டமொன்றை எதிர்வரும் 25ஆம் திகதி பொதுபலசேனா அமைப்பு முன்வைக்கவுள்ளது" என அதன் நிறைவேற்றுக்குழு பிரதிநிதி கலாநிதி திலந்த விதானகே தெரிவித்தார்.

காலியில் இடம்பெறும் பொதுபலசேனாவின் மாநாட்டில் முன்வைக்கப்படும் இந்தத் திட்டமானது 'நாட்டைக் கட்டியெழுப்பும் புதிய தேசிய வேலைத் திட்டம்' என முன் வைக்கப்படவுள்ளது என்றும் தெரிவித்தார்.

"திட்டம் முன்வைக்கப்பட்டது முதல் ஆறு மாத காலத்துக்கு மக்கள் கருத்துகள் உள்வாங்கப்பட்டதையடுத்து. அதனை அரசிடம் சமர்ப்பிக்க எதிர்பார்க்கிறோம்" என்றும் அவர் தெரிவித்தார்.

"இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரம் மற்றும் அடிப்படைவாதம், கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் முதலான துறைகளில் இடம் பெற்று வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது குறித்து இந்தத் திட்டத்தில் நாம் முக்கிய காரணங்களை முன்வைக்கவுள்ளோம்.

இந்த வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் தொடர்பில் எதிர்வரும் 25ஆம் திகதி இடம் பெறும் மாநாட்டில் விரிவான விளக்கமளிக்கப்படும்" என்றும் அவர் தெரிவித்தார்.

மாகாணசபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை பகிர்வதற்கு பொதுபலசேனா கடும் எதிர்ப்பை வெளியிடும் அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ஆட்டம்



வடமராட்சி, ஓக. 18

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் தனது நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை கழக மைதானத்தில் நடைபெறும் அரையிறுதிப் போட்டியில் மன்னார் சென். லூசியஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (422)

# மரண அறிவித்தல்

## திருமதி அமிர்தலிங்கம் மகேஸ்வரி (அம்மாக்கா)



கரம்பொன் தெற்கைப்பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட அமிர்தலிங்கம் மகேஸ்வரி நேற்று (17.08. 2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா -தையல்முத்து தம்பதியரின் அன்பு மகளும், சுந்தரம்பிள்ளை- அன்னப்பிள்ளை தம்பதியிரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அமிர்தலிங்கத்தின் அன்பு மனைவியும், பத்மாவதி (பிரான்ஸ்), தயாவதனி (கொழும்பு), போசன்(பிரான்ஸ்), ஈசன்(பிரான்ஸ்) சுரேந்திரன் (பிரான்ஸ்), சுபோதினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், இராசம்மா, சுப்பையா, சிவகாமசுந்தரி, சபாரத்தினம், செல் லத்துரை, தளையசிங்கம், லோகராசா, குலசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவநாயகம், சிறிநந்தினி, கேமலதா, பேரின்பவதி, ராஜ்மோகன் ஆகியோரின் மாமியும், மயூரி, வினோத், அஜித், சதுசன், கோகுலன், லக்ஷயா, லக்ஸ்மன், அபிநயா, செந்தூஸ், சிவதீஸ், யதுசன், மதுஷா, நிதுசன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சகானா, ரோஷன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.08.2013) திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு க.குலசிங்கம், இல. 355, பலாலி வீதி, ஊரேழுவில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊரெழு பொக்கனை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈசன்- இலங்கை- +94752087960
தீபன்- இலங்கை- +94776076320
சுரேஸ்- இலங்கை- +94772251704
போசன்- பிரான்ஸ்- +33143086956

தகவல்:
குடும்பத்தினர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## பொதுநலவாயத்தில் இந்தியா பங்கு கொண்டால் தொடர் போர்

வெளிப்படையாகத் தனது முடிவை அறிவிக்க வேண்டும். இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் தொடர்ந் தும் தாக்கப்படுவதும், கைது செய்யப்படுவதும் தொடர்ந்து வரும் நிலையில் தமிழகத்தின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்குகொள்ளக் கூடாது.

இதனை மீறி இந்தியா பங்கு கொண்டால் தமிழகத்தில் கறுப்புக்கொடி ஏந்திப் போராட் டமும், அரசியல் மறியல் போராட்டமும் தொடர்ந்து இடம் பெறும்- என்றுள்ளது. (த-14)

## தேர்தல்கள் ஆணையாளர் வடக்குக்கு

யாடும் நோக்கில் அவர் வடக் குக்குச் செல்லவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், வட மாகாண சபைத் தேர்தலில் போட்டி யிடும் வேட்பாளர்களையும் அவர் சந்திக்கவுள்ளார்.

அரச சொத்துப் பயன்பாடு, சட்டவிரோத தேர்தல் பிரசாரம் என்பவை குறித்தும் தேர் தல்கள் ஆணையாளர் தனது பயணத்தின் போது கவனம் செலுத்தவுள்ளார். (த)

## முஸ்லிம் தீவிரவாதக் குழுக்கள் புலிகளுடன் இணையும் சாத்தியம்

தொடர்பு கொள்ளுமாறு தமிழக மீனவர்களுக்கு இந்தியக் கட லோரக் காவல்படை அறிவுறுத்தியுள் ளது.

"இராமேஸ்வரம் அருகேயுள்ள ஐந்தாம் திட்டு தொடக்கம், கோடியக் கரை வரையான கடற்பகுதியில் முன் னரை விடவும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என தமிழகக் கடலோர காவல்படை அதிகாரி ஒருவர் கடந்த வாரம் தெரிவித்தி ருந்தார்.

## பீரிஸும் ரணிலும் புதுடில்லி விரைவு

ஆலோசகர் சிவ்சங்கர் மேனனையும், சந்திக்கவுள்ள வெளிவிவகார அமைச் சர், பொதுநலவாய மாநாட் டில் இந்தியா பங்கேற்க வேண்டும் என்று வலியுறுத்துவார் என்று புதுடில்லித் தகவல்கள் கூறுகின்றன.

அதேவேளை, புதுடில்லி வரும் இலங்கை வெளி விவகார அமைச்சரை, இந்திய வெளி விவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் சந்திப்பாரா என்பது குறித்து இந்திய வெளிவிவ கார அமைச்சு தகவல் எதையும் வெளியிடவில்லை.

இதேவேளை,

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது இந்தியப் பயணத்தின் போது இந்திய அரச அதிகாரிகளைச் சந்தித் துப் பேசவுள்ளதாக, அவரது செயலக வட்டாரங்கள் தக வல் வெளியிட்டுள்ளன.

ரணில் விக்கிரமசிங்கவும் மூன்று நாள் பயணமாக நாளை திங்கட்கிழமை புதுடில்லி செல் கிறார்.

ரணில் விக்கிரமசிங்கவின் இந்தப் பயணம் அதிகாரபூர்வ பயணமா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும், அவர் இந்திய அதிகாரிகள் பலரை யும் சந்திக்கவுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், ஓக.18
நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும்கு.நேசராஜா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே 9 பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

பி.ப.3.30 மணி
உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் எதிர் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம்.

பி.ப.4.30 மணி
அரியாலை ஐக்கியம் எதிர் அராலி பாரதி. (த-23)

## யாழ். மாவட்ட அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஓக.18
இலங்கை கரம் சம்மேளனம் கழகங்களுக்கு இடையே நடத்தும் தேசிய மட்டக் கரம் சுற்றுப்போட்டி நேற்று வெள்ளிக்கிழமை கரம் சம்மேளன மண்டபத்தில் ஆரம்பமானது.
மேற்படி போட்டியில் பங்கு கொண்ட யாழ்.மாவட்ட 'ஏ' பிரிவு அணியினர் 'டி' பிரிவில் தாம் பங்கு கொண்ட இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளனர். முதலாவது போட்டியில் பத்தளை கரம் மேற் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ். மாவட்ட 'ஏ' அணி மோதிக்கொண்டது. இதில் யாழ்மாவட்ட 'ஏ' பிரிவு அணி 5:3 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. இரண்டாவது ஆட்டத்தில் அம்பலங்கொடை றெஞ்சஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.மாவட்ட 'ஏ' அணி மோதிக் கொண்டன.
இதில் யாழ்.மாவட்ட 'ஏ' அணி 5:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## தடகளப் பயிற்சி முகாம்


யாழ்ப்பாணம், ஓக.18
மாகாணங்களுக்கு இடையிலான 39ஆவது தேசிய மட்டத் தடகளப் போட்டியில் பங்குகொள்ளவுள்ள வட மாகாணத்தின் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த வீர, வீராங்கனைகளுக்கான பயிற்சி முகாம் கடந்த 15ஆம் திகதி வவுனியா நகர சபை மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.
இந்த பயிற்சி முகாம் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. (த-23)

## கரப்பந்தாட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஓக.18
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வட மாகாண இளைஞர் கழகங்களுக்கு இடையே ரூபவாகினி வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகின்றது.
இன்றைய ஆரம்ப நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, சிறப்பு விருந்தினராக வட மாகாண தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் சரத் சந்திரபாலா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.
மேற்படி போட்டியில் வெற்றி பெறும் அணிகள் தேசிய ரீதியாக நடைபெறும் போட்டிக்குத் தகுதி பெறும். (த-23)

# அரையிறுதிக்கு யங்ஸ்ரார்

யாழ்ப்பாணம், ஓக.18
வவுனியா மாவட்டக் கிரிக்கெட் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் பிரிவு III இற்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக் கெட் சுற்றுப் போட்டித் தொடரின் முதலாவது காலிறுதியாட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று அரை இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது.
கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற முதலாவது காலிறுதியாட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்துக் கலைமகள் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.
இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 45.3 பந்து பரிமாற்றங்களின் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 213 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் லிங்கதரன் 48 ஓட்டங் களையும், சொரூபன் 39 ஓட்டங்களையும், தீபன் 28 ஓட்டங்களையும், நிமலன் 22 ஓட்டங்களையும், தசரிதரன் 21 ஓட்டங்களையும், சசி 17 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் கலைமகள் விளையாட்டுக் கழக அணி சார்பாக பாபு 9 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 34 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்கினையும், குட்டி 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 32 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்கினையும் வீழ்த்தினர்.
214 ஓட்டங்கீளைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கலைமதி விளையாட்டுக்கழக அணியினர் 34.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்கினையும் இழந்து 140 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதில் அனுஷன் 58 ஓட்டங்களையும், குட்டி 32 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி சார்பில் சசி 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 24 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்கின்னையும், தீபன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 18 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்கினையும், குகன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 19 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்கினையும் வீழ்த்தினர். (த-23)



"முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 45.3 பந்து பரிமாற்றங்களின் நிறைவில் சகல இலக்குகளை இழந்து 213 ஓட்டங்களைப் பெற்றது.

# ஊர்காவற்றுறை அணி இறுதியாட்டத்துக்கு தகுதி

யாழ்ப்பாணம், ஓக.18
மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழகம் நடத்தும் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.
ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணியை எதிர்த்து எழுவைதீவு பாத்திமா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணி 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்கினை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் ஆரூரன் 40 ஓட்டங்களையும், ராகுலன் 20 ஓட்டங்களையும், மாறன் 11 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் எழுவைதீவு பாத்திமா விளையாட்டுக்கழக அணி சார்பில் ஜெசிந்தன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 18 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்கினை வீழ்த்தினார்.
91 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய எழுவைதீவு பாத்திமா விளையாட்டுக்கழக அணியினர் 8 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்கை இழந்து 66 ஓட்டங்களை மட்டும் பெற்றனர். இதில் தீபன் 15 ஓட்டங்களையும் ஜெயசந்திரன் 11 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.



பந்து வீச்சில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணி சார்பில் வதன் 2 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 9 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்கினையும் அரூரன் 2 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 12 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கினையும் வீழ்த்தினர். (த-23)

## வென்றது ஞானமுருகன்



யாழ்ப்பாணம், ஓக.18
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக பி அணி வெற்றி பெற்றது.
மயிலங்காடு ஞானமுருகன் 'பி' அணிக்கும் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடை யில் இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
சிறந்த வீரனாக மயிலங்காடு ஞானமுருகன் 'பி' அணி வீரன் அன்சலின் தெரிவானார். (த-23)

## லேகாசினிக்கு 'ஜனனம்' அனுசரணை

பாடசாலை மட்டத்திலும், மாகாண மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் தடகளப் போட்டிகளில் திறமையை வெளிப்படுத்தி, வெற்றிகளையும், பதக்கங்களையும் பெற்று வரும் வடக்கைச் சேர்ந்த கமலநாதன் லேகாசினிக்கு அனுசர ணையாளராக 'ஜனனம்' அறக் கட்டளை நிறுவனம் முன் வந்துள்ளது.
இதன்படி லேகாசினிக்கு கழக, மாவட்ட, மாகாண மட்டப் போட்டிகளுக்கான ஆடைகள், பயிற்சி ஆடைகள், போட்டிகளில் பங்குபற்றத் தேவையான விசேடகாலணி, பயிற்சிக் காலணி ஆகியவற்றை ஜனனம் அறக்கட்டளையின் பிரதம அறங்காவலர் விநாயகமூர்த்தி ஜனகன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கையளித்தார்.
அத்தோடு, லேகாசினி உடற்த... தேவையான ஊட்டப் பொருள்களு... பணத்தை எதிர்வரும் ஒரு வருடத்திற்கு வழங்குவதற்கும் ஜனனம் அறக்கட்டளை முன்வந்துள்ளது. (ஜ-23)



## கிரிக்கெட் நடுவர் காலமானார்

இலங்கை கிரிக்கெட் அணியின் முதலாவது டெஸ்ற் போட்டியில் நடுவராகப் பணியாற்றிய செல்லையா பொன்னுத்துரை தனது 78 ஆவது வயதில் நேற்றுமுன் தினம் காலமானார்.
யாழ்ப்பாணத்தில் பிறந்த செல்லையா பொன்னுத்துரை, யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியில் கல்விகற்ற தோடு, அவர் சிறந்த வலது கைத் துடுப்பாட்ட வீரராகவும், வலதுகை மிதவேகப் பந்து வீச்சாளராகவும் திகழ்ந்தார்.
1983 ஆம் ஆண்டு கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் இடம்பெற்ற இலங்கை, ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான ஒருநாள் சர்வதேசப் போட்டியில் சர்வதேச நடுவராகத் தனது பணியை ஆரம்பித்த செல்லையா பொன்னுத்துரை 8 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் நடுவராகப் பணியாற்றியிருந்தார். என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-23)



## விற்பனை

கிடா ஆடுகளும் நாம்பன் கன்றுகளும், ஊர் அரிசி மற்றும் விதை நெல்லும் விற்பனைக்குண்டு.

கே.ஜெகன்
செவ்வவேல் இல.10, கல்லூரி வீதி,
கொக்குவில் கிழக்கு. 021 222 7217

## கார் விற்பனைக்கு

NP- KFXXXX தொடரிலக்கங்களைக் கொண்ட Toyota Vios Auto Manual கியர்களை உடைய 2கார்கள் விற்பனக்கு உண்டு.

தொடர்பு:- 077 9599225,
077 5273294

## விற்பனைக்கு

சாப்பாட்டுக் கடைக்குத் தேவையான பொருள்கள், அலுமாரிகள், மேசைகள், கதிரைகள், குளிரூட்டிகள், கொத்துரொட்டி அடுப்பு மற்றும் சில்வர் பொருள்கள் விற்பனைக் குண்டு. தொடர்பு :- 077 3965007

## கட்டிட ஒப்பந்ததாரர்களுக்கு ஓர் நற்செய்தி

எம்மிடம் போதுமான அளவு இரும்பு முக்குகள் (PROP) SCAFFOLDING என்பன வாடகைக்கு பெற்றுக் கொள்ளமுடியும்.

தொடர்பு:- 077 9059052,
077 2013640

## கடை வாடகைக்கு

குருநகர் புதிய கடற்கரை வீதியில் கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு:-0777179778

## வாடகைக்கு

M.P.C.S.அருகில் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் 2 கடை, வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:-0773606835

## தவறிவிட்டது

கங்காதரன் என்பவரது மூக்குக் கண்ணாடி யாழ். கொமர்ஷல் வங்கியில் இருந்து ஆஸ்பத்திரி வீதி, கே.கே.எஸ் வீதி, மானிப்பாய் அந்தோனியார் கோயிலுக்கு இடைப்பட்ட பகுதியில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்களிற்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு:- கங்காதரன் பனிப்புலம், பண்டத்தரிப்பு. 0776773055

## பெண்களுக்கான குறுகிய கலைப் பயிற்சிகள்

தையல்- அடிப்படையும் நேரடியாக துணிகளில் வெட்டித் தைக்கும் முறையும்
கேக் ஐசிங்- 15 வகையான கேக்
சிற்றுண்டி தயாரித்தல்
ஸ்கிறீன் பிறிண்டிங்

இடம்:- இளையதம்பி ஞானகர்த்த பாடசாலை, மானிப்பாய் வீதி, உடுவில்.
காலம்:- 21.08.2013

தொடர்பு:-0770724900

## யாழ் மாவட்டத்தில் முகவர்கள் தேவை

பிரபல சர்வதேச கூரியர் (பொதிகள்) கம்பனி (Skyway International (Pvt) Ltd) ஒன்றிற்கு யாழ் மாவட்டத்திற்கு கீழ்வரும் பிரதேசங்களுக்கு உடனடியாக முகவர்கள தேவை.
1.யாழ்ப்பாணம், நல்லூர், இனுவில், சுன்னாகம
2.மானிப்பாய், சங்கானை, காரைநகர்
3.நெல்லியடி. பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
4.ஊர்காவற்துறை, புங்குடுதீவு
5.கைதடி, கொடிகாமம், சாவகச்சேரி

வியாபாரிகளே!
நீங்கள் ஏற்கனவே வியாபாரம் செய்பவராயின தங்களது வியாபாரத்தளத்தில் இருந்தவாறே 50,000/=ற்கு மேல் வருமானத்தினை ஈட்டிக் கொள்ள அரியதோர் சந்தர்ப்பம்.
தொடர்புகளுக்கு –
Skyway International (Pvt) Ltd
The manager
No-38, Shurberry Gardens Bambalapitiya
Colombo-04
TP.No¦011-2955464
Mobile¦071-5790394 (சி/113170)(23)
E-Mial¦sales@skywaycmb.com
skyway@sltnet.lk
Web: www.skywaycmb.com

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## அக்ஷயா

3மாதகால பயிற்சி நெறி

பயிற்சிக் கட்டணம் ரூ20000/=

பேசியல், மேக்கப், கெயாஸ்ரைல், தலைமுடி அயன்பண்ணுதல், தலைமுடிசுருட்டுதல், கேளிங், சாறி பிளவுஸ் கட்டிங், சாறிவேக் மேற்படி பயிற்சிகள் நடைபெறுகின்றன. பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். ✱ ஒட்டிய கன்னங்களை குண்டு கன்னங்களாக மாற்றும் குளிசை, உடல் எடை கூட்டும் குளிசை ✱ உடல் எடை குறைக்கும் பால்மா, குளிசை, கோப்பி ✱ கருவளையம், நாட்பட்ட பருக்கள், இளநரை, முடி கொட்டுதல் அனைத்துக்குமான குளிசை, தலைமுடி வளரச்செய்யும் ஆயுர்வேத எண்ணெய் ✱ கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, நாட்பட்ட வடுக்கள், பருக்கள் அனைத்தையும் மாற்றும் ஒறியினல் வைத்நிங் கிறீம் ✱ வைத்நிங் பேசியல், தலைமுடி அயன் பண்ணுதல், சுருட்டுதல், கேளிங், இயற்கை மூலிகை அடங்கிய பேசியல் மேக்கப் செய்து கொள்ளலாம், முகம் கழுத்தில் உள்ள காய்கள் அகற்றப்படும். ஓடர்கள் ஐசிங்கேக், ரிச்கேக் ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதிவு இல: 16168 T.P- 0772106155 அக்ஷயா- நாவலர் வீதி, பிறவுன்றோட் சந்தி அருகில், யாழ்ப்பாணம்.

## தமிழ் பேசும் பெண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

## மலேசியா

மலேசியாவில் உள்ள தமிழ் VIP வீடுகளுக்கு
பணிப் பெண்கள் தேவை (வயது 25 – 45)

மாதாந்த சம்பளம் RM 850
இலங்கைப் பெறுமதிக்கு ரூபா. 34,000

- கடவுச்சீட்டு (Passport) - இலவசம்
- மெடிக்கல் (Medical) - இலவசம்
- இன்சுரன்ஸ் (Insurance) - இலவசம்
- விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
- தங்குமிட வசதி (Accommodation) - இலவசம்
- உணவு (Food) - இலவசம்

2 வருட கால ஒப்பந்தம் (2 Years Contract)

பாஸ்போட் இல்லாதவர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பெற்றுக்கொடுக்கப்படும்.

Labour Licence No. 1785
**Rizviya Travels & Tours**
46/B, (1st Floor), Symonds Road, Maradana, Colombo - 10.
Tel : 011 3091521, Hotline : 077 3179592.

## சிங்கப்பூர் செல்லும் பயணிகளுக்கு

யாழ் மக்களுக்காக
24 மணித்தியாலய சேவையை விஸ்தரித்துள்ளோம்
கொழும்பு - சிங்கப்பூர்
Colombo-Singapore
RTN (மாதாந்த கொடுப்பனவுமுறை)
3100/=
HNB Special Offer for Credit Card holders

**Nation Popular Travels & Tours**
#128,Brown Road, Jaffna
0214 920 920

## கடைகள் வாடகைக்கு

யாழ். முனீஸ்வரன் வீதியில் இரு கடைகள் வாடகைக்கு உண்டு. நீளம் 30' x அகலம் 14'.

தொடர்பு: 077 909 6190 (31446)(7.3)

## தையல் பயிற்சி வகுப்பு

கொழும்பில் பயிற்றுவிக்கும் தையல் ஆசிரியையினால் வயது வித்தியாசமின்றி சிறந்த விளக்கத்துடன் A/L முடித்த மாணவிகளுக்கும் சாறி பிளவுஸ், சல்வார், எம்றோயிடரி பயிற்றப்படும். எம்றோயிடரிக்கு பொருள்கள் வழங்கப்படும். (C/11318)(7.3)

யாழ் நகர், மணிக்கூட்டு வீதியில் : 077 929 7474

## காணி, வீடு விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, பலாதி வீதியிலிருந்து 3/4 கி.மீ. தூரத்தில் ஈவினை அ.த.க. வித்தியாலயத்துக்கு அருகில் 10 பரப்பு காணியும் வீடும் அதனருகாமையிலேயே மேலும் 28 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:0754161462

## தவறிவிட்டது

கறுப்பு Kit Bag முக்கிய ஆவணங்களுடன் 16.08.2013 வெள்ளிக்கிழமை மாலை 5.30 - 6.30 மணிக்கிடையில் கைதடிக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம். (C/11403)(7.3)

தொடர்பு: 077 607 2957

## வேலையாள் தேவை

ஐஸ்கிறீம் ஸ்தாபனத்துக்கு ஐஸ்கிறீம் வேலை அனுபவமுள்ள ஆள் தேவை உடன் தொடர்பு கொள்ளவும். சம்பளம் பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம். (C/11402)(7.3)

தொடர்பு: 077 661 5973

## கண்ணீர் அஞ்சலி

யா/சிறுப்பிட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையின் அதிபர்
சு.பரமேஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தையார்

**சபாபதி சுப்பிரமணியம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.
(31455)(3.6.11)



Do you have a JOB
However
what's next ?
@ ESOFT
Shaping Lives, Creating Futures.
www.esoft.lk

edexcel BTEC HND
in Business Management

FREE
முதல் 5 பதிவுகளுக்கு
Android Smart Phone

வணிக உலகை உங்கள் கை வசப்படுத்தும் தெரிவு

யாருக்கு.....? பதவி உயர்வினை எதிர்பார்த்திருக்கும் வங்கி ஊழியர்கள், நிதிநிறுவன ஊழியர்கள், ஏனைய வணிகத்துறைசார் ஊழியர்கள் மற்றும் சுயதொழில் முயற்சியாளர்கள்

Register Before Aug 25th

குறைந்த மூலதனத்துடன்
சர்வதேச அங்கீகாரத்துடனான
கற்கைநெறி

Win an Android Smart Phone
SMS to 077 309 9308
SMS <Your Name> Space<Adress>
SMS

ESOFT
Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
No.137, K.K.S Road, Jaffna (On top of HSBC Bank)
CALL : 077 309 9 308




அதிகரிக்கும் மின்சாரக் கட்டணங்களால் அதிர்ச்சிக்கு உள்ளாகிறீர்களா?

இலவசமாக சூரிய ஒளியிலிருந்து தேவையான அளவு மின்சாரம் பெறமுடியும் என்பதை அறிவீர்களா?

இரவிலும், பகலிலும் இலவசமாகவே மின்சாரத்தை பயன்படுத்தக்கூடிய, சேமிப்பு மின்கலங்கள் அற்ற "Grid-Tie Solar" நவீன தெழில் நுட்பம்.

இலங்கை மின்சார சபையிடமிருந்து மின்சார இணைப்பை பெறுகின்ற வீட்டு, கடை, தொழில் உரிமையாளர்கள் போன்ற அனைவரும் இவ் தொழில் நுட்பத்தின் மூலம் பயன் பெறலாம்.

நாங்கள் உங்களுக்கு வழங்குவது...
25 வருட உத்தரவாதம்
ISO, IEEE, UL சான்றிதழ் பெற்ற உபகரணங்கள்
இலவச அலோசனை & quotation
10 வருட இலவச பராமரிப்பு
இவையனைத்தும் மிகவும் கவர்ச்சிகரமான விலையில்!



மேலதிக விபரங்களுக்கு இன்றே அழையுங்கள்
உங்கள் மின்சாரக்கட்டணங்களுக்கு- -சொல்லுங்கள் "Good Bye"

solaris energy
0774222767
info.solaris@yahoo.com

Our Bright Ideas come from The Sun

## LONDON METROPOLITAN COLLEGE

LONDON METROPOLITAN COLLEGE

சர்வதேச தரத்திலான ஆங்கில கற்கை நெறிகளை நடாத்தும்
யாழ்ப்பாணத்தின் முன்னிலை ஆங்கில கல்வி நிறுவனம்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**IELTS**
ACADEMIC & GENERAL
Duration: 48 hrs Week/ Week ends

- ஒவ்வொரு மாணவர்மீதும் தனிப்பட்ட கவனம்
- முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி
- IELTS 5.5-6.5 Band பெறுவதற்கான உத்தரவாதம்
- இலவச Tutorial Facilities

**City & Guilds A1 A2 B1 B2**
Duration: 48 hrs Week/ Week ends

- UK அரசாங்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது.
- இதுவரை நடந்த பரீட்சையில் 100% சித்தி.
- காலவரையறையற்ற சான்றிதழ் பெறமுடியும்.
- ESOL, SESOL பரீட்சைகளை தனித்தனியாக தோற்ற முடியும்.

Certificate In
**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
(Quick learning programme)
Duration: 60 hrs Week/ Week ends

- ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்து கொள்ள விரும்புவோர்க்கான கற்கைநெறி.
- ஆங்கில உரையாடல் புலமையை வளர்ப்பது தொடர்பான பூரண விளக்கங்களுடன் கூடிய கற்கைநெறி.

**DIPLOMA IN ENGLISH**
Duration: 3 Months Week/ Week ends
Writing - 60Hrs Reading - 48Hrs
Listening - 48Hrs Speaking - 48Hrs

Be a power speaker
INTENSIVE COMMUNICATION PROGRAM

- தொழில்தேடுவோர், தொழில்புரிவோர், A/L பரீட்சைக்கு தோற்றியோர் ஆங்கில புலமையை வளர்த்து கொள்வதற்கான கற்கைநெறி.
- Speaking, Reading, Listening, Writing ஆகியன விசேட செயன்முறைமூலம் விரிவாக கற்பிக்கப்படும்.
- மாணவர்கள் தமது தேர்ச்சிக்கேற்ப தொடர்ச்சியாக Advanced Dip. In English இனை எம்மிடமே கற்க முடியும்.
- O/L எழுதிய மாணவர்களிற்கு தனிப்பட்ட ரீதியில் கற்கைநெறி ஒழுங்குசெய்யப்படும்.

ஒவ்வொரு மாத முதல் வாரத்திலும் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படும். தவணை அடிப்படையிலான மிகக்குறைந்த கட்டணம்

#197, Arasady Road, Jaffna, Sri Lanka | Tel: 021 222 7230 | 021 753 8395
E mail: info@lmcjaffna.edu.lk | Web: www.lmcjaffna.edu.lk


## விற்பனைக்கு

Pulsar 220, Motor Bike விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 077 9280278

## German Institute

German Swiss மொழிகள் தமிழ் மொழிபெயர்ப்புடன் Goethe Institute Exam க்கு ஏற்றவாறு நடை பெறுகிறது.
தொடர்புகளுக்கு:- 10, Palaly Road, Jaffna. ஆரியகுளத்துக்கு அருகாமையில்
T.P. 0771604823

## EASY SHAPPATHI
## ஆட்டாமா சப்பாத்தி



- ★ சிறியவர் முதல் பெரியவர் வரை விரும்பி உண்ணக் கூடியது
- ★ மிக இலகுவில் தயாரிக்கக் கூடியது (எவ்வித எண்ணெயும் பாவிக்கத் தேவையில்லை)
- ★ மிக விசேடமாக நீரிழிவு (சலரோகம்), கொலஸ்ரோல் மற்றும் உடல் ஆரோக்கியத்தைப் பேண விரும்புபவர்களுக்கான மிகச்சிறந்த சத்துணவு.
- ★ அத்துடன் EASY பராட்டா (BARATA) வும் பெற்றுக்கொள்ளலாம்

கிடைக்குமிடம்:-

| | | |
|---|---|---|
| CITY MEDICALS (கொமர்ஷல் வங்கிக்கு அருகில்) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | JEYA GANESH STORES BUS STAND POINTPEDRO | SHANTHY MEDICALS கத்தோலிக்க அச்சகம் கடைத்தொகுதி, பிரதான வீதி, யாழ்ப்பாணம். |
| நிலாம்பரி உணவகம் K.K.S. Road, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம். | T.C.T. நாவலர் றோட், யாழ்ப்பாணம். | JITH FOOD CITY 127, கண்டி வீதி, சுச்சேரி. |

ஏக விநியோகஸ்தர்: **J.JEEVA MIXTURERS**
8, பிளர்ச்சஸ் ஒழுங்கை, (கண்டுக்குளி மகளிர் கல்லூரிக்குப் பின்புறம்) கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021 222 9867

30153X(10,6,3)

## வேலையாள்கள் தேவை
### சங்கென் கென்ஸ்ரெக்ஷன் யாழ் கிளைக்கு

பரந்தன், பளை, கொடிகாமம், ஆனையிறவு போன்ற இடங்களில் வேலை செய்வதற்கு மேசன், மாபிள் பதிக்கக் கூடியவர்கள் உடனடியாகத் தேவைப் படுகின்றார்கள்.
தங்குமிட வசதியுடன் தகுந்த வேலைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.
விவரங்களுக்கு:
(சி/11121) (10,8,3) 071 534 9942, 071 864 3645

## ELGi சேவிஸ் ஸ்ரேசன் மெசினரிஸ் விற்பனை

4, 8இ 16, தொன் லிப்டுகள், கொம் பிரசர, பிரசர் பம்ப், கிறிஸ் பம்ப், ஓட்டோ லிப்ட, பைக் லிப்ட், வீல் அலைன் ஞர, Tyre சேஞ்சர் அனைத்தும் விற்பனைக்கு உள்ளன
ELGi சப்ளையர்(SUPLIER), SN-Tech
94இ 4ஆம் குறுக்குத் தெரு (அடைக்கல மாதா ஆலய வீதி), யாழ்ப்பாணம். தொடர்பு 077687 2656, 077726 3181

## வீடு வாடகைக்குண்டு

இல. 05, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதியில் (வலம்புரி நிறுவனத்துக்கு அருகில்) சகல வசதியும் கொண்ட புதியவீடு வாடகைக் குண்டு. நிறுவனங்களும் விரும்பத்தக்கது.
தொடர்பு: ச.சிவசோதி - 077 379 6373

## திருமணக் CAR வாடகைக்கு (A/c)



நவீன கார்கள் TOYOTA KDH வான் மற்றும் Dlophin வான்கள் வாடகைக்கு விடப்படும்.

ரட்ணம், 22, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். தொ.பே. 077 990 3090

## IELTS A1 B1 B2 KU Education

ஸ்போக்கண் இங்கிலீஷ் வகுப்பும் Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
தனிப்பட்ட முறையில் உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.
K.U Education, No 75, Temple Road, Jaffna. IELTS Centre

# GOLDEN MIGRATION OPPORTUNITY TO
# DOCTORS
## DENMARK - NORWAY - SWEDEN

Discount upto 50% of Consultation Fees for Non Working Medical Graduates

### 01 . MEDICAL DOCTORS

- Age upto 48 with MBBS or MD
  Minimum One year Work Experience / Private GPs

### 02 . TRAINEE DOCTORS

(NON WORKING MEDICAL GRADUATES)
(Sri Lanka / Russia / Latvia / Ukraine / Belarus / China etc)

- Age upto 35 Without Work Experience
  SLMC Registration Not Required





★ Doctors Can Earn an Average Monthly Salary Approx Rs. 1,000,000/= or above

**Contact Romesh for Appointments : 0777700659**

★ Free Education for Children
★ Free Consultancy for Employment

*DOCTORREC* Consultant for Asia
Dr. Prabath C. Ukkwatte
Dr. of Education (USA), Dr. of Business Administration (USA)
MBA (USA), MABE (UK)

**Assessment and Interviews :**
Saturday 24th August 2013, 10.00 a.m to 4.00 p.m, at Tilko City Hotel, Jaffna Town

*DOCTORREC* Partner in Sri Lanka,

***OXFORD COLLEGE FOR INTERNATIONAL CAREERS (PVT) LTD.***
360, Oxford Building, Old Kottawa Road, Udahamulla, Nugegoda.
Tel: 011-5 644895

◆ Approval within 4-5 Months
◆ Good English (No IELTS)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம் 18 08 2013

# கடவுளே! வடக்கிலும் அரசே வெல்லட்டும்!


## அமைச்சர் திஸ்ஸ பேட்டி

ஆர்.சனத்

வடமாகாண சபைத் தேர்தலில், மத்தியில் ஆளும் கூட்டணியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றிபெற வேண்டும் என்று பிரார்த்திக்கிறார் முன்னணி இடதுசாரி தலைவரும் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவருமான அமைச்சர் திஸ்ஸவிதாரண. வடக்கில் அரசு வெற்றிபெற்றால் தெற்கில் பெரிய மாற்றம் வரும் என்றும் அவர் எதிர்வுகூறுகின்றார். அதற்காகவே அரச கூட்டணி வடமாகாண சபையை வெல்ல வேண்டும் என அவர் அடித்துக் கூறுகின்றார்.



தமிழரின் தேசிய கடமை 05



எரிகிறது தமிழகம் 07



## சாத்தானின் புதிய வேதம்

03

கந்தவனம்
கோணேஸ்வரன்



## தமிழின வதைப்பை தொடரும் அரசுடன்

# இணங்கிப் போகலாமா?

மாகாணசபைத் தேர்தல்கள் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன. வடக்கு. வடமேல். மத்திய மாகாணங்களில் தேர்தல் விதிமுறைகளை மீறிய செயற்பாடுகள் பல பதிவாகியுள்ளன. தேர்தல் விதிமுறைகளை மீறித்தான் நாங்கள் வெல்வோம் எனச் சக்தியுள்ள அரசியற் கட்சிகள் அடம்பிடிக்கின்றன. இவற்றுள் அரசதரப்புக்கட்சி முன்னிலை வகிக்கிறது.

இந்தப் பொலிஸாரால் என்ன செய்துவிட முடியும் என்ற மனப்பாங்கு அரசசார்புக் கட்சியினரிடையே பட்டவர்த்தனமாக வெளிப்பட்டு நிற்கிறது. தமக்குப் பாதகமான நடவடிக்கைகளில் பொலிஸார் இறங்கிச் இச்சட்டத்தைப் பாதுகாக்க முனைந்தால் அவர்களை முடக்கிப்போடும் கெட்டித்தனம் தங்களுக்கு இருப்பதாக இவர்கள் நினைத்துக்கொள்கிறார்கள். இவர்களின் திமிர்வாதப் போக்குகளுக்கு முன்னால் தேர்தல் ஆணையரின் உத்தரவுகள்கூடச் செயலிழந்து போகின்றன. தேர்தல் விதிமுறைகளின்கீழ் வேட்பாளரின் படமும். சின்னமும் அவரவர் உத்தியோகபூர்வ அலுவலகங்களிலேயே வைக்கப்படலாம். வேட்பாளர் பயணம்செய்யும் வேளையில் பயணத்துக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்களில் காட்சிப்படுத்தலாம். பரப்புரைக் கூட்டங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் வைக்கலாம். இதனைத்தவிரப் பொது இடங்களில் காட்சிக்கு வைப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டிருக்கிறது.

### ஊருக்கு உபதேசம்

ஆனால், ஆளுங்கட்சி வேட்பாளர்களின் படங்களும், சின்னமும் தாராளமாக எல்லா இடங்களிலும் காட்சிப்படுத்தப்படுகின்றன.

சில வேட்பாளர்கள் துணிச்சலுடன் பேருந்துகளிற்கூட தங்கள் படங்களை ஒட்டி விடுகின்றார்கள். இவை நடமாடும் விளம்பரங்கள் போலாகிறது என்ற மகிழ்ச்சி அவர்களுக்கு. தங்கள் படத்துடன் ஜனாதிபதியின் படத்தையோ. பஸில் அல்லது நாமலின் படங்களையோ சேர்த்து அச்சிட்டு ஒட்டுவது ஒருவிதத் தேர்தல் தந்திரமாகவே கொள்ளப்படுகிறது. ஒரு வேட்பாளர் தன் படத்துடன் தன் கட்சி சார்ந்த அல்லது தன் மனதுக்குப்பிடித்த அரசியற் புள்ளிகளின் படங்களை இணைப்பது தேர்தல் தவறாவதில்லை. ஆனால், அவற்றைப் பொது இடங்களில் காட்சிப்படுத்த முனைவதுதான் விதிமுறையை மீறிய செயலாகின்றது. இத்தகைய வேட்பாளர்களின் நம்பிக்கை என்னவென்றால், ஜனாதிபதியின் படத்தையோ பஸில், நாமல் ஆகியோரது படங்களையோ பொது இடங்களிலிருந்து அகற்ற எவரும் முன்வரப்போவதில்லை என்பதுதான்.

இது ஒரு பிழையான நடைமுறை. நாட்டுமக்களுக்குப் பொதுவான ஜனாதிபதிகூட தேர்தல் காலங்களில் கட்சி சார்ந்தவராகிவிடுவதும், ஜனாதிபதியின் உறவினர்கள் என்ற ஒரே தகுதி காரணமாக சிலர் முதன்மை பெறுவதும், இலங்கை ஜனநாயகத்தின் குளறுபடிகள் என்றே சொல்லவேண்டும். தற்போது நடைமுறையிலிருக்கும் அரசமைப்பு ஆளுங்கட்சி சார்பான தேர்தல் தில்லுமுல்லுகளுக்குத் தாராளமாக இடங்கொடுக்கின்றது.

1978இற்கு முந்தைய இலங்கையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு ஒரு பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டால் தேர்தல் இடம்பெற்று புதிய நாடாளுமன்றம் கூடும்வரை அவ்விடம் வெற்றிடமாகவே அமைந்திருந்தது. 1972 அரசமைப்பின் ஜனாதிபதியும் அதற்கு முந்தைய மகாதேசாதிபதிகளுமே அரசுக்குப் பொறுப்பாக இருந்தனர். பிரதம மந்திரி உட்பட அனைத்து மந்திரிகளும் அந்த இவ்விடைக் காலத்தில் அதிகாரமற்றவர்களாகவே காணப்பட்டனர்.

1972 அரசமைப்பில் ஜனாதிபதியும் அதற்கு முந்திய மகாதேசாதிபதிகளும், மக்கள் வாக்குகளைச் சார்ந்தவர்களாக இருந்ததில்லை. எனவே, அவர்கள் நேர்மையாகச் செயல்பட்டனர். எந்தக் கட்சி பெரும்பான்மை உறுப்பினர்களைப் பெறுகின்றதோ அக்கட்சியையே அரசு அமைக்க வரும் படி கூறத்தக்க துணிச்சல் அவர்களுக்கு இருந்தது. தேர்தல் அதிகாரிகளும் எவ்விதக் கட்டுப்பாடுகளுமின்றி சட்டத்தின் வழிநின்று பணிபுரியத்தக்க வாய்ப்புகள் இருந்தன.

ஆனால், இன்றைய ஆட்சி முறையிலோ நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுத் தேர்தல் அறிவிக்கப்பட்டாற் கூட ஜனாதிபதி அதிகாரம் மிக்கவராகவே காணப்படுகிறார். அவர் மக்களின் வாக்குகளைச் சார்ந்து பதவி பெறுவதாலும், ஒருகட்சி சார்பாக தேர்தலுக்கு வருவதாலும் அவர் எப்பொழுதும் தான்சார்ந்த கட்சிக்கு விசுவாசமாகவும், மக்களின் வாக்குகளில் கண் வைப்பவருமாகவே தேர்தல் காலங்களில் இயங்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகிறார்.

ஜனாதிபதி என்ற வகையில் ஒருவேளை அவர் பக்கச்சார்பின்றி நடக்க முற்படுவாரேயானால் அவர் சார்ந்திராத கட்சி ஒன்றுகூட அதிக நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றி ஆட்சிக்கு வரமுடியும். அவ்வாறு நேருமிடத்து, பதவியிலிருக்கும் ஜனாதிபதிக்கு இரண்டு தெரிவுகளே இருக்கின்றன. புதிய நாடாளுமன்றத்தை ஏற்று ஆட்சி நடத்த முயல்வது ஒன்று. ஆட்சியுடன் முரண்பட்டு அதனை இயங்கவிடாமற் செய்து ஒருவருடத்தின் பின் அரசமைப்பு ஏற்பாட்டின்படி ஆட்சியை நிராகரிப்பது மற்றொன்று.

தற்போதைய அரசமைப்பின் கீழ் தெரிவாகும் ஜனாதிபதிகள் எல்லோரும் ஒரே மாதிரியாகவே நடந்துகொள்ள விழைகிறார்கள். தான்சார்ந்த அரசியல்கட்சியையே எல்லாத் தேர்தல்களிலும் வெற்றிபெற வைப்பதற்கான காரியங்களில் இறங்குகிறார்கள். இதன் பிரகாரம் ஜனாதிபதி, தான் அதிகாரத்தில் இருக்கும்போது இடம்பெறும் எல்லாத் தேர்தல்களிலும், அவை நாடாளுமன்றத் தேர்தலாகவோ, உள்ளூராட்சி சபைத் தேர்தலாகவோ, மாகாணசபைத் தேர்தலாகவோ எதுவாக இருப்பினும் சாதாரண அரசியல்வாதியாக மாறித் தனது கட்சி வெல்வதற்கான ஏற்பாடுகளில் ஈடுபடுகிறார். மாகாணசபைத் தேர்தல்களிலும் பிரயோகிக்கப்படுகின்றன. அரசசார்புக் கட்சி மாகாணசபை களில் அவை வெல்வதற்காக ஜனாதிபதியும் அமைச்சர்களும் வியூகங்கள் வகுப்பதிலும் அவற்றைச் செயற் படுத்துவதிலும் நேரடியாகவே ஈடுபடுகிறார்கள். வடமாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று எதிர்கொள்ளும் பிரச்சினையும் இதுதான் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் எதிர்கொண்ட சிக்கலும் இதுதான்.

அரசசார்புக்கட்சி அமைப் பாளர்கள், நேற்றுவரை மக்களால் அறியப்படாது இருப்பினுங்கூட உடனடியாகப் பிரமுகர்களாக மாற்றம் பெறுகிறார்கள். தாம் வாழ்கின்ற பகுதி அரச இயந்திரத்தின் செயற்பாடுகளில் ஆதிக்கம் செலுத்தக்கூடியவர்களாகக் காணப்படுகிறார்கள். அக்கட்சி சார்ந்த வேட்பாளர்களும் இத்தகைய ஆள்களின் செல்லப்பிள்ளைகளாக இருந்து கொண்டு மக்கள்முன் தம்மை எல் லாம் செய்ய வல்லவர்கள்போல் காட்டிக்கொள்ளத் தொடங்குவார்கள். பதவி எதுவும் இல்லாமலேயே இவ்வளவு ஆற்றலுடன் இருப்பவர்கள் பதவிகள் பெற்றுக் கொண்டால் மக்களுக்கு எப்படியெப்படியெல்லாம் சேவை செய்வார்கள் என்று மக்களிடையே ஒரு பிரமிப்பை ஏற்படுத்த முனைகிறார்கள். தங்களையே அரசுபோல பாவித்துக்கொண்டு தலைகீழாக நடக்க முயல்கிறார்கள்.

### பொய்ப்பிரசாரம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பின்னால் செல்லும் தமிழ்மக்களின் தொகை இப்போது குறைவடைந்துவிட்டது என்றும், தமக்கு ஆதரவு அதிகரித்து வருகின்றது என்றும் அரசு பரப்புரை செய்யத் தொடங்கும். இதற்கு வடபகுதி வாக்காளர்கள் இடங்கொடுத்தால் தமிழர்களுக்கு குறைகள் ஏதும் இல்லை என்று அரசு சொல்வதை உலகம் ஏற்கவேண்டிய கட்டாயம் உருவாகும். தாங்கள் சொல்வதைக் கேட்டுத் தமிழர்கள் நடப்பார்கள் என இனவாத அமைச்சர்கள்கொண்டாடுவார்கள். இலங்கைத் தீவின் அனைத்துப் பகுதிகளும் சிங்களவருக்கே சொந்தம் என்று கொக்கரிப்பதை உண்மையாக்கி விடுவார்கள்.

### தமிழா சிங்களமா?

வடமாகாணசபைத் தேர்தல் களம் தமிழர்களுக்கும், சிங்கள இராச்சியத்துக்கும் இடையிலான ஒரு ஜனநாயகப் போராகவே நோக்கப் படுகிறது. சிங்கள இராச்சியம் வெற்றி பெறுமானால் தமிழர்கள் அடிமைப்பட்டு தன்னிலை இழந்து வாழ நேரிடும். தமிழர்கள் வெற்றிபெறு வார்களேயானால் தலைநிமிர்ந்து தன்னாட்சி நோக்கிய ஒரு பயணத்துக்கு வழி உண்டாகும். எங்கள் குழந்தைகளையாவது தாயகப்பூமியில் தலைநிமிர்ந்து வாழவைக்கலாம் என்ற தன்னம்பிக்கை ஏற்படும்.

வெற்றிலைக்கட்சிகாரர்கள் சொல்வது போல அவர்களுக்கு வாக்களித்தால் தமிழர்கள் எவருக்கும் நன்மை கிடைக்கப் போவதில்லை. கட்சி சார்பாக தேர்தலில் நின்று வென்றவர்களும், தோற்றவர்களும் வேண்டுமானால் அரசுக்கு எடுபிடிகளாக வேலை செய்து தமிழர்வாக்குகளைக் கவர்ந்து அரசின் பாதங்களில் வைத்து வணங்கியதற்காக அரசிடமிருந்து சலுகைகள் பெறலாம். ஆனால், தமிழர்களைப் பொறுத்தமட்டில் நிலம் கொள்ளைபோவதும், இனம் அழிவதையும் தவிர வேறெதுவும் நிகழப் போவதில்லை.

அரச சலுகைகளுக்காக அலைகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களாலோ அமைச்சர்களாலோ அவர்கள் சார்ந்த இனத்துக்கு எவ்வித நன்மையும் இதுவரை கிடைத்ததில்லை. ஓரிருவரைத் தவிர முஸ்லிம் நாடாளுமன்ற உறுப் பினர்கள் அனைவரும் தொடர்ந்தும் அமைச்சர்களாகவே இருந்து வருகிறார்கள். எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இது நிகழ்கிறது. ஆனால், இவர்களின் இணக்க அரசியலால் முஸ்லிம் மக்கள் ஏதாவது நன்மை அடைந்தார்களா? பள்ளிவாசல்கள் உடைக்கப்படுவதும், முஸ்லிம் வியாபார நிலையங்கள் தாக்கப்படுவதும்தானே இவர்களுக்கு பரிசாகக் கிடைக்கின்றது.

இலங்கையின் மிகப் பழைய கட்சியான தங்கள் கட்சியைச் சிங்கள மக்களிடமோ தமிழ் மக்களிடமோ கொண்டு செல்லத் தெரியாதவர்கள், கிடைத்த வாக்குகளை ஒன்று திரட்டி அமைச்சுப் பதவிக்காக அலைபவர்கள் எல்லோரும் தமிழ் மக்களுக்குப் புத்தி சொல்ல வந்துவிட்டார்கள். இடதுசாரிகள் என்ற போர்வையில் இனவாத அரசுக்கு வக்காலத்து வாங்குகின்றவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இனவாதக் கட்சி எனக் கூறத் தொடங்கியுள்ளார்கள். வெற்றிலையில் தேர்தலுக்கு நிற்கும் தமிழன் தேசியவாதி, வீட்டுச் சின்னத்தில் தேர்தலுக்கு நிற்பவன் இனவாதி. இதுதான் இவர்கள் சிந்தனை. தமிழ் மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டிய தருணம் இது. துப்பாக்கிக் குண்டுகளையும், பல்குழல் எறிகணை வீச்சுகளையும், வான் குண்டுப் பொழிவுகளையும் தமிழர்களுக்குப் பரிசாக தந்தவர்களுக்கு வாக்களிக்கலாமா என்பதை யோசிக்கவேண்டும். உயிர்ப்பறிப்பு, சிறையிலடைப்பு, தமிழின வதைப்பு என்ப வற்றை எமக்குத் தருகின்ற அரசுடன் எவ்வாறு இணங்கிப் போகலாம் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

தமிழர்களிடம் யானைப் பலம் இருக்கிறது. அதனை அவர்கள் ஜனநாயக வழியில் காட்ட இது ஒரு நல்ல சந்தர்ப்பம். அரச எடுபிடிகளின் பேச்சுக்குத் தமிழர்கள் மயங்கிப்போவார்களேயானால் அவர்கள் தமிழர்களைக் கோயில் யானைகளாக்கி புடைவைகளால் போர்த்துப் பிச்சை எடுப்பதற்குப் பழக்கக் காத்திருக்கிறார்கள். இது ஒவ்வொரு தமிழன் மனதிலும் இருக்க வேண்டிய தெளிவு.

# சாத்தானின் புதிய வேதம்

ஆதங்கன்

"நாட்டின் ஒற்றுமையைப் பேண வேண்டுமாயின் புதிய மதத் தலங்களை நிறுவுவதைத் தடை செய்ய வேண்டும். பள்ளிவாசல், விகாரை, கோயில்கள் போன்ற புதிய மதத் தலங்களை நிறுவ வேண்டிய அவசியம் எதுவும் இப்போது இல்லை. இருக்கும் மதத் தலங்களை பராமரித்தலே போதுமானது" இவ்வாறு பொன்னான வார்த்தைகளை உதிர்த்திருப்பவர் வேறு யாருமல்ல. பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர்.


முதன்முறையாக பொதுபல சேனா அமைப்பிலிருந்து ஒரு உருப்படியான வாக்கியம் அவர் வாயில் இருந்து புறப்பட்டிருக்கின்றது. ஏனெனில் உண்மையில் பொதுபல சேனாவின் நோக்கம் நாட்டில் உள்ள சிறுபான்மை இனத்தவரின் மதங்களை வீழ்த்தி இலங்கையை முற்றும் முழுதான பௌத்த நாடாக்குவதுதான். அதற்காகத்தான் மெல்ல மெல்ல முஸ்லிம்களின் பள்ளிவாசல் மீது கைவைக்கத் தொடங்கியிருக்கிறது பொதுபல சேனா.

பொதுபல சேனாவின் இந்த "சொறிதல்" விளையாட்டுக்கு பிரதான அனுசரணையாளராக விளங்குவது மாண்புமிகு மஹிந்த வாதிகள் தான். இலங்கை பல்லின, சர்வமத, ஜனநாயக நாடு என்று வாய்கிழியச் சொல்லிக் கொள்ளும் அரசு, இன்னொரு புறத்தில் மதம் என்ற வாளை கையில் ஏந்தியிருக்கும் பொதுபல சேனாவுக்கும் அடைக்கலம் கொடுத்து வருகிறது. இந்த அடைக்கலத்தின் உசாரில் தான் தம்புள்ள தொடக்கம் கிராண்ட்பாஸ் வரைக்குமான முஸ்லிம்களின் வழிபாட்டு இடங்கள் மீது தாம் நினைத்தபடி சொறிந்து வருகிறது பொதுபல சேனா. ஆரம்பத்தில் இது ஒரு தற்செயலான அசம்பாவிதங்கள் என்று எண்ணிய முஸ்லிம்களுக்கு, தம்மீது திட்டமிட்டே பொதுபல சேனா பாய்கின்றது என்ற விடயம் "ஹலால்" விடயத்தில்தான் முற்றுமுழுதாகத் தெரியவந்தது.

இஸ்லாமியர்களின் மரபுப்படி உணவுக்காகக் கொல்லப்படும் உயிரினங்களின் வாயில் அல்லாவை நினைந்து ஓதப்பட்ட நீரை விட்ட பின்னரே அவற்றை கொல்வார்கள். இதுவே ஹலாலுக்கான அடிப்படைத் தகுதி. அவ்வாறில்லாத இறைச்சி வகைகளை ஒருபோதும் முஸ்லிம்கள் உட்கொள்வதில்லை. ஆனால் முஸ்லிம்களின் அடிப்படை விடயத்தின்மீதே கைவைத்துவிட்டது பொதுபல சேனா. ஹலால் அடையாள முத்திரைக்காக பெருந்தொகையான பணத்தை கொடுக்க வேண்டியிருப்பதாக பொதுபலசேனா போர்க்கொடி தூக்கியது. ஒரு மதம் சார்ந்த இந்த விடயத்தை நடுநிலைமையோடே அரசு அணுகியிருக்க வேண்டும். ஆனால் அதனை விடுத்து ஹலாலுக்கு எதிராக பொதுபல சேனாவோடு கூட்டுச் சேர்ந்த அரசு இறுதியில் ஹலாலுக்கு தடையைக் கொண்டுவந்தது. இந்த வெற்றி பொதுபல சேனாவை இன்னமும் தீவிரத்தோடு செயற்பட உந்தித் தள்ளியது. இதன் விளைவாகவே இப்போது கிராண்ட்பாஸில் அமைந்துள்ள பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தி முஸ்லிம்களுக்கு ரம்ழான் பரிசைக் கொடுத்துள்ளது அந்த அமைப்பு. வெலிவேரியவில் தண்ணீர் கேட்ட மக்களை கொன்று குவித்ததற்காக எழக்கூடிய கண்டனப் பார்வைகளைத் திசைதிருப்பவே கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் தாக்குதல்களை தனது ஏவலாளிகளைக் கொண்டு அதிகாரம் நிறைவேற்றியுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் எழுகின்றன.

"உண்மையில் அதுவொரு பள்ளிவாசலே அல்ல. பார்ப்பதற்கு பள்ளிவாசல் மாதிரியா இருக்கிறது? அது ஒரு களஞ்சியமாகவே ஆரம்பத்தில் இருந்தது. அண்மையில் தான் அது வழிபாட்டு இடமாக மாறியிருக்க வேண்டும்" என்கிறார் பொதுபல சேனாவின் உறுப்பினர் ஒருவர். என்னதான் சாட்டுச் சொன்னாலும் அதுவொரு பள்ளிவாசல் என்று தெரிந்துகொண்டே தான் பொதுபல சேனா அதனைத் தாக்கியது என்பதை எவரும் மறுக்க முடியாது. குறித்த பள்ளிவாசலைத் தாக்கியவர்கள் யார் என்று அப்பட்டமாகத் தெரிந்தும் கூட 'இனந்தெரியாதோரின்' தாக்குதல் என்றே இன்றுவரையும் அடையாளப்படுத்தப்படுகிறது.

இந்த நிலையில்தான் எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்கின்ற கதையாக "நாட்டில் புதிய மதத் தலங்களை அமைப்பதே முரண்பாட்டுக்கு காரணம்" என்கின்ற ரீதியில் கருத்துச் சொல்லியிருக்கிறார் கலாகொட அத்தே ஞானசார தேரர். கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் மிக அண்மையில் அமைக்கப்பட்டதாலேயே அது தாக்கப்பட்டது என்ற செய்தியை கலாகொட தேரரின் இந்தக் கூற்று உறுதிப்படுத்துகிறது. உண்மையிலேயே கலாகொட தேரர் என்ன மனநிலையில் இந்தக் கூற்றை சொல்லியிருந்தாரோ தெரியவில்லை. ஆனாலும் அவரது கூற்றில் உண்மை ஒட்டியிருக்கத்தான் செய்கிறது. எனினும் அவரின் உபதேசத்தை முதலில் கடைப்பிடிக்க வேண்டியது முஸ்லிம்களோ, இந்துக்களோ அல்ல. பௌத்தர்கள்தான்.




போருக்குப் பின்னரான காலத்தில் தமிழர் தேசம் எங்கும் புதிது புதிதாக புத்தர் சிலைகள் முளைக்கத் தொடங்கியுள்ளன. முதலில் சிலைகள் வைக்கப்படும் இடங்கள் பின்னர் விகாரைகளாக விஸ்தரிக்கப்படுகின்றன. அதிலும் குறிப்பாக தமிழர்களின் ஆலயங்களுக்கு அருகில் விகாரைகளை நிறுவுவதில் அதீத ஆர்வம் காட்டப்படுகிறது. இது விகாரைகளைப் பிரபல்யபடுத்தவும் காலப்போக்கில் இந்து ஆலயங்களை விகாரைகளின் கட்டுப்பாட்டில் கொண்டுவரவும் உதவக் கூடும்.

தமிழ்க் கடவுள் என்று அழைக்கப்படும் முருகனின் முக்கியமான தலம் கதிர்காமம். இலங்கையில் இருந்து மட்டுமல்லாது இந்தியாவில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் கதிர்காமக் கந்தனைக் காணவருவதுண்டு. இந்த நிலையில்தான் கதிர்காமக் கந்தனுக்கு அருகில் உருப்பெற்ற விகாரை மெல்லமெல்ல பெருத்துக்கொண்டே போனது. இந்த பெருக்கம் கதிர்காமக் கந்தனைத் தாண்டியும் விரிந்தது. நாளடைவில் பௌத்தர்களின் கடவுளாகிப் போனார் கந்தன். அவரது பெயர் கூட "கதரகம தெய்யோ" என மாறிப் போனது. ஐயோ எனத் தலையில் அடித்துக் கொண்டனர் தமிழர்கள். எங்கு பார்த்தாலும் சிங்களம். கந்தன் கூட சிங்களம் பேசினால் தான் கதிர்காமத்தில் இருக்க வேண்டிய நிலைமை. கந்தன் மட்டுமல்லாமல் அருகில் இருந்த விஷ்ணு கூட பௌத்தராக மதம் மாறவேண்டிய கட்டாயம். இத்தகைய மத ஆக்கிரமிப்பின் விளைவாகவே இந்த வருடம் கதிர்காமக் கந்தனின் ஆடித் திருவிழா வழக்கத்துக்கு மாறாக காலம்தள்ளி கொண்டாடப்பட்டது. ஆயினும் காலாதிகாலமாக பாத யாத்திரையாக கதிர்காமத்துக்குச் செல்லும் யாழ்ப்பாணத்து யாத்திரீகர்கள், ஆடிவேல் நடைபெறும் காலப்பகுதியைக் கணித்து சென்றபோதும் அவர்களால் திருவிழாவைக் காண முடியாத துர்ப்பாக்கியம். ஏனெனில் கந்தனுக்கு எப்போது திருவிழா நடத்த வேண்டும் என்பதைக்கூட வழக்கத்துக்கு மாறாக மாற்றும் வல்லமை பௌத்தர்களின் கையில் வந்துவிட்டது.

கதிர்காமத்தை எப்படி பௌத்தம் விழுங்கிக் கொண்டதோ அதே பாணியிலேயே ஏனைய சிறுபான்மை இனத்தவர்களின் மதத் தலங்களையும் தின்பதற்கு பொதுபல சேனா என்ற பூதம் புறப்பட்டிருக்கிறது. அதனால்தான் ஆலயங்களை இலக்குவைத்து புத்தர் சிலைகள் இரவோடு இரவாக பிரசக்கப்படுகின்றன. வடக்கில் மட்டுமல்லாது கிழக்கிலும் இதேகதைதான். இத்தகைய மத ஆக்கிரமிப்பு நாளொரு விகாரையும் பொழுதொரு புத்தர் சிலையுமாக பரவிக் கொண்டேயிருக்கிறதே தவிர குறைந்தபாடாக இல்லை.

யாழ்ப்பாணத்திலும் சில மாதங்களுக்கு முன்னர் "எங்களின் சொந்த மண் யாழ்ப்பாணம் தான்" என்று சொல்லிக்கொண்டு வந்த சிங்கள மக்கள், உடனடியாகவே அரசின் அனுசரணையோடு நாவற்குழியில் குடியேற்றப்பட்டிருந்தனர். அவர்கள் தங்களது வீடுகளைக் கட்ட முன்னர் ஒரு விகாரையைக் கட்டியிருக்கிறார்கள். இத்தனைக்கும் அவர்களுக்கு யாழ்ப்பாணம் ஆரிய குளத்திலும், நயினாதீவிலும் மிகப்பெரிய வழிபாட்டுத் தலங்கள் இருக்கவே செய்கின்றன. இந்த நிலையில் நாவற்குழியில் தாங்கள் இருக்கவே இடமில்லாத நிலையிலும் விகாரையைக் கட்ட வேண்டிய அவசியம் என்னவென்று எவருக்கும் தெரியவில்லை. இந்த நிலையில் படைகளின் பாதுகாப்போடு இருக்கும் அந்தப் பகுதியில் கைக்குண்டு வீசப்பட்டதாகக் கதைகள் வெளிவந்தபோதுதான் அங்கு விகாரை இருக்கும் விடயம் வெளிச்சத்துக்கு வந்தது. சிங்களவர்களைத் தவிர வேறு எவரும் செல்லாத அந்தப் பகுதியில் யார்போய் கைக்குண்டை வீசப்போகிறார்கள்? சில வேளைகளில் புதிதாகக் கட்டப்பட்ட மதத்தலம் என்பதால், "ஜனநாயக" அமைப்பான பொதுபல சேனாதான் பள்ளிவாசல்களைத் தாக்கும் அதே உத்தியை நாவற்குழி விகாரை மீதும் மேற்கொண்டுள்ளதோ என்று நகைச்சுவையாக கேட்கத் தோன்றுகிறது.


ஆயுதப் போருக்குப் பின்னர் மத ரீதியான போரை அரசு முடுக்கி விட்டுள்ளது. எனினும் இந்தப் போரில் வெளிப்படையாகக் குதிக்காமல் பொதுபல சேனா என்ற பூதத்தின் பின்னர் மறைந்திருந்து சிறுபான்மை இனத்தோரின் மதங்களை வேட்டையாட அது முனைகிறது. ஏனெனில் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் அரசு தன் வேட்டைப் பற்களை வெளிப்படுத்த முடியாது. அப்படிச் செய்தால் சர்வதேசத்தின் கடுமையான பார்வையை இன்னமும் சம்பாதிக்க வேண்டியிருக்கும். எனவேதான் தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள பொதுபல சேனாவை அது பிரசவித்திருந்தது. இப்போது "புதிய வணக்கத் தலங்கள் நிறுவுவ்தே ஒற்றுமையின்மைக்கு மூல காரணம்" என்று பொதுபல சேனாவின் சாத்தான்கள் வேதம் ஓதத் தொடங்கியுள்ளன. இந்த வேதம் தம்மை நோக்கியல்லாமல் முஸ்லிம், தமிழ் மக்களை நோக்கியே ஓதப்பட்டு வருகிறது. "தமிழர்களினதும், முஸ்லிம்களினதும் வழிபாட்டுத் தலங்கள் இனி எந்தவொரு இடத்திலும் உருவாகக் கூடாது. ஆனால் விகாரைகள் மட்டும் எங்கு வேண்டுமானாலும் முளைக்கலாம். அதை யாரும் கேள்வி கேட்க முடியாது" இதுவே பேரினவாதிகளினதும், பொதுபல சேனாவினதும் குரல். பள்ளிவாசல்கள் மீது பாய்ந்துவரும் பொதுபல சேனா ஏதோ ஒரு சாட்டோடு இந்து ஆலயங்கள் மீதும் பாயக்கூடும். இப்போதும் ஒன்றும் கெட்டுவிடவில்லை. முஸ்லிம்களும், தமிழர்களும் இந்த விடயத்திலாவது ஒன்றிணைந்து குரல் கொடுப்பதன் மூலமே பொதுபல சேனாவை சங்கிலியில் கட்டி வைக்க முடியும். தவறினால் அதன் பாய்ச்சல் கூடிக் கொண்டே போகும்.

சூரியகாந்தி
உதயம் 18 08 2013 ஞாயிற்றுக்கிழமை

# ஐ.நாவுக்கு அதிகரிக்கும் அழுத்தங்கள்

சர்வதேசத்தின் கடும் அழுத்தங்களுக்கு இலக்காகியுள்ள இலங்கை அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான வழிமுறைகளை தேடிக் கொண்டிருக்கிறது. ஆயினும் அரசு அதிலிருந்து மீளமுடியாத வாறு அரசின் கீழ் செயற்படும் படைகளின் நடவடிக்கைகள் அமைந்துவிடுகின்றன.

● அதிரன்



இலங்கை மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறு ஐ.நாவுக்கு அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன. அண்மைக் காலமாக இந்த அழுத்தங்கள் மிகவும் வலுவடைந்து வருகின்றன. இலங்கையில் இடம்பெறும் மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்களை ஐ.நா. தொடர்ந்தும் வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பதாகவும். இவற்றுக்குக் காரணமான இலங்கை அரசு மீது நடவடிக்கைஎதுவும்எடுக்காமல்தொடர்ந்தும் தயவுதாட்சணியம்காட்டிவருவதாகவும் சர்வதேச நாடுகள் பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக இதுவரை இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுவிட்டன. நிறைவேற்றப்பட்ட இந்த இரண்டு தீர்மானங்களையும் இலங்கை அரசு இதுவரை நடைமுறைப்படுத்தியதாக இல்லை. அமெரிக்கா. பிரிட்டன். இந்தியா உட்பட பல்வேறு நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானங்களை ஒரு பொருட்டாகக் கூட எடுத்துக் கொள்ளாமல் இலங்கை அரசின் அடாவடி நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணமுள்ளன. பொதுமக்கள் மீதான அடக்குமுறை. தாக்குதல்கள். கடத்தல்கள். காணாமற் போதல்கள் என்பன இன்னும்இலங்கையில்தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. தமது கருத்துக்களை வெளிப்படையாக தெரிவிக்க முடியாமல் மக்கள் அடக்கப்படுகிறார்கள்- மிரட்டப்படுகிறார்கள்- கொல்லப்படுகிறார்கள். மக்களுக்கான கருத்துச் சுதந்திரம் அடியோடு மறுக்கப்படுகிறது. அவர்களுக்கான ஜனநாயக உரிமை மீறப்படுகிறது. அண்மையில் கிராண்ட்பாஸ் மற்றும் வெலிவேரிய பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்கள் இதற்கு நல்ல எடுத்துக் காட்டுக்கள்.

அரசின் அடாவடியையும் அராஜகத்தையும் கண்டிக்கும் மக்கள் உயிர் ஆபத்தை எதிர்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். அரசுமேற்கொள்ளும் செயற்பாடுகளை யாரும் விமர்சிக்கக் கூடாது. அவ்வாறு விமர்சித்தால் அவர்கள் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகள் என முத்திரையிடப் படுகிறார்கள். அவர்களது பாதுகாப்பு கேள்விக் குறியாக்கப்படுகிறது. இவ்வாறு இலங்கையில் பொதுமக்களுக்கான கருத்து வெளிப்பாட்டு உரிமை முற்றிலும் முடக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது என்பதே உண்மை.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட இரண்டு தீர்மானகளின் பின்னரும் இலங்கை அரசு திருந்தியதாக - வருந்தியதாக இல்லை. மாறாக தொடர்ந்தும் ஒரு அராஜக அரசியலை அது முன்னெடுத்து வருகின்றது.

இலங்கை அரசின் இவ்வாறான செயற்பாடுகளால் இலங்கை சர்வதேசத்தின் விமர்சனங்களுக்கும் கண்டனங்களுக்கு உள்ளாகவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே இலங்கை அரசு மீது சுமத்தப்பட்டுள்ள இறுதிப்போர் குற்றமீறல்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நீதியான - சுதந்திரமான விசாரணைகள் எதனையும் இலங்கை அரசு மேற்கொள்ளவில்லை. இந்த குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள படையினர் குறித்தோ அல்லது அதற்குப் பொறுப்பான அதிகாரிகள் குறித்தோ இலங்கை அரசு வெளிப்படைத் தன்மையுடன் நடந்து கொள்ளவில்லை. குற்ற விசாரணையை நடத்தி குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்குப் பதிலாக அவர்களை பாதுகாக்கும் செயற்பாடுகளிலேயே அரசு அதிகம் அக்கறை காட்டுகிறது. குறிப்பாக வன்னி இறுதிப் போரின் போது இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பில் நீதியான விசாரணை ஒன்றை மேற்கொள்ள இலங்கை அரசு தவறியதால் அந்த விவகாரம் இப்போது சர்வதேச கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இலங்கை அரசின் விசாரணைக் குழுக்கள் மீது நம்பிக்கையற்ற தன்மை ஏற்பட்டதால் இந்த போர்க் குற்ற மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை நடத்துமாறு உலக நாடுகள் பல கோரி வருகின்றன. இவ்வாறு சர்வதேசத்தின் கடும் அழுத்தங்களுக்கு இலக்காகியுள்ள இலங்கை அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான வழிமுறைகளை தேடிக் கொண்டிருக்கிறது. ஆயினும் அதிலிருந்து மீளமுடியாதவாறு அரசின் கீழ் செயற்படும் படைகளின் நடவடிக்கை அமைந்து வருகின்றன. கடந்த வாரம் வெலிவேரியாவில் ஜனநாயக முறையில் எதிர்ப்பினை வெளியிட்ட மக்களை அடித்தும் உதைத்தும் சுட்டும் அடக்கியிருக்கிறது இராணுவம். சட்டத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ள போதும் அதனையும் மீறி இந்த விடயத்தில் அநாவசிய மாகத் தலையிட்டு அடாவடி புரிந்தி ருக்கின்றனர் படையினர். இதில் மூன்று பேர் சுட்டுப் படுகொலை செய்யப் பட்டுள்ளார். பலர் படுகாயங்களுக்கு இலக்காகியுள்ளனர். இதுவரை காலமும் தமிழர்களை அடக்கியொ டுக்கி சண்டித்தனம் புரிந்த அரசு இப்போது அதே பாணியை தனது சொந்த இனமான பெரும்பான்மை இனத்தவர்கள் மீதும் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது.


அரசு தனக்குஎதிராக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களில் இருந்து மீள்வதற்கு இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை பயன்படுத்துவதற்கு எண்ணியுள்ளது. அந்த எண்ணத்துடனேயே வடக்குத் தேர்தலும் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை வருகைக்கும் அனுமதியளித்திருக்கிறது அரசு. எதிர்வரும் 24 ஆம் திகதி இலங்கை வரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை 31 ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருந்து பல்வேறு தரப்பினரையும் சந்தித்து பேச்சுக்களை நடத்தவுள்ளார். இலங்கை அரசு மீது சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அவர் தமது இலங்கைப்பயணத்தின்போது அதிக கவனம் செலுத்துவார் என்று தெரிவிக்கப் படுகிறது. அத்துடன் இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசு கொண்டுள்ள பங்கு பணி பற்றியும் அவர் விரிவாக ஆராய்வார் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கைப் பயணம் நெருங்கிவரும் நேரத்தில் இலங்கை அரசுக்கு மற்றொரு தலையிடி ஏற்பட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திருகோணமலை கடற்கரையில் வைத்து மாணவர்கள் ஐந்துபேர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் தமிழர்கள். இந்தச் சம்பவம் நடைபெற்று 7 ஆண்டுகள் கழிந்த பின்னர் இப்போது அதனை விசாரணை செய்வதாக அரசு அறிவித்துள்ளது. இதனடிப் படையில் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாகத் தெரிவித்து 12 விசேட அதிரடிப் படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆயினும் இலங்கை அரசு மேற்கொள்ளும் இந்த உள்ளக விசாரணையில் தனக்கு நம்பிக்கையில்லை என்றும் சர்வதேச விசாரணை ஒன்றே உண்மையைக் கண்டறிவதற்கான ஒரே வழி என்றும் தெரிவித்து படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் ஒருவரான ரஜிகர் என்பவரின் தந்தையான மருத்துவர் காசிப்பிள்ளை மனோகரன் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு முறைப்பாடு செய்யவுள்ளார். இது தொடர்பான மனு ஒன்றை அவர் சபைக்கு வழங்கவுள்ளார். உண்மையான கொலையாளிகளையும் மாணவர்களுக்கு என்ன நடந்தது என்பதையும் சர்வதேச விசாரணையின மூலமே கண்டறிய முடியும் என அவர் கூறுகிறார். எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் சபையின் அமர்வின் போது இந்த மனு தாக்கல் செய்யப்பட வுள்ளது. அதே அமர்வில் இலங்கை அரசுக்கு இன்னொரு ஆப்புக் காத்தி ருக்கிறது. இலங்கை வரும் நவநீதம் பிள்ளை இங்கு நிலைமைகளை ஆராய்ந்த பின்னர் அது தொடர்பான விசேட அறிவிப்பு ஒன்றையும் மனித உரிமைகள் சபை வெளியிடவுள்ளார். இதனால் இந்த அமர்வில் இலங்கைக்கு எதிராக மேலுமொரு கடுமையான தீர்மானம் கொண்டு வரக் கூடிய சாத்தியங்கள் உள்ளதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

இலங்கை அரசு மீது அதிகரித்து வரும் சர்வதேச அழுத்தங்களை சமாளிக்க முடியாமல் திணறுகிறார் ஜனாதிபதி. அவருடன் சேர்ந்திருக்கும் அமைச்சர் கள் பலர் ஐ.நா. அமைப்புகளையும் சர்வதேச நாடுகளையும் கடுமையா கச் சாடி கருத்துக்களை வெளியிடுகிறார்கள். இது சர்வதேசத்துக்கும் இலங்கைக்குமிடையிலான இடைவெளியை அதிகரிக்கும் நடவடிக்கையாகவே அமைந்துள்ளது.

இனிமேலாவது இந்த விடயத்தில் பொறுப்புணர்வுடனும் நிதானத்துடனும் செயற்பட்டு அழுத்தங்களிலிருந்தும் குற்றச்சாட்டுக்களிலிருந்தும் மீள்வதற்கு அரசு சரியான வழியை தேடா விட்டால் நிலைமை மோசமாகும்.

சந்திரசேகர ஆஷாத்




# தமிழ் மக்களின் தேசிய கடமை

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக முடிவெடுப்பது தமிழ் மக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புமா அல்லது அரசும் அதன் அடிவருடிகளுமா என்பதைத் தமிழ் மக்கள் ஆழ்ந்த பொறுப்புணர்வுடன் தீர்மானிக்க வேண்டும்.

30 வருடங்களாக இந்த நாட்டில் நிலவிய பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு விட்டது. போர்ச் சூழல் முற்றாகவே நீங்கி சமாதானமும் இனங்களுக்கிடையேயான நல்லிணக்கம் உருவாக்கப்பட்டுவிட்டது. போரால் அழிவடைந்த வடபகுதி வெகு வேகமாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. இலங்கையின் அரச தரப்பினரும் அவர்களின் ஆதரவாளர்களும் வடக்குக் கிழக்கில் எங்கு சென்றாலும் இதே கருத்தை மீண்டும் மீண்டும் மக்கள் மத்தியில் சொல்லி வருகிறார்கள். அதிலும் வடமாகாண சபைத் தேர்தல் அண்மித்துள்ள இவ்வேளையில் ஜனாதிபதி முதற்கொண்டு அமைச்சர்கள் வரை அடிக்கல் நாட்டு விழா, திறப்பு விழா, உதவிக் கொடுப்பனவுகள் வழங்கும் நிகழ்வுகள் அபிவிருத்திப் பணிகள் என வெவ்வேறு பெயர்களில் மக்கள் சந்திப்புக்களை நடத்தி மேற்படி கருத்துக்களை வலியுறுத்தி வருகின்றனர்.

இவற்றுக்குச் சார்பாக அரச அதிகாரிகளும் இதுவரை வடக்குக் கிழக்கின் அபிவிருத்திக்கு அரசு இருபத்தாறாயிரம் கோடி செலவு செய்துள்ளதாகவும் நாட்டின் ஏனைய பகுதிகளில் அபிவிருத்தி வளர்ச்சி வீதம் 8.3 வீதமாக இருக்கும்போது வடக்கில் 23 வீதமாக இருப்பதாகவும் புள்ளி விவரங்களை வெளியிட்டு வருகின்றனர்.

இவையெல்லாம் கேட்கும்போது காதுகளை மட்டுமன்றி மனதையும் குளிர வைக்கும் இனிமையான வார்த்தைகள். இங்குள்ள யதார்த்த நிலைமையைச் சற்று ஆழமாகப் பார்க்கும் எவரும் இந்த வார்த்தைகளின் போலித்தன்மையைப் புரிந்து கொள்வார்கள். எனினும் அரசு அகலிக்கப்படும் வீதிகளாலும் உயரமாகக் கட்டி எழுப்பப்படும் கட்டடங்களாலும் மக்களை ஏமாற்றி இதுதான் அபிவிருத்தி எனவும் உண்மையான சமாதானம் எனவும் நம்பவைக்க முயல்கிறது.

அரசின் அடிவருடிகளாக அரசியல் நடத்தும் ஒரு சில சுயநல அரசியல்வாதிகளும் ஒரு மாயையான விம்பத்தை மக்கள் முன் காட்டி மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளையும் உணர்வுகளையும் மழுங்கடிக்கவும் திசைதிருப்பவும் முயன்று வருகின்றனர்.

அரச தரப்பும் அதன் ஆதரவு சக்திகளும் தாங்கள் வழமையை விட அதிகமான ஆசனங்களைப் பெறும் நோக்கத்துடன் அதாவது வடபகுதியில் அரசுக்கு ஆதரவு பெருகி வருகிறது என்ற ஒரு தோற்றப்பாட்டை வடக்கு மாகாண சபைத் தேர்தல் மூலம் ஏற்படுத்துவதற்காக இவ்வாறு பல உத்தியான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

அதைவிட வாகனங்கள், நிர்வாக முறைமைகள் என அரசவளங்களைத் தமது தேர்தல் தேவைகளுக்குப் பயன்படுத்துவது தேர்தல் பணிகளில் அமைச்சு, நாடாளுமன்ற உறுப்பினர் அதிகாரங்களைப் பிரயோகிப்பது இராணுவத்தினரின் சில தலையீடுகள், மிரட்டல்கள் எனப் பல்வேறு முறைகேடுகளும் அரச தரப்பால் பிரயோகிக்கப்படும். கபே, பவ்ரல், சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் எனப் பலரும் தேர்தல் விதிகள் மீறப்படுதல் தொடர்பான முறைப்பாடுகளைச் செய்தாலும் கூட அவை பட்டியலிடப்பட்டு பத்திரிகைகளில் வெளிவருவதுடன் முடிந்துவிடும். தேர்தல் முடிவுகளில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை. வன்முறைகள், பணப்பரிமாற்றம், விலை பேசப்படல் என்பனவும் தாராளமாக இடம்பெறலாம். எப்படியிருப்பினும் அரச தரப்பும் அதன் ஆதரவுச் சக்திகளும் எவ்விதத்திலும் இந்தத் தேர்தலில் வெற்றி பெற குறைந்த பட்சம் அதிகபடியான ஆசனங்களை எடுக்கச் சகலவிதமான முறைகேடுகள் உட்படப் பல பகீரத முயற்சிகளில் இறங்குவார்கள்.

இங்கேதான் வடக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு மிகவும் பெரிய பொறுப்பு உண்டு. இந்தத் தேர்தலானது இரு எதிர்த்தரப்புகளுக்கிடையே இடம்பெறும் போட்டியில் ஏதோ ஒரு தரப்பு வெற்றி பெறுவது என்ற எல்லையுடன் நின்றுவிடப் போவதில்லை என்பதை நாம் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்றால் தமிழ் மக்கள் தமது அடிப்படை உரிமைகளை எந்தக் காரணம் கொண்டும் விட்டுக்கொடுக்கத் தயாரில்லை என்பதையும் எமது சுயநிர்ணய உரிமை தொடர்பாகவும் எம்மீது திணிக்கப்படும் ஒடுக்குமுறைகளிலிருந்து விடுபடுவது தொடர்பாகவும் நாம் உறுதியான நிலைப்பாட்டில் உள்ளோம் என்பதை அரசுக்கு மட்டுமன்றி சர்வதேசத்துக்கும் பிரகடனம் செய்வ தாக அமையும்.

இந்தத் தேர்தலில் அரச தரப்பு வெற்றி பெறுமானால் தமிழ் மக்கள் அரசு எம்மீது மேற்கொள்ளும் ஒடுக்கு முறைகளை ஏற்றுக் கொள்கிறோம் என்பதுடன் அரசின் தமிழ் மக்கள் தொடர்பான நடவடிக்கைகளை ஆதரிக்கிறோம் என்றும் அர்த்த மாகிவிடும். அதன் அடிப்படையில் தான் விரும்பும் வகையில் மேலும் மேலும் எம்மை அடிமைப்படுத்தவும் எங்கள் மீதான சர்வதேச அக்கறை குறைவடையவும் நேரிடும். அதாவது எங்கள் எந்தப் பிரச்சினையையும் சர்வதேசம் அரசின் மூலமே அணுகும் நிலை உருவாகும். இதை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியுமா?

கடந்த பொதுத் தேர்தலின் போது வடக்குக் கிழக்கில் மிக அதிகப்படியான ஆசனங்களை வென்ற காரணத்தால் தான் தமிழ் மக்கள் பிரச்சினைகள் தொடர்பாக அரசோ, சர்வதேசமோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அணுகும் நிலை நிலவுகிறது. அதிக பிரதேச சபைகளைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றிய காரணத்தினால்தான் அவற்றைத் தமிழ் மக்களுக்கு விரோதமாகப் பயன்படுத்த முடியாதுள்ளது. எனவே இந்த வடமாகாண சபைத் தேர்தலில் ஒரு ஆசனம் கூட எதிர்த்தரப்புக்கு கிடைக்காத வண்ணம் முழு ஆசனங்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெல்ல வைத்தால் அதுவே ஒரு மாபெரும் சக்தியாக எழுச்சிபெறும். விகிதாசாரத் தேர்தலில் அது அவ்வளவு இலகுவானதல்ல. எனினும் மக்கள் அப்படியொரு முடிவெடுத்தால் அதுவும் கூட சாத்தியமே.

அதாவது தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக முடிவெடுப்பது தமிழ் மக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புமா அல்லது அரசும் அதன் அடிவருடிகளுமா என்பதைத் தமிழ் மக்கள் ஆழ்ந்த பொறுப்புணர்வுடன் தீர்மானிக்க வேண்டும். அதே வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இன்னுமொரு பெரும் பொறுப்பு உண்டு.

ஞாயிறு காரம்

60 ஆண்டு கால உரிமைப் போராட்டத்தில் ஏறக்குறைய 2 லட்சம் மக்களும் நாற்பதினாயிரத்துக்கு மேற்பட்ட போராளிகளும் ஐந்நூறுக்கு மேற்பட்ட கரும்புலிகளும் தங்கள் உயிர்களை அர்ப்பணித்துள்ளனர். ஏராளமானோர் தங்கள் உடலுறுப்புக்களை இழந்துள்ளனர். கோடிக் கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டன.

எமது வரலாறு இரத்தமும் வியர்வையும் கண்ணீரும் கலந்த தியாக வரலாறு. அற்புதங்களையும் வெற்றிகளையும் ஈட்டிய வீர வரலாறு.

அந்த வரலாற்றை முன்னெடுத்துத் தொடரும் பெரும் பொறுப்பு இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே உண்டு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று அதிகாரத்தைக் கைப்பற்றுவதையே இலட்சியமாகக் கொண்ட ஓர் அமைப்பல்ல.

ஆனால் தேர்தல்கள் எமது உரிமைப் போராட்டத்தில் ஓர் ஆயுதம் மட்டுமே. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இலட்சிய உறுதியும் உருக்குப் போன்ற ஐக்கியமும் எமது பிரதான பலமாகும். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்வது வடமாகாண முதலமைச்சர் வேட்பாளரைத் தெரிவு செய்வது வேட்பாளர்களைத் தெரிவு செய்வது போன்ற விடயங்களில் ஏற்பட்ட முரண்பாடுகளும் சர்ச்சைகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஐக்கியம் தொடர்பான நம்பிக்கையீனத்தையும் குழப்பங்களையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தக் கூடியவை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. குறிப்பாக முதலமைச்சர் தேர்வின் போது தமிழரசுக் கட்சியின் ஒரு கிளை விடுத்த பத்திரிகை அறிக்கை பொறுப்பற்றதும் எமது உரிமைப் போராட்டத்தை பலவீனப்படுத்தும் வகையிலானது என்பதை நாம் மறக்கக் கூடாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதிவு தொடர்பாகவும் வெளிவந்த கருத்துக்கள் ஆரோக்கியமானவையல்ல.

ஒரு கூட்டமைப்புக்குள் முரண்பாடுகள் எழுவது இயற்கை. அவை நீண்ட விவாதங்களினூடாகப் பொதுக் கொள்கையின் அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டியவை. அவை சந்திக்கு வருவது அநாகரீகம் மட்டுமல்ல கூட்டமைப்பு தொடர்பான நம்பிக்கையைப் பலவீனப்படுத்தக் கூடியவை. வேட்பாளர்கள் தெரிவின்போது ஏற்பட்ட சில முரண்பாடுகளின் பிரதிபலிப்பு தேர்தல் பிரசாரங்களின் போதும் வெளிப்படுவது மன வருத்தத்துக்குரியதாகும்.

எப்போது ஒருவர் தனது கட்சியின் நலனைக் கூட்டமைப்பின் நலனுக்கும் எமது உரிமைப் போராட்டத்தின் நலனுக்கும் மேலாகக் கருத ஆரம்பிக்கிறாரோ அப்போதே தோல்விகளின் கதவுகளும் திறந்துவிடுகின்றன. எனினும் முதலமைச்சர் வேட்பாளர் தெரிவு, ஏனைய வேட்பாளர்கள் தெரிவு என்பவற்றில் கட்டப்பட்ட முடிவுகள், நம்பிக்கையூட்டும் வகையில் அமைந்துள்ளமை ஒரு நல்ல அம்சமாகும். எனவே தமிழ் மக்கள் தமது தேசியக் கடமையை உணர்ந்து செயற்பட வேண்டிய அதே வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தன் பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும் என்பதே இன்றைய பிரதான தேவையாகும்.

# ஷரபோவா அதிர்ச்சித் தோல்வி





வெஸ்ட்டேர்ன் அன்ட் சதர்ன் பகிரங்க ரென்னிஸ் தொடரில் இருந்து முன்னணி ரென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா அதிர்ச்சித் தோல்வியுற்று வெளியேறியுள்ளார்.

அமெரிக்க சின்சின்னாட்டி நகரில் வெஸ்ட்டேர்ன் அன்ட் சதர்ன் பகிரங்க ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது. அதில் பெண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் உலகின் 3ஆம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் மரியா ஷரபோவா, 17ஆம் நிலை வீராங்கனையான அமெரிக்க வீராங்கனை ஸ்லோன் ஸ்டீபனைச் சந்தித்தார்.

சிறப்பான ஆட்டத்தை ஆரம்பித்த ஷரபோவா முதலாவது செற்றில் நன்றாக விளையாடினார். பின்னர் காலில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாக அவர் சரியாக விளையாடாததால் இறுதியில் ஸ்லோன் ஸ்டீபனிடம் 2:6, 7:6, 6:3 என்ற செற் கணக்கில் தோல்வியைத் தழுவினார்.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட மரியா ஷரபோவா இந்த ஆட்டத்தில் தோல்வியுற்று வெளியேறியமை ரசிகர்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## உலக தடகளப் போட்டிகள்

# தங்கம் வென்றார் ஹெப்பர்னன்



உலக தடகள சம்பியன்சிப் தொடரில் ஆடவருக்கான 50 கிலோமீற்றர் நடைப் போட்டியில் அயர்லாந்து வீரர் ரோபர்ட் ஹெப்பர்னன் தங்கம் வென்றார்.

மொஸ்கோவில் 14ஆவது உலக தடகள சம்பியன்சிப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. அதில் நடைபெற்ற ஆடவருக்கான நடைப் போட்டியிலேயே ரோபர்ட் ஹெப்பர்னன் தங்கம் வென்றார். போட்டியில் 10ஆவது கிலோமீற்றர் வரை ரஷியாவின் மிகைல் ரைஸா ஆதிக்கம் செலுத்தினார். எனினும் அதன்பின்னர் அவரைப் பின் தள்ளிய ஹெப்பர்னன். அதன்பின்னர் தொடர்ந்து வேகமாக இலக்கை நோக்கி முன்னேறினார். 3 மணி நேரம், 37 நிமிடம், 56 விநாடிகளில் இலக்கை எட்டி ஹெப்பர்னன் தங்கம் வென்றார்.

இதன்மூலம் உலக தடகளப் போட்டியில் சம்பியன் பட்டம் (தங்கப் பதக்கம்) வென்ற 3ஆவது அயர்லாந்து வீரர் என்ற பெருமையை ஹெப்பர்னன் பெற்றுள்ளார்.

# ஓய்வு பெற்றார் பர்டோலி



விம்பிள்டன் சம்பியன் மரியன் பர்டோலி காயம் காரணமாக சர்வதேச ரென்னிஸ் அரங்கில் இருந்து திடீரென ஓய்வு பெற்றுள்ளார்.

பிரான்ஸ் ரென்னிஸ் வீராங்கனை மரியன் பர்டோலி, ரென்னிஸ் தரவரிசையில் 7ஆவது இடத்திலுள்ளார். கடந்த 13 ஆண்டுகளாக சர்வதேச ரென்னிஸ் போட்டிகளில் பங்கேற்று வந்ததுடன், இதுவரை சுமார் 200 கோடி ரூபா வரை பரிசுப் பணம் வென்றதுடன் அண்மையில் தனது முதல் கிராண்ட்ஸ்லாம் (விம்பிள்டன்) பட்டத்தையும் வென்றார்.

அதன்பின்னர் அடிவயிற்று தசையில் ஏற்பட்ட காயம் காரணமாக பல தொடர்களில் பங்கேற்கவில்லை. கடந்த ஜுலை மாதம் முதல் 3 ஆட்டங்களில் தான் விளையாடினார். கடந்த வாரம் டொரன்டோ தொடரின் முதல் ஆட்டத்தில் வென்ற இவர், அடுத்து 33ஆவது இடத்திலுள்ள சுலோவாக்கியாவின் மக்டெலினாவிடம் தோற்றார்.

இந்நிலையில், திடீரென சர்வதேச டென்னிஸ் அரங்கில் இருந்து விடைபெறுவதாக அறிவித்தள்ளார் பர்டோலி.

இதுகுறித்து பர்டோலி கருத்துத் தெரிவித்தபோது,

சர்வதேச ரென்னிஸ் ஆட்டங்களில் நீண்ட நாள்களாகப் பங்கேற்று விட்டேன். ஆரம்பத்தில் இருந்தே பல்வேறு காயங்களால் அவதிப்பட்டேன். முடிவடைந்த விம்பிள்டன் தொடரின் போதே விலகும் முடிவில் இருந்தேன். ஆனால் விம்பிள்டனை ஒருவாறு சமாளித்து விட்டேன்.

ஆனால், இப்போது அப்படி எல்லாம் சமாளிக்க முடியாது. ஏனெனில், களத்தில் இறங்கி விளையாட ஆரம்பித்து 45 நிமிடம் அல்லது ஒரு மணி நேரத்தில், உடல் முழுவதும் வலி ஏற்பட்டு விடுகிறது. குதிகாலும் கடுமையான தொல்லை தருகிறது. இதனால், போட்டி முடிந்த பின், சரியான முறையில் நடக்கக்கூட முடியாது. அதனால் தான் ஓய்வு பெறுவது என, கடினமான முடிவை எடுத்தேன். இதற்கான சரியான தருணம் இது தான் என்று நினைக்கிறேன். என்று தெரிவித்துள்ளார்.



# வென்றது ஆர்ஜென்ரீனா

இத்தாலி அணிக்கும் ஆர்ஜென்ரீனா அணிக்கும் இடையே இடம்பெற்ற நட்பு ரீதியிலான உதைபந்தாட்டத்தில் ஆர்ஜென்ரீனா வெற்றிபெற்றது.

இத்தாலியின் தலைநகர் ரோமில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இடைவேளைக்கு முன்னர் ஒரு கோலைப் பெற்றுக் கொண்ட ஆர்ஜென்ரீனா முன்னிலை வகித்தது. இடைவேளையின் பின்னரும் கோல் ஒன்றைப் பெற்ற அந்த அணி தனது வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்டது.

பதிலடி கொடுக்கும் இத்தாலியின் முயற்சி பயனளிக்காத நிலையில் 2:1 என்ற கோல் கணக்கில் இத்தாலியை வீழ்த்தியது ஆர்ஜென்ரீனா.

# கபில்தேவின் கனவு அணி அதற்கும் தலைவர் டோனி

இந்தியாவின் ஒருநாள் கனவு அணியின் தலைவராக மகேந்திர சிங் டோனி தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் கபில்தேவால் உருவாக்கப்பட்ட இந்தக் கனவு அணியில் 983ல் உலகக் கிண்ணம் வென்ற அணியில் இடம் பெற்ற ஒருவர் கூட இடம்பெறவில்லை.

இந்தியாவுக்கு உலகக் கிண்ணத்தை முதலாவதாகப் (1983) பெற்றுத் தந்தவர் கபில்தேவ். அவர் அனைத்து நேரங்களிலும் சிறந்து விளங்கும் இந்திய ஒருநாள் கனவு அணி ஒன்றைத் தெரிவு செய்துள்ளார்.

அந்த அணிக்கு தலைவராக மகேந்திர சிங் டோனி இடம்பெற்றுள்ள தோடு, சூதாட்டச் சர்ச்சையில் சிக்கிய முகமது அஸாருக்கும் இடம் கிடைத்துள்ளது.

இதுகுறித்து கபில்தேவ் தெரிவித்ததாவது,

"எனது சிறந்த இந்திய அணித் தெரிவு இது தான் என்று நினைக்கிறேன். 1983 ஆம் ஆண்டு உலகக் கிண்ணம் வென்ற போது இருந்த ஒருவர் கூட இந்த அணியில் இல்லையே என்று பலர் எதிர்ப்பு தெரிவிக்கலாம். ஆனால் இது எனது தனிப்பட்ட முடிவு.

இந்த அணியை தேர்வு செய்தது நான் தான். இதில் என்னை நானே எப்படி சேர்த்துக் கொள்ள முடியும். நாங்கள் 1983ஆம் ஆண்டு உலகக் கிண்ணம் வென்றாலும், மேற்கிந்திய தீவுகள் அணி தான் அப்போது சிறந்த அணி. அன்றைய தினம் நாங்கள் நம்பிக்கையுடன் செயற்பட்டோம். அதனால் வெற்றி கிடைத்தது அவ்வளவுதான்.

ஆனால், இங்கிலாந்தில் சம்பியன்ஸ் தொடர் வென்ற டோனி தலைமையிலான அணிதான் இந்திய கிரிக்கெட் வரலாற்றில் சிறந்த அணி. சிறப்பான களத்தடுப்பாளர்களை கொண்ட இதுபோன்ற இந்திய அணியை, இதற்கு முன் ஒருபோதும் பார்த்தது இல்லை." என்று தெரிவித்துள்ளார்.

கபில்தேவ் தெரிவு செய்துள்ள அணியின் விவரம்:

டோனி (அணித் தலைவர்), சச்சின், கங்குலி, சேவக், முகமது அசார், யுவராஜ் சிங், விராத் கோஹ்லி, கும்ளே, ஹர்பஜன் சிங், ஸ்ரீநாத், ஜாகிர் கான். 12வது வீரர்: ரவிந்திர ஜடேஜா.

# மெட்ராஸ் கபே:

## எரிகிறது தமிழகம்

— ஆதங்கன்



கலை வடிவங்கள் மீதான சர்ச்சைகள் அண்மைக் காலமாக என்றுமில்லாத வகையில் அதிகரித்துள்ளன. அதுவும் சினிமா மீதான நுணுக்கமான பார்வைகள், மிகச் சாதாரணமான விடயத்தைக் கூட பூதாகரமாக்கி, தேவையற்ற பிரச்சிகைகளை தோற்றுவிக்கின்றன. விஸ்வரூபம், தலைவா போன்ற படங்களை உரிய திகதியில் வெளியிட விடாமல் செய்ததற்கு இத்தகைய முட்டையில் மயிர் பிடுங்கும் தேவையற்ற கண்டுபிடிப்புகளே காரணம். தமிழக அரசுக்கு எதிரான மறைமுகமான கருத்துகளை இவ்விரு திரைப்படங்களும் கொண்டிருந்ததாக ஆட்சியாளர்கள் சந்தேகப்பட்டதன் விளைவாகவே தடை போடப்பட்டது. உண்மையில் குறித்த இரு படங்களும் ஆட்சியாளர்கள் சொன்னது போன்று சமூக அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையிலான தாக்கு வன்மை கொண்ட படங்கள் அல்ல. மாறாக அதிகளவு வன்முறைகளை உள்ளடக்கிய வழமையான மசாலா படங்கள் தான்.

நூல் போகும் இடத்தை பார்க்கும் தமிழக மற்றும் இந்திய மத்திய ஆட்சியாளர்கள் வால் போகும் இடத்தை பார்க்க மறுக்கிறார்கள் என்பதே யதார்த்தம். ஏனெனில் சாதாரண திரைப்படங்களை ஆபத்தானவை என்று அந்தரப்படும் ஆட்சியாளர்கள் உண்மையிலேயே ஒரு இனத்தின் கௌரவத்தையும் அமைதியையும் கெடுக்கும் வகையில் வெளிவரக்கூடிய படைப்புகள் பற்றி எந்தவித அக்கறையும் காட்டுவதில்லை. இந்த மாதம் 23 ஆம் திகதி வெளியாகவுள்ள" மெட்ராஸ் கபே" திரைப்படம் வெளியாவதற்கு முன்னரே சலசலப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

90 களில் இலங்கையில் நடப்பது போன்று இந்தப் படம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்திய புலனாய்வுத் துறையான 'றோ' அதிகாரியாகவரும் ஜோன் ஆபிரகாம், இலங்கையிலுள்ள போராளிக்குழு ஒன்றுக்குள் ஊடுருவி அவர்களின் தாக்குதல் இரகசியம் ஒன்றை அறிந்து, அதனை முறியடிப்பதுதான் மெட்ராஸ்கபே திரைப்படத்தின் கதை. கிட்டத்தட்ட ஜேம்ஸ் பொண்ட் படப் பாணியில் அமைந்துள்ள இந்த படத்தின் 'ட்ரெய்லர்' வெளியான போதுதான் சர்ச்சை வெடித்தது. ஏனெனில், விடுதலைப் புலிகளை அதி கொடூரமான தீவிரவாதக் கும்பல் போன்று சித்திரிக்கும் காட்சிகள் அந்த 'ட்ரெய்லரில்' இடம்பெற்றிருந்தன.

தமிழர்களைக் கொச்சைப்படுத்தும் இந்தப் படத்தை உடனடியாகத் தடைசெய்ய வேண்டும் என்று நாம் தமிழர் இயக்கம் போராட்டத்தில் குதித்தது. கூடவே பாட்டாளி மக்கள் கட்சியும் இந்தப் படத்தை தமிழகத்தில் திரையிடவே கூடாது என்று களத்தில் இறங்கியது.

"இந்தப் படம் இலங்கையில் அதிக திரையரங்குகளில் காட்சிப்படுத்த இலங்கை அரசு ஆர்வம் காட்டுகிறது. இதிலிருந்தே இந்தப் படம் விடுதலைப்புலிகளைக் கொச்சைப்படுத்த வென்றே எடுக்கப்பட்டது என்பது புலனாகிறது. அத்தோடு, மெட்ராஸ்கபே படத்தைத் தயாரிக்க இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ரகசியமாக நிதியுதவி செய்துள்ளார் என்றும் எங்களுக்குத் தெரியவந்துள்ளது" என்று நாம் தமிழர் கட்சியினர் தெரிவித்துள்ளனர். ஆயினும் "மெட்ராஸ்கபே படத்துக்கு எவரும் நிதியுதவி செய்யவில்லை என்னுடைய சொந்தப் பணத்தில் தான் இந்தப் படத்தை எடுத்தேன்" என்கிறார் படத்தின் தயாரிப்பாளரும் நாயகனுமான ஜோன் ஆபிரகாம். ஆனாலும் சர்ச்சைகளும் போராட்டங்களும் இன்னமும் நீள்கின்றன. போராட்டங்கள் உச்சத்தை அடைந்தால் வேறுவழியின்றி இந்தப் படம் தமிழில் வெளியாகாமல் போகலாம்.

# படம்பார்த்துவிட்டுப் பேசுங்கள்

## மெட்ராஸ் கபே இயக்குநருடன் ஒரு சந்திப்பு

ரேணுபிரேம்



இயக்குநர் சுயித் சிர்கார் எடுத்த 'மெட்டாரஸ் கபே' படம் பலத்த சர்ச்சைக்குள் சிக்கிக் கொண்டுள்ளது. எப்போதும் சர்ச்சைக்குரியபடங்களைஎடுப்பவர்தான் சிர்கார். விந்து தானம் பற்றி கடந்த ஆண்டு அவர் எடுத்த படம் பலத்த விமர்சனத்தை எதிர்கொண்டது.

'மெட்ராஸ் கபே'யில் ஜோன் ஆபிரகாம் மற்றும் நர்கிஸ் பாகிரி நடித்திருக்கிறார்கள். இலங்கையில் இந்திய இராணுவம் இருந்த காலப் பகுதியை ஒட்டிய கதைக் களத்தில் படம் நகர்கின்றது. தமிழக அரசியல்வாதிகள் பற்றியும் விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதப் போர் பற்றியும் கடுமையான விமர்சனங்களைப் படம் முன்வைக்கிறது என்று தகவல்கள் வெளியானதால் படத்தைத் தடை செய்ய வேண்டும் என்று தமிழகத்தில் குரல்கள் எழுப்பப்படுகின்றன.

தனது படம் குறித்து எம்முடன் பேசினார் சிர்கார்.

*கே: நீண்ட காலத்துக்கு முன்னரே இந்தப் படத்தை எடுக்க விரும்பினீர்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். இவ்வளவு கால இடைவெளியில் ஆரம்பக் கதையில் மாற்றங்கள் செய்திருக்கிறீர்களா?*

ப: இல்லை. பெரியளவில் மாற்றங்கள் ஏதுமில்லை. இந்தப் படத்தின் கதை 80களின் பிற்பகுதியிலும் 90களின் ஆரம்பத்திலும் நடப்பது. படத்தின் எழுத்துருவைத் தயாரிப்பதற்கு மிக நீண்ட காலம் எடுத்தது. இதில் தொடர்புபட்டுள்ள உணர்வுபூர்வ மான விடயங்களை எனக்குத் தெரியும். அதனால்தான் நீண்ட காலம் தேவைப்பட்டது. போர் மற்றும் அது மனித வாழ்க்கை யில் ஏற்படுத்தும் மாற்றங்களில்தான் நான் கைவைக்கிறேன் என்பது எனக்கு நன்கு தெரிந்தே இருந்தது. எனவேதான் கிட்டத்தட்ட ஆறு முதல் ஏழு ஆண்டுகள் எடுத்தது எழுத்துருவைத் தயாரிக்க.

*கே: யாழ்ப்பாணத்தையும் இலங்கையின் பெரும்பாலான உள்நாட்டுப் பகுதிகளையும் நீங்கள் இந்தியாவில் மீண்டும் உருவாக்கி இருக்கிறீர்கள். அந்த அனுபவம் எப்படிப்பட்டது?*

ப: அது நிச்சயம் மிகச் சவாலானதுதான். பிரச்சினை இடங்களை மீள உருவாக்குவது அல்ல. போரை மீண்டும் கொண்டுவருவதுதான். நடிகர்களை அந்தக் களத்துக்குள், சூழலுக்குள் கொண்டு செல்வது என்பது மிகமிகச் சிக்கலானதாக இருந்தது. அவர்கள் ஆபத்தை, அந்த மக்களின் கையறு நிலையை உணரவேண்டியவர்களாக இருந்தனர். அப்படிப்பட்ட ஒரு கள நிலையில் இலங்கை மக்கள் என்ன உணர்வுகளை வெளிப்படுத்தியிருப்பார்கள் என்பதைக் கொண்டுவரவேண்டி இருந்தது. படத்தில் இவைதான் முக்கியமான பாகங்கள்.

இதையெல்லாம் இலங்கையில் படமாக்க முடியாது என்பது எமக்குத் தெரியும். எனவேதான் பெரும்பாலான காட்சிகளைத் தமிழ் நாட்டிலும் கேரளாவிலும் படமாக்கினோம். அவற்றைப் போர்க் காட்சிகளுடன் பொருத்தினோம். படத்தின் இரண்டாவது பாகம் இந்தியாவில் நடப்பது. அதில் அரசியல்தான் அதிகமாகப் பேசப்படுகின்றது.

*கே: இந்த மாதிரி உணர்வுபூர்வமான விடயங்களைப் படமாக்கும்போது எத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவேண்டி இருக்கிறது?*

ப: நிச்சயமாக முன்னெச்சரிக்கை தேவைப்படுகிறது. நான் எனது நாட்டில் அக்கறை உள்ள ஒரு குடிமகன். அத்துடன், சமூகம் மீது அக்கறையுள்ள படத் தயாரிப்பாளரும்கூட. நான் காஷ்மீர் பற்றிப் படம் எடுத்திருக்கின்றேன். ஆனால், அது எனது நாட்டுக்குள் நடந்தது. ஜகான் (படத்தின் பெயர்) காஷ்மீர் இளைஞர்களதும், டில்லி இளைஞர்களதும் உணர்வுகளைப் பேசியது.

மெட்டாரஸ் கபே இன்னொரு நாட்டைப் பற்றியது. நான் சொல்பவற்றில் நான் பக்கச்சார்பின்றி இருக்கவேண்டி இருந்தது. பக்கச்சார்பென்பது மிக மிக மெல்லியதொரு கோடு. அதில் நான் இடப்பக்கமோ வலப்பக்கமோ சாயக்கூடாது. அதனால்தான் இந்தப் படத்தை எடுக்க இத்தனை ஆண்டுகள் பிடித்தன.

சமூகத்தின் மீது எந்த அக்கறையும் இல்லாத படங்களை எடுக்கவேண்டிய வர்த்தக நிர்ப்பந்தங்கள் எதுவும் எனக்குக் கிடையாது. அதேநேரத்தில் இத்தகைய படங்கள் மூலம் யாரையும் நோகடிக்கவும் கூடாது. படம் பற்றிய சர்ச்சையைக் கிளப்பும் எல்லோரிடமும் நான் கேட்பதெல்லாம், படத்தைப் பார்க்கும் முன்னர் எதுவும் பேசாதீர்கள் என்பதைத்தான்.

*கே: இந்தப் படம் தொடர்பாக எழுப்பப்படும் சர்ச்சைகளை முன்னரே எதிர்பார்த்தீர்களா?*

ப: நான் எதிர்பார்த்திருக்கவில்லை என்று சொன்னால் அது தவறாக இருக்கும். ஆம்! எனக்குத் தெரியும் இது ஒரு சர்ச்சைக்குரிய விடயம் என்பது. இது இலங்கையைப் பற்றியது. இது தமிழர்களைப் பற்றியது என்பதால் மட்டும் இதன் மீது அரசியல் மேலாதிக்கத்தைச் செலுத்தாதீர்கள் என்று மக்களிடம் சொல்லி இருக்கின்றேன். எனக்கு தமிழ்நாட்டில் நல்ல நண்பர்கள் இருக்கிறார்கள். அதனால் இந்தப் பிரச்சினை குறித்து நான் நன்கு அறிந்து இருக்கின்றேன்.

*கே: இனிமேலும் இந்தியா - பாகிஸ்தான் பிரச்சினையை வைத்து ஒரு படம் எடுக்கவேண்டாம் என்று நீங்கள் நினைத்ததால்தான் இலங்கைப் பிரச்சினையைக் கையில் எடுத்தீர்கள் என்று நான் படித்தேன். அது உண்மையா?*

ப: அதையே நாம் எப்போதும் பார்த்துக்கொண்டிருந்தால் ஒரு கட்டத்தில் சலித்துப்போகும் என்று நான் நினைத்தேன். இந்தப் பிரச்சினை (இலங்கை) இந்த மக்கள், இந்தத் தீவிரத்தன்மையை நாம் இதுவரை பார்த்ததில்லை. ஆனால் இதுவும்கூட உண்மையானதுதான். அத்தோடு, எமது அண்டை நாட்டுக்காரர்களது பிரச்சினையும்கூட. அங்கு இந்தப் பிரச்சினை 27 வருடங்களாகப் பெரியளவில் நடந்தது. இன்றும்கூட நடந்து கொண்டிருக்கிறது. அயல் நாட்டுக்காரர்கள் என்ற வகையில் அது எம்மையும் கூடப் பாதிக்கின்றது.

*கே: நீங்கள் கடைசியாக எடுத்த படமான 'விக்கி டொனர்' ஒரு பொழுதுபோக்குப் படம். அப்படி ஒரு படத்தை எடுத்துவிட்டு இதுபோன்ற சிக்கலான, சீரியசான படத்தை எடுத்ததன் உள்நோக்கம் என்ன?*

ப: முதலில், 'விக்கி டொனர்' ஒரு நகைச்சுவைப் படமல்ல. அதுவும் ஒரு மிக முக்கியமான விடயம் சம்பந்தமானதுதான். எனது கதாபாத்திரங்களில் எவையும் கோமாளிகளாக இருந்ததில்லை. ஆம்! அந்தப் படத்தைப் பார்த்து மக்கள் சிரித்தார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் அதில் பேசப்பட்டது முக்கியமான பிரச்சினை.

ஏனெனில், கருத்தரிக்க முடியாத பிரச்சினையில் நாங்கள் சிக்கிக் கொண்டிருக்கின்றோம். அந்தப் படம் வழக்கமான படங்களில் இருந்து எவ்வளவோ வித்தியாசமானது. அது விந்து தானம், கருத்தரிக்க முடியாமை, விதவை மீது மையம் கொள்ளும் இளைஞன், தத்தெடுத்தல் போன்றவற்றைப் பேசுகின்றது. இதை எல்லாம் மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றுதான் நான் நினைத்தேன். ஆனால், என்னை ஆச்சரியத்தில் மூழ்கடித்து மக்கள் அதனை ரசித்தார்கள்.

என்ன இருந்தாலும் நீங்கள் கேட்டது போல படங்களில் வகை மாதிரிகளுக்குள் தடம் மாறிப் பயணிப்பது என்பது கஷ்டமானதுதான். பலர் என்னிடமே சொல்லி இருக்கிறார்கள், என்னைப் பார்க்கும்போதும், என்னுடன் பேசும்போதும் 'விக்கி டொனர்' மாதிரி ஒரு படத்தை நான் எடுப்பேன் என்று தாங்கள் எதிர்பார்த்ததே இல்லை என்பதை.



சூரியகாந்தி
உதயன் 18 08 2013 ஞாயிற்றுக்கிழமை

# மனித குலமும் தமிழ்த் தேசியமும்

## இந்திய தேசியம் ஒரு மாயை

பழநெடுமாறன் நீண்ட காலமாகத் தமிழ்த்
தேசியத்துக்காகக் குரல் கொடுப்பவர். தமிழீழ
விடுதலைப் போராட்டத்தின் தீவிர ஆதரவா
ளர். விடுதலைப் புலிகள் இயக்கம் வன்னி
யில் போராட்டங்களை நடத்தியபோது
தமிழகத்திலிருந்து வந்து தலைவர் பிரபா
கரனை நேரில் சந்தித்துச் சென்றவர். இன்று
வரைக்கும் ஈழத் தமிழர்களின் விடுதலைக்
காக தமிழகத்தில் இருந்தபடி தளர்வற்று
தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருபவர்.
தமிழ்த் தேசியத்தை மனித குல வரலாற்றுடன்
தொடர்புபடுத்தி அவர் எழுதும் புதிய தொடர்
இது. பல நூல்களை, ஆய்வுக் கட்
டுரைகளைப் படித்த பின்னர் அவர்
இந்தத் தொடரை எழுதுகிறார். ''தமி
ழினம் ஒரு தொல்லினம் மட்டுமல்ல
செழுமையான பண்பாட்டுப் பரப்பை
உருவாக்கி அதன் மீது ஒரு சீரிய
நாகரிகத்தையும் உருவாக்கி உலக
னைத்தும் தனது இருப்பை நிலை
நிறுத்தி இருக்கும் ஓர் இனம் என்பதால்
தமிழ்த் தேசியத்தை அனைவரும் புரிந்து
கொள்ள வேண்டியது அவசியம். இன்று தேசிய
இனங்களின் வாழ்வும் சுயநிர்ணய உரிமையும்
நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றன. இந்த
நிலையில் தமிழினத்தின் தொன்மை குறித்தும்,
அது தேசிய இனமாக இயங்கி வந்திருப்பது
குறித்தும் இந்தத் தொடர் விளக்குகிறது.



இந்தியாவின் பல்வேறு
மாநிலங்களிலும் கீழ்த்
தட்டு மக்களிடம் உரு
வான இந்த மாற்றங்களின் கார
ணங்களைக் காங்கிரஸ் கட்சி
உணருவதற்குத் தவறிற்று.

மிக நீண்ட காலமாக அடிமைச் சேற்றில்
புழுக்களைப் போல நெளிந்து
கொண்டிருந்த அந்த மக்களின்
கடைத்தேற்றத்துக்கு முன்னின்று
உதவ வேண்டிய கடமையைக் காங்
கிரஸ் கட்சி மேற்கொள்ளவில்லை.
அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை
பெறுவதற்கு முன்னால் சமுதாய
விடுதலை முக்கியமானதாகும்.
என்பதைக் காங்கிரஸ் தலைமை
புரிந்து கொள்ள மறுத்தது. ஆங்
கிலேயர் ஆட்சியிலிருந்து விடுதலை
பெறுவதுதான் முதற்கடமையா
கும், மற்றவை தானாக நடந்து
விடும் என அது கருதியது.



தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட
மக்கள் நிலவுரிமை பெறுவதற்கான
போராட்டத்தை விட அவர்கள் ஆலயப்
பிரவேசம் செய்வது போன்ற
மேலோட்டாமான சீர்திருத்த நடவ
டிக்கைகளிலேயே காங்கிரஸ் கட்சி
கவனம் செலுத்தியது.

சுதேச மன்னர்கள், ஜமீன்தார்கள்,
நிலப்பிரபுக்கள் ஆகியோருக்கு
எதிரான மக்கள் போராட்டங்களில்
காங்கிரஸ் ஈடுபாடு கொள்ளவில்லை.
எனவே தான் காங்கிரஸ் கட்சிக்குப்
பக்கத்துணையாக மன்னர்களும்
ஜமீன்தார்களும், நிலப்பிரபுக்களும்
இருந்தனர்.

இந்தியாவின் பல்வேறு மாநிலங்க
ளிலும் தாமாக உருவான கீழ்த்தட்டு
மக்களின் விழிப்புணர்வு இயக்கங்
களைச் சுதந்திரப் போராட்ட இயக்
கத்தில் இணைத்துக்கொண்டு அரவ
ணைத்துச் செல்ல காங்கிரஸ் கட்சி
அடியோடு தவறிவிட்டது.

இவ்வாறு இணைப்பதைக் காங்கி
ரஸிலிருந்த பார்ப்பனிய மேல்
சாதித் தலைமை விரும்பவில்லை.
சாதீயக் கட்டுக் கோப்பைச் சிதைத்து,
சமூகப் புரட்சியை உருவாக்கவும்
காங்கிரஸ் கட்சி விரும்பவில்லை.
அந்தக் கட்சிக்கு வழி காட்டியாக
வும் ஆசானாகவும் இருந்த காந்தி
யடிகள் எத்தகைய கருத்தோட்டம்
கொண்டவராக இருந்தார் என்
பதை அலோசியஸ் பின்வருமாறு
குறிப்பிட்டுள்ளார்.

''இந்தியத் துணைக் கண்டத்தில்
வாழும் பல்வேறு சமூகங்கள் வர
லாறு - சமூக வளர்ச்சி இன்றியும்
கலாசார வேறுபாடுகளுடனும்
காலம் காலமாக வாழ்ந்து வருவ
தைக் காந்தியடிகள் முற்றிலும்
அறியாதவராக இருந்தார்.

இந்தியா ஒருமுகப்பட்ட மதக் கலா
சாரச் சமுதாயத்தைக் கொண்டது
என்றும் ஒரே மாதிரியான கலாசா
ரச் சமூகப் பழக்கவழக்கங்களைக்
கொண்ட நாடு என்றும் அவர்
கருதினார். இந்தியக் கலாசாரம்
ஒருமுகத்தன்மையைக் கொண்
டது மட்டுமே என அவர் நம்பினார்.
சில வேறுபாடுகள் அங்கும் இங்
கும் காணப்பட்டாலும் அவை நெறி
யிலிருந்து நீங்கியவை என்றும்
அவர் கருதினார்.

காந்தியடிகளின் இந்தக் கருத்தோட்
டம் இந்தியத் துணைக்கண்டத்தின்
யதார்த்த நிலைக்கு முற்றிலும்
மாறுபட்டதாக இருந்தது.

பல மொழி பேசும் பகுதிகளில்
வாழும் பல தேசிய இனத்தவரை
ஒரே இந்திய தேசிய இனத்தவராக
வார்க்கும் முயற்சியில் காந்தியடி
களும் காங்கிரசும் ஈடுபட்டனர்.
அதன் விளைவாகப் பல மொழிப்
பகுதிகளில் வாழ்ந்த மேல்சாதி
வர்க்கத்தினர் தங்களுடைய சொந்த
மொழி, கலாசாரம், அடையாளம்
ஆகியவற்றைப் புறந்தள்ளி ஒதுக்கி
விட்டு இந்தியக் கலாசாரம் என்கிற
மாயையில் மூழ்கித் திளைத்தனர்.
இந்தியத் துணைக் கண்டம் எங்
கும் பரவியிருந்த ஒரே சாதி பார்ப்
பனச் சாதியாகும். சமஸ்கிருதக்
கலாசாரத்தையும், வர்ணாச் சிரம
தர்மத்தையும் பின்பற்றுவதிலும்
கட்டிக் காப்பதிலும் இவர்கள்
தீவிரமாக முனைந்திருந்தனர்.
இவற்றையே இந்தியக் கலாசாரம்
எனக் கூறி அனைவரும் ஏற்றுக்
கொள்ள வேண்டும் என்று பிர
சாரம் செய்தனர்.

இது ஒரு வகையான இந்து மீட்பு
வாதமேயாகும் எனக் கருதும் அறி
ஞர் எஸ்.வி.இராசதுரை பின்வரு
மாறு குறிப்பிட்டுள்ளார்.

''இந்தியாவில் தேசியமும், பூர்ஷ்வா
ஜனநாயகமும் முற்றிலும் வேறு
பட்ட சூழ்நிலைகளிலேயே தோன்
றின. இந்திய தேசியம் என்ற அரசி
யல் இயக்கம், தேசிய சித்தாந்தம்
ஆகியன இங்கு மதத்தின் வீழ்ச்
சியையொட்டி எழுந்தவை அல்ல.
மாறாக ஒரு வகையான இந்து
மீட்புவாதம் தான் மேற்காணும்
மூன்று விடயங்களும் உருவாவ
தற்குக் காரணமானது என்று கூற
லாம்''

இத்தகைய இந்தியத் தேசியவாதம்
என்னும் இல்லாத தேசிய வாதத்
தைக் கட்டியமைக்கும் முயற்சியில்
தீவிரமாக ஈடுபட்டு வந்தவர்கள்
யார் என்பதைப் பற்றியும் அறிஞர்
எஸ்.வி.இராசதுரை அவர்கள்
வரையறுத்துக் கூறியுள்ளார்.

''இந்தியாவின் இரு மொழி பேசும்
அறிவாளிகளில் பெரும்பாலான
வர்கள் இந்திய் தேசியக் காங்கிர
சின் முக்கியத் தலைவர்களாக
இருந்தவர்கள். ஆங்கில அறிவும்,
மேற்கத்தியப் பண்பாட்டுடன்
உறவு, மேற்கத்திய தாராளவாதச்
சிந்தனைபால் ஒருவிதமோகம்
ஆகியவற்றைக் கொண்டிருந்த
இருமொழி பேசும் அறிவாளிகள்
தமக்கிடையே சமத்துவம் நிலவுவ
தாகக் கருதினர். ஆங்கிலக் கல்வி
தமக்கிடையே தோற்றுவித்திருந்த
ஒரு செயற்கை ஒருமையில் இந்
தச் சமத்துவத்தைக் கண்டனர்.
ஆங்கிலேய ஆட்சியாளர்களை
அவர்கள் எதிர்த்த போதிலும்,
ஆங்கிலேயர் உருவாக்கிய அரசு
அமைப்புகளையோ, அதிகார
மையங்களையோ மாற்றி அமைக்க
விரும்பவில்லை. மாறாக அவற்
றைத் தமக்குச் சாதகமாக ஆக்கிக்
கொள்ளவே விரும்பினர். அதே
போல ஆங்கில வரலாற்று நிபு
ணர்கள் பண்டைய இந்திய நாகரி
கம், இந்திய வரலாறு, இந்தியப்
பண்பாடு ஆகியன பற்றி முன்
வைத்த கருத்துக்களை இவ்விரு
மொழி பேசும் அறிவாளிகள் ஏற்
றனர். ஆங்கிலேயரின் வருகை
யினால் இந்தத் தொன்மையான
நாகரிகமும், பண்பாடும் சீரழிந்து
போயிருந்தமை பற்றித் தங்க
ளுக்குள் பேசிக் கொண்டனர்.
இவ்வாறு ஒரு இந்தியத் தேசிய
அடையாளத்தை உருவாக்கி அதன்
பெயரால் ஒரு சுதந்திர இந்தியாவைக்
கட்டியெழுப்ப முனைந்தனர்.
அந்நிய ஆட்சியின் அதிகாரங்களின்
பங்கு பெறவும், சுதந்திர ஆட்சியில்
முழுமையான அதிகாரத்தைக் கைப்
பற்றுவதிலும் அவர்கள் குறியாக
இருந்தனர் என்பது இதன் மூலம்
தெளிவாகிறது.

### சோவியத் நாடு தரும் பாடம்


ஜார் மன்னனின் கொடுங்கோலாட்சிக்கு எதிராக லெனின்
தலைமையில் மகத்தான ஒக்டோபர் புரட்சி வெடித்தது.
மக்கள் ஆதரவால் மாபெரும் வெற்றி பெற்றது. தேசிய
இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்ட
லெனின் தலைமையில் அனைத்துத் தேசிய இனங்களும்
ஒன்றுபட்டுப் போராடியதால் புரட்சி வெற்றி பெற்றது என்பது
குறிப்பிடத்தக்கதாகும்.

பல்வேறு தேசிய இன மக்களும் ஒன்று கூடித் தாமாக
விரும்பி இணைந்து 1922 ஆம் ஆண்டில் சோவியத்
ஒன்றியத்தை உருவாக்கினர். சோவியத் நாட்டில் கம்யூனிசக்
கொள்கையைத் தவிர வேறு கொள்கைக்கு இடமில்லை. கம்யூ
னிஸ்ட் கட்சியைத் தவிர வேறு கட்சிக்கு அனுமதி இல்லை.
கொள்கைப் பிடிப்பு கொண்ட செஞ்சேனை, வலிமை
வாய்ந்த மத்திய அரசு ஆகியவற்றின் பலமான கட்டுப்பாட்டில்
சோவியத் நாடு இருந்தது. இவ்வளவு இருந்தும் 75
ஆண்டுகளுக்கு மேல் சோவியத் நாடு நீடிக்கவில்லை.
ஒவ்வொரு தேசிய இனக்குடியரசும் தனித்தனி சுதந்திர
நாடாகப் பிரிந்து சென்றுவிட்டன.

வரலாறு கற்பிக்கும் இந்தப் படிப்பினையை இந்தியச்
சூழ்நிலையோடு நாம் பொருத்திப் பார்க்க வேண்டும்.
பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து விடுதலை பெற
வேண்டும் என்னும் அடிப்படையில் இந்தியாவில் உள்ள
சகல தேசிய இன மக்களும் ஒன்றுபட்டுப் போராடினார்கள்.
இறுதியாக வெற்றி பெற்றுச் சுதந்திர ஆட்சியை அமைத்தார்
கள். சுதந்திரநாடு ஜனநாயக நாடு. ஒரு கொள்கை மட்டு
மல்ல பல கொள்கைகளும் , பல கட்சிகளும் இங்கு உண்டு.
அரசியலுக்கு அப்பாற்பட்டது இந்திய இராணுவம்.

மாநிலந்தோறும் பல கட்சிகளின் ஆட்சி மத்தியிலோ வெவ்
வேறு கொள்கைகளைக் கொண்ட பல கட்சிகளின் கதம்ப
ஆட்சி. இப்போது மட்டுமல்ல இனி எப்போதும் இந்தியாவில்
கூட்டணி ஆட்சிதான். ஒரு கட்சி ஆட்சி இனி கிடையாது.

ஒரு கொள்கை, ஒரு கட்சி, அரசியல் மயப்பட்ட இராணுவம்,
பலமான ஒரே கட்சி மத்திய அரசு, எல்லாவற்றுக்கும் மேலாக
உலகப் பெரும் வல்லரசு-இத்தனை இருந்தும் சோவியத்
நாடு 75 ஆண்டுகளுக்கு மேல் நீடிக்கவில்லை. சிதறி விட்டது.
மேலே கண்டவற்றில் ஒன்று கூட இல்லாத இந்தியா எதிர்
காலத்தில் என்ன ஆகும்?



# யாரோடு நோவோம் யார்க்கெடுத்து உரைப்போம்...?

குந்தவி

எங்கோ ஒரு தனிமனிதனின் தவறுகளால் ஒரு சமுதாயமே பாதிக்கப்படுகின்றது



அண்மையில் எனது தனிப்பட்ட வாகனம் வேறு தேவைக்கு உபயோகப் படுத்தப்பட்டதால் தனியார் பஸ் சேவையை நாட வேண்டிய சந்தர்ப்பம் எனக்கேற்பட்டது. எனது அலுவலகத்தில் நான் காலை 8.30 மணிக்கு இருக்க வேண்டும் என்று கணக்கிட்டு எனது வீட்டு அலுவல்களை முடித்துக்கொண்டு (2 பேருந்து நான் எடுக்க வேண்டும்) அதன் காரணமாக முதலாவது பேருந்துக்கு காலை 7.30 மணிக்கு சென்று பேருந்தில் ஏறியும் விட்டேன். அலுவலக நேரம், பாடசாலை நேரமாதலால் நிறையச் சனம். நான் பேருந்து வாசலில் தொங்கிய படி நிற்கின்றேன். உண்மையில் பேருந்தில் உள்ளே பின்பக்கமாக நிறையவே இடைவெளி தெரிகின்றது. ஆனால் ஏறுவோர் யாருமே 1ஆம், 2 ஆம் இருக்கையில் அருகில் நிற்பதால் உள்ளுக்கு செல்வதற்கு பாதை இல்லை. நடத்துநரும் ஒவ்வொரு நிறுத்தத்திலும் பின்னுக்கு போங்கோ என்று சொல்லிய படி சில சமயம் பயணிகளை தொட்டுக்கூட தள்ளிவிடுகின்றார். (பெண்கள் உட்பட) இது தேவை தானா? நாம் ஒரு நிறுத்தத்தில் நின்று பேருந்தில் ஏறினால் இயலுமட்டும் பிறரும் பயணிக்கட்டும் என்று எமக்கு சௌகரியமான ஒரு ஒதுக்கமாக நின்றால் பின்பு பயணம் செய்யும் பயணிகள் இலகுவாக உள்ளே செல்ல முடியும். நடத்துநர் தொடுகின்றார், தடவுகின்றார் என்ற குற்றச்சாட்டுக்களை தடுக்கவும் முடியும் எமக்கு எம்மைப் பற்றிய சிந்தனையே அதிகமாக இருப்பதாக எனக்குப் படுகின்றது. சுயநலத்தின் உச்சத்தில் நாம் இருப்பதனால் தான் நாம் பிறர் பற்றிய பிரக்ஞை அற்று அது பெண்ணானால் என்ன? கர்ப்பிணி என்றால் என்ன? முடமானவர் என்றால் என்ன? குழந்தை என்றால்என்ன? வயோதிபர், நோயாளி என்ற கருணை எமது உள்ளத்தில் எள்ளளவும் உருவாவது இல்லை. இது பேருந்து பயணத்தில் மட்டுமல்ல, வெற்றிலையை நன்கு மென்று விட்டு வீதியில் பின்பாக யார் எவர் என்று பார்க்காது துப்புவதில் இருந்து, வீதி (Road) எனது சொத்து இதில் வேறு எவரும் செல்லக்கூடாது என்பது மாதிரியான சமாந்தர சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டம் பிறருக்கு இடைஞ்சல் தரக்கூடிய தடிகள், பொல்லுகள், Steel கம்பிகளை தனது சைக்கிள், மோட்டார் சைக்கிளில் கொண்டு செல்லல். அப்பப்பா இவ்வாறு அடுக்கிக் கொண்டே செல்லலாம். இவ்வாறு ஒரு பேருந்து பயணம் முடிந்து மறு பேருந்தினை அடைந்து ஏறி அமர்ந்தால் அது 8.10 மணிக்கு வெளிக்கிடும். பயணிகள் ஏறி அமர்ந்து ஆளாளுக்கு நேரமும் கேட்டு எப்ப வெளிக்கிடும்? என்று (அலுவலக கையொப்பம் இடும் புத்தகம் அடிக்கடி நினைவிற்கு வந்தபடி) அலுத்து போய் இருந்த போது சாரதி கடவுள் மாதிரி வந்து தனது இருக்கையில் அமர்ந்து கடவுளை வணங்கி பேருந்தினை ஓட்டும்போது நேரம் 8.15 மணி. பின்பு மெது மெதுவாக ஊர்ந்து பெற்றோல் செட் (Petrol shed) அடைந்து அங்கு டீசல் ஏற்றிய பின்புதான் வெளிக்கிடும். ஊரிலுள்ள கடவுளை எல்லோம் கும்பிட்டு சிவப்பு கோடு அடிக்காது இருக்க வேண்டும் என்று நாம் அந்தரத்தில் இருப்பது சாரதி, நடத்துநருக்கு தெரியாது.

இங்கு குறிப்பிடப்படும் 'நேரம் தவறுதல்' பற்றி எழுதுவதென்றால் இங்கு நீண்டு கொண்டே செல்லும். எமது நாடு அபிவிருத்தியில் பின்னுக்கு இருப்பதற்கு நேரத்தை நாம் கடைப்பிடிப்பது குறைவு/ இல்லை என்பதே காரணம் என்பது எனது தாழ்மையான கருத்து.

பேருந்து 8.10 மணிக்கு வெளிக்கிடும் எனின் யார் வந்தாலும் வராவிட்டாலும் அந்த நேரத்துக்கு புறப்படல் வேண்டும். அதற்கேற்ப முன்பே எரிபொருளை நிரப்பி வைத்திருத்தல் வேண்டும். இது ஏன் யாழ்ப்பாணத்தவர்களுக்கு புரிவது இல்லை. அன்று நான் அலுவலகம் சென்றடைய காலை 8.50 மணி. எனக்காக 12 பேர் காத்து இருந்தார்கள். அவர்கள் 12 பேரின் நேரமும் 20 நிமிடங்கள் வீணாகி விட்டது. அவர்களிடமும் வேறு நபர்கள் தங்களின் நேரத்தை வீணாக்கி கொண்டு காத்து இருப்பார்கள். இவ்வாறு இந்தச் சங்கிலி தொடர்ந்து செல்லும். ஆக நாம் எமது நேரத்தை நாமே முகாமை செய்யப் பழக வேண்டும். இதனை சிறுவயதில் இருந்தே பழகிக் கொண்டு வரல் வேண்டும். ஆலய நேர பூசை தொடக்கம் பாடசாலையில் பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு ஈறாக என்ன தான் இங்கு நேரத்தின் படி நடக்கின்றது. அழைப்பிதழ்கள், நேர அட்டவணையில் நேரம் ஒரு சம்பிரதாயமாக போடப்படும் ஒன்று. குத்து மதிப்பாக நாம் போக வேண்டியதுதான்.


இலங்கையில் வெளிவரும் பத்திரிகைகள் அனைத்தும் நேரத்தை பின்பற்றுதல் பற்றி, நேர முகாமைத்துவம் பற்றி, நேரம் தவறாமை பற்றி எழுதிக்கொண்டே இருக்கின்றன. இன்னும் ஒரு படி மேலாக அரச ஊழியர்கள் அனைவருக்கும் அவரவரது நிலைகளுக்கு (Grade) ஏற்ப பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள், பயிற்சிகள் ஊடாக இந்த நேரம் தவறாமை பற்றி பற்பல செயற்றிட்டங்கள் வகுக்கப்படுகின்றன. நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஆனால் அவற்றை நாம் பின்பற்றுவதில் அல்லவோ அதன் பயன்பாடு பூரணமாக கிடைக்கின்றது. அது எம் மக்களிடையே சுட்டுப் போட்டாலும் வராது போலுள்ளது. அற்ப விடயங்களில் கூட நாம் நேரத்தின்படி செய்வது இல்லை என்பதே உண்மை. இதனை வாசிப்பவர்கள் அனைவரும் இவ்வாறான பாதிப்புகளை நிச்சயம் அனுபவித்திருப்பார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

இன்னுமோர் நிகழ்வாக யாழ்.போதனா வைத்தியசாலையில் மருந்தெடுப்பது மற்றும் விடுதியில் இருக்கும் சந்தர்ப்பம் உங்களுக்கு ஏற்பட்டு இருக்குமாயின் நான் எழுதுவதன் முழு அர்த்தமும் உங்களுக்கு நிச்சயம் புரியும்.

யாழ்ப்பாணத்திலேயே வைத்திய வசதிகள் உச்சளவு உள்ள மருத்துவமனை யாழ்.போதனா வைத்தியசாலை. இங்கு உள்ள விடுதிகள் எங்கெங்கு உள்ளதென்பதை கண்டறிவது (அதுவும் இப்ப ஜப்பானின் உதவியால் கட்டப்பட்ட தொடர்மாடி உட்பட) என்பது யாபேரிற்குமே சிரமமான விடயம். அம்புக்குறிகளினூடாக விடுதி இலக்கத்தை கண்டறிவது படித்த இயவயதினர் கண்டுபிடிக்கலாம். ஆனால் பார்வை குறைபாடுடைய வயோதிபர்களுக்கு நிச்சயம் சிரமமான விடயம் ஆகும். அதற்காக அருகிலுள்ள ஏனைய நோயர்ளர்களையோ, பார்வையிடுபவர்களையோ வைத்தியசாலை ஊழியர்களையோ அணுகினால் 100 இற்கு 5 வீதமானோர் ஓரளவு உதவி செய்வார்கள். ஆனால் அநேகர் சிடுசிடுப்பும், கடுப்புமாகவே வழிகாட்டுவர்/ வழிகாட்டமாட்டார்கள். இது இவ்வாறு இருக்க உபாதை காரணமாக நோயாளியாக விடுதியில் அனுமதிக்கப்பட்டால் உங்களுக்கு கிடைக்கும் அனுபவங்களை எழுத கடதாசி காணாது. நோயாளிக்கு நோய் அதிகரிப்பதற்கு பல காரணங்கள் இருப்பினும் விடுதி தாதிமார், ஊழியர்களின் பேச்சு வார்த்தைகள் அதில் பிரதான காரணமாக அமைகின்றது. வைத்தியரிலும் இவர்கள் தான்(தாதி, ஊழியர்) அதிக நேரம் நோயாளிகளுடன் இருக்கின்றனர். நோயாளிகளுக்கு நோய் உபாதையுடன் மருந்துகள் எவ்வாறு போடுவது, இரத்தம் எங்கே கொடுப்பது போன்ற விளக்கங்களை தாதியிடமோ, ஊழியர்களிடமோ கேட்டால் அவர்கள் கூறும் விளக்கங்களில் நோயாளிக்கு நோய் இரட்டிப்பாகிவிடும். இந்த தாதிமார், ஊழியர், பயிற்சியாளர்களாக உள்ளபோது அவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியில் தொடர்பாடல் (Communication) பற்றியே மிக நீண்ட விரிவுரைகள், விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. ஏனெனில் இவர்கள் பொது மக்களுடன் தொடர்புபட்ட தொழிலை மேற்கொள்வதால் இவர்களுக்கு தொடர்பாடல் தொடர்பான விளக்கங்கள் அதிகமாக வழங்கப்படுகின்றன. ஆனால் அதனை அவர்கள் தொழில் செய்யும் போது கடைப்பிடித்தால் தானே? அப்படி படித்ததை சிந்திந்துப் பார்ப்பார்களோ தெரியவில்லை. ''கற்றவை கற்றபின் நிற்க அதற்கு தக'' என்று திருவள்ளுவர் கூறியதை இவர்களும் சிறு வயதில் படித்து இருப்பார்கள் தானே? அதை எல்லாம் மறந்தவர்களாகவே அவர்களது செயற்பாடுகள் இருக்கும். ஒரு விடுதி நோயாளிக்கு மற்றும் நோயாளியுடைய உறவினர்களுக்கு நோய் பற்றி சந்தேகங்களையோ வேறு வைத்தியசாலை நடைமுறைகளையோ இவர்களிடம் கேட்க முற்பட்டால் நாய் மாதிரி அவர்கள் மீது பாய்வது அல்ல. இடக்கு முடக்கான, நக்கல் நளினபேச்சுக்கள் பேசும் போது கேட்ட எமக்கு ஏன் கேட்டோம் என்று ஆகிவிடும். சிறிய பிரதேச வைத்தியசாலைகளில் பணிபுரியும் வைத்தியர்களிடம் கேட்டுப் பாருங்கள்? தொடரான கவனிப்புக்கு பெரியாஸ்பத்திரிக்கு போக வேண்டும் என வற்புறுத்தினால் நோயாளி ஐயோ, ஐயோ இங்கேயே ஏதாவது மருந்து தாங்கோ எனது நோய் மாறுவதற்கு என்று கெஞ்சி மன்றாடுவார்கள். பெரியாஸ்பத்திரிக்கு போனால் ஏசுவார்கள். கவனிப்பு குறைவு என வசதி படைத்தவர்கள் பல ரூபாய் காசுகளை தனியார் வைத்தியசாலைக்கு செலவழிக்கின்றனர். வசதிகுறைந்தோர், உதவி அற்ற முதியவர்கள் ஒழுங்கான தகுந்த மருந்துகளை பாவிக்காது தமது ஆயுளை குறைத்துக்கொள்கின்றனர்.

ஆக, எங்கோ ஒரு தனிமனிதனின் தவறுகளால் ஒரு சமுதாயமே பாதிக்கப்படுகின்றது. நாம் ஒவ்வொருவரும் எமது பொறுப்புக்களை உணர்ந்து செயற்பட்டால் தவிர மேலே குறிப்பிட்ட தவறுகளை எவராலும் திருத்த முடியாது.

# வெற்றி பெறலாம் வாங்க...!



மிகவும் தாமதம் ஆவதற்குள் செய்ய வேண்டிய 10 விடயங்கள்

**சமரசம் :** குடும்பப் பகை என்பது மிக நீண்டது. ஆழமாகவும் செல்லக் கூடியது. உண்மையில் அது மிகவும் தீவிரமாவதற்குள் பிரச்சினையானது தீர்க்கப்பட வேண்டும். நீங்களே தைரியமாக சமரசத்துக்கு முன் முயற்சி எடுக்க வேண்டும்.

**விடுமுறை :** விடுமுறையில் சுற்றுலா போகாததற்கு முன்பு பல காரணங்கள் இருக்கும். ஆனால் இப்பொழுது உங்களிடம் பணமும், நேரமும் இருக்கிறது. அதனால் நீண்ட நாள் ஜாலியாக விடுமுறையைக் கழிக்கலாம்.

**பயத்தை வெல்லுதல் :** நீங்கள் ஏதாவது ஒன்றுக்கு எப்பொழுதும் பயந்து கொண்டிருக்கிறீர்கள் என்றால், அதைத் தைரியமாக எதிர்த்து நில்லுங்கள். அற்புதமான அனுபவத்தைச் சந்திப்பீர்கள்.

**ரெஸ்டாரண்ட் :** மிகவும் ஆடம்பரமான ரெஸ்டாரண்டை நீங்கள் தவிர்ப்பீர்கள் என்றாலும் எப்போதாவது ஒரு முறை போகலாம். நன்றாக உடை உடுத்திக்கொண்டு, அந்த மாலை நேரத்தைச் சந்தோஷமாகக் கழிக்கலாம். ஹோட்டல் பில் பற்றியெல்லாம் கவலைப் படக்கூடாது.

**சூதாட்டம் :** நீங்கள் குதிரைப் பந்தயத்தில் பணம் கட்டிச் சூதாடி இருக்கவில்லையென்றால், ஒருமுறை ஆடிப் பாருங்கள். அது போன்று வாழ்வில் அனுபவித்திராத விடயங்கள் இருந்தால், அது நம்மைப் பாதிக்காது என்றால் அதை ஒரு முறை செய்து பார்க்கலாம்.

**குடும்ப மரம் :** உங்கள் குடும்பத்துக்கென மரம் நடலாம். உங்கள் வருங்காலச் சந்ததியினருக்குச் சொல்வது சுவாரஸ்யமானதாக இருக்கும்.

**சிறிய விமானம் :** நீங்கள் பெரிய விமானத்தில் மட்டும் தான் பயணம் செய்திருக்கிறீர்கள் என்றால், சிறிய விமானத்தில் பயணம் செய்து பாருங்கள். மிகவும் புதிய அனுபவமாக இருக்கும்.

**பண உதவி :** நல்ல காரணத்துக்காக முன் பின் தெரியாதவர்களுக்கு உதவி செய்தல் என்பது மிகச் சிறந்த செயலாகும். அதுவும் நன்றி எதிர்பார்க்காமல் செய்வது இன்னும் சிறந்ததாகும்.

**பெற்றோர்களை மன்னித்தல் :** இது மிகவும் சிரமமானது. நம் வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டங்களுக்காக நம் பெற்றோர்களைக் குற்றம் சாட்டுவோம். ஒரு சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யத் தவறிவிடுவார்கள். இதுபோன்ற சமயத்தில் பெற்றோர்களை மன்னித்து விடலாம்.

**உங்கள் கதையை எழுதுங்கள் :** மற்றவர்களை விட உங்களுக்குத்தான் உங்களைப் பற்றி நன்றாகத் தெரியும். பின் ஏன் உங்கள் கதையை நீங்கள் எழுதக் கூடாது. எளிய முறையில் அல்லது சிக்கலான முறையில் என, உங்களுக்கு எப்படிப் பிடிக்கிறதோ அவ்வாறு எழுதலாம். இதை யாரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டியதில்லை. உங்களுக்காக எழுதி முடியுங்கள்.

உங்கள் வாழ்க்கையை மாற்றப்போகும் தொடர்....

நீங்கள் ஏதாவது ஒன்றுக்கு எப்பொழுதும் பயந்து கொண்டிருக்கிறீர்கள் என்றால், அதைத் தைரியமாக எதிர்த்து நில்லுங்கள். அற்புதமான அனுபவத்தைச் சந்திப்பீர்கள்.



## தமிழ்த் தாங்கிகள்

தகிடதகவென
தமிழ்த்தாய் நாட்டியம் புரிய
நாம் இரசிப்போம் எப்போ?
குண்டல வளையல்
சிலம்பு மேகலையோடு
சிலிர்க்க வைக்கும்
சிந்தாமணி கொண்டைமைத்
தித்திக்க வைப்பது எப்போது?
நன்றாய்த் தமிழைக் கொன்றால்
எமக்கு விடிவு எப்போது?
கருமுகில்கள் மறைத்த
தமிழ்க் கதிரோன்- வானில்
உதயமாவது எப்போது
காற்றிலடிபட்ட பஞ்சாயத்
தடைகளை தகர்ப்பது
எப்போது?

ஆயிரம் கைகள் மறைக்காத
ஆதவனை
இலட்சக் கைகள் கொண்டு
தாங்குவது எப்போது?
எட்டுத் திக்கும்
தமிழ் மணக்க - பாரெங்கும்
எம்மொழி சூடா
நாமெல்லாம்
தமிழ்ப் படகின்
துடுப்பாவதெப்போ?
சுயத்தை இழக்காத் தமிழராய்
நாம் மாறுவதெப்போ?
'தமிழன் நான்' என்று
மார்தட்டி தாயத்தில்
தமிழை தலை நிமிரச் செய்வது
எப்போது?

கெ.நிப்தன், கொழும்புத்துறை.

# எப்ப மாறும்?



நிலா மகள்

"என்னடி பூரணம்... இது பூரணமே பொன்னன்ர மனிசிதானே...? கண்ணாடியில் பாத்தாத்தான். தெரியுது...! இஞ்ச கிட்ட வா பாப்பம்... நீ பூரணம் தான் வயசு போனதால உடன கண்டு பிடிக்கேலாம கிடக்கு...! உனக்கு மூத்தது பெடியனோ...? பெட்டையோ...? எல்லாரும் கட்டிவிட்டினமே...? பேரப்பொடியள் ஒண்டுமில்லையே...?"

"கட்டினவையள் எல்லாரும் ஊரோட இல்லயிப்ப. தப்பிப்பிழைச்சனெண்டு போய்ச் சேர்ந்திட்டினம். அவயள் எல்லாம் இப்ப கனடாவில. நானும் அவருந்தான்; வீடும் வெறிச்சோடிப்போச்சு. என்ன செய்ய.. ஆறெண்டாலும் நல்லாயிருந்தா போதும்."

"கண்கலங்காதே பூரணம். கண்டதுகள் திரியிற இடத்தில கஷ்டப்படுகிறன் எண்டு யோசிக்காத எல்லாம் எங்கட தலைவிதி.. அண்டைக்கும் பாத்தன் தலைய கவுண்டு கொண்டு போனது நீதானே...? ம் எண்டவும் முடியேல்ல.. ஆம் எண்டவும் முடியேல்ல எல்லாமிப்ப அவயளின்ர இஸ்ரப்படிதானே... நடக்குது. பொல்லாத கொடுமை ஊருக்குள்ள.. ஆர் வருகினம் போகினம் எண்டு தெரியேல்ல. ஆக்களின்ர பேச்சும் போக்கும் வித்தியாசம். பாக்கேலாது அவயளின்ர பழக்க வழக்கத்தை... ஆரோட கதைக்கிறது... ஆரை நம்பியும் கதைக்கேலாது... கதைச்சா கிழவியெண்டு பாப்பினமோ...? இரவோட இரவா வந்து கெடுத்துப் போட்டுப் போவினம்.. தறுதலையள்..."

சத்தம் போடாம மெல்லமா கதை "இஞ்சால வா" இடிச்சு விழுத்திப் போட்டுப் போடுவானுகள். இப்போதைய பெடியளின்ர மோட்டச் சைக்கிள் ஓட்டமும் ஆக்களும்...!"

"முந்தி எல்லாம் கிரவல் தெரு எண்டாலும் இவ்வளவு தூசியில்லை. பாரன்; புகைபிடிச்சே செத்துப் போவம். நான் இப்ப பிச்சைச் சம்பளம் எடுத்துக் கொண்டு வாறன்; எனக்கார் இருக்கினம். மனுசனுமில்ல; பிள்ளைகள் ரண்டும் இந்த மண்ணுக்குள்ள தானே கிடக்குதுகள்; இதுகள் இருந்திருந்தா எனக்கென்ன கவலை. தனியாளாக் கிடந்து அழுது அழுது காலம் கடக்குது. இனியெண்டைக்கு வரப்போகும் நிம்மதி...? சரி சரி கவனமா போங்கோ. வள்ளியாச்சி...! நீயும் வாவன் பூரணம். உன்ர வீடு தாண்டித்தானே நான் போகவேணும்."

நல்லாக் கட்டிக் கிடக்கென்ன வீடு; உனக்கென்ன பூரணம்...? எனக்கென்னன்டால் கனநேரம் நிக்கேலாது. இரவில் படுத்தா கால் உளைவு. உடம்பு கனக்கிற மாதிரிக் கிடக்கும். இப்பதான் நினைவுக்கு வருது புதினமொண்டு. எங்களுக்குள்ள இருக்கட்டும்; ஆருக்கும் கதைச்சுப் போடாதே. எங்கட சனத்தைப்பற்றி உனக்கு நல்லா தெரியுந்தானே. ஒரு கதையை இரண்டாக்கி சொல்லுங்கள்.

உவள் பெரியவளின்ர நடுவிலான் ஊர்ச் சண்டை முடியுறதுக்கு முன்னமே கொழும்பில பிடிபட்டு ஏழு வருசமாம். இப்பதான் தெரியும்... சண்டை முடிஞ்சுதடி செத்தவங்கள் செத்துப்போக மிஞ்சினவயள் வந்திட்டினம் எண்டா அவன்ர பேச்சுமில்லை; மூச்சுமில்ல. காணேல்ல எண்டு தான் சொல்லுவாள். நானும் கவலைப்பட்டுதான் வாறனான். வந்தவையள் கனபேர். சொத்துக் கித்து சுகம் எல்லாத்தையும் இழந்துதான் வந்திருக்குதுகள். அதுகளின்ர கதையைக் கேட்டா சாப்பிடவும் மனம் வராது பூரணம். புருசன் இல்லாம, பெண்டில் இல்லாம பிள்ளையள பறி கொடுத்துப் போட்டு வந்திருக்கினம். பாவங்கள் ஆரும் உண்மையான மனமிருந்தா அதுகளுக்கு நல்ல வாழ்க்கை குடுக்கலாம்தானே...! தனிய இருந்து கேடு கெட்ட பெயர் கேட்கிறத விட இப்படி சேர்ந்து இருப்பது நல்லம் தானே...! அப்படியெண்டா புண்ணியம்தான். சாதி பாக்கிறவையும், சிரட்டையில் தண்ணி கொடுக்கிறவையும், எத்தின காலத்துக்கு இவயளின்ர அடம்பிடிப்பு அதெல்லாம் ஒரு மகா நடிப்பு..."

பெரியவளின்ர மூத்தவங்கள் இரண்டு பேரும் நல்லா படிச்சவங்கள். ஒருத்தன் படிப்பிக்கிறான். மற்றவன் இஞ்சினியரா இருக்கிறான். அவங்கள் கட்டின பொம்பிளையளும் பரவாயில்லை. பெருமைப்படாததுகள். வாத்தியார் கொஞ்சம் கோபக்காரனெண்டாலும் திறமான மனுசன். எங்கட பிள்ளையள் அவரிட்ட படிச்சுத்தான் முன்னுக்கு வந்ததுகள். இவனுக்கு என்ன குறையெண்டு படிப்ப குளப்பிப் போட்டு வெளிக்கிட்டுப் போனவனோ தெரியாது..? அவனோட படிச்சதுகள் டாக்குத்தராயும், வாத்தி மாராயும் இருக்கேக்க தங்கட குடும்பத்தில இப்படியெண்டா கவலையிருக்கத்தான் செய்யும். அவன்..ன் ஏன் கொழும்புக்கு போனானெண்டு தெரியேல. அது ஒண்டுமா எனக்கு விளங்கேல்லப் பூரணம். கொழும்பில பிடிபட்டா சும்மாவா விட்டிருப்பாங்கள். நல்ல சித்திரவதையும், சீரழிவுமாத்தான் இருக்கும். என்ன வள்ளியாச்சி உங்க வந்திட்டானாமோ.. நான் காணேல்லப் பூரணம். முள்ளந்தண்டும், மூத்திரப்பையும் நோபட்டுப் போச்சுதாமெண்டு இவள் யோகத்தின்ர இளையவன் சொன்னவன். நல்ல உயரமாம், தகப்பன் மாதிரி மீசையுமாம். அதிகம் கதை பேச்சொண்டும் இல்லையாம். இனி நேர போய்ப் பாத்தாத்தான் தெரியும். கொஞ்ச நாளால போய்ப் பார்ப்பம். இப்ப தானே வந்தவன். என்ன தொழில் செய்யப் போறானோ தெரியேல்ல. அவனுக்கெண்டும் சில படிப்பினையள். அனுபவங்கள் இருக்குமெண்டு நினைக்கிறன். ஆனா.. அவங்கள இஞ்ச கொஞ்சப்பேர் மதிக்கிறதில்லை; வேலை கேட்டுப் போனாலும் குடுக்கிறதில்லை. பயங்கரவாதிகளாமெண்டு ஒதுக்கி வைக்கினம். புதுசா முளைச்சதுகளுக்கு என்ன தெரியப் போகுது. ஏதோ காலப் பிழையால இப்படிப் போச்சு. எல்லாம் எங்கட பிள்ளையள் தானே. இப்படி ஒதுக்கி வைச்சதால எத்தின பொம்பிளைப் பிள்ளையள் தூக்குப் போட்டு, மண்ணெண்ணை ஊத்தி எரிஞ்சு செத்துப் போச்சுதுகள். எங்களுக்கெல்லோ தெரியும். அவங்கள் எவ்வளவு கஸ்ரப் பட்டவங்களெண்டு...

விழுந்ததுகள தூக்கிவிடாம ஏறி மிதிக்கிறது. நல்ல பண்பில்ல ம்... ம்... பூரணம் கதையோட கதையா இருந்திட்டன். இனிப்போய்த்தான் உலைவைக்க வேணும். இண்டைக்கு வெள்ளிக்கிழமை. காந்தன்ர கடையில ஏதாச்சும் மரக்கறி வாங்கிக் கொண்டு போனா பருப்பையும் காய்ச்சினா காணும்.

இல்ல வள்ளியாச்சி உங்கட கதையக் கேட்டுக் கேட்டு சமைச்சுப் போட்டன். சாப்பிட்டுப் போங்கோ... கையக்கழுவுங்கோ... என்ன செய்யிறது நினைக்க நினைக்க வேதனையாத்தான் கிடக்கு. இப்பவே இப்படியெண்டா இனிவருங்காலத்தில எப்படியிருக்கப்போதோ...? சும்மா சும்மா கோயிலுக்கு குடுக்கிற காசை ஆராவது கஷ்டப்பட்டு படிக்கிற பிள்ளையளுக்கு குடுத்தா புண்ணியம் கிடைக்கும் போல. அதுகள் படிச்சாலும் ஊருக்குத்தானே நல்லது.

இஞ்ச... நீங்களெப்ப வந்தனீங்கள்... நானோ.... நீ வள்ளியாச்சிக்கு சாப்பாடு போடேக்க வந்திட்டன். நீங்கள் ரண்டு பேரும் கதைக்கிறத அமைதியா கேட்டன் பூரணம். உண்மையிலேயே மனசு சந்தோசப்பட்டுது. மெய்சிலுத்துப் போனன். இப்படிப் பத்துப்பேர் இருந்தா ஊர் சிறக்கும்; எட பொன்னன் உண்மை தான்ரா... காசிருக்கிறவைக்கு கருணை வந்தா கஷ்டம்... மாறும்.... கஷ்டப்படுகிறவையின்ர விதியும் மாறும்... வரட்டே போட்டு...

## கூத்தாடிகளின் கொண்டாட்டம்.....

கூத்தாடிகளின்
கொண்டாட்டமாய்
மீண்டும் ஒரு
புள்ளடித் திருவிழா
வர்ணங்கள் மாறா
வாழ்வது
இன்னமும்
ஏக்கங்களுடன்
தொடர
வாக்குறுதி பொழியும்
வர்ணங்களின்
அழைப்பிதழ்
பணத்தின் பெயரால்
மானம் விற்றுப்
பிழைக்க ஒரு கூட்டம்
இனத்தின் பெயரால்
கதிரை ஆசை பிடித்து
அலையும்
இன்னோர் கூட்டம்
மீண்டும் எங்கள்
வரலாற்றின்
ஆரம்பப் புள்ளிகளின்
காட்சி அரங்கேற்றங்கள்
விக்கினங்கள் தீருமா
குருதி சிந்தியவரின்
பசி மறந்த தேசத்தில்
இன்று
சுருதி மாறிப்போன
ராகங்களின் ஆலாபனை
இப்போது
புரிகிறது
நாங்கள் ஏன்
மீண்டும் மீண்டும்
இப்படியேதான்
இருக்கிறோம் என்று......

— புலோலியூர் - வேல்நந்தன்



சூரியகாந்தி
உதயன் 18 08 2013

# புலிகள் போ
# தமிழ்க் கூட்

நேர்காணல்
ஆர்.சனத்



**தமிழ்தேசியக் கூட்டமைப்பு சிங்கள - தமிழ் எதிர்ப்பு கொள்கையில் இருந்து கொண்டு, இனவாதத்தின் பக்கம் செயற்படுகின்றது. இதேநிலைப்பாட்டில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அந்தக் கட்சி கருத்துகளை வெளியிடுகின்றது.மறுபக்கம் தமிழ் நாட்டில் தமிழகத்தில் சில அரசியல் வாதிகளும் இனவாத கருத்துகளை வெளியிடுகின்றனர். இவை அனைத்தும், மீண்டும் பிரிவினை வாதம் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தை தெற்கில் உருவாக்கியுள்ளன. இவ்வாறு தெரிவிக்கிறார் பேராசிரியர் திஸ்ஸவிதாரண. இதுதொடர்பாக அவர் உதயனுக்கு வழங்கிய விரிவான செவ்வி இங்கே பிரசுரமாகிறது.**

**கேள்வி:** வடக்குத் தேர்தல் காரணமாகவே13 ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளும் திட்டத்தை அரசு ஒத்திவைத்துள்ளது என்றும், தேர்தல் முடிவடைந்ததும் 13 நிச்சயமாக மாற்றம் ஏற்படுத்தப்படும் என்றும் கூறப்படுகின்றதே?

**பதில்:** அவ்வாறு இல்லை. 13இல் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற யோசனைத் திட்டத்தை அமைச்சர்கள் சிலர் முன்வைத்தபோது அதற்கு எதிராக நாம் செயற்பட்டோம்.

அதுமட்டுமல்ல இடதுசாரிகள் என்ற அடிப்படையில் அமைச்சரவையிலுள்ள சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களின் ஆதரவையும் திரட்டினோம்.

இதனால் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொள்வதில் அரசுக்கு சிக்கல் ஏற்பட்டது. அதன்காரணமாகவே மேற்படி யோசனை திட்டம் அமுலுக்கு வரவில்லை.

**கேள்வி:** அப்படியானால், தேர்தல் முடிவடைந்த பின்னர்கூட 13 இல் மாற்றம் வராதா?

**பதில்:** திருத்தங்கள் செய்யப்படவேண்டுமானால் அது நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் ஊடாகவே இடம் பெறவேண்டும். இதுவே எமது கருத்தாகும்.

இதன் நிமித்தமே 13 இற்கு சார்பான தரப்பினரின் கோரிக்கையின் பிரகாரம் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

**கேள்வி:** அனைத்துக்கட்சி குழுவின் பரிந்துரைகள் இருக்கின்றன. இந்நிலையில் மீண்டும் எதற்காக அனைத்துக் கட்சிகளும் பங்கேற்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு? சர்வகட்சி குழுவுக்கும் தெரிவுக்குழுவுக்கும் இடையில் அப்படி என்னதான் வித்தியாசம் இருக்கப்போகின்றது?

**பதில்:** அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழு பொதுவானதொரு இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளது. எனவே, அந்த இடத்திலிருந்து தெரிவுக்குழுவின் செயற்பாடுகளை முன்னெடுக்கலாம். அத்துடன், குறித்த குழுவின் சிபாரிசுகளில் உள்ள குறைநிறைகளையும் ஆராயலாம்.

குறிப்பாக சர்வக்கட்சிப் பிரதிநிதிகள் குழு 21 யோசனைகளை முன்வைத்தது. அவற்றுள் ஐந்து பரிந்துரைகள் சில திருத்தங்களுடன் மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் மேற்படி குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை ஜனாதிபதி ஏற்றுள்ளார் என்பது புலனாகின்றது.

ஏனைய சிபாரிசுகள் தொடர்பில் இன்னும் எதுவும் நடைபெறவில்லை. எனவே, அவை தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் ஆராயப்பட்டு முடிவொன்று எடுக்கப்படவேண்டும்.

**கேள்வி:** நீங்கள் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இடம்பெறவில்லை. அப்படியானால் இது எப்படி சாத்தியமாகும்?

**பதில்:-** அங்கத்தவராக நான் இல்லாத போதிலும், கோரிக்கைவிடுத்து தெரிவுக் குழுவுக்குச் சென்று கருத்துகளை முன்வைப்பேன்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு எனது யோசனைத் திட்டங்களை உள்வாங்க வேண்டும் என்பதற்காக பிரதியொன்றை ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பி வைத்துள்ளேன். அது பகிரப்பட்டு தற்போது அனைவரும் அதை வாசித்துக் கொண்டிருக்கின்றனர்.

எனவே, எதுவும் முடியாது என்றில்லை.

**கேள்வி:** எனினும், தெரிவுக்குழுவானது காலத்தை இழுத்தடிக்கும் அரசின் தந்திரம் என எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றனவே...?

**பதில்:-** அவ்வாறு இல்லை. நாடாளுமன்றத்தெரிவுக்குழு யோசனை முன்வைக்கப்பட்டபோது,

'' அனைத்துக்கட்சி குழு பொது இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளது. எனவே, அங்கிருந்து பேச்சுகளை ஆரம்பிப்போம் என்று கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நான் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினேன். ஆகவே, காலத்தைக் கடத்த வேண்டிய தேவை ஏற்படாது.

**கேள்வி:** தமிழர் தரப்பு எதிர்பார்க்கும் தீர்வை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவால் முன்வைக்க முடியுமா?

**பதில்:** இவ்வாறான பிரச்சினைகளின் போது எதிர்பார்ப்பது அப்படியே நூற்றுக்கு நூறுவீதம் நடைபெறும் என நினைக்க முடியாது. எனினும், சகல தரப்பும் பேச்சு நடத்துவதன் மூலமே பொதுவானதொரு தீர்வுக்கு வரலாம் .

உதாரணமாக, அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழு அமைக்கப்பட்டபோது அதில் 17 கட்சிகள் அங்கம் வகித்தன. இறுதியில் 13 கட்சிகள் மாத்திரமே அதில் இடம்பெற்றிருந்தன. மூன்று வருடங்களாகப் பேச்சு நடத்தி நாம் இணக்கப்பாட்டுக்கு வரவில்லையா?

**கேள்வி:** கூட்டமைப்பு இனவாதத்தைப் பரப்புகிறது என்றும் அதன் கொள்கையில்

★ கூட்டமைப்பு யதார்த்த நின
வேண்டும்.

★ அன்று பிரிவினைவாத செ
நடைமுறைப்படுத்துவதற்கு பு
அந்த முயற்சி தோற்கடிக்கப்பட்ட
கருத்துகளை வெளியிடுவதால்
அடையமுடியாது.

★ தற்போதைய புதிய நிலைமை
ளின் பிரச்சினைகளை தீர்ப்பதற்
டும்– எவ்வாறான நடவடிக்கை
டும் என்பது குறித்தே கூட்டமை

★ கிழக்கு மாகாணசபைத் தேர்
வாக்களித்தார்கள்.

★ வடக்குத் தேர்தலில் அரச கூட்
என பிரார்த்திக்கின்றேன். அவ்வா
பெரும் மாற்றம் ஏற்படும்.

★ உள்நாட்டுப் பிரச்சினைகளு
வழங்கமுடியாது. தீர்வுக்கு பெரு
ழைப்பு மிக அவசியம். பெரும்பா
விட்டால் தீர்வை ஒருபோதும் ந

# ன்று பிரிவினைவாதத்தை
# ட்டமைப்பு தூண்டிவிடக் கூடாது

மாற்றம் தேவை என்றும் நீங்கள் யாழில் பேசியிருந்தீர்களே...?

**பதில்:** ஆம். கூட்டமைப்பு யதார்த்த நிலையை உணர்ந்து செயற்படவேண்டும். அன்று பிரிவினைவாத கொள்கைகளை போர் மூலம் நடைமுறைப்படுத்துவதற்கு புலிகள் முய்ன்றனர். ஆனால், அந்த முயற்சி தோற்கடிக்கப்பட்டது. அன்று போன்றே இன்றும் கருத்துகளை வெளியிடுவதால் எவ்வித பிரதிபலன்களையும் அடைய முடியாது.

தற்போதைய புதிய நிலைமையின்கீழ், இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எவ்வாறு செயற்படவேண்டும்- எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என்பது குறித்தே கூட்டமைப்பு சிந்திக்கவேண்டும்.

### சிங்கள - தமிழ் எதிர்ப்பு கொள்கையில் கூட்டமைப்பு

ஆனால், கூட்டமைப்போ சிங்கள - தமிழ் எதிர்ப்பு கொள்கையில் இருந்துகொண்டு, இனவாதத்தின் பக்கம் செயற்படுகின்றது. இதேநிலைப்பாட்டில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அது கருத்துகளை வெளியிடுகின்றது.

மறுபக்கம் தமிழ் நாட்டில் தமிழகத்தில் சில அரசியல் வாதிகளும் இனவாத கருத்துகளை வெளியிடுகின்றனர். இவை அனைத்தும், மீண்டும் பிரிவினைவாதம் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தை தெற்கில் உருவாக்கியுள்ளன.

நிலையை உணர்ந்து செயற்பட

கொள்கைகளை போர் மூலம்
புலிகள் முயன்றனர். ஆனால்,
பட்டது. அன்று போன்றே இன்றும்
தால் எவ்வித பிரதிபலன்களையும்

மையின்கீழ், இலங்கைத் தமிழர்க
தற்கு எவ்வாறு செயற்பட வேண்
கைகளை முன்னெடுக்க வேண்
டமைப்பு சிந்திக்கவேண்டும்.

தேர்தலில் தமிழர்களும் அரசுக்கு

கூட்டணி வெற்றிபெறவேண்டும்
வாறு வெற்றிபெற்றால் தெற்கில்

களுக்கு சர்வதேசத்தால் தீர்வை
பெரும்பான்மை இனத்தின் ஒத்து
பான்மை இனம் ஏற்றுக் கொள்ளா
ம் நடைமுறைப்படுத்த முடியாது.

அத்துடன், மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்கினால், அது பிரிவினைவாதத்துக்கு வழிவகுக்கும் என தெற்கு இனவாதிகளுக்கு காரணம் சொல்வதற்கு இந்தநிலைப்பாடு ஏதுவாக அமைந்துள்ளது.

இரு தரப்பும் இனவாத கோணத்தில் கருத்துகளை வெளியிட்டு அரசியல் நடத்தினால் தீர்வை நோக்கி பயணிக்கமுடியாது.

வடக்கில் தமிழ் இனவாதத்தையும் தெற்கில சிங்கள இனவாதத்தையும் தூண்டிவிட்டு அரசியல் பலத்தை அடைய நினைத்தால் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது.

இதன்காரணமாகவே நான் கூட்டமைப்பு நிலைமையை புரிந்துகொண்டு செயற்படவேண்டும் எனக் கூறியிருந்தேன்.

**கேள்வி:** இல்லை அமைச்சரே...! நிலைமையை உணர்ந்ததன் காரணமாகவே அரசுடன் பேச்சு நடத்துவதற்கு கூட்டமைப்பு முன்வந்தது. ஆனால், அரசு இருதரப்பு பேச்சை குழப்புவதற்கு தெரிவுக்குழுவை நியமித்தது என்ற கருத்து நிலவுகிறதே?

**பதில்:** அதுதான் சொல்கின்றேன், கூட்டமைப்பு இன்னும் நிலைமையை புரிந்து கொள்ளவில்லை.

ஏனெனில், அரசியல் கட்சிகள் ஆட்சிக்கு வருவதற்காக வடக்கிலும் கிழக்கிலும் இனவாதத்தைத் தூண்டிவிட்டு தேசிய இனப்பிரச்சினையை ஆயுதமாகக் கையாளுகின்றன.

ஏன்! எங்களுடைய சமசமாஜக் கட்சியை எடுத்துக் கொள்ளுங்கள். அன்று எமது கட்சி பலமாக இருந்தது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு பிரதான எதிர்க்கட்சியாக நாம் இருந்தோம்.

இந்தநிலையில், ஏன் சிங்கள மக்கள் எங்களை விட்டு விலகிச்சென்றார்கள்?

தமிழ், சிங்களம் ஆகிய இருமொழிகளையும் அரச மொழியாக்கவேண்டும் என நாம் கோரினோம். ஆனால், சிங்கள மொழியை மட்டுமே அரசமொழியாக்குவோம் என சுதந்திரக் கட்சியினர் கூறினர். இதனால் எம்முடனிருந்த சிங்கள மக்கள் சுதந்திரக்கட்சியுடன் இணைந்தனர்.

### இணக்கப்பாட்டுக்கு வந்தாலும் தெற்கு இனவாதிகள் குழப்புவர்

இது கட்சியைப் பலப்படுத்திக்கொள்வதற்கு சுதந்திரக் கட்சிக்கு சிறந்த ஆயுதமாக மாறியது. அவ்வாறுதான் வடக்கிலும் தமிழ் இனவாதத்தைத் தூண்டிவிட்டு அதிக நாடாளுமன்ற உறுப்புரிமையை பெற்றுக் கொள்கின்றனர்.

எனவே, இந்த இனவாத நிலைப்பாட்டில் செயற்பட்டால் எம்மால் ஒருபோதும் இனப் பிரச்சினையை தீர்க்கமுடியாது என்பதை மீண்டும் சுட்டிக்காட்டுகின்றேன்.

குறிப்பாக கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி அரசு இணக்கப்பாட்டுக்கு வந்தால்கூட அந்த பேச்சுகளில் கலந்துகொள்ளாமல் வெளியிலிருக்கும் தரப்பு விமர்சிக்கும். அத்துடன், குறைபாடுகளையும் இனவாத நோக்கில் முன்வைக்கும்.

டட்லி -செல்வநாயகம் , பண்டாரநாயக்க- செல்வநாயகம் ஆகிய ஒப்பந்தங்களுக்கு இதே கதிதான் அன்று ஏற்பட்டது. அதனால்தான் சர்வகட்சி குழுவில் அனைத்துத் தரப்பையும் அழைத்துப் பேசினோம்.

சகல தரப்பும் இணைந்து பேச்சு நடத்துவதே சிறந்ததாகும் என்பதால், நாடாளுமன்றத் தெரிவுக்குவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. ஆகியவை பங்கேற்கவேண்டும்.

**கேள்வி:** கூட்டமைப்பின் கொள்கைகளை அரச தரப்பு விமர்சித்தாலும் வடக்கு, கிழக்குத் தமிழர்கள் அவற்றை ஏற்று கூட்டமைப்புக்குத்தானே வாக்களிக்கின்றனர்?

**பதில்:** அப்படியல்ல. கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழர்களும் அரசுக்கு வாக்களித்தார்கள். ஆட்சி அதிகாரம்கூட இறுதியில் எமக்கே கிடைத்தது. எனவே, வடக்கு மக்கள் இம்முறை எவ்வாறானதொரு ஆணையை வழங்குவார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**கேள்வி:** அப்படியானால் வடக்குத் தேர்தலில் எந்தக் கட்சி வெற்றிபெறும்?

**பதில்:** அரச கூட்டணி வெற்றிபெற வேண்டும் என பிரார்த்திக்கின்றேன். அவ்வாறு வெற்றி பெற்றால் தெற்கில் பெரும் மாற்றம் ஏற்படும்.

ஏனெனில், தெற்கு சிங்கள வாக்குகள் மூலமே ஜனாதிபதியால் வெற்றிபெற முடியும் என்றும், அதற்கு வடக்கு வாக்குகள் கிடைக்கா என்றும் தெற்கில் கருத்து நிலவுகின்றது. இனவாதிகள் சிலரே இதைப் பரப்புகின்றனர்.

எனவே, வடக்குத் தேர்தலில் தமிழ் மக்கள் அரசுக்கு வாக்களிப்பார்களாயின், ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றால் தமிழ் மக்கள் தனக்கும் வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கை ஜனாதிபதிக்கு ஏற்படும். அத்துடன், தெற்கு இனவாதிகளின் கருத்துக்களையும் தோற்கடிக்கலாம்.

**கேள்வி:** இடதுசாரி அமைச்சர்களுக்கு அரசுக்குள் 'வெட்டு 'விழுவதாகத் தெரிகிறதே?

**பதில்:** ஆம். சிங்கள இனவாதிகளின் பக்கத்தால் எமக்கு எதிராக சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இருப்பினும் அவற்றுக்கு அடிபணியப் போவதில்லை. அரசுக்குள் இருந்துகொண்டே எமது போராட்டத்தை முன்னெடுப்போம்.

குறிப்பாக இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலிருந்து அதற்கு முன்னிலை வழங்கிச் செயற்பட்டதால் சமசமாஜக் கட்சி பல அசௌகரியங்களுக்கு உள்ளாகியது.

**கேள்வி:** அரசின் புறக்கணிப்பால், இடதுசாரி கட்சிகள் தங்களுடைய கொள்கையிலிருந்தும் பொறுப்புகளிலிருந்தும் விலகிச்செல்கின்றன என்ற குற்றச்சாட்டு உள்ளது. இது உண்மையா?

**பதில்:** இல்லை. உதாரணமாக, சமசமாஜக் கட்சியின் மாநாட்டில் அ்மைச்சர்களான பஷில் ராஜபக்ஷ, பௌசி, ராஜித சேனாரத்ன, தினேஷ் குணவர்தன உள்ளிட்ட பல அமைச்சர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது நான் வெளிப்படையாகவே அரசின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினேன். தீர்வு விடயத்திலுள்ள குறைபாடு, வரிக்கொள்கை, மக்கள் மீதான சுமை அதிகரிப்பு ஆகியவை உட்படப் பல விடயங்கள் அதில் உள்ளடங்கும்.

அரசை சரியானதோர் இடத்துக்குக் கொண்டு வருவதற்கே நாம் முயற்சிக்கின்றோம்.

**கேள்வி:** தீர்வு விடயத்தில் இழுத்தடிப்பு தொடர்ந்தால் சர்வதேசம் தலையிட்டு அதைப் பெற்றுக்கொடுக்க முனையாதா?

**பதில்:** உள்நாட்டு பிரச்சினைகளுக்கு சர்வதேசத்தால் தீர்வை வழங்கமுடியாது. தீர்வுக்கு பெரும்பான்மை இனத்தின் ஒத்துழைப்பு மிக அவசியம். பெரும்பான்மை இனம் ஏற்றுக் கொள்ளாவிட்டால் தீர்வை ஒருபோதும் நடைமுறைப்படுத்த முடியாது.


உள்நாட்டு பிரச்சினைகளை நாமே பேசித் தீர்க்கவேண்டும். வெளிநாட்டிலிருந்து வந்து தீர்வை நடைமுறைப்படுத்த முடியாது. அவ்வாறு செய்யப்போய் அது சாத்தியப்பட்டதுமில்லை.

**கேள்வி:** நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயம் தொடர்பில் உங்கள் கருத்து?

**பதில்:** அவர் இங்கு வந்து உண்மை நிலைவரங்களை பார்வையிடுவது மிகவும் நல்லது என நினைக்கிறேன்.

**கேள்வி:** தமிழ்ப் பெயர் என்பதால் தமிழ்ச் சங்க வீதியைக்கூட திறக்க அனுமதி மறுக்கப்படுகின்றது. இவ்வாறான நிலை இன்னும் நாட்டில் இருக்கிறதே?

**பதில்:** இத்தகைய செயற்பாடுகள் பிழையானவை என்பதை நான் ஒப்புக்கொள்கின்றேன். எனினும் விமர்சனங்களையும் குற்றச்சாட்டுகளையும் மாத்திரம் முன்வைப்பதால் பிரச்சினைகள் தீரப்போவதில்லை என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.





அசை
போ
ஒரு
விடயம்

# நட்பிற்குரிய நாய்கள்

ரம்யன்

வீடுகளில் நாய்களை வளர்ப்பதனால் ஏதும் பயனுண்டா என்று ஓர் அன்பர் கேட்டார்.
நாய்களை பலரும் பல்வேறு நோக்கங்களுக்காக வளர்க்கிறார்கள்.
வீட்டின் காவலுக்கு, வயதானவர்களுக்குத் துணையாக இருப்பதற்கு, வேட்டையாடுபவர்கள் தமக்கு உதவியாக இருக்கும் பொருட்டு என பல காரணங்கள்.
சிலர் ஆடம்பரத்துக்காக உயர் இன வெளிநாட்டு நாய்களை வளர்க்கிறார்கள். இன்னும் சிலர் வெவ்வெறு விதமான நாய்களை வளர்த்து இனப்பெருக்கம் செய்வித்து அதனை ஒரு வியாபாரமாகவே கையாளுகிறார்கள்.
மோப்ப சக்தி அதிகம் உள்ளமையால் இரகசியங்களை, மற்றும் குற்றச் செயல்களைக் கண்டுபிடிக்கவும் சில வகை நாய்களை புலனாய்வாளர்கள் வளர்த்து பழக்குகிறார்கள்.
நாய்களை எவ்வாறு என்ன நோக்கத்துக்கு வளர்த்தாலும் அவைகளை முறையாக வளர்க்க வேண்டும். உரிய காலத்தில் தடுப்பூசிகள் போட்டும், பூச்சி மருந்து வழங்கியும் சரியான இடைவெளிகளில் குளிப்பாட்டியும் கவனிப்பது ஒரு புறமிருக்க, அவைகளுக்கு போசாக்குள்ள உணவுகளை முறையாக வழங்குவதும் தேகப் பயிற்சிகளை வழங்குவதும் அவசியம். அது மட்டுமல்ல நாய்கள் மனிதர்களிடமிருந்து பல குணங்களை உள்வாங்கிக் கொள்கின்றன மற்றும் நல்ல பழக்க வழக்கங்களை பழக்கினால் அவைகளை பிழையின்றி பின்பற்றக்கூடிய தன்மையும் அவைகளுக்குண்டு. இவை எல்லாவற்றுக்கும் மேலாக, மனிதர்களிடம் அரிதாகக் காணப்படும் நன்றி உணர்வு நாய்களுக்கு அதீதமாகவே உண்டு என்பது நிரூபணமாகியுள்ளது.
ஆபத்து வேளைகளில் எஜமானை அல்லது அவரது குழந்தையைக் காப்பாற்றியுள்ள நாய்களைப் பற்றிய கதைகளை அவ்வப்போது செய்திகளாக படிக்கின்றோம்.
நண்பர் ஒருவர் பின்வரும் சம்பவத்தை சமீபத்தில் கூறக் கேட்டேன்.
காலில் காயம் ஏற்பட்டு பெரும் உபாதைக்குள்ளாகியிருந்தேன். ஒரு தினம் வீட்டில் ஒருவரும் இல்லாத சமயம் கால் வேதனை தாங்க முடியாமல் கண்ணை மூடிக் கொண்டு கதறிக் கொண்டு நின்றேன். சற்றுத் தூரத்தில் எங்கள் வளர்ப்பு நாய் படுத்தபடி பார்த்துக் கொண்டிருந்தது. திடீரென்று என் காலில் யாரோ முகத்தை வைத்து மூச்சு விடுவதும், முகத்தால் தடவிக் கொடுப்பது போலவும் உணர்ந்தேன். கண்ணைத்திறந்து பார்த்த போது எங்கள் நாய்தான் என் காலில் தன் முகத்தை வைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். ஆச்சரியம் என்னவென்றால் தாங்க முடியாமல் இருந்த கொதிவலியும் வெகுவாக குறைந்து போயிருந்தது. அதன் பிறகு அந்த நாய் எங்கள் வீட்டில் உள்ள எல்லாருக்கும் பிரியமான நாயாகி விட்டது என்றார்.
இவ்வாறான பல உண்மைக் கதைகள் நாய்களைப் பற்றி கூறப்படுகின்றன.
நாய்களின் எஜமான் விசுவாசம் தொடர்பாக பல கதைகள், கவிதைகள், கட்டுரைகள் பழங்காலம் தொட்டு எழுதப்பட்டு வருகின்றன. அண்மையில் ஆங்கில பத்திரிகையொன்றில் சிறுவர்களுக்ககாக எழுதப்பட்டிருந்த நாய் பற்றிய ஒரு கதை இது.
காஸ்பர் என்பது அந்த நாயின் பெயர். அதனை தம் வீட்டுக்கு கொண்டு வந்து வளர்க்க வேண்டும் என்பது சிறுவன் விசாலின் விருப்பம். ஆனால் அவன் தந்தை குமார் அதற்கு கொஞ்சமும் இடம் தரவில்லை.
இனிமேல் இதைப்பற்றி பேசக் கூடாது என்று 12 வயது விசாலை அவன் தந்தை கடுமையாக எச்சரித்து விட்டார். கடந்த ஒரு வார காலமாக காஸ்பரை வீட்டுக்கு கொண்டு வந்து விட வேண்டும் என்று விசால் பெரு முயற்சியில் இறங்கியிருந்தான்.
ஒரு வருடத்துக்கு முன்னர் விசால் வீதியில் ஒரு நாயை வேகமாக வந்த வாகனமொன்று மோதி கொல்லவிருந்த சமயம் காப்பற்ற முயன்று தன் காலை காயப்படுத்திக் கொண்டான். அதனால் அவனால் தாண்டித் தாண்டித்தான் நடக்க முடிகிறது. விளையாட்டுக்கள் எதிலும் கலந்து கொள்ளவும் முடியாமல் போயிற்று. அதிலிருந்து அவன் தந்தை குமாருக்கு நாய் என்றாலே கொஞ்சமும் பிடிக்காது. அதனால் காஸ்பர் மீது விசால் கொண்டிருந்த அளவு கடந்த பிரியத்தை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை.
காஸ்பர், விசாலின் நண்பன் வருனின் வளர்ப்பு நாய். இவர்கள் மாலை வேளைகளிலும் வாரக் கடைசி நாள்களிலும் விளையாட்டு மைதானத்தில் சந்திப்பார்கள். அந்த வேளைகளில் அருனுடன் வரும் காஸ்பர் விசாலுடனும் நன்கு பழகிக் கொண்டது. குறும்புத் தனமான தன் விளையாட்டுகள் மூலம் அவனை அது மகிழ்விப்பதுண்டு.
இந்த நிலையில்தான் வருணின் தந்தைக்கு வெளியூருக்கு தொழில் நிமித்தம் குடும்பத்துடன் போக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதனால் காஸ்பரை என்ன செய்யலாம் என்ற பிரச்சினை வருனுக்கு ஏற்பட்டது. எனவே விசாலிடம் அதைப்பற்றி கதைத்தான். அவனும் விருப்பத்துடன் சம்மதித்தான். ஆனால் அவன் தந்தைதான் கொஞ்சமும் இடம் தரவில்லை.
இப்படி இருக்கும் போது வருண் குடும்பம் இடம் மாறிச் செல்ல வேண்டிய நாளும் நெருங்கிக் கொண்டிருந்தது. காஸ்பரை என்ன செய்யலாம் என்ற பிரச்சினையும் பெரிதாகிக் கொண்டிருந்தது.

**ஒரு தினம்**

மைதானத்தில் வருனுடன் விளையாடச் சென்ற விசால் வீடு வருவதற்கு நேரமாகி விட்டது. மதிய வேளைகளில் தன் மகனுடனேயே உணவருந்தும் பழக்கமுடைய அவனுடைய அம்மா விசாலைத் தேடிக் கொண்டு புறப்பட்டாள். நோயாளியான அவர் மதிய உணவு அருந்தாமல் வெயிலில் புறப்பட்டமை அவருக்கு ஒத்துக் கொள்ளவில்லை, மயக்கமுற்று வீதியின் ஓரத்தில் சாய்ந்து விழுந்துவிட்டார். அந்த வேளையில் அவ்வழியாக விளையாட்டாக ஓடி வந்த காஸ்பர் விசாலின் தாயார் விழுந்து கிடப்பதைக் கண்டுவிட்டது. புத்திசாலியான காஸ்பருக்கு முன்கூட்டியே விசாலின் தாயாரைத் தெரியும். அது சற்றும் தயங்காமல் அந்த இடத்துக்கு நேர் எதிரில் இருந்த டாக்டர் ஷீலாவின் வீட்டுக்கு ஓடி வாசலில் நின்று குலைத்தது. டாக்டர் ஷீலாவுக்கு அது வருனின் நாய் என்பது தெரியும். அதனால் அது ஏன் குலைக்கிறது என்பதை பார்க்க வெளியில் வந்தார். வீதியின் மற்றக்கரையில் பெண் ஒருவர் விழுந்து கிடப்பதைக் கண்டு அங்கு சென்றார். அந்தப் பெண் விசாலின் தாயார் என்பது அவருக்கு தெரியும் என்பதால் உடனடியாக அவருக்கு சிகிச்சையளித்து மயக்கம் தெளிய வைத்தார். அதற்குள் காஸ்பர் மைதானத்துக்கு ஓடிச் சென்று வருனும் விசாலும் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்து குலைத்தது. காஸ்பர் குலைத்தால் ஏதும் காரணம் இருக்கும் என்பது அவர்களுக்கு தெரியும் என்பதால் அதனை பின் தொடர்ந்தார்கள். அது விசாலின் தாயார் இருந்த இடத்துக்குச் சென்று நின்றது. காஸ்பர் செய்த காரியம் அவர்கள் அனைவருக்கும் ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் கொடுத்தது.

> மோப்ப சக்தி அதிகம் உள்ளமையால் இரகசியங்கள் மற்றும் குற்றச் செயல்களைக் கண்டுபிடிக்கவும் சில வகை நாய்களை புலனாய்வாளர்கள் வளர்த்து பழக்குகிறார்கள்.
> நாய்களை எவ்வாறு என்ன நோக்கத்துக்கு வளர்த்தாலும் அவைகளை முறையாக வளர்க்க வேண்டும்.
> மனிதர்களிடம் அரிதாகக் காணப்படும் நன்றி உணர்வு நாய்களுக்கு அதீதமாகவே உண்டு.

அடுத்த நாள் வெளியூர் சென்றிருந்த விசாலின் தந்தை குமார் வீடு வந்து சேர்ந்த போது காஸ்பரின் வீரச் செயலை அறிந்த அவரும் ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைந்தார். அதன் பேரில் காஸ்பரை தம் வீட்டுக்கு கொண்டு வருவதற்கு சம்மதமும் அளித்தார். நாய்கள் மீது கொண்டிருந்த வெறுப்பையும் கைவிட்டார்.
காஸ்பரை தன் நண்பன் விசாலிடம் விட்டுச் செல்ல கிடைத்தமைக்காக வருனும் மகிழ்ச்சியடைந்தான்.
உலக நண்பர்கள் தினத்தன்று காஸ்பர் விசாவின் வீட்டுக்கு கொண்டு வரப்பட்டது அன்று அங்கு பெரிய விருந்தும் இடம்பெற்றது.

# பில் கேட்ஸ்



## உலகப் பணக்காரன் உருவான கதை

ஒப்பந்தம் என்பதே 'வருங்காலத்தில் நமக்கு உதவியாக இருக்க வேண்டும்'' என்பதற்காகத்தான் போடப்படுகிறது. ஆனால், பில் கேட்ஸின் ஒப்பந்தமோ ஒரு கயிறாக மாறி அவரது கைகளையே கட்டிப் போட்டது. எது, எப்படி இருந்தாலும் பத்தாண்டுகளுக்கு இந்த ஒப்பந்தமே நீடிக்கும்! அதுவரையில் ராபர்ட்ஸ் பணம் பார்த்துக் கொண்டிருக்க, பில்கேட்ஸ் வெறுமனே அந்தக் காட்சியை மட்டும் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?

கவிதை எழுதி பிழைப்பதென்று முடிவு செய்துவிட்ட பிறகு, மரபுக்கவிதை எழுதினால் என்ன? புதுக் கவிதை எழுதினால் என்ன? எல்லாம் ஒன்றுதான்.

மென்பொருள் எழுதிப் பிழைக்க வந்துவிட்ட பிறகு பேஸிக் மொழியை எழுதினால் என்ன? வேறு கணினி மொழிகளை எழுதினால் என்ன? மென்பொருள் எழுதிக் காசு பார்க்க வேண்டும். அதுதானே முக்கியம்!

இந்த முடிவுக்கு வந்துவிட்ட கேட்ஸ், ''வேறு எந்த கணினி மொழியை எழுதலாம்?'' என்று திரும்பிய போது, ஃபோர்ட்ரான் (Fortran) கணினி மொழி அவரது ஞாபகத்தில் பளிச்சிட்டது! கணக்கு சம்பந்தப்பட்ட புரொக்ராம் எழுதுகிறவர்களிடம் இந்த ''ஃபோர்ட்ரான்'' மொழி பிரபலமாக இருந்தது.

பேஸிக்கைக் கொஞ்ச காலத்துக்கு ஓரம்கட்டிவிட்டு, ஃபோர்ட்ரான் கணினி மொழி மென்பொருளை எழுதுவதற்கு கேட்ஸ் தீர்மானித்தார். அதற்கு வசதியாக, பல்கலைக்கழகத்தில் தன்னுடன் படித்தசில திறமையான நண்பர்களை மைக்ரோசொஃப்டில் இணைத்துக் கொண்டார்!



அது முடிந்தவுடன் கோபால் (Cobol) என்கிற வேறொரு கணினி மொழி மென்பொருளையும் மைக்ரோசொஃப்ட் உருவாக்கியது. ''ஃபோர்ட்ரான்'', ''கோபால்'' இவை இரண்டும் 8080 சில்லு பயன்படுத்தும் மைக்ரோ கணினிகளுக்கானவை!

''ஃபோர்ட்ரான்'', ''கோபால்'' இரண்டுமே சந்தைக்கு வந்தபோது ''பேஸிக்'' அளவுக்குப் பிரபலமாகவில்லை; அதனால் போதிய வருவாயும் வரவில்லை! அப்போது தான் கேட்ஸுக்கு பேஸிக்கின் அருமை புரிந்தது.

கேட்ஸ், பால் ஆலன் இட்ட 'பேஸிக்' என்கிற தங்க முட்டை ராபர்ட்ஸ்க்கு மட்டுமே வருமானத்தைக் கொட்டிக் கொடுத்தது! பாவம்! கேட்ஸும் ஆலனும்! அதை வேடிக்கை பார்ப்பதை தவிர வேறு வழி தெரியாமல் விழி பிதுங்கினார்கள்.

''ராபர்ட்ஸிடம் சிக்கி இருக்கும் பேஸிக்கை எப்படி விடுவிப்பது?'' என்று பில்கேட்ஸ் பலமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தபோது அங்கே வந்த, ராபர்ட்ஸ் பில்கேட்ஸின் சிந்தனையைப் பார்த்து விட்டு, ''தம்பி பில்கேட்ஸ், எந்தக் கோட்டையைப் பிடிக்க இந்தச் சிந்தனை?'' என்று கேட்க, அதைக்காது கொடுத்துக் கேளாமல் தன் சிந்தனையில் சீரியஸாக இருந்தார் கேட்ஸ்!

'''ம்ம்... நீ எதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பாய் என்பது எனக்குத் தெரியாதா? இப்போது நான் எடுத்திருக்கும் முடிவைப் பற்றி நீ அறிந்தால், இதை விடச் சீரியஸாக சிந்திக்க வேண்டியிருக்கும்'' என்று வழக்கம் போல ஒரு வெடிகுண்டை எடுத்து வீசினார்.

பில்கேட்ஸ் எரிச்சலுடன் தனது சோடாபுட்டி கண்ணாடியைத் தூக்கி விட்டுக்கொண்டு, 'உன் முடிவு என்ன?' என்று கேட்பதுபோல் ராபர்ட்ஸை ஏறிட்டார்

''நான் இந்த எம்.ஐ.ரி.எஸ். நிறுவனத்தை விற்றுவிட்டு, என் சொந்த ஊருக்குப் போகப் போகிறேன்'' என்றார் சிரித்துக்கொண்டே!

அதிர்ந்து போன பில்கேட்ஸ், ''ஐயோ, நானும் எனது மைக்ரோசொஃப்ட்டும் இங்குதானேகுடித்தனம் நடத்திக்கொண்டிருக்கிறோம் நீங்கள் 'எம்.ஐ.ரி.எஸ்.' ஐ விற்றுவிட்டால் நான் எங்கே போவது?'' என்றார்.

''எங்கேயும் போ, எக்கேடும் கெட்டுப்போ, எனக்கென்ன வந்தது?'' என்று கூலாகச் சொல்லி விட்டு நடையைக் கட்டினார் ராபர்ட்ஸ்.

''இந்த ராபர்ட்ஸ் நம்மை இந்த அளவுக்குப் படுத்துகிறானே'' என்று அழாத குறையாகத் தனது அடுத்த கட்ட நடவடிக்கையைப் பற்றி அதி தீவிரமாக ஆராயத் தொடங்கினார் கேட்ஸ்!

ராபர்ட்ஸ் தனது எம்.ஐ.ரி.எஸ். நிறுவனத்தை விற்பது கூடப் பில்கேட்ஸுக்கு பயந்துதான். பேஸிக்கை வேறு நிறுவனங்களுக்கும் விற்கத் துணிந்துவிட்ட பில்கேட்ஸை எத்தனை நாளைக்குத் தான் சமாளிக்க முடியும்? ஏதாவது தகிடுதத்தம் பண்ணி விற்றுத் தொலைத்துவிட்டால் அந்தக் நிறுவனக்காரனும் பேஸிக்கைப் பயன்படுத்திக் கணினிகளை விற்க ஆரம்பித்தால் அப்புறம் 'அல்டெய்ர்' கணினி யார் வாங்குவார்கள்?''

''போட்டி நிறுவனங்களால் எம்.ஐ.ரி.எஸ். பாதிக்கப்படுவதற்கு முன்பு, இப்போதே நல்ல விலைக்கு விற்று விடுவதுதான் புத்திசாலித்தனமாக இருக்கும்'' என்கிற முடிவுக்கு வந்துவிட்டார் ராபர்ட்!

அதன்படி பெர்டெக் (Pertec) என்ற நிறுவனத்திடம் ஆறரை மில்லியன் டொலர்களுக்கு விற்றுவிட்டு ... டியே பில்கேட்ஸுக்கும் 'டாட்டா' கா... சொந்த ஊருக்குப் பறந்தார்.

''அ... நம்மைப் பிடித்திருந்த சனியன் தொ...து'' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்ட பில்... அன்றே புறப்பட்டுப் போய் பழைய ஆள்...ா எல்லாம் சந்தித்து, ''வாருங்கள், பே...க உங்களுக்கு விற்பதற்கு எனக்கு இப்போது எந்தத் தடையும் இல்லை'' என்று கூறித் தமது அலுவலகத்தில் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருந்தார்.

திடீரென்று அங்கே நுழைந்த புதிய முதலாளி பெர்டெக், ''தம்பி பில்கேட்ஸ் (1) நீ பேஸிக்கை விற்கப் போகிறாயாமே'' என்று கேட்டார்.

''ஆமாம்.. நான் எழுதிய பேஸிக்கை விற்கப் போகிறேன் இது என் உரிமை''

''அது எப்படி முடியும்? பத்தாண்டுகளுக்கு இந்தப் பேஸிக்கை நாங்கள்தான் பயன்படுத்த முடியும் இதோ பார்... நீ கையெழுத்திட்ட ஒப்பந்தம்'' என்று ஒப்பந்தப் பத்திரத்தை பில்கேட்ஸின் முன்பு தூக்கிப் போட்டார்!

அதே ஒப்பந்த கத்தி! ஆனால் ஆள்தான் வேறு! முன்பு எம்.ஐ.ரி.எஸ். இப்போது பெர்டெக்.

''நீ ஒரு ஏடாகூடமான ஆள் என்று ராபர்ட்ஸ் சொன்னது சரியாகத்தான் இருக்கிறது. ஒப்பந்த காலம் முடியும் வரை நல்ல பிள்ளையாக நடந்து கொள்'' என்று அன்போடு மிரட்டினார்.

பில்கேட்ஸின் கோபம் எல்லை கடந்தது. ''ஒப்பந்தமாவது... மண்ணாங்கட்டியாவது... என் பேஸிக்கை யாருக்கு வேண்டுமானாலும் விற்பேன்... உன்னால்ஆனதைப் பார்த்துக் கொள்'' என்று கூறி விரட்டியடித்தார்.

நிலைமை கைமீறிப் போய்விட்டதை உணர்ந்த பெர்டெக் ஒப்பந்த பத்திரத்தை எடுத்துக் கொண்டு நீதிமன்றத்துக்குச் சென்று கேட்ஸ் மீது வழக்குத் தொடர்ந்தார். அந்தப் பேஸிக்கை மற்றவர்களுக்கு விற்க, மைக்ரோசொஃப்டுக்கு தடை விதித்தது நீதிமன்றம்!

அதைக் கண்டு சளைக்காத கேட்ஸ், மேல் முறையீடு செய்தார். இரு தரப்பு விவாதங்களையும் கேட்ட நீதிபதி, ''அந்தப் பேஸிக்கை பெர்டெக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம்; அதே சமயம் அதை யாருக்கு வேண்டுமானாலும் மைக்ரோசொஃப்ட் விற்றுக்கொள்ளலாம்'' என்றும் தீர்ப்பு வழங்கியது!

தமது தங்க முட்டை தனக்கே கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில், தம் சட்டைக் கொலரைத் தூக்கி விட்டுக் கொண்டு, விற்பனைக் களத்தில் குதித்தார் பில்கேட்ஸ்! *(அடுத்த வாரம் தொடரும்...)*

> ராபர்ட்ஸிடம் சிக்கி இருக்கும் பேஸிக்கை எப்படி விடுவிப்பது? என்று பில்கேட்ஸ் பலமாகச் சிந்தித்துக் கொண்டிருந்த போது அங்கே வந்த ராபர்ட்ஸ் பில்கேட்ஸின் சிந்தனையைப் பார்த்து விட்டு, தம்பி பில்கேட்ஸ், எந்தக் கோட்டையைப் பிடிக்க இந்தச் சிந்தனை? என்று கேட்க, அதைக் காது கொடுத்துக் கேளாமல் தன் சிந்தனையில் சீரியஸாக இருந்தார் கேட்ஸ்!

### நறுக்கப்பட்ட வால்



நன்றி உள்ள பிறவி என்று - உனை
நாலு பேர் சொன்னால்...
நம்புவேனா நான்...
வால் பிடித்து வாழுகின்ற
வலிமையற்ற மனங்களைப் போல் - நீயும்
வாலாட்டித் திரிவது உன்
வயிற்றை நிரப்பத்தான் என்பதை
தெரிந்து கொண்டதால்தான்
ஒட்ட நறுக்கி விட்டேன்
உனது வாலை!

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

18.08.2013 முதல் 24.08.2013 வரை

தருபவர் - வித்தியா



**மேடம்**- பணவரவுக்கேற்ப, செலவுகளை ஒழுங்கு செய்வதால், சிரமம் அணுகாமல் தவிர்க்கலாம். பூர்வீக சொத்தில் பெறுகிற வருமானத்தின் அளவு குறையும். எதிர்மனப்பாங்கு உள்ளவரிடம் பிடி கொடுக்காத வகையில் முன்யோசனையுடன் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் அதிக உழைப்பால், நடைமுறையில் பெறுகிற நன்மைகளைப் பாதுகாப்பது அவசியமாகும். பணியாளர்கள், ஒருமுகத்தன்மையுடன் செயல்படுவதால் பணி இலக்கு நிறைவேறும்.



**இடபம்**- வாழ்வில் முன்னர் செய்த பணிகளுக்கான நன்மைகள் வரிசையாக வந்து சேரும். மனதில் உற்சாகமும் செயல்களில் புதிய பரிமளிப்புத் தன்மையும் உண்டாகும். பொது நலப்பணியிலும் ஓரளவு ஆர்வம் கொள்வீர்கள். வழக்கு விவகாரத்தில் அனுகூலத் தீர்வு கிடைக்கும். பணியாளர்கள் அதிக வேலை வாய்ப்பு, சலுகைப்பயன் பெறுவர். மாணவர்கள், ஞாபகத்திறன் வளர்ந்து கல்வியில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.



**மிதுனம்**-பணிகளில் தகுந்த முன் யோசனையுடன் ஈடுபடவேண்டும். பிறர் பார்வையில் தெரியும் ப்டி அதிகளவில் பணம் செலவு செய்வதைத் தவிர்க்கவும். வாழ்வியல் நடைமுறையில் பெறுகிற நன்மைகளை அதிக அக்கறையுடன் பாதுகாப்பது அவசியம். பகைமைக் குணம் உள்ளவரிடம் எதிர்வாதம் பேசாமல் விலகுவதால் சிரமத்தைத் தவிர்க்கலாம். இல்லறத்துணை குடும்ப நலன் சிறக்க நல்ல ஆலோசனை சொல்வார். தொழிலில் உருவாகிற குளறுபடியை தாமதமின்றி சரி செய்வது உரிய நன்மை பெற உதவும்.



**கடகம்**- உங்கள் எண்ணம் செயலில் சிறியளவில் முரண்பாடு ஏற்படலாம். பிறரிடம் பேசும்போது நிதானத்தைப் பின்பற்ற வேண்டும். உடன் பிறந்தவர் ஆதரவாக நடந்து கொள்வர். நிர்ப்பந்த பணக்கடனில் ஓரளவு செலுத்துவீர்கள். இல்லறத்துணையின் ஆறுதல் வார்த்தை, மனதில் நம்பிக்கை தரும். பணியாளர்கள் தொழில் நுட்ப அறிவைப் பயன் படுத்துவது பணியை எளிதாக்க உதவும். மாணவர்கள் பாதுகாப்பு குறைந்த இடங்களில் செல்ல வேண்டாம்.



**சிங்கம்**- பணிகளை இலகுவாக நிறைவேற்றுவீர்கள். சமூக அந்தஸ்து பெற்றவர்களின் அன்பும் உதவியும் அதிர்ஷ்டவசமாகக் கிடைக்கும். எதிர் மனப்பாங்குடன் உங்களிடம் பழகுபவரையும் அன்பு பாராட்டி இனிய வார்த்தைகளால் கவருவீர்கள். உத்தியோகத்தர் பணியாளர்களை ஊக்கப்படுத்தி திட்ட இலக்கை நிறைவேற்றுவர். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பர்.



**கன்னி**-அடுத்தவரின் ஆடம்பர நடைமுறைகளைப் பார்த்து தானும் அவ்வாறு செயற்பட விரும்புவார்கள். இதனால், சேமிப்பு பணம் செலவு ஆவதும், சிறியளவில் பணக்கடன் பெறுவதுமான சூழ்நிலை உருவாகலாம். கவனம் தேவை. பொது விடயங்களை அறிவதிலும் ஆர்வம் வளரும். உங்கள் சொல்லுக்கு மதிப்பு தருபவர்களிடம் மட்டும் சரளமாகக் கருத்துப் பர்மாற்றம் மேற்கொள்ளவும். தொழிலில் வளர்ச்சி பெற நண்பரின் உதவி கிடைக்கும். உத்தியோகத்தர் சிறப்பாகப் பணிபுரிந்து ப்ராட்டு பெறுவர்.




**துலாம்**- முக்கியமான பணி நிறைவேறுவதில் இருந்த தாமதம் இனி விலகும். தொழிலில் வியத்தகு அளவிலான முன்னேற்றம் உருவாகும். பிறர் மனம் அறிந்து பேசுவீர்கள். இல்லறத் துணை விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். அதிக மூலதனத்துடன் தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணிபுரிவீர்கள். மாணவர்கள் விளையாட்டைக் குறைத்து படிப்பதில் ஆர்வம் கொள்வர்.



**விருச்சிகம்**-நிறைவேற்ற வேண்டிய முக்கியமான பணியை மறக்க நேரிடலாம். எந்தச் செயலையும் உரிய பரிசீலனையுடன் மேற்கொள்வதால் மட்டுமே முழுமையான பயன் கிடைக்கும். நண்பர், உறவினரின் கருத்துகளை விமர்சிக்க வேண்டாம். எதிரியால் வருகிற சிரமத்தை மாற்று உபாயத்தால் சரி செய்வது அவசியம். இல்லறத்துணையிடம் வாக்குவாதம் வராத அளவுக்கு நிதானமாகப் பேசுவது குடும்ப ஒற்றுமையைப் பாதுகாக்க உதவும். பணியாளர்கள் பணிகளில் குளறுபடி வராத அளவில் செயற்பட வேண்டும். மாணவர்கள், வெளியிடம் சுற்றுவதை குறைப்பதால் படிப்பதில் கவனம் வளரும்.




**தனுசு** -மனதில் இரக்க சிந்தனையுடன் செயற்படுவீர்கள். பேசுவதில் தத்துவமும் ஆன்மிக கருத்தும் நிறைந்திருக்கும். வாழ்வில் கூடுதல் வளம் பெற, புதிய இலக்குகளை நிர்ணயித்து பணிபுரிவீர்கள். உங்களுக்கு எதிர்மறையாகச் செயற்பட்டவர் இடம் மாறிப்போகிற நன்னிலை உண்டு. இல்லறத்துணையின் நம்பிக்கைகளுக்கு குறைவு வராத அளவில் நடந்து கொள்வது நல்லது. பணியாளர்கள் திட்டமிட்ட இலக்கு நிறைவேற முழு மனதுடன் பணிபுரிவர். மாணவர்கள் பாடங்களை ஆர்வமுடன் படித்து சிறந்த தேர்ச்சி பெறுவர்.



**மகரம்**-எதிர்வரும் பணிகளுக்காக நீங்கள் தகுந்த திட்டங்களை உருவாக்குவது அவசியம். இல்லறத்துணை வழி சார்ந்த உறவினர்கள் அதிக அன்பு பாராட்டுவர். தொழிலில் போட்டி அதிகரிக்கும். பணியாளர்கள் அதிக அக்கறையுடன் பணிபுரிவது சராசரி பலனைப் பாதுகாக்க உதவும். மாணவர்கள் சக மாணவர்களுடன் சுமூக நட்பு பாராட்டுவர்.



**கும்பம்** - மனதில் ஆன்மிக நம்பிக்கை வளரும். கலை உணர்வும் வார்த்தைகளில் வசீகரமும் கலந்திருக்கும். பணவரவு அதிகம் பெறுவதற்காக உருவாகும் வாய்ப்புகளை தவறாமல் பயன்படுத்துவீர்கள். எதிர்ப்பாளரின் தொந்தரவு அணுகாத சுமுக வாழ்வு அமையும். இல்லறத்துணை குடும்ப நற்பெயரை பாதுகாத்து உறுதுணையாகச் செயற்படுவார். உத்தியோகத்தர் சிறப்பாகப் பணிபுரிந்து நிர்வாகத்திடம் நற்பெயர் பாராட்டுப் பெறுவர்.



**மீனம்**- தகுதிக்கு மீறிய செயல்களில் ஈடுபடக்கூடாது. எதிரியின் கெடு செயலை மாற்று உபாயத்தால் சரி செய்ய வேண்டியதிருக்கும். இல்லறத்துணை உங்களின் கருத்துகளை எதிர்மறையாகப் புரிந்து கொள்வர். பணியாளர்கள் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்பட நேரிடலாம். கவனம் தேவை. மாணவர்கள் வெளியிடம் சுற்றுவதை குறைப்பதால் படிப்பில் கவனம் வளரும்.



# நீதி தேவதையே இங்கே வா.....

சேனைப்பிலவுக்குள் பேய் புகுந்தது-தன்
நகங்களின் கோரத்தைக் காட்டிச் சென்றது

பசியோடு பள்ளிவிட்டு வந்த
பாலகியின் முன் பாய்ந்தது-தன்
பசியகற்றி பற்றையுள் எறிந்து
பறந்தது மயங்கி அந்த
மழலை அழுதது-தன்
உயிர் காக்க யார் வருவார்
எனத் துடித்தது....

முனகல் ஓசை கேட்டிடவே
ஓடிச் சென்றனர்
முடிந்த கதை கண்டு பதை பதைத்தழுதனர்
பாதகத்தைச் செய்தவன் யார்!
பார் அறியப் பரந்தாமனே- நீ........சொல்

வெண் சிறகை உடைத்தவன் யார்
வெளியுலகறியலை
செங்குருதி பாயவிட்டவன் யார்?
சேயறியுமா? நெஞ்சமெலாம் எரிகிறதே
நேயமற்ற செயல் கண்டு கொதிக்கிறதே

வஞ்டசமற்ற பிஞ்சறியுமா- நஞ்சை
வஞ்சகனே உன் பசி தீர்க்க
ஏதுமறியா பிஞ்சா கிடைத்தது....
எப்படி உன் மனம் துணிந்தது-நீ
பேயல்ல பிசாசல்ல பேய்க்குள்
பேயைத் தின்னும் பேய் என்றே
எம் மனம் எண்ணத் தோன்றுகிறது

குருத்தைக் கிழித்த துஷ்டனே- உன்
கழுத்தை நீயே வெட்டிக்கொள்
மொட்டைக் கருக்கிய-மூடனே உன்
தலைக்கு மொட்டை அடித்து
முள்ளைக் குத்திக்கொள்!
மடையனே-மூடனே!
எப்படி எப்படி உன்னால்
அப்படிச் செய்ய முடிந்தது

பார்த்தவர் அழுகிறார்
பார் அழுகிறது-நீதி தேவதையே
நிமிஷ தாமதம் வேண்டாம்
எழுந்து வா! நீதி தா!
நீசன் செயலுக்கு நீதி சொல்-எம்
வீதியில் குழந்தைகள் குமருகள் உலவ
வழியைச் சொல்.... வா அம்மா! வா.........

பழநிலா



# வேர்விட்டு விருட்சமாவோம்

சாதனைகள் புரிய உவப்பு
இருப்பினும், சிகரங்கள் தொடும்
தெம்பு இருப்பினும்,
நமது உணர்வுகளும், கனவுகளும்
தொண்டைக் குழிக்கும், நெஞ்சுக்
குழிக்குமான இடைவெளிகளில்
அமிழ்ந்து போகும்
அநியாயம் இன்னும்
எத்தனை காலங்கள் தொடரும் ?
கலாசார பதிவுகளுக்காக
நமது காலடித்தடங்கள்
அழிக்கப்படுவதை இன்னும்
எத்தனை நாள் விட்டு
வைத்திருப்போம்...
கை தூக்கி விட காத்திருந்தால்
காலம் நமக்காய் தாமதிக்காது...
நமக்கான பாதையை நாமே
வகுப்போம்.. முட்களில் நடப்பது
நமக்கென்றும்
புதிதல்ல... எது நமது உரிமை,
எது நமது சுதந்திரம் என்ற
விழிப்புணர்வு அற்ற பெண்களே
விழித்துக்கொள்வோம்,
எல்லாருக்கும் எல்லாம்
மனமாய், நிறைவாய்
கிடைப்பது தான் சுதந்திரம்.
அதைக் கேட்டுப்பெறுவது தான்
நமது உரிமை. கேட்காமல் எதுவும்
கிடைக்காது, தட்டாமல் எதுவும்
திறக்காது, திறக்காத கதவுகளை
உடைப்போம். மண்ணில் போட்டு
நசுக்கினாலும், வேர் விட்டு
விருட்சமாவோம்.... வாழ்வோ தாழ்வோ

# எப்போது ஆணுக்கு பெண் அடிமையானாள்?

சுபானுஜன் சாரங்கி

மனித குல வரலாற்றில் ஆரம்பத்தில் நிலவியது புராதன சமுதாயம். அச்சமுதாயம் ஒரு பொதுவுடைமை சமுதாயமாகவே இருந்தது. மக்கள் கூட்டாக சேர்ந்து வேட்டையாடியதை சமமாக பங்கிட்டு வாழ்ந்தார்கள். வேட்டையாடும் கூட்டத்துக்கு தலைமை தாங்கும் பெண்ணே அந்த இனக்குழுவின் தலைமை. பெண்ணின் கட்டுப்பாட்டில் தான் அந்த இனக்குழுவே இயங்கும். நம் நாட்டில் உள்ள கிராமங்களில் இன்றும் பெண்களே குல தெய்வமாக இருக்கின்றனர். இதற்கு காரணம் குல தெய்வம் என்று சொல்லப்படும் அந்த பெண்ணே அந்த குலத்தின் தலைவியாக ஒரு காலத்தில் இருந்திருப்பாள். இதுவே நம் நாட்டிலும் பல குலங்களுக்கும் இனக்குழுவிற்கும் பெண்ணே ஆட்சிபுரிந்தாள் என்பதற்கு சான்று. புராதன சமூகத்தில் பெண்ணே தலைவியாக இருந்தாள் என்பதால் அந்தக்காலத்தில் ஆணை பெண் அடிமையாக பாவித்தாள் என்று எண்ண முடியாது. பெண்ணே ஆட்சி புரிந்தாலும் ஆணுக்கும் சமமான உரிமை குழுவில் இருந்தது. அங்கே ஆணடிமைத்தனமும் பெண்ணாதிக்கமும் நிலவவில்லை.

ஒருவரை பார்த்து இவர் யாருடைய மகன் என்றால் இவர் இன்னாருடய மகன் என்று தந்தையின் பெயரை வைத்து அடையாளப்படுத்தி சொல்வது இன்றைய வழக்கம். ஆனால் புராதன பொதுவுடைமை சமுதாயத்தில் ஒருவரை இன்னாரின் மகன் என்று தாயின் பெயரை வைத்து அடையாளப்படுத்தி சொல்வதே வழக்கமாயிருந்தது.

துணையைக் கூட பெண்ணே தேர்வுசெய்தாள்

காலப்போக்கில் படிப்படியாக குழுக்களும் குலங்களும் வளர வளர வேட்டைசெய்யும் இடத்தையும் உணவையும் மாற்றவேண்டிய தேவை ஏற்பட்டது. அதனால் மலைகளில் இருந்து காடுகளில் இருந்து ஆறுகளை நோக்கி இடம்பெயர வேண்டி இருந்தது. ஆற்றங்கரைகளில் விவசாயம் செய்தனர். விவசாய உற்பத்தியில் ஆரம்பத்தில் பெண்ணே இடம்பெற்றாள். விவசாயத்தில் ஆணும் இடம் பெற்றான். விவசாயம் நிரந்தரமான உற்பத்தியானது. பெண்கள் வீடுகளில் கூடைநெய்தல், கைவினைப் பொருள்கள் செய்தல், சமைத்தல் போன்ற வேலைகளில் கவனம் செலுத்தினர். ஆணும் பெண்ணும் சமமாகவே வாழ்வை நடத்தி வந்தனர். ஆணுக்கும் பெண்ணுக்கும் வேலைப்பிரிவினை என்பது நிர்ணயிக்கப்படவில்லை. விவசாய உற்பத்தி என்பது பெருகப் பெருக மதிப்பும் பெருக ஆரம்பித்தது. அந்தச் செல்வங்களின் அதாவது உபரிமதிப்புக்கான உரிமை என்பது உற்பத்திக்கருவியைச் சொந்தமாக வைத்திருந்த ஆணையே சாரும் நிலை ஏற்பட்டது. உபரி மதிப்பு சமுதாயத்தில் ஏழை பணக்காரன் என்னும் வர்க்க வேற்றுமைகளை உருவாக்கியது போல் குடும்பத்தில் ஆண் ஆதிக்கத்தையும் ஏற்படுத்தியது. ஆணுக்கான வேலை பெண்ணுக்கான வேலையென்று வேலைப்பிரிவினை தோன்றி நிரந்தரமானது. அதாவது ஆண் வேலைக்கு செல்லவேண்டும். பெண் வீட்டு வேலைகளான பெருக்குதல், சமைத்தல், உபசரித்தல் என்னும் நிரந்தரமான வேலைகளைச் செய்ய வேண்டும். சமூகத்தில் வர்க்க வேறுபாடு என்று உருவானதோ அன்றே பெண்ணடிமைத்தனமும் ஆரம்பமானது.

இதில் சீதனக் கொடுமை வேறு அவர்களை வாட்டுகின்றது.

ஒரு விடயத்தைஆணாதிக்க சமுகம் சிந்தித்து பார்க்க வேண்டும்.

ஒரு வீட்டில் சமையல் செய்யும் வேலைக்கு ஒருவரை நியமித்தால் அவருக்கு உணவும் கொடுத்தும் சம்பளம் கொடுக்கிறார்கள்.

துணி துவைக்கும் வேலைக்கு ஒருவரை நியமித்தால் அவருக்கும் சம்பளம் கொடுக்கிறார்கள்.

பாத்திரம் தேய்த்து வீட்டை தூய்மைப்படுத்தும் வேலைக்கு ஒருவரை நியமித்தால் அதற்கும் சம்பளம் கொடுக்கிறார்கள்.

மேலே சொன்ன அனைத்து வேலைகளையும் ஒரு பெண் மனைவி என்னும் பெயரில் தன் வீட்டில் செய்யும் போது அந்த உழைப்புக்கு ஏதாவது சம்பளமாக கொடுத்திருப்போமா?

ஒவ்வொரு பெண்ணும் தான் செய்யும் வேலைகளுக்கு வீட்டில் கூலி கேட்டால் இந்த ஆணாதிக்க சமூகம் பொறுத்துக்கொள்ளுமா? நிச்சயமாக முடியாது. அதற்கு மாறாக தான் பெண்களுக்கு உணவு போடுகிறோமே, துணிகள் வாங்கிக் கொடுக்கிறோமே என்று புத்திசாலித்தனமாய் தோன்றலாம். ஆனால் பெண்களின் உழைப்புக்கு முன்னால் அவர்களுக்கு கிடைக்கும் இந்த விடயங்கள் எல்லாம் மிக சொற்பமே!

முதலாளி ஒரு தொழிலாளியின் உழைப்பை எவ்வாறு சுரண்டுகிறானோ அவ்வாறே ஒரு ஆணும் பெண்ணின் உழைப்பை சுரண்டுகிறான்.

குடும்பங்களில் ஏற்படும் பிரச்சனைகளை ஆராய்ந்து பார்த்தால், கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள முரண்பாட்டு என்பது முதலாளிக்கும் தொழிலாளிக்கும் உள்ள முரண்பாட்டைப் போன்று இருக்கும். தொழிலாளி சுரண்டப்படுவதால் முரண்பாடு இயல்பாய் எழுகின்றது. அதேபோல் குடும்பத்தில் அதிகாலை முதல் நள்ளிரவு வரை வேலைப்பார்க்கும் மனைவியின் உழைப்புச் சுரண் டல் இயல்பிலேயே கணவனிடம் முரண்பாட்டை ஏற்படுத்துகின்றது. உழைப்புச்சுரண்டலினால் ஏற்படும் முரண்பாடுகளின் மறுவடிவங்களாகத்தான் குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றன.

சில குடும்பங்களில் பெண்கள் ஆண்களுக்கு செய்யும் வேலைகளைத் தங்கள் கடமைகள் என்றும் இறைவன் காட்டிய வழி என்றும் எண்ணி அதை மனமுவந்து ஏற்றுக் கொள்கின்றனர். ஆனாலும் அப்படிப்பட்ட குடும்பங்களில் அவ்வப்போது முரண்பாடுகள் வெளிப்படுகின்றன.

குடும்பங்களில் இம்முரண்பாடுகள் தீர்க்கப்பட வேண்டுமாயின், சமூகத்தில் உள்ள வர்க்க முரண்பாடுகள் தீர்க்கப்படவேண்டும். சமூகத்தில் நிலவும் உறவுகளே குடும்ப உறவுகளில் பிரதிபலிக்கின்றன. பெண் தன் உரிமையை பெற வேண்டுமானால், இந்த பிற்போக்கான சமூகத்துக்கெதிராக போராடவேண்டும். சமூகத்தை எதிர்த்து போராடாமல் வெறுமனே குடும்பங்களில் மட்டும் பெண்ணுக்கான உரிமை என்பது சாத்தியமில்லை.

ஒரு நாட்டில் புரட்சி என்பது வெறும் வர்க்கத்தை எதிர்த்து நடப்பது மட்டும் கிடையாது. பெண்ணுரிமையையும் உள்ளடக்கியது தான் உண்மையான புரட்சி.

அதனால் தான் சமுதாய விடுதலை என்பது பெண் விடுதலையில்லாமல் சாத்தியமில்லை என்றார் லெனின்.

பெண்களுக்கான உரிமை என்பது சமூகக் காரணிகளில் தான் உள்ளது. அதை இனங்கண்டு பெண்கள் போராடாதவரை அவர்களுக்கான உரிமை என்பது சாத்தியமில்லை. பெண்கள் வர்க்கமாய் எழ வேண்டும். சமூக மாற்றத்துக்காக வர்க்கபோராட்டத்தை நடத்தவேண்டும். சமூக மாற்றத்தின் மூலமே பெண் தன் விடுதலையையும் உரிமைகளையும்அடைய முடியும்.



> ஆண் வேலைக்கு செல்லவேண்டும். பெண் வீட்டு வேலைகளான பெருக்குதல், சமைத்தல், உபசரித்தல் என்னும் நிரந்தரமான வேலைகளைச் செய்ய வேண்டும். சமூகத்தில் வர்க்க வேறுபாடு என்று உருவானதோ அன்றே பெண்ணடிமைத்தனமும் ஆரம் பமானது.



உதயன் 18.08.2013

ஆர்.கே.மேனன்
(ஆசிரியர்) யாழ்வலயம்


மோனல்

# நடிகைகளின் தற்கொலை உணர்த்தும் பாடமென்ன

பெயரிருந்தும், புகழிருந்தும், அழகிருந்தும், பணமிருந்தும், ஆற்றல் அதிகாரங்கள் என அத்தனையும் இருந்தும் என்ன பயன்?... இல்லையே இவர்களுக்கு நெஞ்சினில் நிம்மதி. திரையுலகத்தில் திகில் மூட்டி பல நெஞ்சங்களைத் தித்திக்க வைத்த நடிகைகளுக்குத் திசைமாறும் தம் வாழ்க்கையில் தீர்மானங்களை எடுக்க முடியவில்லை ஏன் இந்த நிலை? இது உணர்த்தும் பாடமென்ன? இதுவரை பல நடிகைகளின் தற்கொலைகள் அரங்கேறிவிட்டன இதன்பின்னணிகள் என்ன?... ஏன் நடிகைகளுக்கு மாத்திரம் இது உரித்துடையதாகின்றது. பிரபல்யம் தான் இதன் பின்னணியென்றால் எத்தனையோ அரசியல்வாதிகள் எத்தனையோ விளையாட்டு வீரர்கள் எனப் பிரபல்யமானவர்கள் பலர் உள்ளனர். இவர்களுக்கெல்லாம் தற்கொலைகள் தஞ்சமானதா?... சிந்திப்போம்.

கடந்த ஜூன் 2ஆம் திகதி இரவு மும்பையில் தன் வீட்டில் தூக்கிலிட்டு தற்கொலை செய்து கொண்டார் 25 வயதான ஹிந்தி நடிகை ஜியா கான். இவர் நியூயோர்க்கில் பிறந்தவர். லண்டனில் வளர்ந்தவர். இவரது குடும்பம் நல்ல வசதியான முஸ்லிம் குடும்பம். இவரது அம்மா ராபயா கான் முன்னாள் ஹிந்தி நடிகை. மணிரத்தினம் இயக்கிய உயிரே படத்தில் முதல் முதலில் சிறுவயதில் நடித்தவர். இவர் லண்டனில் திரைப்பட நடிப்பு மற்றும் நாடகங்களை பயின்று வந்தார். இவரை நிஷப்த் படத்தில் கதாநாயகியாக அறிமுகப்படுத்திக்கொண்டார் ராம்கோபால் வர்மா. படிப்பைப் பாதியில் நிறுத்தி விட்டு பாலிவூட்டில் காலடியெடுத்து வைத்த ஜியா முதல் படத்திலேயே 18 வயதுப் பெண் தன் தந்தை வயதில் இருக்கும் 60 வயது ஆசாமியுடன் காதல் கொள்ளும் சிக்கலான கதைக்களத்தில் குதித்தார். அதில் வெற்றியும் கண்டார். பின் தன்னிலும் 2வயது குறைந்த சூரஜ் பஞ்சோலி என்ற இளம் நடிகரைக் காதலித்தார். முரண்பாடுகள் முற்றிய நிலையில் வாக்குவாதங்களோடு தற்கொலையைத் தன தாக்கிக்கொண்டார்.


ஹிந்தி நடிகை ஜியா கான்

1979 இல் கல்பனா 36 வயதில் திருமணம் ரத்தானதால் மோதிரத்தில் உள்ள வைரத்தை விழுங்கித் தற்கொலை செய்து கொண்டார். 1980 இல் 17 வயதான ஷோபா பாலுமகேந்திராவை திருமணம் செய்தபின் ஏற்பட்ட பிரச்சினையால் தற்கொலை செய்துகொண்டார். 1980 இல் 22 வயதான ஃபடாஃபட் ஜெயலக்சுமி எம் ஜி ஆர் இன் உறவினருடனான காதல் வாழ்க்கையில் ஏற்பட்ட ஏமாற்றத்தால் தற்கொலை செய்துகொண்டார். 1996 இல் 35 வயதான சில்க் ஸ்மிதா பணச்சிக்கல் காதல் தோல்வி மற்றும் அதீத குடி போன்றவற்றால் விஷம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார். 2000 இல் கோழிகூவுது விஜி. மணம் செய்வதாக கூறி இயக்குநர் ஏ.ஆர்.ரமேஸ் ஏமாற்றியதால் 34 வயதில் தற்கொலை செய்து கொண்டார். 2002 இல் மோனல் 21 வயதில் நடன இயக்குநர் பிரசன்னாவுடன் ஏற்பட்ட காதல் முறிவால் தற்கொலை செய்துகொண்டார். 2004 இல் நஃபீஸா ஜோசப் 26 வயதில் கணவர் விவாகரத்துச் செய்யாமல் வேறொரு திருமணம் செய்து கொண்டமையால் தூக்கிலிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். 2005 இல் மயூரி 22 வயதில் திருமணத்திற்குப் பிந்திய சீதனக் கொடுமையால் தூக்கிலிட்டு தற்கொலை செய்து கொண்டார். இப்படியாகத் தொடர்கின்றது நடிகைகளின் தற்கொலைப்பட்டியல். ஏன் இந்த நிலை?.. சிந்திக்கவேண்டிய ஒன்றுதான். மனங்களின் வேதனைகள் இவர்களுக்கு ஏன் தொடர்ந்தது.

மாறாத துன்பத்தில் மரணத்தை ஏனது வென்றது. மறக்கின்ற மனங்களைத்தானே மனிதனுக்கு இறைவன் படைத்தான். மறுபிறவி இவர்களில் ஏன் உருவெடுத்தது. விரோதத்தின் விளிம்பில் முளைத்த விகாரங்களிதுவா?... மனச்சாட்சி முன்றிலில் மண்டியிட்ட கதைகளா?... அலைய விட்ட உணர்வுகளால் ஏற்பட்ட ஆழமான அன்பா?.. விலைபோன வாழ்வியலால் ஏற்பட்ட விரக்தியா?....

இது அந்நிய நாட்டு சமூகப் பிரச்சினை என்பவற்றுக்கு அப்பால் எமது வாழ்வியல் போக்குகளில் இது என்ன மாற்றத்தைக் கொண்டு வரும் என்பது தொடர்பாக சிந்திக்க வேண்டும். இறைவன் படைப்பில் இருக்கின்ற விடயங்கள் பற்றி என்றுமே நாம் சிந்திப்பதில்லை. அர்த்தமற்ற ஆணவங்களும் அதிகாரப் போட்டிகளும் அகிலத்தைத் துண்டாடுகின்றது. இரவும் வரும் பகலும் வரும் உலகமொன்றுதான் உறவும் வரும் பகையும் வரும் இதயமொன்றுதான். ஏன் அந்த இரண்டை ஒன்றாக்கினான் ஏன் இந்த இரண்டை வேறாக்கினான். சிந்தித்துப்பாருங்கள். சில தீர்வுகள் வரும். எத்தனையோ மனிதர் களையும் எத்தனையோ சமூகப் பின்னணி களையும் எத்தனையோ மனப்பாங்கு விருத்தி களையும் பெற்ற இந்த நடிகைகள் தங்களுடைய வாழ்வியற் போராட்டங்களுக்கு ஏன் ஈடுகொடுக்க முடியாமல்போனது. இவர்களின் மனங்களில் புதைக் கப்பட்ட குரோதங்களின் தாக்கமா மறுபிறவி எடுத்தது? அப்படியானால் அது தற்கொலை வரை ஏன் நகர்ந்தது. இது தெளிவான ஓர் உண்மையினை எமக்குத்தெரியப் படுத்துகின்றது.

மனசாட்சியைக் கொன்ற மனித வாழ்வியல் தான் இத் தற்கொலைகுக் காரணம்.

தெரிந்தோ தெரியாமலோ மனச்சாட்சிக்கு விரோதமாக நடக்க வேண்டிய கட்டாய தேவை இவர்களுக்கு ஏற்பட்டிருக்கும். அந்த விரோதத்தின் குரோதங்கள் அடி மனங்களில் ஆதங்கமாய் இவர்களுக்குப் பதியப்பட்டு இருக்கும். உணர்வற்ற ஜீவன்களாக ஆனால் உலகுக்கு கதாநாயகிகளாக ஊசலாடிய இவர்கள் உண்மை வழ்வியலுற்குள் பிரவேசிக்கும்போது உறுத்த ஆரம்பிக்கும் அந்த உணர்வலைகள். பிறர் தூற்றுதல்கள் ஒருபுறத்தில் எதிரொலிக்க, வந்த உறவு வழிமாறிப்போக, வாழ்ந்தென்னலாபமென எண்ணத் தோன்றும். இதுவே இவர்களைத் தற்கொலைக்குத் தூண்டுகின்றது. இது எமக்கு எதை உணர்த்துகின்றது?... மானிட வாழ்க்கையில் நாம் மனச்சாட்சிக்கு விரோதமாக செய்வதெல்லாம் மறு உருவமெடுத்து எம்மையே அழிக்குமென்பதில் மாற்றமில்லை.

**தெரிந்தோ தெரியாமலோ மனச்சாட்சிக்கு விரோதமாக நடக்க வேண்டிய கட்டாய தேவை இவர்களுக்கு ஏற்பட்டிருக்கும். அந்த விரோதத்தின் குரோதங்கள் அடி மனங்களில் ஆதங்கமாய் இவர்களுக்குப் பதியப்பட்டு இருக்கும்**

## விமர்சனம்


# தலைவா

ஏராளமான எதிர்ப்புக்கள். தமிழக அரசின் தடை, வெடிகுண்டு மிரட்டல் என பிரச்சினைகளோடு தமிழகம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வெளியாகியுள்ளது 'தலைவா' திரைப்படம். வழமையான தமிழ் சினிமாவில் கையாளப்படும் அதிமானுட கதாநாயகன் பற்றிய விம்ப உருப் பெருக்கமும். யதார்த்தத்துக்கு எந்த வகையிலும் பொருந்தாத கதையும் கொண்ட தலைவாவை எதற்காக தமிழக அரசு தடை செய்தது என்பது எவருக்கும் புரியாத புதிர் தான். ஏனெனில் சமூக மாற்றத்தையோ அல்லது அரசியல் ரீதியான எதிர்ப்புக் கருத்துக்களையோ கொண்டிருக்க கூடிய விழிப்புணர்வு படம் அல்ல இது. சாதாரணமான தமிழ் சினிமா வின் மசாலா திரைப்படங்களில் பத்தோடு பதினொன்றுதான் இதுவும்.

மும்பையில் வாழும் தமிழர்களைக் காக்கும் சத்தியராஜின் மகன் தான் விஜய். தன்னைப் போலவே தனது மகனும் வாள், கத்தி, சண்டை என வன்முறையாளனாக வரக்கூடாது என்று விரும்புகிறார் சத்தியராஜ். அதற்காக சிறு வயதில் இருந்து மகனை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பி அங்கேயே வளரச் செய்கிறார். அங்கு போத்தலில் தண்ணீர் அடைக்கும் நிறுவனம் ஒன்றை நடத்தும் விஜய், நடனத்தின் மீதுள்ள விருப்பத்தால் நடனக்குழு ஒன்றுக்கு தலைவராக இருக்கிறார். இந்த நிலையில் இந்தியாவில் இருந்து வரும் அமலாபாலுக்கு விஜய்க்கும் காதல் மலர்கிறது. இந்த காதலுக்காக தன்தந்தையின் சம்மதம் கேட்க மும்பைக்குத் திரும்புகிறார் விஜய். ஆனால் அங்கே நிகழும் எதிர்பாராத சம்பவங்களால் சத்தியராஜ் உயிரிழக்க, மும்பை தமிழர்களின் காவல் தலைவனாக மாறுகிறார் விஜய். அதன் பின்னர், தன்தந்தையைக் கொன்றவர்களை பழிவாங்குவதும், தன்னை நம்பியிருந்த மக்களின் நல்னை உயர்த்துவதும் மீதிக்கதை.

வழக்கம் போலவே நகைச்சுவை. நடனம் என்று விஜய் கலக்கி இருக்கிறார். ஆனாலும் இடைவேளைக்குப் பின்னர் இறுகிய முகத்தோடு எப்போதும் வருவது படத்தோடு ஒட்டவில்லை. அமலாபாலும் எனோ தானோ என்று வந்து விட்டுபோகிறார். சந்தானத்தின் நகைச்சுவைகளும் ஆரம்பத்தில் எடுபட்டாலும் போகப்போக சலித்துவிடுகின்றன. பாடல்கள் வழக்கம் போலவே ஆட்டம்போட வைக்கின்றன.

ஏற்கனவே வெளிவந்த நாயகன், பாட்ஷா, தேவர்-மகன் போன்ற படங்களில் சொல்லப்பட்ட கதைகளை அங்கொன்றும் இங்கொன்றுமாக உருவி, இரவல் சேலையை நெய்துள்ளார் இயக்குநர் ஏ.எல்.விஜய். ஏற்கனவே பிறமொழிப் படங்களை தழுவியே ஏ.எல்.விஜய்க்கு படம் எடுக்கத் தெரியும் என்ற கூற்றை இதிலும் நிரூபித்திருக்கிறார். தலைவா படம் வெளிவரவில்லை என்பதால் விஜய் ரசிகர் ஒருவர் தமிழகத்தில் தற்கொலை செய்திருந்தார். அந்த ரசிகர் தலைவா படத்தை பார்த்திருந்தாலும் நிச்சயம் தற்கொலை செய்தே இருப்பார். அந்தளவுக்கு பார்வையாளர்களின் பொதுப் புத்தியை அவமதிப்பதோடு, தமிழ் படங்களை சுட்டு புதுப் படம் எடுக்கும் நாகரிகமற்ற போக்கும் தலைவாவில் நிரம்பி வழிகின்றன.





# முரட்டு சிங்கம்



ஒரு பெரியமலைப் பிரதேசத்தில் செழித்தோங்கி வளர்ந்த அடர்ந்தகாடு. அந்தக் காட்டில் சிங்கம், புலி, கரடி போன்ற பெரியமிருகங்களும், மான், குரங்கு போன்ற சிறிய மிருகங்களும் வாழ்ந்து வந்தன. காலம் காலமாக பலவகையான மிருகங்களும் ஒரே இடத்தில் இருந்து வந்ததுடன், அவை ஒற்றுமையாகவும் காட்டில் வாழ்ந்து வந்தன.

ஆனாலும், அந்தக் காட்டிலுள்ள சிங்கங்களில் முரட்டுச் சுபாவம் உள்ள சிங்கம் ஒன்றும் இருந்தது. அதனுடைய செயல்கள் மற்றச் சிங்கங்களுக்குப் பிடிக்காததால் அது தனிமைப்படுத்தப்பட்டு தனிக்காட்டுராஜாவாக உலவி வந்தது. இருப்பினும் காட்டிலுள்ள மான், குரங்கு ஆகியவற்றுடன் முரட்டுச் சிங்கம் நட்பாகவே பழகிவந்தது. அவையும் தனியாக வாழும் முரட்டுச் சிங்கத்தின் மீது பாசமாய் இருந்தன.

இச் சிங்கம் காட்டில் உலாவச் செல்லும் போது, மான்களுடன்தான் செல்வது வழக்கம். நாள் ஆக ஆக மான்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்தது. இதையறிந்த மற்ற மான்கள், முரட்டுச் சிங்கத்துடன் உலவச் சென்ற போது, மான்கள் திசைமாறி வேறு எங்காவது சென்றிருக்கலாம். அவை தமது இருப்பிடத்தைக் கண்டறிந்து மீண்டும் தம்மிடம்வந்து சேரும் என நம்பிக்கொண்டிருந்தன. ஒருநாள் முரட்டுச் சிங்கம், காணாமல் போனமான் குட்டி ஒன்றுடன் காட்டில் சுற்றித்திரிந்து கொண்டிருந்ததை மற்ற மான்கள் பார்த்தன. ஆனாலும், நீண்ட நாள்கள் ஆகியும் இவ்விரண்டும் தங்களுடைய இருப்பிடம் வந்து சேரவில்லை. அதிர்ச்சியடைந்த மற்ற மான்கள் முரட்டுச் சிங்கத்தையும் குட்டிமானையும் தேட ஆரம்பித்தன. எங்கு தேடியும் அவை கண்ணில்படவில்லை. குட்டிமானின் தாய், சேயை இழந்த ஏக்கத்தில் காட்டில் சுற்றித்திரிந்தது.

ஓர் அடர்ந்த புதர்ப் பக்கத்தில் சிங்கம் கர்ஜிப்பதைப் போன்ற சப்தம் கேட்டது. உன்னிப்பாக அந்தத் திசை நோக்கி நடந்த தாய்மான் சேறும், சகதியுமாய் இருந்தபடு குழியில் முதலைஒன்றுடன் ஒருசிங்கம் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதைப் பார்த்தது. இது தம்முடன் இருந்த முரட்டுச் சிங்கம் தான் என அறிந்து, உரத்த குரலில் சத்த மிட்டது. இந்தச் சத்தம் கேட்டு, காட்டிலுள்ள மற்ற மான்களும், குரங்குகளும், சிங்கங்களும் அங்கு படையெடுத்தன. முரட்டுச்சிங்கம் முதலையுடன் போராடிக் கொண்டிருப்பதைப் பார்த்த மான்கள் எப்படியாவது அதைக் காப்பாற்றவேண்டுமென சிங்கங்களிடம் கூறின. ஆனால், சிங்கங்கள் அது தங்களுக்கு இழைத்த கொடுமைக்கு அது செத்து மடியட்டும் எனச் சொல்லி விட்டுச் சென்று விட்டன.

ஆனால், குரங்குகள் அந்தச் சிங்கங்கள் சொன்னதைக் கேட்காமல், முரட்டுச் சிங்கத்தின் மீது இரக்கம் காட்டி அதைக் காப்பாற்ற ஒருதிட்டத்தைத் தீட்டி மான்களிடம் கூறின. அத்திட்டத்தின் படி, வளர்ந்த மரங்களில் படர்ந்திருக்கும் கொடிகளைப் பிடுங்கி நாங்கள் கீழேபோடுகிறோம். அதைக் கொண்டு நீங்கள் முரட்டுச் சிங்கத்தைக் காப்பாற்றி விடலாம் என யோசனை கூறின. இதுவும் நல்ல யோசனைதான் என அறிந்த மான்கள், குரங்குகள் மரத்திலிருந்து பிடுங்கிப் போட்ட கொடிஒன்றை எடுத்துச் சென்று சிங்கம் விழுந்திருந்த குழியில்போட்டு, ''ஏய்.... சிங்கமே நீ இதை உன்வாயால் கவ்விப் பிடித்துக் கொள். நாங்கள் உன்னை மேலே தூக்கிக் காப்பாற்றி விடுகிறோம்'' எனக் கூறின.

அவ்வாறே, முரட்டுச் சிங்கமும் கொடியைக் கவ்விப் பிடித்துக் கொண்டு குழியின் பாதி உயரத்தில் வரும் போது, கொடி அறுந்து மீண்டும் குழிக்குள் விழுந்து விட்டது. இதை மரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த குரங்குகள் ஏராளமான கொடிகளைப்பிடுங்கி ஒன்றாகக் கயிறு போல் திரித்துக் கீழே போட்டன. மான்கள் அதை சுருட்டிக் கொண்டு போய் மீண்டும் குழிக்குள் போட்டன. முரட்டுச் சிங்கம் அந்தப் பலமான கொடியைப் பிடித்துக் கொண்டு தப்பித்தோம், பிழைத்தோம் எனகூறிக் கொண்டு மேலே வந்து சேர்ந்தது. தன்னை முதலையிடமிருந்து காப்பாற்றி உயிர்ப் பிச்சை வழங்கிய குரங்குகளுக்கும், மான்களுக்கும் கண்ணீர் மல்க நன்றி கூறியது! நாம் நயவஞ்சமாகப் பழகி மான் இனத்தை வேட்டையாடிப் புசித்தும், தன்னைப் பழிவாங்காமல் காப்பாற்றிய செயல் கண்டு அவற்றிடம் மன்னிப்பு கேட்டது. தன் உயிர் உள்ள வரை தன்பலத்தைக் கொண்டு எல்லா உயிர்களுக்கும் தன்னாலான உதவி செய்வேனே ஒழிய, தொந்தரவு செய்யமாட்டேன் எனக் கூறியதுடன் தனக்கு ஏற்பட்ட துன்பம் தனக்கு ஒரு பாடம் என கருதி மற்ற சிங்கங்களுடன் திருந்தி வாழவும் முடிவு செய்தது அந்த முரட்டுச் சிங்கம்.

## அட அப்படியா?

- நத்தையால் மணிக்கு 17 அடி தூரம் நகர்ந்து செல்ல முடியும்
- பாம்புகளின் கண்களுக்கு மேல் இமை கிடையாது.
- ஈயால் மணிக்கு 7 கி.மீ வேகத்தில் பறக்க முடியும்.
- கரப்பான் பூச்சியின் வடிவத்ல் கடந்த 35 கோடி ஆண்டுகளாக மாற்றம்எதுவும் ஏற்படவில்லை.
- நின்றபடி அடை காக்கும் பறவை பெங்குயின்.
- உலகில் மிகவும் உலர்ந்த பாலைவனம் சிலியில் உள்ள அடகாமா.
- தாய் பெயரை முதன் முதலில் பெயரின் முதலெழுத்தாகப் பயன்படுத்துபவர்கள் ஸ்பெயின் நாட்டினர்.
- நாம் பிறந்த பின் எமது உடலில் வளராமல் இருக்கும் உறுப்பு கண்ணின் கருவிழி
- உடலில் இரத்தம் பாயாத பகுதி கருவிழி


**சி.சிந்து,**
சுதுமலை



நி.ஜெறின்சன்,
தரம்-8பி
யா/புனித பத்திரிசியார் கல்லூரி



யோ.அலெக்ஸ்ராம்,
தரம்-8ஏ
யா/பூனியன் கல்லூரி



ரி.ஏ.சலோகுருஸ், தரம்-1
யா/கலைமகள் தேசிய பாடசாலை



வி.திருநிலவன், தரம்-4
கிளி/பூநகரி நல்லூர் ம.வி.



எஸ்.அனிருத்தன், தரம்-2
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

## விடை தெரியுமா? 224

### உங்களுக்கும் பரிசுகள்

1. உலகில் புகழ்பெற்ற லியானோ டாவின்சியின் ஓவியம் எது?
2. பல் இல்லாத பிராணி எது?
3. தீப்பெட்டியைக் கண்டு பிடித்தவர் யார்?
4. இலங்கை குடியரசான ஆண்டு எது?
5. இலங்கையின் பிறிமா ஆலை எங்கே அமைந்துள்ளது?

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 24.08.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும். 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 பெறுமதியானதும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா75 பெறுமதியான பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடைகள் 222

1. ஸ்ரீ ஜயவர்த்தனபுர
2. 9
வடக்கு மாகாணம்
கிழக்கு மாகாணம்
வட மத்திய மாகாணம்
வட மேல் மாகாணம்
மத்திய மாகாணம்
சப்பிரகமுவா மாகாணம்
ஊவா மாகாணம்
தென் மாகாணம்
மேல் மாகாணம்
3. சப்புகஸ்கந்த
4. கண்டி, அனுராதபுரம், பொலநறுவை
5. ஸ்ட்ராஹோவ்

### வெற்றி பெற்றவர் விவரம் (221)

- அ.சிவதாஸன், தரம்-6டி, யாழ். இந்துக் கல்லூரி
- ச.ரோகினி, தரம் -9ஏ, யா/ யாழ்ற்ரன் கல்லூரி காரைநகர்
- சி.தேனுஜன், தரம் -4, யா/ பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தி.

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் ''சிறுவர்கதிர்'', உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

சூரியகாந்தி
உதயம் 18 08 2013 ஞாயிற்றுக்கிழமை




விசேடங்களில் புகைப்படம் பிடிக்கும் வழக்கம் புகைப் படக் கருவி கண்டு பிடிக்கப் பட்ட பின்னர் கட்டாயக் கடமை யாகி விட்டது.

அதுவரைக்கும் புகைப்படம் பிடிக்க என்ன செய்தார்கள். ஒருவரை ஒருவர் மனதில் படம்பிடித்துக் கொள்வார்கள் எனக் கொள்வோம். இன்றைய மாதிரி புகைப்படக்காரரை வீட்டுக்கெல்லாம் கூப்பிட்டு அந்த நாள்களில் படம் பிடிக்க முடியாது. அதாவது 1980 கள் வரைக்கும் இந்தநிலைதான்.

அதற்குப் பின்னர்தான் புகைப் படக்காரரை வீட்டுக்கு கூப்பிடத் தொடங்கினோம்.

அதற்கு முன் திருமணம் முடித்து மூன்று நாள்களின் அல்லது நான்கு நாள்களின் பின் புதுக் குடும்பம் ஸ்ரூடியோவுக்கு சென்று படம் எடுத்துக் கொள்வார்கள்.

சின்னம்மாச்சியிடம் ஒருநாள் கேட்டேன். "ஏனெணை நீயும் வெற்றியப்பாவும் படம் எடுக் கேல்லை?"

"அந்தக் காலத்திலை உதுகள் எங்காலை"

"வந்தாப்போல இரண்டு பேரும் போய் எடுத்திருக்கலாமே"

சிரித்தார்.

"கிழட்டு மாப்பிளை பொம்பிளையோ"

"அதுக்கென்ன தலைவாசலுக்கை தூக்கி இருக்கலாம்"

"அந்தாளோ? என்னைத்தான் அடிச்சுத் தூக்கும்"

புதுக்குடும்பம் எடுத்த போட் டோவை பெரிதாக்கி பிறேம் போட்டு விறாந்தையிலோ தலைவாச லுக் குள்ளோ, தூக்கி விடுவார்கள். அப்பொழுது கறுப்பு வெள்ளை படங்களே இருந்தன.

பளையில் நானறிய நல்ல ஸ்ரூடி யோக்கள் 1990 வரை இருந்த தில்லை. ஸ்ரூடியோவுக்கு சாவகச் சேரிக்குத்தான் போக வேண்டும். சாவகச்சேரியில் "குகன் ஸ்ரூ டியோ" மிகப் பிரபல்யமாக இருந்து வந்தது- வருகின்றது.நான் ஐ.சி. போட்டோ எடுக்க 1988 இல் அம்மா வுடன் அங்குதான் வந்திருந்தேன். ஸ்ரூடியோக்காரர் எப்போதும் உள்ளே போனதும் "கண்ணாடி பாருங்கோ" என்பார். படம் எடுக் கும்போது "கொஞ்சம் சிரியுங்கோ" என்பார்.

புதுமணத் தம்பதியினரை வித விதமாக படம் எடுப்பார்கள். மெது வாகத் தோளில் கைபோட வைத் தும் பெண்ணை இருக்கவிட்டும் ஆணை அருகே நிற்க வைத்தும் இரசனையாக எடுப்பார்கள். அவை அழியாத பொக்கிஷங் களாக இருந்து வருகின்றன.

இன்றைக்கு கமரா மலிவான பொருளாகிவிட்டது. விசேடம் என் றால் குஞ்சு குருமன் எல்லாம் படம் பிடிக்க வெளிக்கிட்டாகிவிட்டது. கழுவிப் படம் வருகின்றதோ இல் லையோ கமராக்கள் மின்னு கின்றன.

தலைவிரிகோலமாக திருமண வீட்டில் படம் பிடித்துக் கொண்டி ருந்த ஒரு பெண்பிள்ளை என்னி டம் கேட்டாள். "உங்கடை கமரா எத்தனை பிக்சல்"

"ருவென்ரி"

## 'கொண்டாட்டம்'

**மூன்று நாள்கள் நடைபெறும்**



என்னை ஒரு மாதிரியாக பார்த் தாள் "ருவென்ரி பிக்சலில் இன் னும் கமரா வரவேயில்லை". -என்றவள் திருமண வீட்டை விட்டு வெளி யேறும் வரை என்னைதிரும்பியே பார்க்கவில்லை. 1980 இற்கும் பின்னரே மெதுவாக கமராக்காரர்கள் விசேடங்களுக்கு வீட்டுக்கு வந்து படம் எடுக்க தொட ங்கினர்.

"வடிவாய் வெளிக்கிடுங்கோ போட்டோ எடுப்பினம்"

"அம்மா பச்சைக் கலர் சட்டை போட் டோவுக்கு வடிவாய் இருக் குமே"

"உந்தாள் சேவ் எடுக்கேல்லை வேடன் மாதிரி போட்டோவிலை இருக்கப் போகுது"

இப்படி பல குரல்கள் எழும்பத் தொடங்கின. தப்பித் தவறி ஒரு வரை படம் எடுக்கத் தவறினால் தொலைந்தது.

"என்ரை குடும்பத்தை படம் எடுக் கேல்லை"

"நாங்கள் என்ன இளக்காரமான ஆக்களோ"

"காணாததை கண்ட திமிர்"

"உந்த முத்தம் இனி மிதியன்"

என்று பெரும் சண்டைகளே ஏற்பட்டு இருக்கின்றன. இந்தப் போட்டோ எடுப்பால்.

எங்கட ஊரில் ஒருவருக்கு போட்டோ எடுக்க ஆசை. நன்றாக குளித்து வெளிக்கிட்டார். புது வெள்ளை வேட்டி. புதுச் சேட். புதுச் செருப்பு.

"தம்பி மணிக்கூடு கட்டிக் கொண்டு போ அப்பத்தான் வடிவாக இருக் கும்"

புது மொண்டியா மணிக்கூடு கட்டிக் கொண்டார். பக்கத்தில் தமை யனின் மணிக்கூடும் இருந்தது. அதை யும் எடுத்து வைத்துக் கொண்டார். ஸ்ரூடியோவில் படம் எடுக்கும் போது இவருக்கு ஆசை வந்தது.

"அண்ணை மற்றக் கைக்கும் மணிக்கூடு கட்டட்டே"

ஸ்ரூடியோக்காரருக்கு சிரிப்பு வந் தது.

"ஏன் தேவை யில்லை"

"இல்லை வடி வாயிருக்கும்"

"அப்படி கட்டக் கூடாது"

"மினக்கெட்டு கொண்டந்திட்டன்"

இவரும் விடு வதாக இல்லை. கட்டாமல் ஆள் படத்துக்கு நிற்காது போலப்பட்டது. விடியக்காலமை முதல் உழை ப்பை கைவிடுவான் என்று நினை த்த ஸ்ரூடியோக் காரர். "சரி கட்டு ங்கோ" என்றார்.

கட்டிக் கொண்டார். இரண்டு கைக ளிலும் மணிக்கூடு கட்டி படம் எடுத்த முதல் ஆள் அவர்தான். கமராவை கண்டு பிடித்தவரோ, அல்லது மணிக்கூட்டை கண்டு பிடித்தவரோ கூட அப்படி செய்தி ருக்கமாட்டார்கள்.



## நீ உயர வேண்டும்

வானகத்து வீதியிலே
வலம் வரும் வண்ண நிலாவே!
நின்னில் கறை படிவதை நான்
நிச்சயமாய் வெறுக்கிறேன்

என் உள்ளகத்து வீதியிலே-நீ
என்றும் உயர்ந்தே நிற்கின்றாய்
ஒளி தரும் நிலவாக!
இதம் தரும் நண்பியாக!

அறிவு கூறும் ஆசானாக
அன்பு செய்யும் அன்னையாக!
அகிலத்தில் உன்னை எண்ணுகிறேன்
நீ உயர்ந்து உயர்ந்து
போகவேண்டியவள்!
தேய்வதையும் வீழ்வதையும்
விரும்பவில்லை ஒருபோதும்!

நின்னில் தூசு பட்டால்
நித்திலம் சிரித்து விடும்-தூசு பட
விட்டிடாதே! துணிந்து செல்
சஞ்சலங்கள் சபலங்கள் அகற்றி
சரித்திரத்தில் புதுச் சரிதம் எழுது..........



- பராகு

# ஜனாதிபதியின் வாழ்த்தும் பள்ளிவாசல் உடைப்பும்

● கமுகன்

சப்தமின்றி யுத்தமொன்று நடைபெறுகிறது. அது மதம் மற்றும் வழிப்பாட்டுத் தலங்களின் மீதான காட்டுத்தர்பா ராக மாற்றம் கண்டுள்ளது. அரசிய லில் இதுவெல்லாம் சகஜம் என்பது போல அரசில் அங்கம்வகிக்கும் முஸ்லிம் தலைவர்கள் விளக்கம் கூறிக்கொண்டு இருக்கின்றனர்.

அரசின் வசதிகளை முழுமையாக அனுபவிப்போர் இப்படிக் கூறுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. மஹிந்த சிந்தனையின் பிரகாரம் ஆசியாவிலேயே ஆச்சரியமான விதத்தில் இலங்கையை மாற்ற வேண்டும் என்பதுதான் அரசின் இலக்காகும். அதுவே, உள்நாட்டு யுத்தத்தின் பின்னரான இலங்கையின் தாரக மந்திரமுமாகும்.

ஆசியாவின் ஆச்சரியமாக இலங்கையை மாற்றும் வேலைத் திட்டத்திற்கமைய நாட்டின் பல பாகங்களிலும் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவது வரவேற்கத்தக்கது. அதேநேரம் ஆசியாவில் எந்த நாட்டிலும் இல்லாதவகையில் முஸ்லிம்களின் வணக்கஸ்தலங்கள் மற்றும் வாணிபத் தளங்கள் மீதான தாக்குதல்கள் மூலமாகவும் ஆசியாவின் ஆச்சரியமாக இலங்கைத்திருநாடு பரிணமித்து வருகின்றதா? என்ற கேள்வியும் இன்று எழுந்துள்ளது.

விடுதலைப் புலிகளுடனான யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு சுமார் நான்கு வருடங்களின் பின்னர் தற்போது சுதந்திரக் காற்றை மக்கள் சுதந்திரமாக சுவாசித்து வரும் இவ்வேளையில், இலங்கைவாழ் முஸ்லிம்களுக்கு எதிராக பௌத்த கடும்போக்காளர்கள் மேற்கொள்ளும் சூழ்ச்சிகளும், நடவடிக்கைகளும் இலங்கையில் இனவாதத்தீ மூட்டப்படுவதற்கான சாத்தியக் கூறுகளையே தொட்டு நிற்கின்றன. அந்தவகையில் வழமைபோன்று கிராண்ட்பாஸ் சுவர்ண சைத்திய வீதி, பள்ளிவாசல் மீது காடையர்கள் கடந்த 10 ஆம் திகதி மாலை வேளை யில் (மஃரிபுத் தொழுகையின்போது) தாக்குதல் நடத்தி பள்ளிவாசலுக்குச் சேதத்தையும், தொழுகையில் ஈடுபட்டிருந்தோர் சிலரை தாக்கியுமுள்ள நிலையில், முஸ்லிம் சமூகம் இனியும் பொறுமைகாக்க முடியாது என இன்றைய முஸ்லிம் புத்திஜீவி கள் கூறுகின்றனர். அதற்காக காடையர்கள்போல் நடந்துகொள்ள வேண்டியதில்லை. உறுதியான அஹிம்சை வழியில் போராடவேண்டிய கட்டம் வந்துவிட்டது. முதலில் எமது நாட்டிற்கு உதவிக்குமேல் உதவிசெய்யும் முஸ்லிம் நாடுகளை எந்தவிதத் தாமதமுமின்றி நாடவேண்டும். அந்நாடுகள் மூலம் இனவாதிகளுக்குப் பாடம் புகட்டவேண்டுமே தவிர, இலங்கையின் அரசையோ அல்லது இலங்கையின் அரசில் ஒட்டிக்கொண்டிருக்கும் உதவாக்கரை அரசியல்வாதிகளையோ நம்பவேண்டியதில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் கிழக்கு மாகாணத்தின் திகாமடுள்ள மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதியான முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர், எச்.எம்.எம்.ஹரீஸ் தனது மெஸ்டோ நிறுவனத்தின் 19ஆவது மாநாட்டில் விசேட உரையொன்றை ஆற்றியபோது,

இன்றைய இனவெறி அரசின் யதார்த்தத்தை மிகவும் காரசாரமாகக் கண்டித்திருந்தார். அதாவது பேரின கடும்போக்கு சக்திகளின் வலைக்குள் இவ்வரசு சங்கமித்துவிட்டது. இது எதிர்காலத்தில் மிகப்பெரிய சவாலாகவே அமையும். இன்றுள்ள சூழ்நிலையில் முஸ்லிம்களுக்கெதிராக முடுக்கி விடப்பட்டுள்ள அடாவடித்தனங்களுக்கெதிராகவும், பௌத்த தீவிரவாதத்திற்கெதிராகவும் முஸ்லிம் அமைச்சர்களாலும், அரசியல்வாதிகளாலும் தனித்து எதுவும் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. முஸ்லிம் சமூகம் கருத்து முரண்பாடுகளை மறந்து உடனடியாக ஒன்றுபடவேண்டும். முஸ்லிம் சமூகத்திலுள்ள புத்திஜீவிகள், அறிஞர்கள், புலம்பெயர் முஸ்லிம்கள், இஸ்லாமிய இயக்கத்தினர், சமூகசேவை நிறுவனத்தினர் எனப் பலதரப்பட்டவர்களும் இணைந்து உடனடியாக அஹிம்சைப்போராட்டத்தில் குதிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருந்தார்.

இவ்வாறு கோரிக்கை விடுவதன் மூலம் பௌத்த அடிப்படைவாதிகள் முஸ்லிம் பள்ளிவாசல்களை உடைப்பதை நிறுத்துவார்களா? அல்லது முஸ்லிம் அமைப்புகள்தான் ஒற்றுமைப்படுவார்களா? நடக்காத ஒன்றை பேசிப்பேசியே காலந்தள்ளுகின்ற அரசியல்வாதிகளை மக்கள்தான் இனங்காணவேண்டும். நாடாளுமன்றில் பேசவேண்டிய விடயத்தை வெறும் கண்துடைப்புக்காக மக்கள் முன்பேசுகின்ற அரசியல்வாதிகளை முதலில் மக்கள் இனங்காண வேண்டும். இஸ்லாமிய மார்க்கத்தில் மிகவும் முக்கியமான நோன்புப்பெருநாள் தினத்தையே ஒன்றாகபேசி, தீர்மானித்து கொண்டாட முடியாத தலைமைத்துவங்கள் இருப்பதுதான் இந்நாட்டு முஸ்லிம் சமூதாயத்திற்குக் கிடைத்துள்ள மிகப்பெரியதோர் சாபக்கேடு என்றுதான் கூறவேண்டும்.

இந்நிலையில் கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் முழுமையாக கபளீகரம் செய்யப்பட்டு ஏற்கனவே, பழைய பள்ளிக்கென ஒதுக்கப்பட்டிருந்த பழைய இடத்தில் பள்ளி கட்டுவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டுள்ளது. நிலைமையோ பரிதாபகரமாக உள்ளது. அனைத்து முஸ்லிம் தலைவர்களும் கூட்டாக ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ள நிலையில் பௌத்த சாசன அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் சிங்கள கடும்போக்காளர்கள் என்று கூறப்படும் அமைச்சர்களான சம்பிக்க ரணவக்க, ஹெல உறுமய முக்கியஸ்தரான உதய கம்மன்பில ஆகியோரும் பங்கேற்றிருந்தமையானது எப்படியாவது பள்ளிவாசலை அப்புறப்படுத்துவதற்கான செயற்பாடாகவே அமைந்திருக்கும் என்பதை முஸ்லிம் மக்கள் உணர்ந்து கொண்டனர்.

இதில் கலந்துகொண்ட அமைச்சர் சம்பிக்க ரணவக்க அங்கு உரையாற்றுகின்றபோது,

பிரச்சினைக்குத் தீர்வு வன்முறையல்ல. அவ்வாறு ஏற்படும் வன்முறையானது நாட்டுக்கும் கிராமத்திற்கும் அழிவையே உண்டுபண்ணும் என்றும் கூறியிருந்தார். அப்படியானால் வன்முறையாளர்களாக அவர் யாரை கருதிக் கூறுகின்றார் என்பது புரிகின்றதா? பள்ளிவாசல் உடைப் புக்கு முஸ்லிம்கள்தான் காரணம் என்று மட்டும் கூறாதுவிட்டாரே அது அங்கிருந்த ஏனைய முஸ்லிம் தலைவர்களுக்குத் தேனாக இருந்திருக்கும் என்கின்றனர் மக்கள்.

மேலும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது ஒருபுறமிருக்க நாட்டின் தலைநகரில் நடைபெற்ற இந்தப் பள்ளி உடைப்பில் ஈடுபட்டவர்களில் யாராவது கைதாகியுள்ளார்களா? அவர்களின் விவரங்களைக் காண்பித்து கைது செய்கின்ற நடவடிக்கைகள் கூட நடைபெற்றதற்கான தடயங்களும் காணப்படவில்லை. பிரச்சினைக்குப் பின்னர் காணவிளைகின்ற பேச்சுக்களால் எவ்விதமான பயனும் ஏற்படப்போவதில்லை என்பதுதான் இந்நாட்டு சிறுபான்மையின மக்களின் ஏகோபித்த கருத்தாக இருக்கும். ஏனெனில், ஒரு நிகழ்வு நடைபெற்றதன் பிற்பாடு மன்னிப்புக்கேட்பதும், கண்துடைப்புக்காக விசாரணைக் குழுக்கள் நியமிப்பதுமே இந்நாட்டில் ஆளும் அரசியல்வாதிகளால் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு மாய மந்திரம். காலப்போக்கில் அந்தக்குழு கட்டெறும்பாகி பயனற்றுப்போன வரலாறுகள்தான் அதிகம். எனவே, இவ்வாறான கடும்போக்காளர்களால் மதரீதியான, இனரீதியான அழிவுகள் மேற்கொள்ளப்படாமல் காப்பதுதான் உண்மையான ஜனநாயகத்தின் பண்புகளாகும்.

ஒரு மாதம் புனித நோன்பிருந்து மனிதவர்க்கத்தையும், இந்த உலகத்தையும் அண்டசராசரங்களையும் படைத்த இறைவனை வணங்கிய முஸ்லிம்களின் நோன்புதிறக்கும் இப்தார் நிகழ்வுகள் எல்லாம் பெரும்பான்மையினராலும், அரசினாலும், பாதுகாப்புப் படையினராலும், அமைச்சர்களாலும் ஏற்பாடு செய்யப்பட்டு வருவது வழக்கம். முஸ்லிம் மக்கள் மீது இவர்கள் அன்பு செலுத்துகின்றார்கள் என்றுதான் முஸ்லிம்கள் எண்ணியிருந்தனர். பெருநாள்கொண்டாடிய ஆடையை மாற்றுவ தற்கிடையில் அவர்களது வணக்கஸ்தலத்தையே உடைத்து நொறுக்கும் அளவுக்கு இந்நாட்டு முஸ்லிம்கள் என்ன செய்தார்கள்? நாட்டைக்கூறுபோட்டுக் கேட்டார்களா?, ஆட்சியில் பங்குகேட்டார்களா? பௌத்த விகாரைகள் அமைப்பதற்கும், புத்தரது சிலைகளை நடுவதற்கும் எதிர்ப்புத் தெரிவித்தார்களா? புனிதப்பிரதேசம் என்பது பௌத்த மதத்திற்கு மாத்திரம் தானா? அது ஏனைய மதத்தினருக்கு இல்லையா? இந்நாட்டில் வாழும் மூவினமக்களும் இணைந்து வாழ்வதற்கான அங்கீகாரங்களுக்கு அரசியல் யாப்பிலும், சட்டத்திலும் இடம் ஒதுக்கப்பட்டிருந்தும் இந்நாட்டில் சிங்கள மக்களுடனும், தமிழ் மக்களுடனும் சகோதரவாஞ்சையுடன் வாழ்ந்து வரும் முஸ்லிம்களின் வாழ்வியலில் புயலைக் கிளப்புகின்ற செயற்பாடுகளை ஏன் முடுக்கிவிடப்பார்க் கின்றீர்கள் என்பதுதான் புரியாத புதிராக உள்ளது.

கடந்த நோன்புப் பெருநாள் தினத்தன்று எமது ஜனாதிபதி விடுத்திருந்த செய்தியில் பூரித்துப்போன முஸ்லிம் மக்கள் மீது அந்தப்பூரிப்பு அடங்குவதற்கிடையில் அடாவடிகள் மேற்கொண்டமையானது ஒரு தந்தை தன் ஐந்து வயதுக் குழந்தைக்கு கட்டிவைத்து தண்டனை வழங்குவதுபோலான நடவடிக்கையாகவே பார்க்கமுடியும். ஜனாதிபதியின் வாழ்த்தில் எமது ஐக்கியம், புரிந்துணர்வுக் கலாசாரத்தில், இலங்கையின் முன்னேற்றத்திற்காக முஸ்லிம் சமூகம் செய்துள்ள பங்களிப்புகளை நினைவு கூருவதற்கு இதுவொருமுக்கிய சந்தர்ப்பம்.

என்றும், இலங்கையின் முன்னேற்றத்திற்கு உதவும் இத்தகைய புரிந்துணர்வும் சமய சுதந்திரமும் தொடர்ந்திருக்க வேண்டும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் கூறி யிருந்தார்.

மேலும், எமது நாட்டில் தற்போது நிலவும் சமாதான சூழ்நிலையில், இலங்கை முஸ்லிம்கள் தங்களது சமயக் கடமைகளை எவ்வித தடைகளுமின்றி முன்னெடுப்பதற்கான வாய்ப்பைப் பெற்றிருப்பதையிட்டு மகிழ்ச்சியடைவார்கள். எமது ஐக்கியம் மற்றும் புரிந்துணர்வுக் கலாசாரத்தில் இலங்கையின் முன்னேற்றத்திற்காக முஸ்லிம் சமூகம் செய்துள்ள பங்களிப்புகளை நினைவு கூருவதற்கு இதுவொரு முக்கிய சந்தர்ப்பமாகும். இலங்கையின் முன்னேற்றத்திற்கு உதவும் இத்தகைய புரிந்துணர்வும் சமய சுதந்திரமும் தொடர்ந்தும் இருக்கவேண்டும் என எதிர்பார்ப்பதாகவும் அந்த வாழ்த்தில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். இது நடைபெற்றதா? நடைபெறுகின்றதா என்பதையும் சற்று நிதானித்து நின்று யோசிக்க வேண்டியுள்ளது.

கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் சம்பவம் தொடர்பாக இலங்கையிலுள்ள அமெரிக்கத்தூதரகம் கடுமையான விசனத்தைத் தெரிவித்துள்ளது. அதேநேரம் கடந்தகால போர்க்களத்தை சந்தித்த நாட்டின் மற்றொரு இனமான தமிழர்களின் வழிபாட்டுத் தலங்களும் கடந்த காலத்தில் தாக்கப்பட்டுள்ளன. அதன் வலியைப் புரிந்தவர்கள் என்பதால் தமிழர்கள் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பள்ளிவாசல் உடைப்பை வன்மையாகக் கண்டிப்பதாக அறிக்கை விடுத்திருந்தனர்.

அந்த அறிக்கையில் கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் முஸ்லிம்களின் வழிபாட்டுத்தலம் மீது மேற்கொள்ளப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாக கண்டிப்பதுடன், அரசுக்கு வக்காலத்து வாங்கும் அரசியல்வாதிகள் இதுதொடர்பில் தமது நிலையை முஸ்லிம் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரான பா.அரியநேத்திரன் கோரியிருந்தார்.

மேலும், இலங்கையில் அண்மைக் காலமாக மத சுதந்திரத்துக்கு பாரிய அச்சுறுத்தல் நிலவிவருகின்றது. பௌத்த மதத்தைத் தவிர்ந்த ஏனைய மதத்தினர் பல்வேறு வழிகளில் அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்திருந்தார். அந்த வக்காளத்து வாங்கும் அரசியல்வாதிகள் என்று யாரைக் குறிப்பிட்டிருக்கின்றார் என்பதை வாசகர்கள் அறிந்திருப்பார்கள்.

எனவே, இன்றைய அமைதிச் சூழலில் கடந்த 1915ஆம் ஆண்டில் இந்நாட்டில் ஏற்பட்ட மிகப்பெரிய சிங்கள - முஸ்லிம் கலவரத்தை நினைவுபடுத்தும் வகையில் தொடரப்படுகின்ற முஸ்லிம்கள் மீதான பேரினவாத சக்திகளின் கடும்போக்கைப் பார்க்கின்றபோது எதுவும், எப்போதும், எங்கும் நடக்கலாம் என்பதற்கான ஊகங்கள் எழுகின்றன.

எனவே, சமூகத்தில் பற்றுள்ள அனைத்துத் தலைவர்களும் ஒன்றுபட்டு நாடாளுமன்றத்திலும், இந்நாட்டுக்கு பலவழிகளிலும் உதவிகள் செய்கின்ற முஸ்லிம் நாடுகளிடமும், சர்வதேச சமூகத்திடமும் சிறு பான்மையின மக்களுக்கு ஏற்பட்டுள்ள அவலங்களை எடுத்துரைப்பதன் மூலமாக பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம். இதை இனிமேலாவது இவர்கள் சிந்திப்பார்களாக இருந்தால் அதுவே இவர்கள் இந்தச் சமூகத்திற்குச் செய்கின்ற மேலான ஒருவிடயமாகும்.



# அது ஒரு பொற்காலம்

எஸ்.எம்.கோபாலரத்தினம்

வடக்கு மாகாணம் என்றாலே தென்னிலங்கை அரசியல்வாதிகள் சிலருக்கும் இனவாதிகளுக்கும் ஏனோ நடுக்கம் ஏற்படுவது நீண்ட காலமாக இருந்து வரும் அரசியல்வியாதி. கடந்த கால தேர்தல்கள் சம்பந்தமாக நான் தொடர்புபட்ட சில நிகழ்வுகளை நினைவூட்டுவது எனது அந்த நாள் ஞாபகத்துக்குப் பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறேன்.

1959 செப்ரெம்பரில் பிரதமராகப் பதவியிலிருந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயகா காவியுடை தரித்த ஒருவரால் (சோமராமதேரர்·என்ற பிக்கு) பின்னர் அவரை பௌத்தராக மதம் மாற்றி பௌத்தத்தின் புனிதத்தைப் பாதுகாத்தார். பண்டாரநாயகா கொல்லப்பட்டதைத் தொடர்ந்து சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான டாக்டர்.டபிள்யு.தகநாயகா காபந்து பிரதமராக நியமிக்கப்பட்டு பதவியேற்றார். சில வாரங்களிலேயே மற்றைய சிரேஷ்ட அமைச்சர்கள் பலருக்கும் தகநாயகாவுக்கும் ஒத்துவரவில்லை. அமைச்சர்கள் அதுவும் சிரேஷ்ட அமைச்சர்கள் பலரை தகநாயகா பதவி நீக்கம் செய்தார். புதிதாக சில புதியவர்களை அமைச்சராக நியமித்தார். இதுமட்டுமல்ல பிரதமரின் வாசஸ்தலமான அலரி மாளிகையிலிருந்தபடியே பிரஜா தந்திரவாதக் கட்சி என்ற புதிய அரசியல் கட்சியையும் தொடங்கினார்.

நாடாளுமன்றத்துக்கு நூற்றியொரு உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் பொதுத் தேர்தல்களில் பகுதி பகுதியாக ஒவ்வொரு மாகாணங்கள் அல்லது மாவட்டங்களில் தான் வாக்களிக்கும் முறை இருந்து வந்தது. காபந்து பிரதமர் தகநாயகா புதிய தேர்தல் நடத்தப்படுமென்று அறிவித்ததுடன் நாடு முழுவதிலுமுள்ள தேர்தல் தொகுதிகள் எல்லாவற்றிலும் ஒரே நாளில் வாக்களிப்பு நடைபெறுமென்றும் அறிவித்தார். இத்துடன் தேர்தலில் போட்டியிடும் அரசி யல் கட்சிகள் தங்கள் கொள்கைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு வானொலி யில் நேரம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு கட்சிக்கும் மூன்று நான்கு தடவைகள் இந்தச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டதாக நினைவு. டாக்டர் தகநாயகாவின் எல்.பி.பி.கட்சியின் சார்பில் ஒருவர் வானொலியில் கட்சியின் கொள்கை. அதன் வேலைத் திட் டங்கள் பற்றி வாசித்து வந்தார். இந்த வாசிப்பு அதைச் செவிமடுத்த பலருக்கு திருப்தியளிக்கவில்லை.



வானொலிப் பிரசார நிகழ்ச்சியின் தகநாயகாகட்சியின் கடைசிவானொலி ஒலிபரப்புக்கு வேறொ ருவரை ஏற்பாடு செய்ய வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. வீரகேசரி செய்தி ஆசிரியர் வாஸ்" தொலைபேசியில் வந்த அழைப்பில் வானொலியில் கட்சியின் கொள்கை அறிக்கையை வாசிப்பதற்கு நன்றாக வாசிக்கக் கூடிய ஒருவரைத் தந்துதவுமாறு கோரிக்கை வைக்கப்பட்டது. எதற்கும் என்னையே கூப்பிட்டுப் பழகிப் போன வாஸ் அவர்கள். தொலைபேசியை வைத்ததும் வழமை போலவே அவசரமாக "கோபு. கோபு" என்று அழைத்தார்.

இச் சம்பவத்துக்குமுன் சானா என்ற சண்முகநாதன் நடத்திய நிகழ்ச்சியொன் றில் இரண்டு மூன்று நிமிடங்களில் ஏதாவது ஒரு விடயத்தைப் பற்றி பேசுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார். மத்தாப்பு நிகழ்ச்சி என்று நினைக்கிறேன். இதில் தாளையடி சபாரத்தினம் மழைக்கும் வெயிலுக்கும் மட்டு மல்ல கடன்காரர்களிடம் மாட்டிக் கொள்ளா மல் தப்புவதற்கும் பயன்படும் என்று குடையைப் பற்றி ஒரு நாள் பேசியிருந்தார். நான் இந்த நிகழ்ச் சியில் சிகரெட் பற்றிப் பேசினேன். பசிக்காகவும் சிகரெட் பிடிக்கலாம். உணவு செமிப்பதற்காகவும். தூக்கம் விழிக்கவும். தூங்குவ தற்கும் சிகரெட் பயன்படுமென்று நகைச்சுவையாக பேசியிருந்தேன்.

இவைதவிர சிவஞானசுந்தரம் வயிற்று வலியால் துடித்தபொழுது அவரை சுலைமான் ஆஸ்பத்திரியில் அவர் தமையனார் அனுமதித்துவிட்டு எனக்குத் தகவல் தெரிவித்திருந்தார். அன்றிரவு திருஞானத்துக்கு உதவியாக சுலைமான் ஆஸ்பத்திரியிலிருந்தேன். எனது இந்தச் சேவைக்காக சில மாதங்களின் பின் வானொலி கல்விச் சேவையில் வெளிநாட்டு சம்பவங்கள் கொண்ட கட்டுரையை வாசிக்கவும் ஏற்பாடு செய்து தந்திருந்தார். இந்த நிகழ்ச்சிக்கான பிரதியை யாரோ ஒருவர் ஆஸ்பத்திரியில் எழுதியிருப்பார். (இது ஆங்கில நிகழ்ச்சிக்குரியதாகவும் இருந்திருக்கலாம்) வியாழக்கிழமை மாலையில் வானொலி நிலையம் சென்று இந்தப் பிரதியைப் பெற்று இரவில் மொழிபெயர்த்து மறுநாள் காலையில் ஒலிபரப்ப வேண்டும். பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து ஐந்து சதம் ரிக்கற்றில் வானொலி நிலையம் போய் நிகழ்ச்சியை ஒலிபரப்பிய பின் முப்பது ரூபாய் சன்மானம் வரவேற்பாளரிடமிருந்த வவுச்சரில் ஒப்பமிட்டுப் பெற்றுத் திரும்பு வேன். சில வாரங்கள் இதில் சந்தர்ப்பம் கிடைத்தது.

ஆங்கிலப் பிரதி வராமையால் என்னையே எழுதித் தயாரிக்க பொறுப்பாளர் திருமதி ஜோசப் சொல்லி நானும் தயாரித்து ஒலிபரப்பிய நிகழ்வுமுண்டு. இதில் திருமதி ஜோசப் திருப்திப்பட்டார்.

வானொலியுடன் எனக்கிருந்த இந்தப் பின்னணியிலிருந்துதான் வாஸ் என்னை அவசரமாகக் கூப்பிட்டு "வானொலியில் ஒலிபரப்பாகி வரும் அரசியல் கட்சிகளின் கொள்கை அறிக்கையில் தகநாயகா கட்சியின் கடைசி அறிக்கை வாசிப்பதற்கு ஒருவரைத் தந்துதவும்படி பிரதமரின் செயலாளர் பெரேரா என்பவர் கேட்டார். நான் உங்க பெயரைத்தான் கொடுத்திருக்கிறேன்" என்றார். நான் எதையும் மறுப் பதில்லையே.

பிரதமரின் செயலாளர் பெரேரா வந்தார். பிரதமரின் மோட்டார் காரில் வானொலி நிலையம் சென்றேன். பேச்சுக்கள் உரையாடல் நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாக இருந்த அருள் தியாகராஜா என்ற அனுபவம்மிக்க பெரிய மனிதர். நான் வாசித்த அறிக்கையை ஒலிப்பதிவு செய்து மீண்டும் ஒலிபரப்பி சரிதானே என்று கேட்டபின் என்னைப் பற்றிவிசாரித்தார்.

"இந்த மாதிரி அரசியல் நிகழ்ச்சிகளில் மாட்டிக்கொள் ளக்கூடாது. தேர்தலில் கட்சிகள் தோற்கும் வெல்லும். உங்கள் பெயர் இதில் அடி பட்டால் இளம்பெடியனான உங்கள் எதிர்காலத்துக்கு நல்லதல்ல" என்று ஆலோசனையும் சொன்னார்.

அப்படியானால் எனது பெயரை அறிவிக்க வேண்டாமென்று சொன்னேன். நான் வாசித்த அறிக்கை ஒலிபரப்பப்பட்டது. எனது பெயர் ஒலிபரப்பப்படவில்லை. வெளியே காத்திருந்த செயலாளர் பெரேரா பின்னர் வந்து சந்திக்கிறேன் என்று என்னை அதே வாகனத்தில் அலுவலகத்தில் கொண்டு வந்துவிட்டுப் போகையில் சொன்னார்.

பிரதமர் தகநாயகா உட்பட அவர் கட்சி வேட்பாளர்கள் அனைவரும் தேர்தலில் தோற்ற பின் பெரேராவை எங்கே காண முடியும்?



## ஐ.நா.வின் பெருந்தகையே வருக வருக...

வருக பெருந்தகையே
உங்களை எம் மண்ணில் வரவேற்க செங்கம்பளம்
இல்லை ஓர் இருக்கை தானுமில்லை
ஆனாலும் பேசுவோம் பெருந்தகையே
நீங்கள் அறிந்தது கொஞ்சம் அறியாதது அதிகம்
மிக அதிகம் ஈழத்தமிழன் கொட்டிய குருதியும் கண்ணீரும்
நிலம் முழுவதும் ஓயாது அலை மோதுகிறது
உங்களுக்கு நாங்கள் வரவேற்புப் பாடல் பாட
குழந்தைகளுமில்லை
உங்களின் செவியை எங்களின் மரண ஓலமே நிறைக்கும்
அதுவே உங்களை வரவேற்கும்
பேசமுன்பு கொஞ்சம் உண்டு களையாறுங்கள்
இருக்கிறதைத் தருகிறோம் பேசுவோம் மீண்டும்
பேசுவோம் தமிழனுக்கு தீர்வேதும் கிடைக்குமா?
உலகம் உங்களைச் சாட்சியா ஏற்றுத்தானே அனுப்பியிருக்கிறது
எங்களின் மொழியில் தீர்வு சமாதானம் எல்லாம்
கானல் நீரின் மாயமானே அருகில் வருவது மாதிரி
மறைந்தே போகும்
நீங்கள் இங்க வந்து எதைப் பார்க்கப் போகிறீர்கள்?
யாருடன் பேசப் போகிறீர்கள்?
தமிழனின் புதை குழியும் சதை மேடுகளுமே
கண் நிறையக் கிடக்கின்றன
தோண்டும் இடங்களிலெல்லாம் பிணங்களும்
என்புகளுமே வரிசை கட்டி வருகின்றன
மனிதனை சுட்டு எரித்த சாம்பல் காற்றில் மிதக்கிறது
மனிதாபிமானம் புரிகிறதா பெருந்தகையே
வெலிவேரியாவிலும் மனிதாபிமானமில்லை
பார்த்தீர்களா அடக்குமுறை எவ்வளவு பெரிது
எம் தேசத்தின் அழியாச் சொத்து விதை நிலமே
அதையும் விட்டு வைக்கவில்லை பாவியர்கள்
பூப்போட்டு கும்பிட்ட இடத்தை பாழ்படுத்தினர்
அரச மரம் நட்டு அரசு முளைத்த இடமெல்லாம்
புத்தபெருமான் புரிகிறதா தூதுவரே ஏழேழு கடல்களும்
ஈரேழு உலகமும் நம் மண்ணுக்கு இணையாகுமா?
நாம் சிந்திய கண்ணீரும் குருதியும்
எல்லாவற்றையும் தாண்டும்
எம் வானத்தில் அமைதிப்புறா பறக்கையில்
கழுகு விமானங்களை ஏவி குண்டு இட்டவர்கள் இவர்களே
நீங்கள் பேச வந்திருக்கிறீர்கள்
இவர்களின் அழகுப் பேச்சில் மயங்கி விடாதீர்கள்.
காலம் காலமாகப் பேச்சிலும் அறிக்கையிலும் தான்
எங்களின் காலம் முடிந்தது
ஈழத்தமிழன் யாரையும் நம்பிப் போராடவில்லை
தன்னையே நம்பினான்
பார் முழுவதும் பார்த்திருக்க தனக்குத் தீயிட்டானே
தானைப் புதல்வன் இறுதியில் நடந்ததுதான் என்ன காலம்
மாற ஐ.நாவையும் நம்பினோம் அயலவனையும் நம்பினோம்
இறுதியில்நாம் நம்பிக் கெட்டோம் எல்லோரும் கொட்டிய
ஆயுதத்தாலும் துரோகத் தந்திரத்தாலும்
எங்களின் கரு சுமந்த தாயிலிருந்து முதியவன் வரையும்
நோயாளிலிருந்து புண்பட்டவன் வரையும் செத்து நாறியதும்
உணவில்லாமலும் குடிதண்ணீரில்லாமல் செத்தவர்களும்
எத்தனை எத்தனை பேர். மேலும்
பெண்ணைச் சிதைத்ததை சுட்டெரித்ததை தாங்கள்
அறியாததா உலகம் பழிக்குமே என்று அஞ்சி மௌனம்
கிடந்தோர் இப்பொழுது கிடக்கிறார்கள் சடமாக
சிங்களச் சிறியிலிருந்து முள்ளிவாய்க்கால் வரை
வந்தேறிய பிறகும் இணைந்து வாழ்வது சாத்தியமா
திலீபனைக் கொன்று சத்தியம் தோற்றது
நம்பிக்கையில் நாமும் தோற்றோம்
கண்ணியமிக்கவரே உங்களின் மனம் எதைப் பேசுகிறது
உங்களுக்கு நாங்கள் தேவையென்றால் சிம்மாசனம்
ஏற்றுவீர்கள் சம்மதமில்லையென்றால்
பாடையேற்றுவீர்கள்
அவ்வளவு தானே எரிமலையின் கனவுக்குள் தானே
ஒவ்வொரு தமிழனும் வாழுகிறான் அதிகாரத்தின் நஞ்சு
எவ்வளவு மோசம் பிரித்தாளும் தந்திரம் புரியாதா
உங்களுக்கு
பிரித்தானியாவின் அன்றைய விதைப்பே
இன்றைய இன அறுவடை ஈழத்தமிழரின்
கோலம்-பேரவலம்
எம்மினம் லேசுப்பட்டதில்லை எங்கும் எப்போதும்
விலைபோகும் அது வரலாற்றின் கல்லெழுத்து
பெருந்தகையே பெரு மதிப்புக்குரியவரே
வேப்பமரம் பூத்து பழமாகி விட்டது முருங்கை காய்த்து
முடிகிறது பல மைல் கடந்தும் பல வேலைப்பளுவுக்கு
மத்தியில் உங்களின் நேர அட்டவணை முடிகிறது
யுகங்கள் நிமிசங்களும் விடை பகருகிறது
தமிழனின் மூச்சுக் காத்தில்தான் உங்களின் விமானம்
வட்டமடித்திருக்கும் தமிழன் அபிவிருத்தியும் காப்பெற்
வீதியையும் கேட்கவில்லை வேலை வாய்ப்பும் இருமொழி
ஒட்டி உறவாடக் கேட்கவுமில்லை பகையை தமிழன்
வளர்க்கவில்லை பகையே எங்களை வளர்த்தது தீயாய்
விடுதலையின் பேரால் ஏசிக்கும் சொகுசுக்கும்
விலையாகிப் போனோர் எத்தனை பேர்
பணத்துக்கும் பெண்ணுக்கும் கொள்கை மாறியோர்
எத்தனை பேர் உங்களின் வாக்கு பலிக்கும்படி பார்த்துக்
கொள்ளுங்கள் முள்ளிவாய்க்காலில் ஒவ்வொரு
அங்குலத்துக்கும் எத்தனை மனிதர்கள் வீழ்ந்தனர்
சமாதான வலயத்தை சவ வலமாக்கிய பெருமையே
எத்தகையது அவர்கள் வெற்றி நாயகர்களாம் புலம்பித்
திரிகிறார்கள் இறுமாப்பும் அக விகாரமும் இன்னும்
தீரவில்லை தீர்வில்லா அரசுடன் பேசித்தான் பயன் என்ன
புதிய வழியில் நடப்போம் வாருங்கள் வடக்கையும்
கிழக்கையும் பிரித்து காணியைப் பிடித்து. கோயிலை
இடித்து உயர் வலயம் வளர்கிறது பம்மாத்து அரசியலும்
வளர்கிறது பெருந்தகையே ஈழத்தமிழனை புரிந்து
கொள்ளுங்கள் உணர்வுக்கு உயிர் கொடுங்கள் வேறு
மொழி வேறு நாடு நினைவிருக்கட்டும்
போய் வாருங்கள் சத்தியம் சாகவில்லை



# வார்த்தை வருகுதில்லை

வார்த்தை வருகுதில்லை- இந்த
வரட்டு மனிதரை நினைக்கையிலே!
வஞ்சித்து வஞ்சித்துத் தினம்- வயிறு
வெடித்துச் சாகும் கிணற்றுத் தவளைகளாய்- வாழும்
இந்த மனிதரை எண்ணயிலே!
மனிதத்தை மறைத்து
புனிதத்தைப் புதைத்து
எந்திரச் சில்லாய் -இவர்
சுற்றாத இடமுமில்லை இப்பூமியிலே
பண்பென்பார் -பாரம்பரியம்
என்று மார்தட்டிச் சொல்வார்
பாவியராய்ப் பத்தும் இழந்து நிற்பார்!
அன்பே கடவுள் என்பார்
அதைக் கமராவில் படமெடுப்பார்
கண்கொண்ட குருடராய்த்
திகழ்வார்!
சிகரம் தொடத் துடிப்பவளை
சாக்கடைக்குள் தள்ளுவார்
உதவியென்று-உபத்திரவம்
தருவார்!
கண் தெரியாதவனுக்கு
காட்டுத் தீ போல் இவர் வருவார்!
தும்புக்கும் துரும்புக்கும் -தினம்
அஞ்சியஞ்சிச் சாவார்
தொழில்நுட்பமென்று -சொல்லி
தொப்பை வயிறு போட்டு
சோம்பேறியாவார்;
உழைக்காமல் உண்ணும்
வரம் கேப்பார்
பலரை வார்த்தையாலே
கொன்று குவிப்பார்;
மலையைப் பிளப்பவற்றால்
மனிதரைச் சிதைப்பார்-கேட்டால்
யுத்தமென்று சொல்வார்!
சுதந்திரம் என்று- சுற்றத்தை
சூடாக்குவார்!
புத்திசொன்னால் -இவர்
உடனே திருந்திடுவார்
அதனால்
வார்த்தை வருகுதில்லை-இந்த
வழிபுரண்ட மானிடரை
நினைக்கையிலே...;

கெ.நீப்தன்
கொழும்புத்துறை

## சொற்சிலம்பம் - போட்டி இல: 279

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | |
| 6 | | | ■ | 7 | | | ■ |
| 8 | | | 9 | | ■ | 10 | 11 |
| | ■ | 12 | | ■ | 13 | | |
| ■ | 14 | | ■ | 15 | | ■ | |
| 16 | | ■ | 17 | | ■ | 18 | |
| 19 | | 20 | | ■ | 21 | | |
| | ■ | 22 | | | | | |

அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1.திருமணம்
4.கால்
6.துப்பாக்கிச் சூடு
7. காடும் காடு சார்ந்த இடமும்
8. ஒரு காதணி வகை
10. ரக
12. இல்லற வாழ்வைத் துறந்தோர் அணியும் வேட்டியின் நிறம்
13. ஒன்றை ஒத்தது
14. பிசாசு
15. ஈரமான இடத்தில் படரும்
16. பெருக்கற் குறி
17. சூட்டிக் கொள்
18. கூடிய
19. குடும்பகாரன்
21. அசைய
22. அதிசயம்

### மேலிருந்து கீழ்

1.புத்திசாதுரியம்
2. வாடப்பண்ணு
3. திரிபலையில் ஒன்று
4. வெளுத்ததெல்லாம் இதுவல்ல
5. சிரசில் எழுதப்பட்டது
7. பின் அல்ல
9. பாடல்
11. மிடி
13. ஒரு தமிழ் மாதம்
14. விலை அல்லது பெறுமதி குறித்து தர்க்கித்துப் பேசுதல்
15. திண்மத்துக்கும் திரவத்துக்கும் இடைப்பட்ட நிலை
16. பத்து
17. சோறு சமைப்பது இதன் மூலம்
18. தமிழ் எழுத்து வரிசைப்படி என்பதை இவ்விதம் அழைப்பர்
20. திறப்பு
21. ஆறு

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.
★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும் பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலி கள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 277 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) அமாவாசை (5) ஊர்தி (7) சமர்த்தன் (9) தின் (10) தாடி (11) அணை (12) மகான் (14) கதி (15) முகடு (16) எண்பது (18) கள் (19) குழு (20) திரி (21) நீதிபதி (23) புகார் (24) துண்டம்

**மேலிருந்து கீழ்**

(1) அசதி (2) மாமன்மகள் (3) வார் (4) சைத்தான் (5) ஊன் (6) திண்ணை (8) தடி (11) அதிபதி (13) காடு (14) கண் (15) முகப்பு (16) எழுபது (17) துரிதம் (19) குதி (21) நீர் (22) திண்

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 279**
*நியூ உதயன் பப்ளிகேஷன்*
*[பிறைவேற்]லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (28.08.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7.சொற்சிலம்பம்போட்டி இல.279இல்வெற்றி பெறுவோர்களது விவரம் 01.09.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 277 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**மு.விஷ்ணுசோபன்,**
பட்டிக்குடியிருப்பு, நெடுங்கேணி.

**2 ஆம் பரிசு**
**வ.மதுஷன்,**
சங்காத்தானை, சாவகச்சேரி.

**3 ஆம் பரிசு**
**ஆ.பாலமதுஜா,**
திருநாவலூர், புலோலி மேற்கு, பருத்தித்துறை.

**4 ஆம் பரிசு**
**ஹ.ஜயசங்க,**
இல.73, செம்மணி வீதி, நாயன்மார்க்கட்டு, யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
**நாயோமி றேக்கா வசந்தகுமார்**
தென்னிந்திய திருச்சபை, இணுவில்

**பாராட்டுப் பெறுவோர்**

**நாக.பரமலிங்கம்,**
நறுக்கு வீதி, நீர்வேலி.

**வி.அமுதா,**
திருக்கேதீஸ்வரம், மன்னார்.

**ஐ.விக்னேஸ்வரி,**
அராலி, ஆத்தியடி, பருத்தித்துறை.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.*




# அண்டை நாடுகளை அச்சுறுத்தும் வளர்ச்சி

உலக நடப்புகள் ஒரு பார்வை

ரெங்கன்

ஆசிய-கிழக்காசிய பகுதிகளில் குறிப்பாகக் கடல் பிராந்தியங்களில் சீனாவின் செல்வாக்கும் வளர்ச்சியும் அதிகரித்து வருவதானது அந்தப் பிரதேசங்களில் வேகமாக வளர்ந்து வரும் சில நாடுகளுக்கு அச்சத்தை ஏற்படுத்துவதாய் இருக்கின்றது.

ஆஸியாவில் குறிப்பாக இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் பொருளாதார மற்றும் நவீன தொழில்நுட்பத்துறைகளில் போட்டிகள் நிலவுவது ஒரு புறமிருக்க, இந்தியாவுடன் பகைமை பாராட்டி வரும் பாகிஸ்தானுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு பாதுகாப்பு மற்றும் துறைகளில் இந்தியாவுக்கு எரிச்சலூட்டும் வகையில் சீனா உதவி வந்தது. அதே போல் இந்தியாவின் அண்டை நாடான இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் முக்கியமாக தேசிய பிரச்சினையில் பதவியிலிருக்கும் அரசுக்கு சாதகமற்ற நிலைப்பாடு ஒன்றை இந்தியா எடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளமையால் அதை முறியடிக்கும் போக்கில் இலங்கை சீனாவுடனான உறவை நெருக்கமாக்கிக் கொண்டுள்ளதோடு இந்தியாவுக்கு சவால் விடுக்கும் வகையில் சில பல காரியங் களையும் எடுத்து வருகின்றது.

இலங்கைக்கு அருகில் உள்ள கடற் பகுதிகளில் சீனக் கம்பனிகளின் கப்பல்கள் இலங்கைக் கொடியுடன் மீன் பிடிக்க இலங்கை அனுமதித்திருப்பதும் இலங்கையின் அபிவிருத்திப் பணிகளில் சீனாவின் அபரிமிதமான முதலீடுகளுக்கு அனுமதித்திருப்பதும் இந்தியாவைச் சீண்டும் அல்லது நெருக்கும் செயல்கள் என்றும் கருதப்படுகின்றது.

சீனாவுக்கும் இந்தியாவுக்குமிடையில் எல்லைப் பிரச்சினையொன்று இருந்து வருகின்றது. அது தொடர்பாக ஏற்கனவே இரு நாடுகளுக்குமிடையில் மோதல்களும் ஏற்பட்டதுண்டு. எனவே இந்தியாவை எல்லை விடயமாக நெருக்குவதற்கு சீனா தனது நட்பையும் உறவையும் இந்தியாவுக்கு எதிர்ப்பு காட்டும் நாடுகளுடன் மேலும் அதிகரிக்க முயல்வதாகவும் கருதப்படுகின்றது.

சீனாவின் இந்த நிலைப்பாடு ஆசிய பிராந்தியத்தில் விஸ்தரிக்கப்படுவதற்கு மாறாக மேற்கு நாடுகள் குறிப்பாக அமெரிக்கா இப் பிரதேசங்களில் தமது செல்வாக்கை அதிகரிக்க முயல்வது ஆச்சரியமளிக்கும் ஒன்றல்ல.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் உறவுகள் சீர்குலைந்துள்ளமைக்கு முக்கிய காரணமாக இருப்பவைகளில் காஷ்மீர் பிரச்சினையே முதன்மை பெறுகின்றது. இதனை பேச்சுவார்த்தை மூலமே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற ஒரு போக்கு சமீப காலத்தில் தோன்றியிருந்தாலும் எல்லைப் பகுதியில் தொடர்ந்து மோதல்கள் இடம்பெற்று வருவது இப் பகுதியில் அமைதி நிலவ வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்களுக்கு விசனத்தையே கொடுத்து வருகின்றது.

இந்தியா-பாகிஸ்தான் பகைமையானது சீனாவுக்கு சாதகமாகி விடக்கூடாது என்ற கவலை மேற்கு நாடுகளுக்கு உண்டு. ஏற்கனவே பல விடயங்களில் பாகிஸ்தான் சீனாவின் உறவைப் பலப்படுத்திக் கொண்டுள்ளது. இது மேலும் அதிகரிக்காமல் இருக்க பாகிஸ்தானையும் இந்தியாவையும் நேச நாடுகளாக மாற்றிவிட அவை பெரிதும் முயற்சி எடுத்து வருகின்றன.

ஆஸியாவிலும் அண்டிய பகுதிகளிலும் நிலைமை இவ்வாறு இருக்க தென்சீன மற்றும் தென்மேற்கு பகுதிகளில் உள்ள சில நாடுகளும் சீனாவின் செல்வாக்கும் மேலாதிக்கமும் அப் பகுதியில் பரவத் தொடங்கியிருப்பது குறித்து கவலை கொள்ளத் தொடங்கியுள்ளன. அப் பிரதேசங்களில் காணப்படும் வளம்மிக்க தீவுகள் குறித்து சீனா சொந்தம் கொண்டாடத் தொடங்கியிருப்பது அந்த நாடுகளுக்கு கவலையைத் தோற்றுவித்துள்ளது.

ஜப்பானுக்கும் சீனாவுக்குமிடையில் அந்தப் பகுதியிலுள்ள சில தீவுகள் குறித்து முறுகல் நிலை ஏற்பட்டிருக்கும் அதேநேரம் பிலிப்பைன்ஸ் அப் பகுதியில் சீனாவின் பிரசன்னம் குறித்து கவலை கொள்ளத்தொடங்கியிருக்கிறது. இதன் காரணமாக தென் ஆசிய நாடான பிலிப்பைன்ஸில் உள்ள அமெரிக்க படையணிகளை அதிகரித்துக் கொள்ள தீர்மானித்துள்ளது. இது சம்பந்தமாக அமெரிக்க அதிகாரிகளுடன் பிலிப்பைன்ஸ் விரைவில் பேச்சுக்கள் நடத்தவிருக்கின்றது.

பிலிப்பைன்ஸ் தீவுகளின் ஊடாக அமெரிக்க படைகள் சுற்றி கண்காணிப்பில் ஈடுபடுவதற்கு படைகளை அதிகரிப்பது, கூட்டாக ராணுவ ஒத்திகைகளை நடத்துவது, இயற்கை அனர்த்தங்களின் போது பயன்படுத்துவதற்கான ராணுவ சாதனங்களை நிலைநிறுத்துவது போன்ற விடயங்கள் விவாதிக்கப்படவிருப்பதாக பாதுகாப்பு அமைச்சர் வோல்டயர் கஸ்மின் தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸ் தனது ராணுவத்தை நவீனப்படுத்திக்கொள்ள விரும்புகின்றது. சீனா இந்தப் பிரதேசத்தில் தன் செல்வாக்கையும் ஆதிக்கத்தையும் உறுதிப்படுத்திக்கொள்ள எடுக்கும் முயற்சிகளை முறியடிப்பதற்கு இது தேவைப்படுவதாக பிலிப்பைன்ஸ் கருதுகிறது.

பிலிப்பைன்ஸின் தென் மின்டானோவா பிராந்தியத்தில் தலைதூக்கியுள்ள புரட்சிவாதிகளின் நடவடிக்கைகளுக்கு எதிராக அமெரிக்க படைகள் 2001 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன. பிலிப்பைன்ஸ் தற்போது எடுத்து வரும் முயற்சிகளுக்கு அமெரிக்காவின் முழு ஆதரவு கிடைக்கும் என்று ராஜதந்திரிகள் கருதுகிறார்கள். ஆஸிய-பசுபிக் பிராந்தியத்துக்கான அமெரிக்க வெளியுறவுக் கொள்கை மீளவும் சமநிலைப்படுத்தப்பட வேண்டும் என்பதாக அதிபர் பராக் ஒபாமா சமீபத்தில் கூறியிருந்ததை அவர் சுட்டிக்காட்டுகிறார்கள். வெள்ளை மாளிகை அதிகாரி ஜே.கார்னி இதுபற்றி கருத்து வெளியிடுகையில் அப் பிரதேசம் முழுமையிலும் பொருளாதார ரீதியிலானால் என்ன, பாதுகாப்பு பிரச்சினைகளானால் என்ன, முழுமையாக நாம் செயல்பட்டாக வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். கப்பல்கள், ஹெலிகொப்டர்கள் மற்றும் ஆயுதங்கள் வாங்கி பாதுகாப்பை பலப்படுத்திக் கொள்வதற்காக வரும் ஐந்தாண்டு காலத்துக்கு 1.7 பில்லியன் அமெரிக்க டொலரை பயன்படுத்த பிலிப்பைன்ஸ் தீர்மானித்துள்ளது. தென்சீன கடல் பகுதியில் சீனா தன்னுடையது என்று பாராட்டிக் கொள்ளும் பகுதியில் பெரும் எடுப்பில் சீன துருப்புகள் காணப்பட்டதை பிலிப்பைன்ஸ் கடந்த ஜூன் மாதம் கடுமையாக ஆட்சேபித்திருந்தது.

### காஷ்மீர் எல்லையில் மீண்டும் பதற்றம்

காஷ்மீர் எல்லையில் அண்மைக் காலமாக பாகிஸ்தான் இந்திய படைகள் அடிக்கடி மோதல்களில் ஈடுபட்டு அப் பகுதியில் அமைதி குலைந்துள்ள நிலையில் காஷ்மீர் தொடர்பாக இந்தியாவின் உரிமையை வலியுறுத்தி மீண்டும் ஒரு தீர்மானம் இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எல்லைப் பகுதியில் இருதரப்பு படைகளும் மோதிக் கொண்டதையடுத்து பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் இந்திய நடவடிக்கைகளைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இந்தியாவுடன் இருதரப்பு பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என்ற வகையில் பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரீப் கருத்து வெளியிட்டிருந்தார். ஆனால் எல்லையில் முகாந்திரமின்றி தாக்குதல்கள் நடத்துவதை பாகிஸ்தான் படைகள் நிறுத்தாத விடத்தில் அதனுடன் எந்தவித பேச்சுக்களையும் நடத்துவது சாத்தியமில்லை என்று இந்தியா கூறிவிட்டது. கடந்த புதன்கிழமை இந்திய மக்கள் சபையில் (லோக்சபா) சபாநாயகர் மீராகுமாரால் முன்மொழியப்பட்ட தீர்மானம் குரல் வாக்கு மூலம் நிறைவேற்றப்பட்டது.

காஷ்மீர் மாநிலம் முற்று முழுதாக இந்தியாவுக்கு சொந்தமானது. அதன் ஒரு பகுதியை பாகிஸ்தான் பலவந்தமாக ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது என்று அத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. மாநிலங்கள் (ராஜ்ய சபா) சபையிலும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் எல்லைப் பகுதியில் இந்தியப் படைகள் மீது பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தப்பட்டதில் ஐந்து படையினர் கொல்லப்பட்டனர். இதற்கு பாகிஸ்தான் ராணுவமே காரணம் என்று இந்தியா குற்றஞ்சாட்டியது. அந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அப் பகுதியில் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. இந்திய படைகள் ஆத்திரமூட்டப்படாத நிலையில் ஷெல் குண்டுகளை வீசியதில் 60 வயதான கிராமவாசி ஒருவர் கொல்லப்பட்டதாகவும் அவரது இளவயது மகள் ஒருவர் காயமடைந்ததாகவும் பாகிஸ்தான் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டது.

காஷ்மீர் எல்லையில் ஏற்பட்டுள்ள பதற்றம் குறித்து பாகிஸ்தான் மிகுந்த கவலை கொண்டிருப்பதாகவும் அதே சமயம் அமைதியாகவும் பொறுப்புடனும் நடந்து கொள்ளும் என்றும் பாகிஸ்தான் பிரதமர் ஓர் அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் காஷ்மீர் பிரதேசத்துக்கு இரு நாடுகளும் சொந்தம் பாராட்டிக் கொள்கின்றன. எல்லைக் கோட்டுப் பகுதியில் இரு தரப்புக்குமிடையில் ஏற்பட்டு வந்த மோதல்கள் தொடர்பாக 2003 ஆம் ஆண்டு போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப்பட்டது. இருந்தாலும் அப் பகுதியில் ஊடுருவல்களும் மோதல்களும் அடிக்கடி நிகழ்வதும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டிக் கொள்வதும் தொடர்ந்து கொண்டே உள்ளன.